


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD




## சிறுகதைக்கென ஒரு சஞ்சிகை வருவது தமிழ்ச்சிறுகதை வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புச்செய்யும்

அம்மாவுக்கு அன்புடன்...
அம்மா உன்னுடைய 5ம் 6ம் பிரசவங்களைத்தவிர வெளிவந்த அனைத்துபிரசவங்களுடன் உறவாடி உளம் மகிழ்ந்தேன்.. ஆச்சரியப்பட்டேன். அன்புடன் சண்டைபோட்டுக்கொண்டேன்.
ஆனால் ஏழாவது பிரசவத்தில் ஏன் நிலைகுலைந்து விட்டாய் (விட்டாயா?)
சிறுகதைக்கென ஒரு சஞ்சிகை வருவது தமிழ்ச்சிறுகதை வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புச்செய்யும் எனக்கருதியிருந்தேன் ஏழாவது இதழைப்பார்த்ததும் எல்லாம் சப்பென்று ஆகிவிட்டது. என்ன இது... ஏன் இந்த மாற்றம்... இப்போது இதுதான் உன்னால் முடியுமென்றால் ... என்ன செய்வது...
இருந்தாலும் தொடர்ந்து நல்ல சிறுகதைகளைப்பிரசவிப்பாய் என நம்புகின்றேன்.

– வெ. தவராஜா
'படி' கலாச்சார வட்டம்
N°: 200, Old Kalmunai Road, Nochchimunai, Batticaloa, Sri Lanka



## விமர்சனங்கள். எழுத்தாளர்களை எழுதவிடாமல் மழுங்கடிப்பதற்கல்ல.

**தரமான ஆண் சிறுகதை எழுத்தாளர்களின் ஆக்கங்களையும், விமர்சனங்களையும் தாங்கிவரும் அம்மாவில் பெண்களின் சிறுகதைகளும் விமர்சனங்களும் இடம்பெற வேண்டும். பெண்களின் படைப்புக்களுக்கு தட்டுப்பாடு இருக்கிறது என்பது புரிந்து கொள்ளப்படக்கூடியது தான் என்றாலும், சிறந்த கதைகளின் மறு பிரசுரம் பற்றியும் அம்மா யோசிக்கலாம் .**
– றஞ்சி

இன்று பெண்களிடயே எழுத்துத் திறைமை மிகவும் அருகியே காணப்படுகின்றன. அதுவும் கவிதை, சிறுகதைகள் எழுதவது என்றால் ஒரு சில குறிப்பிட்ட பெண்களே தொடர்ந்தும் எழுதி வருகிறார்கள்.பெண்களின் உரிமைப்போராட்டத்தை ஓரளவுக்கேனும் வெளிக்கொணரக்கூடிய ஆயுதம் எழுத்து என்பதே உண்மை. ஆனால் இன்று எழுதிவந்த பெண்கள் கூட தங்கள் குடும்ப பிரச்சனைகளாலும்,சில ஆண்ணாதிக்க மனோபாவ விமர்சகர்களாலும் எழுதுவதை நிறுத்திவிட்டார்கள். தொடர்ச்சியாக சிலர் எழுதிவருகிறார்கள். புலம் பெயர் நாடுகளில் கூடுதலாக ஆண்களே பெண்கள் சம்மந்தமான சிறுகதைகளையும் கவிதகளையும் எழுதிவருகிறார்கள். ஒரு சில பெண்கள் அவ்வப்போது சஞ்சிகைகளில் எழுதினாலும், அவ்வாக்கங்கள் பெண் உலகை புரிந்து கொள்ளாத விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டு எழுத ஆவல்லுடைய பெண்களையும் பின்தள்ளி விடுகின்றன.

இன்று புலம் பெயர் நாடுகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய பெண்கள் ஒரு சிலரே சிறுகதைகளை எழுதிவருகின்றனர். அவர்களில் ஒருவர் தான் இராஜேஷ்வரி பாலசுப்பிரமணியம் இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறுகதைகள் கட்டுரைகள் போன்றவற்றை எழுதிவருகிறார். இவரின் நாவல்களான தேம்ஸ் நதிக்கரையில் உலகெல்லாம் வியாபாரிகள், தில்லையாற்றங்கரையில் ஒரு கோடை விடுமுறை பனி பெய்யும் இரவுகள் போன்ற நாவல்களும் நாளைக்கு இன்னொருத்தன் சிறுகதைத் தொகுதியும் வெளிவந்துள்ளன. இவரின் கதைகளின் என்னைக் கவர்ந்தது உலகம் எல்லாம் வியாபாரிகள் என்ற நாவல்தான். மிக அற்புதமாக கதையை சித்தரித்திருந்தார். நாளைக்கு இன்னொருத்தன் என்ற சிறுகதைத் தொகுதி அண்மையில் வாசிக்க நேர்ந்தது புலம் பெயர் நாட்டில் எவ்வாறு ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறையினுள் பெண்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றனர். எவ்வாறு பாலியல் வன்முறைக்கு இலக்காகி அவலமுறுகின்றனர். முகத்திரையிட்ட ஆண்களினால் திருமணம் என்ற பந்தத்திற்குள் பெண்கள் அனுபவிக்கும் துயரங்களையும் சொல்கின்றன. ஒரு சில கதைகள் இலங்கையை மையமாகக் கொண்டும் பின்னப்பட்டுள்ளது.

இவரின் சிறுகதைத் தொகுதியுள் அடங்கியுள்ள கதைகளின் கரு யதார்த்தமாகவும் புலம் பெயர் நாடுகளில் நடைமுறை வாழ்க்கையுடன் கூடிய வெளிப்பாடாகவும் உள்ளன. இவரின் சிறு கதை தொகுதியில் கற்புடைய விபச்சாரி, மஞ்சுளா, உசா ஓடி விட்டாள் இன்னும் சில அரங்கேற்றங்கள் போன்றவை நெஞ்சினுள் படிந்தவை. இப்படியும் கப்பங்கள்,என்னவன்,வள்ர்மதியும் வாசிங்மிசினும் போன்றவை விமர்சனத்திற்குரியவை. இன்னும் செழுமையாக படைத்திருக்கலாம்.

விமர்சனங்கள் என்பது படைப்புக்களை வளர்த்துச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவ வேண்டுமே தவிர பாய்ந்தடித்து விமர்சித்து எழுத்தாளர்களை எழுதவிடாமல் மழுங்கடிப்பதற்கல்ல.. அம்மாவில் இராஜேஸ்வரியின் சிறுகதை தொகுதியின் மீதான சோபாசக்தியின் விமர்சனத்தில் கையாளப்பட்ட சொற்றொடர்கள் மிகவும் காட்டமானவை. விமர்சிப்பதும், வேண்டுவதும், கருதுவதும் ஆணா? பெண்ணா? இல்லை அலியா? என்பதுவா முக்கியம். கருத்தும் எழுத்தம் சரியா? தவறா? என்பதுதானே முக்கியம் என்று சொல்லும் சோபாசக்தி, அத்துடன் இச்சிறுகதைக்கான விமர்சனத்துடன் (செப்ரெம்பர் 1997 இல்) இலக்கிய சந்திப்பு மலரில் வெளிவந்த ரஞ்சியினியின் கவிதையை எடுத்து விமர்சிக்க வேண்டியதன் அவசியம் தான் என்ன?. இந்த முரணை எப்படி விளங்குவது?

மேலும் சோபாசக்கி இராஜேஸ்வரியின் சொந்த நேர்மையை சாடுகிறார். எழுத்துக்கும் சொந்த வாழ்க்கைக்கும் சம்மந்தம் இல்லை என கூறும் சில படைப்பாளிகள், முற்போக்காளர்களாக பெண்ணியம் கதைப்பவர்களை தங்களது சொந்த வாழ்க்கையில் பெண்களை ஒடுக்குவதும், தனது மனைவியை ஒடுக்குவதும் இருக்கத்தான் செய்கிறது. (ஆணாதிக்கச் சிந்தனையை வரித்துக்கொண்ட அல்லது சகித்துக்கொள்ளும் பெண் படைப்பாளிகளுக்கும் இது பொருந்தும்) இவற்றில் இருந்து விடுபட்டவர்களாக தம்மைக்கருதிக் கொள்ளும் சில முற்போக்காளர்கள் கூட மரபுவழி ஊட்டப்பட்ட ஆணாதிக்க சிந்தனையிலிருந்து, மனோநிலையிலிருந்து முற்றாக விடுபட முடியாமல் உழல்வதை நாம் பார்க்கவில்லையா? இப்படித் தெரிந்தோ தெரியாமலோ நிகழும் போக்குகளை இனம் காணவும் இதற்கெதிராக போராடவும் அனைவரும் முன்வர வேண்டும். பெண்களின் உலகை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் ஆண்களின் உலகினால் ஆக்கிரமிக்கப்பட்ட பெண்களின் உலகுக்குள் சென்று அதன் அளவுகோல்களை தேடுங்கள். அதை ஆண்களின் உலகில் இருந்து உருவி எடுப்பது சரியான மதிப்பீடுகளுக்கு வரஉதவாது. இதை விட்டுவிட்டு இராஜேஸ்வரி நேர்மையானவரா இல்லையா? என விமர்சனங்களை தனிப்பட்ட தாக்குதலாக மாற்றுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ளுதல் நல்லது.

ஒரு படைப்பாளி சிறந்த படைப்புகளை படைக்க நல்ல விமர்சனங்கள் தேவை. அப்போதுதான் நல்ல படைப்புகளை படைப்பாளியால் படைக்க முடியும். இராஜேஸ்வரியின் முயற்சி நல்லது தான். ஆனால் அவரின் படைப்புகளை வாசிக்கும் போது அவருக்கு இன்னமும் பெண்ணியம் சம்மந்தமான புதிய தேடல்களும் வாசிப்பும் விரிவடைய வேண்டும் என தோன்றுகின்றது. இதன் மூலம் சிறந்த படைப்புக்களை வழங்கமுடியும். பெண்ணிய நோக்கிலான சொற்றொடர்களும், புதிய சொற் கையாள்கையும், புதிய புதிய உக்திகளும் அவரிடம் வர பெறுவது அவரது 25 வருட கால படைப்புலகை அர்த்தப்படுத்த உதவும் அதே நேரம் அடித்து அமர்த்தும் தடாலடியான விமர்சனங்கள் இவற்றையெல்லாம் கொண்டு வராது என்பதை சம்மந்தப்பட்ட விமர்சகர்கள் புரிந்து கொண்டால் சரிதான்.

– **றஞ்சி** (சுவிஸ்)

## பின்நவீனத்துவம் தலித்தியம், மார்க்ஸியம் இன்றைய தமிழ்ச்சூழலுக்கு மிக அவசியமான கட்டுரை

சமரந்தாவின் பெயரிடப்படாத கதை, சேகுவராவை, புரட்சிபற்றிய கனவை தன் முழு இதயத்திலும் பரப்பிவைத்துள்ள மீனாவைப்பற்றிச்சொல்கிறது. கனவு காண்பது சுகமானதுதான். அதீதமான கனவுகாணும் மனிதர்கள் இன்று நடப்பிலுள்ளனர். கற்பனையில்லாதவனால் கனவு காணமுடியாது. சேகுவராவுடன் சேர்ந்து கெரில்லா வீராங்கனையாகப்போரிட்டு பொலிவியக்காட்டிலே மாண்டுபோன கிழக்கு பேர்லின் பெண் புரட்சியாளரான டானியாவின் எடலின் மிகுதிப்பகுதி பொலினியாவில் அதன் கிழக்குநகரான (Lapaz) லாப்பஸ்ஸில் 21.9.98 சேகுவராவின் உடல் மீதி கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இச்சமயத்தில் இக்கதையும் வருவது உணர்வையூட்டியது.
ஷோபா சக்தியின் பைலாப்பாட்டு மற்றைய கதைகளைவிட சிரமமான வித்தியாசமான கதை. தமிழ்பெண்களின் அடிமனதின் ஆழங்களில் ஒளித்துக்கொண்டிருக்கும் வெளியே தெரியாத கலாச்சார பாலியல் அநியாயங்களுக்கு எதிரான பெருமூச்சுத்தான் யோகராணி. இரண்டுமுறையாவது கடுமையாக ஊன்றி வாசித்தால்மட்டுமே விளங்கும் புதிய நடை.

யமுனா ராஜேந்திரனின் பின்நவீனத்துவம் தலித்தியம், மார்க்ஸியம் இன்றைய தமிழ்ச்சூழலுக்கு மிக அவசியமான கட்டுரை. தவிர்க்காமல் விவாதிக்கப்படவேண்டிய கனமான விடயங்கள் நிரம்பியது. தமிழவன், நுஹ்மான், அ. மார்க்ஸ் குழுவினர், எஸ். வி. இராஜதுரை, வ. கீதா ஆகியோரை கட்டுரையாளர் கொஞ்சமாய்த் தொடுகிறார். அ. மார்க்ஸ் குழுவினர் மீது சொல்லும் கருத்துக்கள் மேலும் ஆழமாய்த் தொடப்படவேண்டும். நு:.மான், வ. கீதா போன்றவர்கள் இன்று வாசிக்கப்படவேண்டிய விமர்சகர்கள். இவர்கள் பற்றி இன்னும் எழுதியிருக்கலாம். அ. மார்க்ஸிடம் முற்போக்குத்தேடல் இருந்தாலும் கட்டுடைக்கப்புறப்பட்டு தானே கட்டுடைந்து நிற்கிறார். அவரின் ஐரோப்பிய பயணம் பற்றிய வெள்ளைத்திமிர் புத்தகத்திற்கும் அவரின் நிறப்பிரிகைக்கும் உள்ள தூரம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரம். பிராங்போட் மார்க்ஸியம்வரை பேசிய யமுனா ராஜேந்திரன் ஸ்டாலினிசத்தை அதன் கருவிலேயே அடயாளம் கண்ட ரொட்ஸ்கி பற்றி குறிப்பிடாதது பெரும் குறைபாடு.

கதை சொல்லமுயலும் கருணாகரமூர்த்தி விமர்சனம் நன்றாக இருந்தது. என்றாலும் கருணாகரமூாத்திக்கு முன்னுரை எழுதிய ஜெயமோகன் பற்றி முழுமையாய் விமர்சனம் செய்திருக்கவேண்டும். ஜெயமோகன் அகண்ட இந்துஸ்தான் உருவாக்க விரும்பும் இந்துமதவெறி அமைப்பான RSS ல் இருந்தவர். RSS ஒரு மிருகத்தனமான பாசிச அமைப்பு. இந்தியாவில் சிறுபான்மை இனங்களுக்கும் மதங்களுக்கும் எதிரி. இத்தகைய அமைப்போடு தொடர்புடைய ஜெயமோகனை அவரின் இலக்கியத்தையும் போதியளவு விமர்சித்திருக்கவேண்டும். நன்றும் தீதும் பிறர்தர வாரா எழுதிய சேனனின் நிலை பழையகுருடி கதவைத்திறவடி என்ற நிலைமைதான்.

– **கண்ணன்** (பேர்லின்)

## ஒரு எழுத்தாளன் பட்டை தீட்டப்படவேண்டியநேரத்தில் தீட்டப்பட்ருக்கிறார்

ஏழாவது அம்மா வித்தியாசமானதாக இருந்தது. ஷோபா சக்தியின் எல்லாக் கதைகளையும் வாசித்திருக்கிறேன். புலம்பெயர் இலக்கிய உலகில் அவரின் சிறுகதைகள் பற்றியும் பேசப்படுகின்றன. 'பைலாப் பாட்டு' இரண்டுமுறை வாசித்தேன். வித்தியாசமாய் இம்முறை கதை வந்திருக்கிறது. ஷோபா எங்கே எடுத்தாய் இந்தக்கருவை? ஒரு கொல்லல் முத்தம் கொடுக்க... அது அவனுக்குத்தான் தெரியும். அது சரி என்ன அது இடையிடையே பத்திரிகைத்துண்டுகள்? வடுத்தியாசமாய் அம்சமாய் இருக்கட்டுமேன். இன்னும் அர்த்தமாயும்...

அரபாத்தின் விலங்கு ஏனோ தெரியாது அவசரத்தில் எழுதவேண்டும் என்பதற்காக எழுதியதுபோலக்கிடக்கிறது. அரபாத்தின் ஆழுமையைக்காணவில்லையே ஏன்?

கருணாகரமூர்த்தியின் புத்தகங்களைச்சொல்லவந்த தமிழரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலிசுறட்டுகளில்லாத அந்த மனிதரையல்ல ஒரு எழுத்தாளனை ஒரு புத்தகவாளனை பட்டை தீட்டவேண்டியநேரத்தில் தீட்டவேண்டிய இடத்தில் தீட்டி இருக்கிறார். கருணாகரமூர்த்தி நல்ல இலக்கியங்கள் படைக்கவேண்டுமென வாஞ்சிப்பவர்களில் நானும் ஒருவன்.

**- இளைய அப்துல்லாஹ்** (லண்டன்)

## அம்மா வந்தாள்

அம்மா 7வது இதழ் கிடைத்தது. தமிழ் கனேடிய அனுபவங்களைக்கொண்டு ஒன்று இரண்டு என்று இதழ்களை எண்ணிக்கொண்டிருந்தேன்.

இங்கு சஞ்சிகை வெளியிடுவது என்றால் முதலாவது இதழுக்குப் பெருவிழா வைத்து, சில நெருக்கடிகளால் முதலாவது இதழ் வரப்பிந்திவிட்டது; இனி இன்ன இன்ன திகதிகளில் இதழ்கள் வந்து சரிக்கும்; கனடா தமிழ் இலக்கியத்தை நிமிர்த்துவோம் என்ற சபதத்துடன் விழா முடிவடையும். அத்துடன் அதன் கதை சரி. இவர்களை விட உற்சாகமானவர்கள் இரண்டு மூன்று இதழ்கள் வெளியிட்டு கைக்காசுபோட்டு கடைகள் ஏறி இறங்கி களைத்துப்போய் மௌனமாகிவிடுவார்கள். இது தொடர்பான நண்பர்களைக்கண்டால் அவர்களிடமிருந்து கொஞ்சநாளைக்கு விலகிப்போவது நல்லது. அல்லது வீண்பழி சேரும். இதற்காக யாரும் சோர்ந்து போவது இல்லை. இரண்டு இதழ்கள் நிற்கும்போது மூன்று, நான்கு பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் புதிதாகத்தொடங்கும். ஐந்துபேர் சோர்ந்து போனால் நாலுபேர் புதிதாக உற்சாகம் அடைவார்கள். 'அம்மா'வும் அப்படித்தான் இருக்குமென எண்ணி உற்சாகமூட்ட உங்களுக்கு ஒரு கடிதம் போட யோசிக்கவில்லை.

ஆனால் 'அம்மா'பற்றி 7வது இதழ் கண்டபின் நம்பிக்கை ஏற்படுகிறது. சிறுகதையை முக்கியப்படுத்திஒரு ஒரு பத்திரிகை என்றவுடன் கனடாத்தமிழ் இலக்கிய நண்பர்களும் சந்தோஷத்துடனம், ஆச்சர்யத்துடனும் பேசுகின்றனர்.

இதற்கான மனோகரனின் உழைப்பு, புதுசு ரவி, நட்சத்திரன் செவ்விந்தியன், யமுனா ராஜேந்திரன், இளவாலை விஜயேந்திரன் இப்படிப்பட்ட ஆக்க இலக்கியக்காரரின் ஒத்துழைப்பு மேலும் நம்பிக்கையைத் தருகின்றது.

சிறுகதைக்காக ஒரு பத்திரிகை இக்காலத்தில் ஒரு புதுமுயற்சி. தமிழ்நாட்டில் தற்காலத்தமிழுக்கு அணிசெய்த ஆரம்பச் சிறுகதை எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், கு.ப.ரா., பி. எஸ். ராமையா, மௌனி போன்றோர் எழுதிய சஞ்சிகைக்குப்பிறகு இது. இதுவும் மேற்சொன்ன தமிழின் தலைசிறந்த சிறுகதைஎழுத்தாளர்களைப்போல் சிலரைத் தோற்றுவித்தால் அம்மாவுக்கு வெற்றி. தமிழுக்கு வெற்றி. புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு வெற்றி. ஐரோப்பிய அமெரிக்க கலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பாரிஸ் நகரம்தான் தமிழ்க்கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் ஊற்றாக இருக்குமென்று ஒரு பதினைந்து வருடங்களுக்கு முன் யார்தான் நம்பியிருப்பார்கள்? ஈழத்தமிழர்கள் தாயகத்தைவிட்டு ஓடி அடைந்த நாடுகளில் பாரிஸில்தான் ஐந்து வருடங்களாக தவறாமல் ஒரு சஞ்சிகை - 80பதுகளின் ஆரம்பத்தில் - உமாகாந்தனை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த "தமிழ் முரசு" - கையெழுத்துப்பிரதியாக வெளிவந்தது. இப்பொழுது நினைத்தாற்கூட அது எப்படிச்சாத்தியமாயிற்று என்று வியக்கிறேன்.

ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால், கவிதை, கட்டுரை, கதை எழுதுவது பெரியவிடயங்கள்போற் தெரியவில்லை. இவற்றை இலாபநோக்கில்லாது, தன்னலமின்றி இலட்சிய நோக்குடன் ஆதரிக்க, பிரசுரிக்க, விநியோகிக்க உதவிசெய்து, ஏன் அதற்காக உயிரைக்கொடுக்க என்று சபாலிங்கம் என்று ஒரு அற்புத மனிதன் இருந்தானே அதுவும் அங்குதான். சுகன் என்றும், கலாமோகன் என்றும், இன்று ஷோபாசக்தியென்றும் தமிழ் இலக்கியத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தும் நிகழ்வும் நடப்பது பாரிஸில்தான்.

ஷோபாசக்தி எனக்குப்புதியவர். வெற்றிபெற்ற எல்லா எழுத்தாளர்களைப்போலவும் தனக்கென்று ஒரு மொழியை, பாணியைக் கண்டுபிடித்திருக்கிறார். புதுமைப்பித்தனின் சிறுகதைத் தொகுப்பிற்கு - (அண்மையில் வெளிவந்தது) - முன்னுரை எழுதிய ஜெயகாந்தன் 'வாழ்க்கை முட்களின்மீது விழுந்து மனிதன் படும் வேதனையைச் சொன்னவை பு. பி. யின் கதைகள் என்று கூறியதையே நான் ஷோபாசக்தியின் கதைகளில் காண்கிறேன். இக்கதைகளில் பிக்கலாகி பிடுங்கலாகி நிற்கும் தமிழ் மனித வாழ்வை ஏளனம் கலந்து துயரவரிகளில் எழுதுகிறார் அவர்.

**- செல்வம்** (கனடா)

## சொதப்பல் விமர்சகனாக இருப்பதைவிட பாமரனாக இருந்திட விருப்பம்.

அம்மா-7 இதழில் பெர்லின் தமிழரசன் என்றொரு அன்பர் எனது அகதி உருவாகும் நேரத்தை மேம்போக்காக மேய்ந்துவிட்டு குதறியிருந்தார். அவருக்கு நன்றி. ஒரு இளம் இலக்கியவாதிக்கு அரவணைப்பு மட்டுமல்ல வழிகாட்டலும் வேண்டும் என்று பகலுமிவர் தான் அரவணைப்புக்கு தேர்ந்துகொண்ட வார்த்தைகளாவன: பனங்கொட்டை சூப்பல், கோணல்பார்வை, சாமரம் வீசுதல், நோஞ்சான்வாதம், பிச்சாபாத்திரம், விழலுக்கு இறைத்தல், எலிக்குஞ்சு , மொட்டைபோடல், மண்டைக்கனம், பாமரத்தனம், பாமாலைசூடல், துதிபாடல், மூடத்தனம், புறணிகூறல், கேள்விச்செவியன், நாகரீகபாசாங்கு, ஆசாரபாவனை, மிதப்பு, சதுர், மானிடவிரோதம் இத்யாதி இத்யாதிகள்.

விமர்சனத்திற்கு இத்தகு ரம்யமான வார்த்தைகளைத் தேர்ந்து கொண்ட பெம்மானின் - கதை சொல்ல முயலும் கருணாகரமூர்த்தி - என்ற தலைப்பின் குசும்புத்தனத்தை பார்த்ததுமே (அதாவது முயல்கிறாரேயன்றிச் சொல்லவில்லையாம்) இந்த விமர்சனத்தின் நேர்மை பற்றி எந்த வாசகரும் சந்தேகப்படாமல் இருக்க முடியாது.

தமிழரசன் தனது ஐந்தேகால் பக்கவிமர்சனத்தில் அரைப்பக்கமளவிலேயே ஒரு அகதி உருவாகும் நேரம் நூல்பற்றிப்பேசுகிறார். இன்னொரு அரைப்பக்கம் ஜெயமோகனைச் சாடுகிறார். மீதி நாலே கால் பக்கங்களிலும் விமர்சனம் என்ற போர்வையில் நாவலின் முன்னுரையைப் பிடித்துக்கொண்டு 350.K.Bytes வரையில் பெரும் விமர்சனம் ஒன்றுசெய்வதான நினைப்பில் உலகில் ஒரு பாப்பாவுமே அறிந்திராத ஜெர்மனியின் ஜூதமக்களின் படுகொலைகள், நாஸிசவளர்ச்சி , வெளிநாட்டவரின் வெளியேற்றங்கள், நடப்பு அரசியல், சரித்திரம் என்று தனக்குத் தெரிந்தவற்றைக்கொட்டி ஓய்கிறார். அனைத்துமே utterly waste!

ஆசிரியர் உயர்வேளாள மேட்டுக்குடியைச்சார்ந்த சைவசித்தாந்தவாதி, முதலாளித்துவ ஜெர்மன் அரசின் அடிவருடி என்பதை நிருபிப்பதில் விமர்சகர் தன் சக்தி முழுவதையும் செலவு பண்ணியிருக்கிறார். அவர்கூறும் எனது இத்திருப்பணிகளுக்காக சர்வலோக சைவசித்தாந்த சம்மேளத்தினத்தினரும், முதலாளித்துவ ஜெர்மன் அரசும் எனக்கு விஷேட உபகாரச்சம்பளங்கள் தருவதை எப்படியோ தமிழரசனும் மோப்பம்பிடித்து அறிந்துகொண்டுவிட்டார். நானும் வகையாக மாட்டிக்கொண்டுவிட்டேன். என் செய்க?

யாழ்ப்பாணத்து செம்பாட்டு மண்ணிலும் , புகையிலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுகளுக்கும் பனங்கொட்டைப் பாத்திகளுக்கு நடுவிலுமான இடைவெளியின் பண்பாட்டுச்சூழலிலும் வளர்ந்த ஒருவன் மேற்கத்தைய பண்பாட்டுத்தளத்தில் இறக்கப்படும்போது அதை அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதைக் காட்டும் முயற்சிதான் வாழ்வுவசப்படும் நாவல்.

அத்வைதன் ஐரோப்பிய பண்பாட்டில் தன்னைக் கலந்துவிடாது தனது தனித்துவமான வாழ்க்கைத் தத்துவங்களுடன் நின்றுவிடுகின்றான். திலகன் இலகுவில் மாறிக்கொண்டுவிடுகின்றான். இதில் யார் வழி சரி என்பதே வாசகர் முன் வைக்கப்படும் விசாரம். நான் எதுவித கருத்தியல் திணிப்போ தீர்ப்போ எங்கும் சொல்லவில்லை.

மேலும் நாவல் நவீன பண்பாட்டின் கூறுகள் நம் சமூகத்தை மெல்ல மெல்ல தந்தைபெயர் அறியாத ஆதிச்சமூகத்துக்கு இட்டுச்செல்கிறதா என்னும் கேள்வியையும் எழுப்புகின்றது. விமர்சிக்கப்புறப்படுபவனுக்கு Transquility என்பார்கள் அந்த மனோநிலையிலிருந்து ஒரு படைப்பை நோக்கத்தெரிந்திருக்க வேண்டும். ஒரு நாலாந்தர அரசியல்வாதியைப்போல அபாண்டமானபழி , அபவாதம் சுமத்தவென்று புறப்படுமொருவனுக்கு படைப்பின் நல்லவிஷயங்கள் எளிதில் புலப்படா. இவ்விமர்சகருக்கும் கடைசிவரை அவை தென்படவேயில்லை.

Panther வகைப்புலியொன்று தான் அடித்த இரையின் ஈரலை மட்டுமே தின்றுவிட்டு மீதியை அப்பிடியே விட்டுவிடுமாம். தமிழரசனும் அப்படியே தான் விரும்பும் அரசியலையோ, கோட்பாட்டையோ வேறெதையோ படைப்புள் தேடிவிட்டு தனக்கு ஜீரணமாகாதவற்றின் மேல் துப்பிவிடவும் செய்கிறார்.

தமிழரசன் மாத்திரமல்ல, இலக்கியப்பரப்பில் நன்கறியப்பட்ட நட்ஷத்திரன் செவ்விந்தியன்கூட ( ஏப்ரல்-ஜுன்.1998 காலச்சுவடு.) நான் அத்வைதனை ஒரு அறிவுஜீவியாகப் படைக்க வில்லை என்று குதிப்பதையும் இவனால் ஒரு சட்டநாதனாகவோ, ரஞ்சகுமாராகவோ ஆகவே முடியாதென்று ஆவேசத்துடன் சபிப்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு படைப்பின் பின்பும் படைப்பாளிக்கும் படைப்புக்குமான தொடர்பு மறைந்து போகிறது. காலம் அவனது சிந்தனை, தத்துவத்தளத்தை பாதிக்கும் மாற்றும். பல படைப்பாளிகட்கும் இவ்வாறு நேர்ந்திருக்கிறது. ஒவ்வொரு படைப்பின் பின்னும் படைப்பாளி இறந்துவிட்டானென்று கொள்ளவேண்டுமென மேற்கத்தைய விமர்சனக்கோட்பாட்டாளர் சிலர் கூறுகின்றனர் .

என்னை கர்மாவாதியெனவும், சைவசித்தாந்தவாதியெனவும், அத்வைதியெனவும் விமர்சிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் நான் பலமாகவே சிரித்துக்கொள்வேன்.

நிஜத்தில் பொருள்முதல்வாதமோ, கருத்துமுதல்வாதமோ-மார்க்ஸிஸமோ, மாயாவாதமோ -ஆத்திகமோ , நாத்திகமோ எனது தேடல்களில் எந்த ஒரு கரையையும் ஏறாமல் தவிப்பவன் நான்.

மார்க்ஸிலும், எங்கெல்ஸிலும், டிறொக்ஸியிலும் . மாவோவிலும் எப்படி இன்னும் சந்தேகங்களும் குழப்பங்களும் கேள்விகளும் உண்டோ அதைவிட மிகமிக அதிகமாகவே முன் சொன்ன தத்துவங்களிலும் இவனுக்குண்டு.

இன்னும் ஒரு தத்துவத்தினாலும் பூரணமாக ஆட்கொள்ளப்பட்டு முற்றிலும் அடிமையாகாவிட்டாலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தத்துவத்தின்பால் அதிகஅளவில் பாதிக்கப்பட்டிருப்பேன். அக்காலத்தில் படைக்கப்படும் படைப்புக்களில் அவ்வவற்றின் பாதிப்பை லேசாகத்தெரியவே வைப்பது மாநகர சபை நாய்பிடிப்பவன் கையாளும் உத்தி.

முதலில் தான் கொண்டுவரும் நாயை குரைக்கவிடுவான். அந்நியக்குரலைத் தெரிந்துகொண்ட ஊர்நாய்கள் உடனே அதை விரட்டப்பாய்ந்து வரும் . லபக்கென கம்பியை மாட்டிவிடுவான்.

இவ்வகையில் ஒவ்வொரு படைப்பிலும் பாத்திரங்கள் தத்தம் குணாதிசயங்களில் பலம் பலவீனமும் மயக்கங்கள் குழப்பங்கள் கேள்விகள் கொண்டதாகப் படைக்கப்படும் நோக்கம் அதுதான். எனது குழப்பங்கள் சந்தேகங்களை வாசகரையும் தொற்றிக்கொள்ள வைத்துவிட்டேனாயின் அதுவே என் முதற்படி வெற்றி. தெளிந்தோரிடமிருந்து வரும் தர்க்கங்கள், வாதங்கள் , எதிரொலிகள் என்னைத் தெளிவுறச்செய்யின் அதனை முழுவெற்றியாகக் கொள்வேன். அதில் வெட்கப்பட எதுவும் இல்லை.

ஃபிறிடிறிச் நீட்ஷே கூட தன் கருத்துக்களையிட்டும், குழப்பங்களையிட்டுமான எதிரொலிகளைக் கேட்பதற்கான உத்தியில்தான் பரிசோதனைகள் பண்ணினான் என்பார்கள் சிலர்.

அவ்வகையில் கதைமாந்தருள் ஒருவர் கன்மாவாதியாக இருக்கலாம். இன்னொருவர் பொருள்முதல்வாதியாக இருக்கலாம். இன்னொருவர் இவையொன்றும் புரியாத பிறவியாகவிருக்கலாம். அதற்காக குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தையும் படைப்பாளியையும் ஒன்றாகப் பார்ப்பது சரியான விமர்சனப்பார்வையாக இருக்காது . இதைப்புரிய முன்னரே அவசரப்பட்டு இவர்கள் இருவருமே பாத்திரங்களுக்கு நான் சூடும் குல்லாவை எனக்குச்சூட்டிவிட்டுத் திட்டுவதிலும் வேடிக்கை பார்ப்பதிலும் மகிழ்கின்றனர். மகிழட்டும். இந்நோயின் தோற்றுவாய் , மற்றிதர குணங்களை நல்ல வாசகர் புரிவர்.

சாம்பிளுக்கு அத்வைதம் என்போமே. அத்வைத தத்துவம் தமிழரசன் போன்றோர் லேசாக சின்னவிரலால் சுண்டிவிடத்தக்க ஒருவிஷயமல்ல.

இருபதாம் நூற்றாண்டில் இலத்திரன் நுணுக்குக்காட்டியாலும், மிகுதொழில்நுட்பமுறைகளாலும் மூலகங்களைப்பகுத்து கரு, புரோத்தன், இலத்திரன், நியூத்திரன், மீசன், அணுஎண், சின்னஅணு, பெரிய அணு எனப்பார்த்து அறிந்து வியந்த வாஸ்த்தவத்தை சும்மா திண்ணையிலிருந்தபடி ஒரு அத்வைதி அன்றே எளிமையாக சொல்லிவிடுகிறான்: -பிரபஞ்சத்தின் வஸ்த்துக்கள் அனைத்தும் ஒன்றேயான பொருளின் மாறுபட்ட சேர்க்கையும் தோற்றங்களுமே.- இவ்வாறு உரைக்க எப்படிச்சாத்தியமாயிற்று? இதை எனக்கொரு அறிவியல்குருவோ, ஆத்மீகக்குருவோ தெளிவிக்கும் வரையில் David Copperfield பண்ணும் சாகசங்களைப் போன்றே அதன்மீதான என் ஆச்சரியம் விடுபடாமலேயிருக்கும். அணு இரசாயனத்தை இவ்வளவு எளிதாய் சொல்ல வைத்த ஞானத்தின் இரசாயனம் மேலும்மேலும் உள்ளே ஆழ்ந்து பார்க்கப்பட வேண்டிய விஷயமா இல்லையா? அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையென்றால் அதை விளக்கத் தக்க ஞானம் வேண்டும். -இல்லை- என்று மறுப்பதற்கு பெரிய ஞானமெல்லாம் வேண்டியதில்லை. சும்மா தலையை இடம் வலமாக ஆட்டத்தெரிந்தால் போதும்.

பொதுவுடமையில் காதல் கொண்ட பாரதிகூட - காணுகின்ற காட்சியாவும் சக்தி சக்தி சக்தி- என்று தன் நம்பிக்கையில் உறுதியாகவே நின்றான் . டொஸ்தோயெவ்ஷ்கிக்கும் அசைக்க முடியாதபடிக்கு கடவுள் நம்பிக்கை இருக்கவே செய்தது. அதற்காக அவர்கள் இலக்கியப்படைப்புக்களை யாரும் ஆகாதெனப் பிரதிஷ்டம் செய்துவிடவில்லை.

இவர்கள் என்னை கன்மாவாதி, ஆத்மீகவாதி, சைவசித்தாந்தி, சனாதனி, அத்வைதி என்றெல்லாம் கண்டுபிடித்து தீர்ப்புக்கூறிவிட்டார்கள் என்பதற்காக நான் கவட்டுக்கிடையில் வாலை வைத்துக்கொள்ளப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைன் மரங்கள்



டெனிஸ்: லீசா ஹோனமன் (Lise Hornemann)

தமிழில்: மல்லீஸ்வரி

எனது அறையின் ஜன்னல்களுக்கு வெளியே அந்தப் பழைய பைன் மரங்கள் இரண்டும் நிற்கின்றன. காலைச் சூரியக் கதிர்கள் பட்டவுடன் அவை தங்கள் வேர்களில் இருந்து அப்பொழுதுதான் வெளியில் வந்தவைபோல்... புதுப்பொலிவுடன் மிக அழகாகக் காட்சியளிக்கின்றன. வலிமையுள்ள மரங்களாய் வளரும்வரை... தம்மைத் தாமே இயக்கிக்கொள்ளும் தன்மை பெறும்வரை... தத்தமக்குரிய ஊட்டச்சத்தில் கொஞ்சத்தையும், தமக்குள் பரிமாறிக்கொண்ட ஊட்டச்சத்தில் கொஞ்சத்தையும் உறிஞ்சிய பிறகு மெதுவாக நிலத்திலிருந்து தம்மை உயர்த்திக்கொள்கின்றன வானத்தை நோக்கி... இவ்வுலகத்துக்குத் தம்மைத் தெரியும்வரை உயர்த்திக் கொள்கின்றன.

காலைநேரம் என்றால் எனக்கு நல்ல விருப்பம்.
ஒரு நாளின் தொடக்கம். நாட்களின் வித்தியாசம் அறியப்படாத நேரம்.
வெளியுலகத்துடன் தொடர்புகளற்ற அமைதியான எண்ணங்களைப் பிரசவிக்கும் பொழுது.

குளியலறையில் அம்மாவின் சத்தம் இன்று வழமைக்கு மாறாக ஒருமணிநேரத்துக்கு முன்பாகக் கேட்கிறது.
அப்பாவும் எழுந்து விட்டார். வழக்கமான காலைச் சிடுசிடுப்பு. நித்திரை குழம்பிய எரிச்சல். காலைப்பொழுதுகள் அவரது பலமான பக்கத்தை ஒருபோதும் காட்டுவதில்லை.
என் சகோதரிக்கும் அப்படியே. அவள் ஒரு கைக்குழந்தையைப் போல் உரத்துக் கத்துவாள். அதனால் அப்பாவுக்கு சினமாக இருக்கும். அது அம்மாவுக்கும் கஷ்டமாக இருக்கும்.
அவள் பிறக்கும் போது என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் 30 வயது. முதிர்ச்சியுள்ள பெற்றோர். இந்த வயதில்தான் குழந்தை பெறுவது என இருவரும் சேர்ந்தே திட்டமிட்டிருந்தனர். எனினும், அதை செயற்படுத்தமுன்பு அவர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தான் செய்தன. குழந்தை பெறுவது என்பது சுயநலம் என அப்பா கருதினார். அம்மாவுக்குப் புரியவில்லை.

'பிள்ளைகள் பெறுவதுகூட சுயநலமா?' அம்மா அப்பாவை அதிசயமாகப் பார்த்தார்.

'நான் அப்படிக் கருதவில்லை'

'அப்படியென்றால் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?'

அப்பா குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அது ஒரு கஷ்டமான சூழ்நிலை. வலியுள்ள சூழ்நிலை. அந்த வலியைப்பற்றி அப்பா கதைக்க விரும்பவில்லை. அதனால் அம்மா அப்பாவைப்பற்றித் தவறாகக்கூட நினைத்திருக்கலாம். அப்பாவுக்கு அதைப்பற்றி சொல்லவேண்டிய நிர்ப்பந்தம். ஏனெனில் அம்மாவுக்குப் புரிய வைக்கவே வேண்டும்.

'என்னைப்பார்' அப்பா மெதுவாகச் சொல்லத் தொடங்கினார்.
'நான் யார்? ஊர் ஊராக, நாடு நாடாகச் சென்று எலெக்ட்ரிக் சாமான்கள் விற்கும் ஒரு வியாபாரி.'

ஓ! கடவுளே! கசப்புணர்வின் வெளிப்பாடுகள்.
இத்தனை வருடங்களுக்குப் பிறகுமா? தன்னால் அடைய முடியாமல் போன அந்த இலட்சியத்தை மறந்துவிட்டதாக அவர் நினைத்தாலும்.... அது இன்னும் ஆழமாக அடிமனதில்....

அப்பா தன் வாழ்க்கையின் இலட்சியம் பற்றி அம்மாவிடம் சொன்னார். அம்மாவிடம் மட்டுமே சொன்னார்.
அப்பாவின் கனவு விமானப்படைத் தளபதியாக வருவது.
விமானங்களை இயக்கும் இயந்திரங்களுக்கு முன்னால் அமர்ந்து அழகான செட்டைகளைக் கொண்ட அந்த விமானங்கள் பாதுகாப்பாக மேலே எழவும், கீழே இறங்கவும் அவற்றுக்கு உதவி செய்ய வேண்டும்.
இப்படிப்பட்ட ஒரு பொறுப்பான உத்தியோகத்தராய் வரவேண்டும் என்பதே அப்பாவின் கனவு. இது அம்மாவுக்கு விளங்குமா? அப்பா வார்த்தைகளைத் தேடினார்.

அவர் கண்ட கனவுக்கு, கொண்ட இலட்சியத்துக்கு பத்து வருடங்களாகிவிட்டன. அது நிறைவேறவே இல்லை. அப்படி என்னதான் நடந்தது? அப்பாவுக்கு நிறமங்கல் என்னும் கண்நோய் உண்டாம். இந் நோய் இருப்பவர்கள் எப்படி விமானப்படைத் தளபதி ஆகலாம்.
எல்லாம் தெளிவாக விளங்காவிட்டாலும் அவரால் விமானப்படைத் தளபதியாக வரமுடியாது என்பதுமட்டும் அம்மாவுக்கு நன்றாக விளங்கியது. அவரது இலட்சியம் நிறைவேறாததற்கும் குழந்தை பெறுவதற்கும் என்ன தொடர்பு என்பது அம்மாவுக்கு விளங்கவில்லை.

'நான் நினைத்தேன் நீங்கள் இப்பொழுது செய்யும் உத்தியோகம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதென்று'

'அது எனக்குப் பிடித்திருக்கிறதுதான். அதில் கிடைக்கும் வருமானமும் எனக்குத் திருப்தியாக இருக்கிறதுதான். நான் மறுக்கவில்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், எனக்கேற்பட்ட நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பிறக்கும் பிள்ளைக்கும் ஏற்படக்கூடாது'

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'

'என் மகளுக்கும் என் கண்நோய் வர சந்தர்ப்பம் உண்டு. என்னால் அவள் பாதிக்கப்படுவது எனக்கு விருப்பம் இல்லை.'

அம்மாவுக்கு இன்னும் குழப்பமாக இருந்தது.

'எங்கள் பிள்ளைகளுக்கு எல்லா வசதிகளையும், வழிவகைகளையும் செய்து கொடுப்பது எமது கடமை' என்றார் அழுத்தமாக. மீண்டும் முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினார்.

'என் மகள் தனது இலட்சியங்களை அடையவேண்டும். அது எதுவாக இருந்தாலும் சரி. என் கண்நோய் அவளுக்கும் வந்து, அதனாலேயே அவளும் தன் இலட்சியத்தை அடையாமல் கஷ்டப்படக்கூடாது. என்னைப்போல் கவலைப்படக்கூடாது.'

அப்பாவின் பார்வை அம்மாவின் பக்கம் திரும்பியது. இப்பொழுது அம்மாவுக்கு விளங்கியதா? அதில் அப்பாவுக்கு இன்னும் சந்தேகந்தான். அதனால் அம்மாவுக்கு உரிய வகையில் விளக்கம் சொன்னார்.

'எங்கள் மகள் 'மொடல் டிசைனராக' வர விரும்பினால் நிறமங்கல் உள்ளவள் எப்படி நிறங்களைக் காண்பாள்'

அம்மாவுக்குத் தெளிவாக விளங்கிவிட்டது. இந்த வகையில் அம்மாவின் சிந்தனை போகவில்லை. அப்பா சொல்வதும் சரியென்றே அம்மாவுக்குப் பட்டது. தனது மகளின் இலட்சியம் நிறைவேறாமல் போனால், அவள் விரும்பும் தொழிலைச் செய்யமுடியாமல்ப் போனால், அது அவளது வாழ்க்கையில் ஒரு விபத்தாக அல்லவா இருக்கும்! அது எவ்வளவு பெரிய அநியாயம்? அம்மா அப்பாவைப் பார்த்தார்.

'என்னை ஒருமுறை பாருங்கள். நீங்கள் ஏன் மகள் என அடிக்கடி சொல்கிறீர்கள்?'

அப்பா அம்மாவுக்கு நேரெதிரே அமர்ந்துகொண்டார். ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். அவர் சொல்லப்போகும் விடயம் மிகவும் சிக்கலானதும், எளிதில் பிழையாக விளங்கிக் கொள்ளக் கூடியதுமாகும். அதனால் சரியான முறையில் அதை விளக்க வேண்டும்.
அதற்காக அப்பா நிறைய நேரம் எடுத்துக்கொண்டார். தங்கள் பிள்ளைகளுக்கு நிறமங்கல் வராமல் இருக்க வேண்டுமானால் அந்தக் கரு இயற்கையான முறையில் உருவாக்கப்படக் கூடாதாம். உடம்பில் குறைபாடுள்ளோரின் உயிரணுக்கள் உருவாக்கும் கருவானது, அதே குறைபாடுகளைப் பெறும் வாய்ப்பு உண்டாம். அப்பா இதைப்பற்றி நிறைய வாசித்திருக்கிறார். அதனால்...... ஆம்...... கருவுற்பத்தியானது இயற்கையாக நடக்கக் கூடாது.

'எமக்குப் பிறக்கும் குழந்தைக்கு (மகள் என்று சொல்வதை அப்பா தவிர்த்துக் கொண்டார்) அன்பையும் அரவணைப்பையும் கொடுக்க வேண்டும். தன்னை அன்புடன் பராமரிக்க தனது பெற்றோர்கள் இருக்கிறார்களென எங்கள் பிள்ளை உணரும்படி.... நம்பும்படி நாம் வளர்க்கவேண்டும்'

அம்மா ஒருமுறை சொன்னார். பெண் குழந்தைகள் கூடுதலாக தாயுடன்தான் சேர்வார்களாம். ஆண் குழந்தைகள் தந்தையுடன் சேர்வார்களாம்.

இந்த இடத்தில் அவர்களின் அன்றாட குடும்ப வாழ்க்கையை சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. அப்பா எத்தனை நாட்கள் வீட்டுக்கு நேரம் சென்று வந்திருக்கிறார்? சில சமயம் சனி, ஞாயிறுகளில்கூட அவர் வீட்டில் இருப்பதில்லை. ஹோட்டலிலோ, வேறு இடங்களிலோ எத்தனை நாட்கள் தங்கியிருக்கிறார்? ஒரு ஆண் குழந்தையைப் பெற்றால், அப்பாவால் அவனுடன் பந்தடிக்கவோ, கதைக்கவோ முடியாது. அவன் சிறுவனாக இருக்கும்பொழுது அவ்வளவாகத் தோற்றாது. ஆனால் வளர்ந்துவிட்டால் தன் தந்தையைக் கட்டாயம் தேடுவான். இந்தச் சூழலில் மகனுக்குத் தேவையான அன்பையும் அரவணைப்பையும் அப்பாவால் கொடுக்க முடியாது. அம்மாவாலும் அதைச் செய்ய முடியாது.

ஆனால் ஒரு பெண்குழந்தை பிறந்தால் அம்மாவின் அணைப்பு எப்பொழுதும் கிடைக்கும். அம்மாவும் சில நாட்கள் நேரம்போய் வீட்டுக்கு வருவதுண்டுதான். எனினும், எங்கும் தங்காமல் வந்துவிடுவார்.

அதனால்தான் அப்பா நினைத்தார், தாங்கள்.... ஆம்..... கருவின் உற்பத்தியானது முன்பு குறிப்பிட்டதுபோல் நடந்தால், பிள்ளை என்ன பாலாக இருக்கவேண்டும் என்பதையும் ஒழுங்காகத் தீர்மானிக்க முடியும்.

'நாம் எங்கள் பிள்ளைக்கு என்ன நிறத்தில் கண் அமைய வேண்டும் என்பதையும் தீர்மானிப்போமா? தலைமயிர்..... உங்களுக்கு நிறமங்கல் இருப்பதால் நானே அதை முடிவெடுக்கிறேன். என்ன?'

அம்மாவுக்கு நன்றாக கோபம் வந்து விட்டது. இதைப்பற்றி முதன் முறை யோசிக்கும்போது இப்படித்தான் அப்பாவுக்கும் கோபம் வந்தது. தன்மீதே கோபப்பட்டார். தன்னைத் தானே வெறுத்தார். எனினும், இதில் தர்க்கரீதியான நியாயம் இருக்கவே செய்தது. பைத்தியக்காரத்தனமான சிந்தனைபோல் இருந்தாலும்,.... ஆம் இதில் ஒரு தர்க்கரீதியான நியாயம் உள்ளது.

ஒரு பொருளை உற்பத்தி செய்வது எப்படி என்பதையா அப்பா கதைத்தார்? இல்லை, அவர் தங்கள் பிள்ளையைப் பற்றியே கதைக்கிறார் என்பதை அம்மா விளங்கிக்கொள்ள வேண்டும்.

தங்கள் பிள்ளை! அந்தப் பிள்ளைக்குத் தாம் கொடுக்கவேண்டிய அன்பு.... பாசம்.... பற்றி அப்பா கதைக்கிறார். அப்பிள்ளைக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துத் தருவது பற்றி கதைக்கிறார். அதற்கு ஏதோ 'ஒன்றைச்' செய்ய வேண்டுமென அப்பா விரும்பவில்லை. ஏதோ ஒன்றிலிருந்து அதைக் காப்பாற்ற விரும்பினார். இது அம்மாவுக்கு விளங்கியதா? இதுபற்றி அவர்கள் விடிய விடிய கதைத்தார்கள்.

'பிள்ளைக்காக' இவ்விடயம் பற்றி நிறைய கதைத்தார்கள். கடைசியில் பிள்ளை வளரக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பது சுயநலமாகாது என்பதை அம்மா ஒப்புக் கொண்டார்.

ஒரு பெண்குழந்தை பிறந்தால் நல்லது. நோயற்ற.... நிறமங்கலற்ற.... பிரியமுள்ள.... ஒரு சின்ன பெண்குழந்தை.

அவர்களுக்குப் பிறந்தது ஒரு குழந்தையல்ல. இரட்டைக் குழந்தைகள். இரண்டும் பெண்குழந்தைகள். நானும் என் சகோதரியும்.

என் தங்கை ஜெனட்டை எனக்கு நன்றாகப் பிடிக்கும். நாங்கள் இரண்டுபேருமே குணத்தில் வித்தியாசமானவர்கள் என்றாலும் எனக்கு அவளைப் பிடிக்கும். எனக்கும் ஐந்து வயதுதான் என்றாலும் எனது மூளை வளர்ச்சி வயது வந்தோரைப் போன்றது. எனக்கு 100 வயது. நான் பெரியவர்களைப் போலவே சிந்திப்பேன். அவர்களுக்குரிய அறிவாற்றல் எனக்கும் உள்ளது. சிலவேளை கொஞ்சம் கூடவென்றும் சொல்லலாம்.

நான் பிறந்தநாள் தொட்டு இப்படித்தான் இருக்கிறேன். ஆனால், அது ஒருவருக்கும் தெரியாது. ஏனெனில், என்னை ஒருவருமே பரிசோதித்துப் பார்க்கவில்லை. எனக்கும் ஒருவரிடமும் சொல்லவும் முடியாமல் கதைக்கவும் முடியாமல் போய்விட்டது. சிலவேளை ஜெனட் என்றைக்காவது ஒருநாளைக்கு என்னைப் புரிந்து கொள்ளக் கூடும். சிலநேரங்களில் அவள் என்னிடம் வந்து, எனக்கு முன்னால் அமர்ந்துகொண்டு, எனது கண்களை ஆழமாக உற்றுப் பார்ப்பதுண்டு. நீண்டநேரம் பார்ப்பாள். ஒன்றுமே சொல்ல மாட்டாள். கண்களைத் தவிர என் உடம்பின் எப்பகுதியையும் பார்க்கமாட்டாள். பிறகு எழும்பிப் போய்விடுவாள்.

எனக்கு ஜெனட்டில் நம்பிக்கை இருக்கிறது. என்றாவது ஒருநாள் என் கண்களில் தான் கண்டவற்றை.... புரிந்தவற்றை.... எனக்குச் சொல்லுவாள். அந்த இடத்தை..... என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது.
உதாரணத்திற்கு யதார்த்த இலக்கியம் பற்றி ஜமுனா ராஜேந்திரன் கூற்றுப்படி யதார்த்தம் என்னும் கருத்தமைவு பலவேறு ஆழங்களிலும், தளங்களிலும் அர்த்தங்களைத் தேடிப்பார்க்க வைக்கவல்லதே. ஆனால் -பிற கலாசாரங்களையும் , விளிம்புநிலை மக்களின் பிரச்சனைகளயும் நிராகரித்த கலைக்கொள்கையாக உள்ளது என்ற எதிர்விமர்சனத்திற்கும் உட்பட்டுள்ளது என்ற பொதுவான கூற்றானது- மேலும் அவ்வெதிர் விமர்சனங்கள் எந்தெந்த -யதார்த்தவாத இலக்கியப்படைப்புகளின்- ஆய்வுத்தளத்தில் எழுந்தவை என்று தெளியக் கூறப்படாமலுள்ளதால் விளக்கம் போதாமலுள்ளது என்று நான் இயல்பாக எழுதியதானது அவருக்கு நான் இரந்து நிற்பதாகத் தெரிகிறதாம்.
நான் குறிப்பிட்டதெல்லாம் இத்தகு நிறப்பிறழ்ச்சிகளைத்தான்.

அம்மா-7 இன் ஹைலைட் விடயம் ஜமுனாவின் கட்டுரைதான். முழுநூல் வடிவையும் படிப்பதற்கான ஆவலைத் தூண்டுகிறது.
தலித்துக்களின் உள் ஜாதிகள் (இலங்கை வழக்கில் துரும்பர், அருந்ததியர் etc) பற்றிய பிரச்சனையை இப்படியும் சிந்திக்கலாமென்று நினைக்கிறேன். தலித்துக்கள் பொருளாதார நிலையில் மேலேயோ, கீழேயோ எங்கிருந்தாலென்ன சாமி நம்பிக்கையைப்போன்றே தம்மீதான மேல் ஜாதியினரின் ஒடுக்குமுறைகளைக் காலங்காலமாகவே ஏற்றுக்கொண்டு அவைகளுக்கெதிராக கிளர்ந்தெழவோ, போராடவோ வேண்டுமென்ற பிரக்ஞையற்றிருக்கும் மக்களே இன்றும் வீதாசாரத்தில் அதிகம்.
நாலைந்து வருஷங்கள் முன்பதாக நம்ம ஊரில் தலித்து (இசைப்போராசிரியராவுள்ள) ஒருவரை வீட்டுக்கு அழைத்து உபசரித்தபோது அவர் வீட்டினுள் வரவோ ஆசனத்தில் அமரவோ கடைசிவரை மறுத்துவிட்டார். எத்தனை முயற்சித்தும் முடியவில்லை. அவர் சொன்ன காரணம் 'எதுக்குங்கோ மரபுகளை மீறுவான்?'.
இந்தக் கருத்தின்படிக்கு இவர்போன்றோர் சந்தேகமில்லாமல் தலித்து உள் ஜாதிக்கட்டமைப்புகளையும் இன்னும் ஏற்றேயிருப்பர். இன்னும் விளிம்புநிலைக்கு கீழுள்ள கல்வியறிவற்ற தலித்துக்களின் நிலைபற்றி பேசவே வேண்டியதில்லை.
எனவே தலித்துக்களுள் வீதாசாரத்தில் அதிகமாக இருக்கக்கூடிய இம்மக்களைவிட தலித்தல்லாதோருள் வீதாசாரத்தில் அதிகமாகவுள்ள ஏனைய மக்கள்தான் ஜாதியமைப்பைக் கட்டுடைத்து தலித்துகளுக்கு முன்மாதிரியாக அமையவேண்டும். ஏனெனில் அவர்களுக்குத்தான் ஏனையோரைவிட ஜாதியமைப்பற்ற மற்றைய நாடுகள், சமுதாயங்களை தரிசிக்கவும் எமக்குள் ஜாதியமைப்பற்ற நவீனசமுதாயத்தை அமைக்கவேண்டியதன் அவசியம் பற்றிய உணரவும், உருவாக்கவும் சந்தர்ப்பங்கள் அதிகம். எங்கள் குல்லாய்களை முதலில் நாங்கள் வீசுவோம். அவர்கள் தங்கள் குல்லாய்களைத் தாமாக வீசுவார்கள். மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைத்துப்பாயும் மட்டும் காத்திருக்க முடியாது. அது புதுவேகங்கொண்டு தடைக்கல்லுகளை உருட்டியே பாயட்டும்.

ஷோபா சக்தியின் கதையில் அவரது ஸ்பெசல் டச்சிங் வித்தியாசமாகத் தெரிந்தது. அழகான பெண்பெயரைத் தேர்ந்து கொண்டிருப்பவர் தன்கூற்றில் அவர்கள் மனதைச் சுருங்கச் செய்யத் தக்கதும் வழக்கொழிந்து கொண்டிருப்பதுவுமான தூமச்சீலை என்ற வாக்கியத்தைத் தவிர்த்திருக்கலாம்.

சிறீதரதும், அமரந்தாவினதும்கூட வித்தியாசமான நல்ல கதைகள்.
போக்கிடம் கதையில் மனிதருக்கு வயது தராத self control மழைவந்து கழுவுவதால் தருகிறதாக்குமென எண்ணிக்கொண்டு மூடிவிட்டேன். பின்னர் பார்த்தால் மறுபக்கத்தில் ப.வி.ஸ்ரீரங்கன் மேலும் தொடர்கிறார் . அவ்விடத்தில் அவர் கதையை நிறுத்தியிருந்தால் இன்னும் செட்டாக இருந்திருக்குமோ?

ஓட்டமாவடி அறபாத்தின் கதையில் நம் சமூகத்தின் சீரழிவு அவரை மிகஅதிகமாக பாதிப்பதை உணரமுடிகிறது. ஒரு போராளியின் பார்வையில் இது பலமுறையும் சொல்லப்படும் விஷயந்தான். மொழியைக்கையாள்வதில் முன்னேற்றமடையும் இவர் வேறும் புதிய கருக்களில் முயற்சிக்க வேண்டும்.

ஜி. நாகராஜன் பற்றிய சர்ச்சையில் யாரும் கணக்கிலெடுக்காத விடயமொன்றுண்டு. பாரதி, புதுமைப்பித்தன் , மௌனி போலவே இவரும் தன் படைப்புக் காலங்களில் பரவலாக அறியப்பட்டிருக்கவில்லை என்பதுஅது. அதற்கு அவர் எழுதத்தேர்ந்த (சிறு)பத்திரிகைகளின் சுற்றுவட்டம், மற்றும் அக்காலத்தில் அவர் எழுதிய பல சிறுகதைகள் தொகுக்கப்பட்டு நூலுருவில் வெளிவராமை போன்ற பின்னடைவான காரணங்களும் உண்டு. 1963ல் நூலுருப்பெற்று மலிவுப்பதிப்பு போல் பாக்கெட் சைஸில் வெளிவந்த அவர் குறத்தி முடுக்கு குறுநாவல் 1000 பிரதிகள் விற்பனையாக எடுத்த காலம் 30 ஆண்டுகள். அதன் பின்பே 1994ல் இரண்டாவது பிரசுரம் செய்யப்படுகிறது. இரண்டாவது பிரசுரத்தின் ஒரு பிரதி கிடைக்க நேர்ந்த ஒரு விபத்தினாலேயே அவரை நானும் அறிந்தேன்.
இத்தனை தீவிரமான வாசகர்களைக்கொண்ட ஆரோக்கியமான தமிழ் இலக்கிய சூழலில் மற்றும் நாளை மற்றொரு நாளே (நாவல்), கண்டதும் கேட்டதும்(சிறுகதைத்தொகுதி) கூட மறுபிரசுரம் செய்யப்பட்டனவா தெரியவில்லை. இப்போதுங்கூட கிடைத்த அளவில் அவர் படைப்புக்கள் சேகரிக்கப்பட்டு காலச்சுவடு நூலுருவாக்கி இருக்காவிட்டால் இலக்கியப்பரப்பில் பேசப்படாமலே போயிருந்திருக்க சாத்தியம்.

**பொ. கருணாகரமூர்த்தி** (பேர்லின்)



## படைப்பாளிக்கு கட்டளையிடும் தொனி நல்ல படைப்புச்சூழலை உருவாக்கிவிடாது!

அன்புடன் அம்மாவுக்கு,
இம்முறை (இதழ்-7) தரமான சிறுகதைகளுக்கேற்பட்ட பஞ்சத்தில் தத்தளிப்பதாகச்சொல்லிக்கொண்டு வந்துள்ளது. தரம் / தரமற்றது என்பதற்கான அளவுகோலை அம்மாவும், அவள் உறவுகளும் ஏந்திப்பிடிப்பதும் படைப்பாளிகளுக்கு கட்டளையிடும் தொனியில் குரைப்பதும் அவ்வளவு இறுக்கமாக ஒரு படைப்புச்சூழலை உருவாக்கிவிடாது.

ஒருசில சிறுகதைப்படைப்பாளிகளின் படைப்புக்கள் எதைக்குறித்துரைக்கின்றது என்பதே புரியாமலுள்ளது. சிற்சில வேளைகளில் விளங்காதுபோனாலும் நம் அறிவுநிலையைக்காத்துக்கொள்ள நல்லது/ சுப்பர் என்று சொல்லித்தொலைக்கவேண்டியுள்ளது.

இதைவிடவேறு வழியுமில்லை!
இப்பத்தைய சிறுகதைப்போக்கே 'வடிவத்தை மாற்றுவோம்" என்னும் போக்கில் குட்டிகுட்டிச்செய்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாதவார்த்தையில் சொல்லிக்கொள்வதற்கே முயற்சிகள் பல.

இனி விஷயத்திற்கு வருவோம்.
ஷோபா சக்தி என்ன சொல்கிறார்? புரிவதற்கு மில்லியன் ஆண்டுகள் எடுத்தாலும் ஆச்சரியமில்லை. எனினும் ஏதோ சொல்லிச்செல்கிறார்? ஓ! என்ன சிறப்பு. சிறப்பான கதை. இம்முறை சிறீதர் விளங்கும்படி கதைசொல்ல முயற்சிசெய்திருக்கிறார். எனினும் சிறுகதை எழுதிவிட்டு பின்பு விளக்கம் தேவையெனில் அம்மாவோடு தொடர்புகொள்கவென்பதும் சற்று நெருடும் விஷயம். ஒரு கதை விளங்கவைக்காது போனால் அதன் தேவையென்ன? கட்டுரை எழுதி பக்கத்தில் இணைத்துவிடுதலும் ஒருவகைச்சிறுகதைப்போக்காகச் செல்லமுடியும்; இ·து என் ஆலோசனை!

பெயரிடமுடியாத கதையும் ஏதோ தன்னளவில் நிறைவாகவே போயுள்ளது. ஓட்டமாவடி அறபாத் கூறும் 'விலங்கு' பற்றி எதுவும் கூறத்தேவையில்லை. அ·து நம் வாழ்சூழல். மனிதர்களை அவர்கள் உரிமைகளைப்பறிக்கும் நிறுவனங்களை / அதுசார்ந்த மனிதர்களை தோலுரிக்கும் 'விலங்கு' கதை நம்நாட்டின் அரசியல் / சமூக வாழ்நிலையின் கண்ணாடி. அறபாத் இன்னும் சொல்வார். ஏனெனில் அவர் சூழல் அது. நாம வடிவாக ஐரோப்பியச்சூழலில் 'மப்பு வாழ்வு' வாழ்ந்து அவர் அனுபவத்தை விமர்சித்தல் நகைப்புக்கிடம். விலங்கு சிறுகதை மிக மிக எளிய மொழியில் மிகச்சிறப்பாய்ச்சொல்லும் கதையென்று கூறிவிடமுடியும்.

யுத்தமும், கொடிய ஆக்கிரமிப்பும் மனிதர்களை, உறவுகளை அவர்கள் வாழ்வை இல்லாது ஆக்கிவிடும் பட்சத்தில் இந்த உலகை இன்னும் சுதந்திர பூமியாக பார்க்கமுடியுமா? எல்லாமே விலங்குதாம்!

போக்கிடம் கதைபற்றி எழுதிய நானே இப்போது பார்க்கும்போது சிலவேளைகளில் சிரிப்பாயும் கவலையாயும் இருக்கு. இதையெல்லாம் எழுதி என்னுடைய கட்டுப்பெட்டித்தனத்தை நானே புரிந்துகொள்ள என் எழுத்துக்கள் வழிசமைப்பதில் எனக்குச்சிரிப்புத்தாம்! பாவம் அந்த மனிதன் இப்போது போக்கிடமாக சவக்காலையில் தூங்குகிறார். அவர் ஆசைகள்; தேவைகளை நாம் புரியவேயில்லை. எழுதிய நான்கூட.

கவிதைகள் இரண்டும் சிறப்பாக வந்துள்ளது என்று சொல்லிச் 'சொறிய' முடியாது! வாழ்வின் மெய்மையைக்கூறுவதால் அவை கவிதைகளாய் எழுதப்பட்டுள்ளது. மண்கவ்வும் நம்பிக்கைகளை இன்னும் பற்றிக்கொள்ளுதல்தாம் வாழ்வு.

கருணாகரமூர்த்தியின் படைப்புக்களைச் சரியாக விமர்சித்திருக்கிறபோக்கு வரவேற்கப்படவேண்டியது. படைப்பாளியின் மலினப்பட்ட சமூக மனோபாவம் மிகமுக்கியமாக விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கும் போக்கு சரியானது. திரு. கருணாகரமூர்த்தி அவர்கள் கொஞ்சம் மண்ணையும் மிதிக்கவேண்டும்; முயற்சிக்கட்டும்.

வம்சவிருத்தி படிக்கவில்லை. எனினும் விமர்சப்போக்கு சச்சிஅவர்களுக்கே உரிய அகன்ற தளத்தில் வைத்துப்பார்க்கப்பட்டது சிறப்பு.

இறுதியாய் யமுனா ராஜேந்திரனின் கட்டுரை பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டும். புலம்பெயர்வுச்சூழலில் இத்தகைய கட்டுரைகள் மிக, மிகப்பயன்மிக்கவை. அதுவும் தமிழில் - தமிழ்மொழியைப்பேசும் நமக்கு —நம்மொழிக்குள் இத்தகைய விமர்சனங்கள் வருவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. ஜேர்மன் மொழிக்குள் இடம்பெறும் விமர்சனங்களுக்கூடாக யமுனாவின் எழுத்துக்கள் இருப்பது சிறப்பே. தொடரட்டும்!

**- ப. வி.சிறீரங்கன்** (ஜேர்மனி)

## எதிர்க்கலாச்சாரம் என்றால் என்ன?

புகலிட இலக்கிய சஞ்சிகைகளின் எழுத்து இயக்கத்தினுள் (குறிப்பாக பாரிஸில்) நுழைந்து 'எழுத்து நபர்களின்' நிஜமுகங்களை தரிசிக்கும் ஒருவனுக்கு 'சீ' என்று போய்விடுகின்றது. அம்மா எழுத்தாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.
எழுத்து இயக்கத்தில் அனைத்து அதிகார சமூக கட்டுமானங்களையும் உடைத்தெறிய புறப்பட்டுள்ளதாக பறைசாற்றும் நாம் சொந்தவாழ்வில் இந்த ஏகாதிபத்திய நுகர்வுக்கலாச்சார கட்டுமானங்கள் தொடர்பாய் எம்முள் வைத்துள்ள சமூக அரசியல் நிலைப்பாடு என்ன? கட்டுடைப்புகள், பெரும் கதையாடல்களின் தகர்வுகள் என்பனவையெல்லாம் வெறும்சொல்லாடல் வாய்விளையாட்டுக்களோடு முடிந்துவிடும் விடயம் அல்ல. இது வாழ்வியல் சமூக கலாச்சார பண்பாட்டு இயங்குதளத்தில் ஏற்படும் அரசியல் மாற்றம். ஏகாதிபத்திய நுகர்வுக்கலாச்சாரம் உன்னதம் என வியந்து அதில் மிதப்பதோடு அதை நியாயப்படுத்தும் நாம் எதிர்க்கலாச்சாரம் பற்றி எழுதுவது வேடிக்கைத்தனமாகவே உள்ளது. எடுத்ததற்கெல்லாம் அகராதிதேடி அலையும் எம்அறிவு 'எதிர்க்கலாச்சாரம்' பற்றிய விளக்கத்தையும் தேடி அலையட்டும்.

வெறும் எழுத்து இயக்கத்தில் தகர்வைக்கோரும் நாம் அரசியலுக்கும் மனித நடத்தைக்குமான உறவுநிலைபற்றி கொஞ்சம் விவாதித்தால் என்ன?

**- துடைப்பான்** (பாரிஸ்)

## அம்மா என்று பெயரை வைத்துவிட்டு ஆண்சிந்தனைகள் மட்டுமே அம்மாவில்...!

பத்துவருடங்கள் பின்நோக்கிப் பார்க்கிறேன். ஐரோப்பா முழுவதும் சஞ்சிகைகளின் காலமாக இருந்தது. கட்டுரைகள், கதைகள், கவிதைகள், விமர்சனங்களில் பெண்விடுதலைக்கருத்துக்கள் ஆண் எழுத்தாளர்களால் மட்டுமல்ல பெண்களாலும் எழுதப்பட்டன. பெண் ஆசிரியர் குழுக்களைக்கொண்டு பெண்கள் சஞ்சிகைகளும் வெளிவந்தன. எல்லாம் எங்கே மறைந்துபோயின? அம்மாவில் புதல்வர்கள் மட்டுமே எழுதுவதால் புதல்வியர்கள் எழுதப்பயப்படுகிறார்களா? அல்லது எழுதிவிட்டு மாறான நடைமுறைகளைப்பெரும்பாலானவர்கள் கொண்டிருப்பதால் எழுதித்தான் என்ன பிரயோசனம் என்று ஒதுங்கியுள்ளார்களா? அம்மா என்று பெயர்வைத்துவிட்டு அவளிற்கூடாக ஆண்சிந்தனைகள் மட்டுமே வெளியிடப்பட்டுவருகின்றன. அதற்காகவேனும் எழுதவேண்டியுள்ளது.


அம்மா விமர்சனங்களிற்காக தனது மனதைத்திறந்து வைத்திருப்பதால் அப்பகுதியை விரும்பிவாசிக்கக் கூடியதாக இருக்கிறது.
ஏழாவது அம்மாவில் வெளிவந்த ஷோபாசக்தியின் பைலாப்பாட்டு சிறுகதைபற்றிச்சில வார்த்தைகள்: சஞ்சிகைகளை ஒழுங்குமுறையில்லாமல் வாசிப்பது எனது வழக்கம். சிறுசிறுதுணுக்குகளை முதலில் தேடிப்படிப்பேன். அப்படித்தேடும்போது 'அதிசயம் அதிசயம்' கிடைத்தது. படித்துமுடித்து அம்மாமீது கோபம் வந்தது. அம்மா இவ்வளவு தரம் குறைந்து போனாளா என்று மனதுக்குள் திட்டியபடி அதற்கு முன்பக்கங்களைப் புரட்ட பைலாப்பாட்டு விடயம் புரிந்தது.
தமிழ்ச்சிறுகதைகளுக்கு இருந்த வரைமுறைகள் மாறி இப்போது புதுவடிவங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. இச்சிறுகதையும் ஓர் புதுவடிவம். பைலாப்பாட்டை வாசிக்கும்போது இரண்டு திரைப்படக்காட்சிகள் என் கண்முன் வந்தன. ஒன்று The Colour Purple இரண்டாவது Fire. ஆணாதிக்க கருத்துக்கள் கொண்ட முதலாளித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதில் பெண்களின் கருத்துக்களை உணர்வுகளை, உரிமைகளை யார் மதித்தனர்? பைலாப்பாட்டிற்கு பக்கமேளமாக அமைந்து பெட்டிச்செய்திகள் கதைக்கு அணைகட்டுகின்றன. இன்று எமது சமூகத்தில் பேசப்படக்கூடாத விடயங்களில் ஒன்றுதான் பெண் பெண் உறவும். இயற்கையாகவே பெண்களுடன் உறவுகொள்ளும் உணர்வுகளைக்கொண்டிருத்தல், ஆணாதிக்கத்துள் உட்படாது, அதை பாலியல்ரீதியாகவும் எதிர்த்து, பெண்களுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளல் மட்டுமல்ல ஆண்களின் முரட்டுப்பாலியல் உறவிலிருந்து விலகி (ஆண்குறியின் ஆதிக்கத்திலிருந்தும் சுதந்திரம்பெறல்) மென்மையான, புரிந்துணர்வுள்ள உறவு பெண்ணிடம் கிடைக்கும்போது அது பைலாப்பாட்டுத்தான். பெண்களின் விடுதலைக்குப்போராடுவதாக பல ஆண்கள் நினைக்கிறார்கள். எமது உரிமைகளை நாம்தான் வென்றெடுக்கவேண்டும். பெண் பெண் உறவுகளை முழுமையாகப் புரிந்துகொள்ளப்போகிறவர்கள் பெண்கள்தான். பைலாப்பாட்டு பெண்களினாலும் பாடப்படவேண்டும்.

– **நிரூபா** (பேர்லின்)



## சிறுகதைகளின் வேறொரு தளத்தை 'அம்மா'வில் காண்கிறேன்.

... ஒன்றைக் கவனித்தேன். பரிசோதனை ஏதும் நிகழ்த்த வேண்டுமென்றால் 'அம்மா' அதற்கு ஆயத்தமாக இருக்கிறாள். பிரான்ஸிற்கே உரிய இயல்புபோல இருக்கிறது. இப்போது சிறுகதைகளின் வேறொரு தளத்தை 'அம்மா'வில் காண்கிறேன். ஒவ்வொருமுறையும் எதிர்பார்க்கவைக்கிற கதைகள் அம்மாவில் வந்துவிடும். அதேபோது ஷோபாசக்தியின் 'பைலாப்பாட்டு' கதை தொடங்கவுமில்லை. முடியவுமில்லை. அதுவே ஒரு செய்தியைச்சொல்கிறது. கதையைச்சுற்றிவந்த துணுக்குகள் யாருடைய ஐடியா? பதிப்பாளருடையதா? ஷோபா சக்தியினுடையதா? கதையின் வெவ்வேறு பகுதிகள்தாம் அவை. இல்லையா? எல்லாமாகக் கதை முக்கியத்துவம் பெறுகின்றது. எள்ளல் நடை ஷோபாசக்தியின் குறிப்பிடத்தக்க அம்சம்.

'இரண்டு தற்கொலைகளும் ஒருதற்கொலையும்' லேசான கதையல்ல. சிறீதரும் இன்னொருமுக்கிய படைப்பாளியாகப் பரிணமிக்கிறார். கதை ஏன் நல்லா இருக்குது? என்கிற விமர்சனத்தை இங்கு குறிப்பிடுவது தேவையற்றது.

ஆனால் வேறொரு விசயத்தையே இங்கு குறிப்பிடலாம். ஷோபாசக்தி, சிறீதர் இருவரினது கதைகளும் மிகச்செறிவாகவும், நடை மிகுந்தவலிமை கொண்டதாகவும் அமைந்திருக்கிறது. மற்றது ஒரு எள்ளல்நடையும் இருவரிடமும் ஒருசேர வாய்த்திருக்கிறது. நிச்சயமாக ஒன்றைக்குறிப்பிடலாம். இதுவரை காலத்தைய தமிழ்ச்சிறுகதைகள் போன்றவையல்ல இவர்களின் கதை. இந்தக்கதைகள் என்னவோ செய்கின்றன.

புதுமைப்பித்தனிடம் எள்ளல்நடை இருந்தது. அசோகமித்திரனிடம் நகைச்சுவையுணர்வு இருந்தது. (நகைச்சுவையுணர்வு மிக நிரம்பப்பெற்றவர் நம்மூர் அ. முத்துலிங்கம்) ஜானகிராமனிடம் பரிவு இருந்தது. இத்தகையநடைகள் ஏற்கனவே இருந்தனதான். எனினும் இந்த இருவரினதும் நடை ஊடுருவித்தாக்குகின்றது. இடையிடை வாய்விட்டுச்சிரிக்கிறோம். இவர்களின் நக்கலுக்கு ஆளானவர்கள் துன்பப்படப்போகின்றார்களோ என்று கோபமும் எழுகின்றது. எல்லாமாக எதுவோ செய்கிறது. எள்ளல் நடைஎன்பது சமூகத்தின் மீதான் விமர்சனம் தான். புதுமைப்பித்தன் ஏலாக்கட்டத்தில் அதனைச்செய்தார். ஷோபாசக்தி, சிறீதருக்கும் ஏலாக்கட்டம் தானோ? ஏலாக்கட்டம் இல்லையென்றால் இன்னொன்று இருக்கிறது. கடுங்கோபம். ஆத்திரவார்த்தைகள் இப்படி எள்ளலாய் வெடிக்கின்றன. இன்னொன்றும் இருப்பதுபோல் படுகின்றது. 'நான் மாத்திரம் சரியாயிருக்கிறேன் - சுற்றியுள்ள ஒன்றுமே சரியில்லை." இதுவும் காரணம்தான். ஷோபாசக்தி, சிறீதரின் நிலை எந்தவிதம்?

ஆனால் இந்தநடையை வலிந்து மாற்றத்தேவையில்லை. இயல்பை அதன்போக்கில் விடுங்கள்.

'பெயரிடமுடியாதகதை'யும் சொல்லிக்கொள்ளும்படியான கதை. கதையின் மொழியில் இருந்த பரிவு என்னில் தொற்றிக்கொண்டது. அமரந்தாவின் நடையில் ஈர்ப்பு ஏற்படுகின்றது. கிட்டடிச்சொந்தக்காரன் போன்ற ஓருணர்வு அமரந்தாவின் கதையிலிருந்து கிடைத்தது.

ப.வி. ஸ்ரீரங்கன் 'போக்கிடம்' கதையை இன்னும் இறுக்கியிருக்கலாம். நனவோடை உத்தியில் சொல்லப்பட்ட இந்தக்கதை இன்னும் நன்றாகச்சொல்லப்பட்டிருக்கலாம். மொழியில் இன்னமும் கவனம்செலுத்தியிருக்கவேண்டும்.
"இதோ பார் உலகம் ஸ்தம்பிக்கிறது"
'உலகம் பூராவும் நீர் ஸ்நானம் கிடைக்கிறது" இந்த வரிகளில் செயற்கைத்தன்மை தெரியவில்லயைா? 'மழை வலுக்கிறது" இந்த வாக்கியத்தில் இயல்பு தெரிகிறது. தொடர்ந்து உடல்பூராவும் நீர்ஸ்நானம் கிடைக்கிறது" என்ற வரி வருகிறபோது, ஒத்திசைவும் மொழிச்செழுமையும் காணாமல்போய்விடுகிறது. தமிழ்நாட்டுப்பிராமணத்தமிழ் மொழிநடைப்பிரமைகள் உடைபடவேண்டும்.
பொ. கருணாகரமூர்த்தியும் இந்த அனர்த்தத்துக்கு பலசமயங்களில் ஆளாகின்றார். இது ஒருவகைப்பிரமைதான். அவரவர் அவரவர் வழக்கில் எழுதலே நன்று. அதை அவரவர் புரிந்து கொள்ளல் இன்னும் நன்று.

ஓட்டமாவடி அறபாத்தின் 'விலங்கு' மிகவும் குறிப்பிடும்படியான கதைதான். இப்போது தேசத்தில் வாழ்கின்ற எந்தச்சீவனுள்ளபடைப்பாளியும், இந்தத்துயரிலிருந்து தப்பிவிடமுடியாது. பெற்றோர் பிள்ளைகளை இழக்கின்றனர். சகோதரர்களை இழக்கின்றனர். நண்பர், நண்பியரை இழக்கின்றனர் - சொல்லிக்கொள்ளும்படியான மகாதுயரம். - என்ன ஆனார் என்றுதெரியாமலே காணாமல் போதல் 'இரவில் உரத்துச்சிரிக்கவும் பஞ்சப்பட்ட மக்கள் வாழும் தேசத்தின்' கதைசொன்ன ஓட்மாவடி அறபாத் கதைசொல்லலில் வல்லமை வாய்ந்தவராகத் தெரிகிறார்.
'எனக்குப்பிடித்தகதை' இந்தமுறை வரவில்லையே ஏன்? சரிபோகட்டும். மூன்று முக்கியமான கட்டுரைகள் வந்திருக்கின்றன. கதைசொல்ல முயலும் கருணாகரமூர்த்திபற்றி தமிழரசனின் கட்டுரை விதந்து குறிப்பிடத்தக்கது. நான் நம்புகிறேன் விமர்சனபூர்வமாக ஒருவரை அணுகுவதற்கான மிகச்சரியான எழுத்துமுறையாக தமிழரசனின் படைப்பு இருந்தது. உடன்பாடுகொள்கிறோமோ இல்லையோ (கொள்கிறோம் என்பது வேறுவிடயம்) இத்தகைய நேர்மையும், நேர்த்தியும் கொண்ட அணுகுமுறையை வரவேற்கவேண்டும். இது ஆரோக்கியமானது. நல்ல எழுத்துக்கலைஞரான கருணாகரமூர்த்திக்கு இந்த ஆபத்து நிகழக்காரணம் பிரமை அன்றிவேறென்ன? சந்தையையும் (market) அவர் யோசித்துவிட்டார்போல எல்லாம்சேர்ந்து குழம்பிவிட்டது. அத்துடன் அரசியல்குழப்பமும் கருணாகரமூர்த்தியிடம் இருப்பதை தமிழரசன் தெளிவுபடுத்தியிருக்கிறார். தமிழரசன் சொன்னதற்கு மேலால் நாம் சொல்ல ஒன்றுமில்லை.

மற்றய கட்டுரை ச. சச்சிதானந்தம் எழுதிய 'வம்சவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அணுகல்' அ. முத்துலிங்கம் எப்போதும் கதைசொல்வதில் வல்லவர். அதில் சந்தேகமில்லை. கதை சொல்லப்புகுமுன், கதை எங்களில் தொற்றிவைத்த அனுபவத்தை முழுமையுடன் பகிரவேண்டும். அந்தமுழுமை சச்சிதானந்தனின் கட்டுரையில் தெரியவில்லை. கதைகள் பற்றிய அறிமுகக்குறிப்பாக மட்டுமே நின்றுவிடுகிறது. ச. சச்சிதானந்தத்தின் மிகமுக்கியமான மொழியியல் கட்டுரைகளை நாம் பார்த்திருக்கிறோம். தலித்வாழ்க்கை பற்றிய கட்டுரையை நாம் பார்த்திருக்கிறோம். மிகச்சிறப்பான ஆழமான பார்வையை அந்தப்படைப்பில் காணமுடிந்தது. அவரது அணுகுமுறையும அதற்குப்பொருந்திப்போனது. ஆனால் அதே அணுகுமுறையை படைப்பிலக்கிய சிறுகதைத்தொகுப்பிற்குப்பிரயோகித்தால், அது அவ்வளவு சரிவராது என்றே கூறலாம்.

பின்நவீனத்துவம், தலித்தியம், மார்க்ஸியம் பற்றிய யமுனா ராஜேந்திரனின் கட்டுரை குறிப்பிடும்படியானது. அறிமுகமாக நாம் அறிவதற்கு நிறைய இருந்தன. பொதுவாக ஒரு தலைப்பைக்கொண்ட கட்டுரை பிறகு தனிநபர்மீதான விமர்சனத்தில் இறங்கியிருப்பதன் நோக்கம் எனக்குப்புரிபடவில்லை. எமக்குத்தேவையாயிருந்ததெல்லாம் பின்நவீனத்துவம் பற்றிய பார்வையே. பின் நவீனத்துவம் பற்றி அறிவதற்கு இன்னும் ஆவன செய்தல்வேண்டும். அதனை வகுப்பாக எடுத்துக்கொள்ளல் நன்று. எத்தகைய புதியதத்துவங்களையும் நாம் அறிந்துகொள்ளுதல் ஒன்றும் பாவமில்லை. அறிந்துகொள்ளாதவரையிட்டு பரிதாபமான பார்வையை வீசுதல்தான் மகாபாவம். யமுனாராயேந்திரன் பின் நவீனத்துவம் தொடர்பாக இன்னும் விசாலமான பார்வையை வைத்திருக்கலாம். போதாமை என்றே உறுத்துகின்றது. மற்றும் படிக்கு மிக முக்கியமான கட்டுரையாகின்றது.
என் பேனாவிற்கு இருக்கும் சக்தி இவ்வளவுதான்.

**அ. இரவி** (இலண்டன்)

●○

*'பைலாப்பாட்டு' கதையைச்சுற்றிவந்த துணுக்குகள், கதை அமைப்பு எல்லாம் ஷோபா சக்தியினுடையதே. - 'அம்மா'.*

●


**அம்மா**
**(இதழ் -10)**
**ஆஸ்திரேலியச் சிறப்பிதழ்**

**தொடர்புகளுக்கு**
**நட்சத்திரன் செவ்விந்தியன்**
**Mr. Arun Ampalavanar**
**10/ 22B Macquarie Road**
**Auburn 2144**
**Australia**





## பெற்றோர் பிள்ளைகள் உளவியல் :

*புலம்பெயர் சூழலில் நாங்கள் கட்டிக்காத்துக்கொண்டுவந்தவற்றைத் தொலைத்துவிடக்கூடாதென்ற வரிந்து கட்டல் கொண்டுவந்தது எங்களுக்கே சரியாக புரிந்துகொள்ளமுடியாத நிலைமையில் அம்மா, அப்பா, பாட்டி, பாட்டன் பாதுகாத்துதந்தவற்றை எங்கள் பிள்ளைகளிடம் பக்குவமாய்திணித்து புலம்பெயர்சமூகத்திலும் குடும்பாரம்பரியத்தை காப்பாற்றிவிடவேண்டும் என்ற அழுத்தத்துடன் பிள்ளையின் நாணயக்கயிறு இறுக்கமடைகின்றபோது பிள்ளைக்கும் பெற்றோருக்குமிடையில் முரண்பாடு வெளிப்படுகிறது. சூழல் மாற்றத்தின் அவசியம் புரிந்தும் எதை ஏற்பது எதைவிடுவது என்ற சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு குழம்புகின்றோம். இந்நிலையில் பெற்றோர் பிள்ளைகளுக்கான உறவில் விரிசல் விழ ஆரம்பிக்கிறது. இதுபோன்ற வாழ்நிலை சிக்கல்களை அறிவுபூர்வமாக அணுகி பயனுள்ள வழிகளை ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்ற கருத்தினை உள்ளடக்கி "பெற்றோர் பிள்ளைகள் உளவியல்" என்ற நூலினை திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எமக்குத்தந்துள்ளார். தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபரான இவர் தற்போது ரொறன்ரோ - கல்விச்சபை பல்கலாசார ஆலோசகராகராக கடமையாற்றிவருகிறார். இவர்தம் அறிவுசார் அனுபவஆற்றலுடன் புலம்பெயர் சமூகத்திலிருந்து பெற்றுக்கொண்டவற்றையும் நுட்பமாக ஆராய்ந்து 'தமிழ் தகவல்' சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரைகளிலிருந்து பிள்ளைவளர்ப்புடன் தொடர்புடைய 13 கட்டுரைகளை தெரிவுசெய்து காலத்தின் தேவைகருதி இந்நூலினை அவரது அன்புமனைவி அமிர்தகௌரி கனகசபாபதி அவர்களது 10வது ஆண்டு நினைவுநாளின்போது எமக்குத்தந்திருக்கிறார்.*

*பிள்ளை பிறந்தநாளிலிருந்து பிள்ளைவளர்ப்பில் தாய், தந்தையின் பங்கேற்பு, அரவணைப்பு, அணுகுமுறை, மொழி கலாச்சார தொடர்புகள், விட்டுக்கொடுப்புகள் மூலம் பெற்றோர் பிள்ளைகளை எந்தவகையில் அணுகலாம் என்பதனை இந்நூல் அழகுற எடுத்துக்கூறுகிறது.*

*தொடர்புகளுக்கு :*
Mr. P. Kanagasabapathy
95, Holland Park Avenue
Toronto - Ont, M6 E1 L5, Canada

**– யோகினி கருணைவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரசத்தின் பிரதி

## நாம் எழுதுவது நாகரீகவாதிகளுக்காக அல்ல

– சேனன்

..கருத்துக்கள் மீதான விமர்சனம் எப்படி அக்கருத்தை உருவாக்கியவரை விட்டு தனித்தியங்குகிறது என்பதை விளக்கிவிட்டு ரவீந்திரனும் கண்ணனும் கோபப்பட்டிருக்கலாம். பண்போடு எழுத எம்மைநாம் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. நாகரீகம் நமக்கெட்டதாத ஒன்றாகவே இருக்கிறது. இந்த உரிமையை நாம் விட்டுக் கொடுக்கப்போவதுமில்லை. 13 வருடங்களுக்கு முற்பட்ட பிழையை, அன்று நீங்களும் சரியென்று நினைத்த ஒரே காரணத்துக்காக இன்று கூட பிழை என ஒத்துக்கொள்ளத்தயங்குவது சரியா?

எந்தக் கட்சி சார்ந்தும் எந்த விமர்சனத்தையும் நான் எழுதவில்லை. மேலும் கலை பற்றிய மார்க்சியக் கோட்பாடு என்று ஒன்றுமில்லை என்பதை வலியுறுத்துவதோடு மட்டுமின்றி கலையின் பூரண சுதந்திரத்தைப் பேணுதலையும் புரட்சியின் முக்கிய பாகமாகக் கொண்ட ஒரே ஒரு மார்க்சியக் கட்சியாக இருக்கும் ட்ரொட்சிஸ்டுகள்மீது ஒரு சாதாரண கலைஞனாக அனுதாபமும் பற்றும் கொள்வதென்பது எனக்கு தவிர்க்க முடியாததாகவே இருக்கிறது. அதற்காக எனக்கு தொழிலாளர் பாதை வெறி பிடிக்கவில்லை. அதேபோல் தன்னை ட்ரொக்ஸிஸ்ட் என்று சொல்லிக் கொள்கிற ஒருவர் இவ்வாறு பிதற்றி விமர்சிப்பதையும் கண்மூடிப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. இது அ. இரவி கூறுவது போல் யாரையாவது சீண்டும் நோயுமல்ல. ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து சமரிசித்துக் கொண்டு அனைத்து அதிகார நிறுவனங்களோடும் உறவாடிக் கொண்டிருக்க நாம் தாயரில்லை. அதனால் தமிழ் வளமான மொழி தமிழில் எழுதுங்கள் என்ற கூக்குரல் எம் செவிகளில் விழாது. இந்த அதிகாரங்களுக்கும் சமரசங்களுக்கும் எதிராக சாக்கடைகளுக்காகவும் கழிசடைகளுக்காகவும் தான் நாம் எழுதுகிறோமேயன்றி நாகரீக வாதிகளுக்காக அல்ல.
○

## சமரசத்தின் பிரதி

பின் நவீனத்துவம் மார்க்சியமும் என்ற புத்தகத்தை எழுதுவதற்காக தன் கருத்துக்களை அம்மாவில் வெள்ளோட்டம் விடும் யமுனா ரஜேந்திரனுக்கு சில நல்ல புத்தகங்களை முன் மொழிதல் மட்டுமே சரியாக இருந்திருக்க முடியும் என பலரும் நினைக்கலாம். அவரின் 'கருத்தியலை' தடுதாற் கொள்ளும் எந்தப் புனித நோக்கமும் இன்றி 'உருப்படியாக' சில கருத்துக்களை வைக்க வேண்டிய தேவை மட்டுமே எம்மை தூண்டியுள்ளது!

யமுனா சமரசத்துக்கு தயங்காதவர். அம்மா 6ல் கருணாகர மூர்த்திக்கு யமுனா எழுயிருந்த விமர்சனத்தையும் அம்மா 7ல் வந்த தமிழரசனின் விமர்சனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே யமுனாவின் விமர்சனப்பார்வை என்பது சமரசம் செய்த பார்வை என்பது விளங்கும்.

பார்ப்பன அரசியலை அதன் தளபதிகளை மறைமுகமாக வக்காளத்து வாங்குவது, அணுகுண்டை ஆதரிப்பது, அதிகாரத்துவ பிற்போக்குப் பிரச்சாரம் செய்யும் பத்திரிகைகளில் கூட எழுதத் தயங்காதது, என்பனவற்றை 'அதிகார வடிவங்கள் உட்பட அனைத்துடனும் சமரசத்துக்கு அவர் தயார்' - என்ற அடிப்படையில் மட்டுமே எம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது. பின் நவீனத்துவம் தலித்தியம் மார்க்சியம் என்ற கட்டுரையின் ஆழ் மனத்தில் இதன் பிரதிபலிப்புக்களே செறிந்து கிடக்கின்றது. அவரது இந்தவரிசைப்படுத்தல் கூட எழுந்தமானதென்று ஒதுக்கிவிடப்பட முடியாதது. கூடவே தலித்தியத்துக்கு அவர் எவ்வளவு அந்நியமானவர் என்பது பிரதி முழுவதும் பரந்து கிடக்கிறது.

'தலித்தியம் காத்திரமற்ற ஒரு கோட்பாடு; அது உயிரியல் சாரம்சவாதத்தைக் கொண்டிருக்கிறது; அரசியல் பொருளாதார தளங்களை தலித்தியம் காத்திரமாக அணுகுவதில்லை; எப்போழுதுமே ஆக்கபூர்வமானவற்றுக்கும் விகாரமான வற்றுக்கும் இடையிலான இடைவெளி மிகச் சின்னமானது' என்ற தலித்தியப் பார்வையுடன் அ. மார்க்சுக்கு வெளியே தலித்தியம் இல்லை என்ற முன் முடிவுடன் தலித்தியத்துக்கு எதிரான தன் உள்ளக் கிடைக்கையை வெளிகாட்டியுள்ளார் அவர். அனைத்து கோட்பாட்டுருவாக்கங்களுக்கும் எதிரான தன்மையை விகாரமான ஒன்றாக அவர் விளங்கிக்கொண்டுள்ளார். அதனடிப்படையில் தான் 'நாம் எதையும் கோட்பாட்டுருவாக்கம் செய்து விட்டோம் எனபதல்ல' என்று நி.பி. காரரை மேற்கோள்காட்டி அவர்களை கோட்பாட்டாளர் என்றழைப்பதும், தலித்தியத்தை 'கீழ்ஜாதிகளின் கோட்பாடு' என்று மேலாதிக்கத்தோடு வரையறுப்பதும். எது ஆக்கபூர்வமானது? எது விகாரமானது? ஒரு விசயத்தை தலித் எழுதுவதற்க்கும் வேறு ஒருவர் எழுதுவதற்கும் குறைந்தபட்ச வேறுபாடாக இந்த ஆக்கபூர்வ விகாரமான என்ற வித்தியாசத்தைத் தவிர வேறு எந்த ஆறு வித்தியாசங்களும் உங்களுக்குத் தெரியாதா?

மேலும் தலித்துகளுக்கான நான்கு பண்பாட்டு முறைகளை முன்வைக்கிறார். 'ஏற்க்கமுடியாது' என்று அவரே கருதும் பண்பாட்டு முறைகளையும் 'முன்வைக்க' வேண்டியிருப்பதன் தேவை என்ன? தவிர இந்த நான்குமே மாற்று பண்பாடு என்ற சொல்லோடு சம்மந்தப்படாதவை. போதாக்குறைக்கு பண்பாடு என்ற புனிதச்சொல் மூலமாக 'மரபுகளை' கட்டமைத்து பேணுவதே தங்களின் மரபார்ந்த நோக்கமாக இருக்கிறது. இவற்றை சிதைப்பதே தலித்துக்களின் தலையாய நோக்கமாக இருக்கிறது.
தலித்தியம் மார்க்சியத்துக்கு எதிரானது என்ற இன்னுமொரு மரபான தீர்மானத்தை என்றும் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கும் விஞ்ஞானமாக மார்க்சியத்தை பார்க்காதவர்கள் அனைவரும் ஒன்றுபட ஒத்துக்கொள்கிறார்கள். ஐரோப்பியக் கண்கொண்ட அடிப்படைவாத - யதார்த்தவாத - பாட்டாளிகள் கலாச்சார மார்க்சியம் என்றோ கலாவாதியாகிவிட்ட கதை இன்னும் இவர்கள் காதில் புகவில்லை.

மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தொட்டு அனைத்து மார்க்சிய எழுத்துக்களிலும் இருக்கும் அதிகார வடிவங்கள் கட்டுடைக்கப்படாமல் 'மார்க்சியம் மறுபடி வீறு கொண்டு எழமுடியாது'. இதில் புதுமைப்பித்தனை எப்படி பாவம் பார்ப்பது? அம்பேத்கார் வாழ்ந்த காலத்தை மறந்தாலும் கூட புதுமைப்பித்தன் மீதான கட்டுடைப்பென்பது அக்கால சமூக வரலாற்றோடு சம்மந்தப்படாத ஒன்றாக எம்மால் பார்க்க முடியமலுள்ளது. பு.பி. பிரக்ஞாபூர்வமாக இல்லை; அவருக்குப் பிரதி பற்றித் தெரியாது என்று வக்காலத்து வாங்குவது அவர்கால ஒட்டுமொத்தச் சமுதாயத்தினதும் பிரக்ஞாபூர்வமற்ற ஒடுக்குதலை வக்காளத்து வாங்குவதற்கு நிகரானது. புதுமைப்பித்தனை எரித்துவிடும்படியோ அல்லது அண்ணாத்துரைபோல் கம்பரைக் கொழுத்திவிடும்படியோ யாரும் வாண்டலிசம் பேசவில்லையே. இது மரபுகளைக் காப்பாற்ற உங்கள் உயிர்நாடியில் ஓடும் உணர்ச்சி வெளிப்பாடன்றி வேறென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைத் தாங்களே கண்டுபிடித்துக் கொள்வதையும் தங்களைத் தாங்களே காட்டிக் கொடுத்து விடுவதையும் தவிர உங்களைப் போன்றவர்கள் எந்த நன்மையான காரியத்தையும் செய்வதில்லை.

இங்கு நாம் இந்தியக்கலாச்சார ஆய்வுபற்றி முக்கியமான ஒரு விசயத்தைக்குறிப்பிட வேண்டியுள்ளது.

**தனது சொந்தக் கலாச்சாரத்தை கண்டுபிடித்தலின் இயக்கமாகவே 'கலாச்சாரம்' பற்றிய ஆய்வு இருக்கிறது. இன்னொரு கலாச்சாரத்தைக் கண்டுபடித்தல் என்பதால் மனித இயலாளர்கள் தமது சொந்தக் கலாச்சாரத்தின் குறியீடுகளையே கண்டுபிடிக்கிறனர்** என்று Ray Wagner (The Invention of culture) எழுதியது யமுனாவையும் கடந்து பலருக்கும் பொருந்தும்

'புவியியல் வரலாற்றுத் தன்மைகளில் ஒரு இத்தாலியாகவும் சமூகத் தன்மைகளில் ஒரு அயர்லாந்தாகவும் இந்தியா இருக்கிறது' என்று மார்க்ஸ் எழுதியிருக்கிறார்.

இதே விசயத்தை அம்பேத்கார் பினவருமாறு எழுதுகிறார்: 'அல்ஸ்ரர் மக்களுக்கும் தெற்கு அயர்லாந்து மக்களுக்கும் இடையே ஒருசமுதாயப்பிரச்சினை- கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்துகளுக்கும் இடையேயான பிரச்சினை - சாராம்சத்தில் சாதிப்பிரச்சினையே' (நூற்தொகுப்பு தொகுதி-1)

இந்தியாவினதும் அயர்லாந்தினதும் சமுதாயத்தன்மைகளின் ஒற்றுமைபற்றி இருவரும் ஒரே கருத்துக்களை கொண்டிருந்தாலும் தங்களது சொந்தக்கலாச்சாரம் சார்ந்தே அதை முன்வைக்கிறார்கள். சொந்தக்கலாச்சார சார்புடன்தான் பிரச்சினைகளை அணுகுவது சாத்தியமாய் இருக்கிறது. விளிம்புநாடுகள் பற்றிய ஐரோப்பிய(அமெரிக்க) ஆய்வுகள் இதிலிருந்து தப்பியவை அல்ல. இந்தத்தெளிவின்றி இவ்வகை ஆய்வுகளை நேரடியாக ஏற்றுக்கொள்வது தவறான புரிதல்களுக்கே வழிகாட்டும். இத்தகைய 'வெளி' பார்வைகளை உடைத்துப் புரிந்து கொள்ளவேண்டிய கட்டாயத்தில் விளிம்புநாடுகள் முழுவதும் மூழ்கிக்கிடக்க 'ஐரோப்பிய யூனியன் வரப்போகிறது; நிறம், கலாச்சார, மதிப்பீடுகளிலான ஒற்றுமை வரப்போகிறது' என்று கட்டியம் கூறுகிறார் யமுனா. நிறம், கலாச்சார மதிப்பீடுகளில் ஒற்றுமை எப்படி வரும்? ஒற்றைக்கலாச்சார மதிப்பீடுகளை முன்னிறுத்தும்போது மட்டுமே வரும். இந்திய, ஜாதிய அமைப்பு என்பது உலகின் மற்றப்பகுதிகளில் காணப்படாத ஒன்று. உங்களின் ஒற்றைக்கலாச்சார மதிப்பீடுகளில் ஒருபோதும் அதை விளக்கமுடியாது.

மேலும் ஐரோப்பிய பாணியில் இருந்து முற்றிலும் வேறுபட்ட பொருளாதாரகாரணிகளை மட்டும் அடிப்படையில் கொண்டமையாத ஜாதிய அடிப்படையிலும் அமைந்த அதிகார பிரயோகங்கள் ஒடுக்கு முறைகளை அவதானத்திற்கு கொண்டு வரவேண்டியிருக்கிறது. மத வழிபாட்டிலும், கல்வி முறைகளிலும், அதிகாரம் சார்ந்த அனைத்துப் பணிகளிலும் விலத்திவைக்கப்பட்ட ஒரு மனிதக் கூட்டம் இருந்தது என்ற நனவின்றிய எந்த இந்தியச் சமுதாயம் பற்றிய ஆய்வு முனைப்புக்களும் அர்த்தமற்றவையே. இந்திய வரலாறு என்பது ஆதிக்க சாதிகளின் அதிகார வர்க்கத்தின் வரலாறு மட்டுமல்ல தலித்துக்களினதும் வரலாறுதான் என்பதை உலகு தெரிந்து கொள்ள ஒரு தலித்திய எழுச்சி தேவையாக இருப்பது கேவலம்தான். அதைவிடக் கேவலமாக உங்களுக்கு அது இரைபோட முடியாமல் திணறுகிறது! 'பிரதிகளில் பிராமணிய நோக்கு வெள்ளாள நோக்கு மட்டுமல்ல. . . வேப்ப மரங்களின் கசப்பு நிறத்துக்கு எதிரான நோக்கு இரவுப் பொழுதின் நிறத்துக்கு எதிரான நோக்கு' என்று கிண்டலடிக்க வைக்கிறது. G. Cambell ன் சிவில் அரசு பற்றிய கருத்துக்களை எடுத்துக்காட்டும் மார்க்ஸ் இந்தியக் கிராமங்கள் மதவழிபாட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்த பிராமணர்கள் உட்பட பல தலைமை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பதை விவரிப்பதுடன் **"இச்சமுதாயங்கள் ஜாதிய வேறுபாடுகளாலும் அடிமைத் தனங்களாகலும் சீரழிந்துகிடக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடது"** என்பதையும் கூறுகிறார். இருப்பினும், ஒடுக்குமுறையின் ஒரு வடிவமான ஆதிக்கசாதி X தலித் என்ற பார்வை மார்க்சின் பிரதியில் எங்குமே இல்லை என்பதை நாம் சுட்டிக்காட்ட நினைப்பது திருத்தல்வாதமாகவோ வேப்பமரத்தின் கசப்பு நிறத்துக்கு எதிரான நோக்காகவோ எப்படியிருக்க முடியும்? மார்க்ஸ் 'பத்துக் கட்டளைகளை' எழுதிவைத்துப் போகவுமில்லை; இந்தியச் சமுதாயத்தில் ஒடுக்குமுறையின் வடிவங்களை புதிய வெளிச்சத்தில் பார்ப்பது தவறுமில்லை.

'எங்கே தொடங்கி எங்கே நிறுத்துவது?' என்ற குழப்பமான கேள்வியே எம்மிடமில்லை. அனைத்து அதிகாரங்களையும் கட்டுடைத்தல் என்பது எல்லையற்றுத் தொடரும். நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று பார்த்தெல்லாம் அதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை வடிவமைக்க முடியாது - யார் யாருடன் சமரசம் செய்வது என்பதிலிருந்து தோன்றும் உங்கள் அடிப்படைக் குழப்பங்கள் எமக்கில்லை. அதிகாரத்துவம் எப்பொழுதும் எங்கள் எதிரிதான். இன்று ஆதிக்கசாதி X தலித் என்று ஆதிக்கசாதி என்பதன் இருத்தலை இந்த மரபு இடது சாரிகள் வர்க்கப்பார்வையால் மங்கச்செய்ய முயன்று வருகின்றனர். எப்படி முதலாளி வர்க்க அழிவில் வர்கச்சமுதாயத்தின் அழிவு வருமோ அதேபோல்தான் ஆதிக்கச்சாதி என்ற ஒன்று இல்லாமற் போகும் போது மட்டுமே சாதியச் சமுதாயத்தின் அழிவும் வரும் என்பதை மறுக்கின்றனர். இருப்பினும் இவர்களைப் புறந்தள்ளி தலித்துகள் சார்ந்திருக்கக் கூடிய ஒரே கோட்பாடாகவும் மார்க்சியம் இருக்கின்றது. இலங்கையிலும் இந்தியாவிலும் தலித்திய எதிர்ப்பியக்கம் மார்க்சியம் சார்ந்தே வளர்ந்துள்ளதை ஏற்கனவே பலரும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் நடந்த ஒரு சம்பவத்தை உதாரணமாகக் காட்டலாம். 1966 ஒக்ரோபர் 21ல் சுன்னாகம் சந்தைமைதானத்தில் ஆரம்பித்து யாழ்நகர் நோக்கி பீக்கிங்சார்பு மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியால் 'சாதி ஒழிக சமத்துவம் ஓங்குக' கோரிக்கையுடன் நிகழ்த்தப்பட்ட ஊர்வலம் முக்கியமானதாக கருதப்படுகிறது. அக்கட்சியின் பொதுச்செயலாளர் சண்முகதாஸன் ஊர்வலஇறுதியில் யாழ் முற்றவெளியில் நிகழ்ந்த கூட்டத்தில் 'தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் உயர்சாதியினர் அனைவருக்கும் எதிரான போராட்டமாக இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார். கே. டானியல் முதலானவர்களுடன் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்ட சி. கா. செந்திவேல் தனது 'இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்' புத்தகத்தில் இதை விபரித்திருப்பதுடன் மேற்சொன்ன சண்முகதாசனின் கூற்று பலத்த விமர்சனத்துக்கு உட்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். கே. ஏ. சுப்பிரமணியம், சு.வ. சீனிவாசகம் முதலான கட்சியின் மற்றய முக்கியதலைவர்கள் இது உயர்சாதி தாழ்ந்தசாதி முரண்பாடல்ல என்றும் சாதிவெறிக்கு எதிரான வர்க்க அடிப்படையான போராட்டம் என்றும் கூறியதை சுட்டிக்காட்டியதோடு இது மார்க்ஸிய லெனினிச நிலைப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட சரியான கொள்கைத்தெளிவான முடிவு என்று தானும் உடன்பட்டு பாராட்டுகிறார். கட்சிகளின் தலைமையிடங்கள் மட்டுமின்றி வோட்டுகளும் அதிகாரங்களும் வெள்ளாளர் கைகளில் இருந்த அன்றையசூழ்நிலையில் இடதுசாரிகளால் சாதிஎதிர்ப்புப்போராட்டம் எவ்வாறு வர்க்கப்பார்வையால் மழுங்கடிக்கப்பட்டு வந்தது என்பதற்கு இது ஓர் நல்லஉதாரணம். அன்றைய ஆதிக்கசாதி புத்திஜீவிகள் நிறைந்த அரசியலில் சண்முகதாசனின் கூற்று எவ்வளவு அருவருக்கத்தக்கதாக இருந்திருக்கமுடியும் என்பதையும் அதே தருணத்தில் இந்தளவிற்கு பொதுக்கூட்டத்தில் ஒரு கருத்தை வைக்கக்கூடியஅளவு தைரியத்துடனும் 'சங்கானைப்போராட்டத்திற்கு வழிசமைக்கக்கூடிய சக்தியுடனும் இந்த இடதுசாரிகள் மட்டுமே இருந்து வந்தனர் என்ற நியாயத்தையும் நாம் மழுங்கடித்து மறந்துவிடமுடியாது.

அந்த மார்க்சியக் கட்சிகளும் விமர்சகர்களும் வறட்டுத் தனமான 'சோசலிச யதார்த்தம்' -பாட்டாளிகள் என்று தலித்துகளின் சுயமான வளர்ச்சியை மட்டுப்படுத்தியதும் உண்மைதான். இருப்பினும் சமூக ஒடுக்கு முறைகளை சரியான விஞ்ஞானக்கண் கொண்டு மிக முக்கியமாக ஒடுக்கப்படுபவர்கள் பார்வையில் இருந்து பார்க்கக் கூடிய ஒரே தத்துவமாக மார்க்சியம் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வெறும் வெற்று வார்த்தைகளை மட்டுமே ஆதாரமாக வைத்துக் கொண்டு வரலாற்றில் முதல் தடவையாக எழுந்திருக்கும் தலித் எழுச்சியை வர்க்கப்பார்வை என்ற 'திருப்பார்வையால்' காணாமற் போகச் செய்வதை எந்த புனிதக் கோட்பாடுகளாலும் நியாயப் படுத்தமுடியாது. அந்த விடுதலைக் குரலை மனக்கிலேசத்துடனும் அருவருப்புடனும் பார்பவர்கள் தான் 'புலம் பெயர் உலகுக்கும் தலித்தியத்தை புலம் பெயர்க்கிறார்கள்' என்று கவலைப்படுகிறார்கள். 'அவர்களை நி.பி. காரரை ஏன் கொப்பியடிகிறீர்கள் என்ற பாவனையில் யமுனா மட்டுமன்றி நயாகரன் (சமர்), நா.கண்ணன் (அம்மா கடிதம்) என்று அனைத்துப் புத்தி ஜீவிகளும் இக் கருத்தாக்கங்கள் புலம்பெயர் சூழலில் உலவுவதை மட்டுப்படுத்த முயற்சிக்கிறார்கள். புலம்பெயர் சமூகத்தில் அவற்றின் பொருத்தப்பாடுபற்றிய எவ்வித ஆழமான விமர்சன பூர்வமான அணுகுமுறைகளும் அவர்களிடமில்லை. ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக் குரலுக்கு அவர்கள் அளிக்கும் 'தார்மீக' அல்லது புனித 'மனிதாபிமான' ஆதரவின் எல்லையும் இந்தியாவின் எல்லையும் ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்தவை.

ஆய்வை புறந்தள்ளிய வழிபாட்டு மரபில் வந்தவர்கள் ஒன்றே தெய்வம் ஒன்றே தீர்வு என்று எல்லாவற்றையும் மார்க்சின் தலையில் போட்டு விட்டு இலவு காத்த கிள்ளை போல வர்க்கப் புரட்சிக்கு வழிமேல் விழிவைத்துக் காத்துக்கிடக்கின்றார்கள். இக் கனவான்கள் தம் இருத்தலைக் குலைக்க முனையும் எதையும் மார்க்சியத்தின் பெயரால் மறுதலிப்பர் என்று எமக்குத் தெரியும். ஆகவே - 'தலித் பெண்ணிய கோட்பாட்டுருவாக்கம் சாந்தவர்கள் அதிகாரத்தின் சகல தளங்கள் பற்றிய பிரக்ஞையையும், ஜனநாயக பூர்வமான செயற் தளங்களுக்கான நோக்கையும் கொண்டிருக்க வேண்டும். இது நடைபெற வில்லையானால் மேற்கில் சிதறுண்டிருக்கிற பெண்ணிலை வாத இயக்கங்கள் போலவே தலித் பெண்ணியமும் சிறு சிறு குழுக்களாக சிதறுண்டு போகும். முதலாளியமும் சரி பிராமணிய கருத்தியலும் சரி இதன் மூலம்தான் வலிமைபெறும்' - என்று நீங்கள் பயமுறுத்துவது ஏன் என்றும் நீங்கள் கோரும் ஜனநாயகபூர்வ செயற்தளங்கள் என்னவென்றும் எமக்குத் தெரியும். ஆண்களும் பெண்ணியம் பேசமுடியும்; பிராமணர்களும் தலித் பெண்ணியம் பேசமுடியும்; அப்படியில்லாதது ஒரு 'குறுகல்வாதம்' என்றும் அதனால்த்தான் மேற்கத்தைய பெண்ணிலை வாதம் மேட்டுக்குடி வாழ்வுக்குள் முடங்கிவிட்டது என்றும் அதேபோல்தான் இந்தியாவில் நடக்கும் என்றும் வெருட்டுகிறார். பெண்ணிலை வாதம் என்ற தலையங்கத்தின் கீழிருக்கும் பிரதி கேட்கும் விடயங்கள் இவை தவிர வேறில்லை. மேலும் *'சமூக பொருளியல் தளங்களில் முன்வைக்கப்படும் விசயங்கள் கலகங்கள் ஜனநாயகரீதியிலான நடைமுறைக்கு இட்டுச்செல்லாது'* என்கிறார். சமூக பொருளியல் மட்டுமல்ல உளவியல் அறவியல் தளங்களில் கூட கட்டுப்பாட்டை கட்டமைப்பதாக யார் போதித்தாலும் அது ஜனநாயகத்துக்கு எதிரானதே. இது மிகத்தெளிவான ஒன்று. ஆனால் சுற்றி வளைத்து தலித்தியத்தையும் பெண்ணியத்தையும் எதிர்க்க Point தேடுகிறார் யமுனா.

தலித்தியத்துக்காகவும் பெண்ணியத்துக்காகவும் இல்லாத நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதை ஊகித்துக் கொள்வதற்கு எம் சிற்றறிவே போதுமானதாக இருக்கிறது. 'ஓர் உயர்ந்த சாதிக்காரன் தன்னை வேறுபடுத்திக்காட்டிக்கொள்வதற்கு தாழ்ந்த சாதிக்காரனாக ஒருவனை வைத்திருக்கும்வரை அவன் நல்லவனாக இருக்கமுடியாது' என்று அம்பேத்கார் குறிப்பிடுவதை நீங்கள் உங்களை வேறுபடுத்தி காட்டிக்கொள்ள வேண்டியிருப்பதன் அவசியத்துடன் இணைத்துப்பார்க்க எமக்கு சகல உரிமைகளும் உண்டு. இந்த அடிப்படையில் மட்டும் தான் 'நல்லன கொள்வோம்' என்று பின் நவீனத்திற்குள் குளிர்காய விரும்புகிறீர்கள் என்றும் தெரியும்.

மார்க்சியத்தின் மீதான பின்நவீனத்துவத்தின் மரபான விமர்சனத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். உங்களுக்குத் தெரிந்த மார்க்சியமும் அப்படித்தான் இருக்கிறது. எமது சக மனிதன் பக்கத்து வீட்டில்தான் இருக்க வேண்டுமென்பதன் அவசியம் என்ன? அவன் தூரகிழக்கில் East timor ல் சித்திரவதைக்குள்ளாகிக் கொண்டிருக்கலாம். அல்லது ஈழத்தில் குப்பி கடித்துக் கொண்டிருக்கலாம்.

ஊறிப்போய் கிடக்கின்ற அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் நழுவிப்போக ஒரு சந்தர்ப்பம் அளித்து தத்தமக்கு தேவையானபடிக்கு ஒடுக்குதல்களை வாய்ப்புக்களாக மட்டும் உயர்த்திப்பிடிக்க வழிவகுக்கும் ஒரு குறுக்குவழிதான் பின்நவீனத்துவம் என்பது கவர்ச்சிகரமானதுதான்! ஒரு மாற்றுச் சமூகத்தின் தேவையை வெறும் வார்த்தைகளில் மட்டும் சுமந்து கொண்டிருக்கும் அதிகாரத்தின் பன்முகவடிவங்களின் நாயகர்களை - அவர்களின் கலாச்சாரத்தை, கண்டும் காணாமல் விட நாம் தயாரில்லை. பல்கலைக்கழகங்கள் சொல்லித் தந்தபடி அவரவர் ஆளுமைக்கேற்ப புரட்சிகரமாக எழுதுவது தவிர நேரமும் சந்தர்ப்பமும் கிடைக்கும் பொழுகளில் சமூகசேவை செய்து கொண்டிருக்க பிரியப்படும் பலரும் இன்று தம்மை பின் நவீனத்துவ வாதிகள் என்று அறிவித்துக் கொள்வதில் ஆச்சரிய-மேதுவுமில்லை. பின் நவீனத்துவம் பற்றிய அவர்களது பார்வையும் அவர்கள் அக்கருத்தாக்கங்களை பயன்படுத்த முனையும் விதமும் அதற்கு நல்ல சான்றுகள்.

பின் நவீனத்துவம் வானத்திலிருந்து குதிக்க வில்லை என்பது உண்மைதான். அதற்காக ஸ்டாலினிசத்தின் மீது வைக்கப்பட்ட விமர்சனமாக மட்டும் பின் நவீனத்துவம் தோன்றியது என்று 'வரையறுத்து' அது பற்றி விமர்சனங்கள் கொண்டிருந்த Bertold Brecht யும் பின் நவீனத்துவவாதியாக யமுனா இனம்காண்பதன் அடிப்படையை விளக்கிக்கொள்ள முடியவில்லை. அவரின் இந்த 'வரையறை' பாசிசம் நாசிசம் இனக் கொலைகளைப் புரிந்து கொள்ளக்கூட அவருக்கு உதவுகிறது.

மரபுப்படி ஸஸுர் - லெவிஸ்ட்ராஸ் - அல்துஸர் - அமைப்பியல் கருத்துக்கள் - பின் நவீனத்துவம் என்று சொல்லியதோடு மட்டும் விட்டிருக்கலாம் யமுனா. தேவையில்லாமல் Brecht யும் பின் நவீனத்துவவாதியாக்கி விட்டார். இது Brecht நூற்றாண்டு என்பதற்காக அவருக்கு இவ்வாறு குருட்டுத்தனமாக விசுவாசம் காட்ட வேண்டுமா?

இங்கு இன்னுமொன்றையும் நாம் குறிப்பிடவேண்டும். தலித்தியம்தான் ஏதோ சோசலிச யதார்த்தவாதத்தை விமர்சிப்பதுபோல் அ.மா. எழுதியிருக்கிறார் என்றுகூறி 'சோசலிச யதார்த்தவாதம்' பற்றிய விமர்சனத்தை 1960களிலேயே சேகுவரா மேற்கொள்கிறார்' என்று அ.மா. விற்கு சொல்லிக்கொடுக்கும் யமுனா தலையங்கத்தை தாண்டி கட்டுரைக்குள் போகவில்லையோ என்ற சந்தேகத்தை எமக்கு உண்டாக்குகிறார். பிறெஷ்ற் சோசலிச யதார்த்தவாதத்திற்கு விமர்சனங்கள் வைத்ததையும் முப்பது ஆண்டுகளுக்கு முதல் சோசலிச கட்டுமானங்களுக்கு எதிராக மக்கள் எழுச்சிகள் ஏற்பட்டதையும் சம்பந்தப்பட்ட கட்டுரையில் அ.மா. சுட்டிக்காட்டியுள்ளார். சோசலிச யதார்த்தவாதத்தில் இருந்து தலித்தியத்துக்கான தொடர்ச்சி எப்படி வருகிறது என்ற உருப்படியான கேள்வியைக்கேட்டிருக்கலாம்.
லூகாசின் வறட்டுத்தனமான ஸ்டாலினிச சார்பு யதார்த்த வாத சோசலிச விமர்சனங்களை Brecht ம் வால்டர் பென்ஜமினும் சேர்ந்து கடுமையாக எதிர்த்தது உலகுக்கு தெரிந்த ஒன்றுதான். தான் ஒரு யதார்த்தவாத சோசலிச கலைஞன் அல்ல என்று கூறிக்கொண்டாலும் ஒரு வடிவ உத்தியாக பரந்த அளவில் யதார்த்தவாதத்தை ஏற்றுக் கொண்டவர் Brecht. 1930ல் வெளிவந்த வால்டர் பென்ஜமினின் Art as a product என்ற நூல் இதற்கு நல்லசான்று. தனது கருத்துக்களுக்கிசைவாக ஒரு சிறந்த மார்க்சியக் கலைஞனாக Brecht ஐ வால்டர் பென்ஜமின் வர்ணித்திருக்கிறார். «Art as a product» ,»The author as producer» என்ற கருத்தாக்கம் கூட பென்ஜமினால்தான் முதலில் முன் வைக்கப்பட்டது என்று டெரி ஈகில்டன் (Marxism and Literary Criticism) முதலானவர்கள் நம்புகிறார்கள். ஆனால் அதற்கு முதலே ஜாமியாடின், மெட்விடேவ் மேயர்கோல்ட் முதலானவர்கள் இக்கருத்துக்களை கொண்டிருந்தனர். 'Theatre meeting», «Epic Theatre», முதலான Brecht ன் முயற்சிகளுக்கு முன்னோடியாக மேயர்கோல்டே இருக்கிறார். Brecht எப்படி எவ்வகையில் பின் நவீனத்துவ கருத்துக்களை பிரதிபலித்திருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டாலினிசத்துக்கு எதிரான எதிர்ப்பில் இருந்து மட்டும் பி.ந. கருத்தாக்கங்கள் தோன்றவில்லை. அனைத்துப் புதிய கருத்துக்களையும் கண்டு பிடிப்புக்களையும் இணைத்து மார்க்சியத்துக்கு ஒரு மாற்று வைக்க வேண்டிய தூண்டுதலை புத்தி ஜீவிகளிடம் ஏற்படுத்தியது இந்த ஸ்டாலினிச அராஜக மரபில் வந்த கட்சி அமைப்பின் அதிகாரமும் மாற்றங்களை உள்வாங்க மறுத்து நின்ற பண்பும்தான். பல தளங்களிலும் ஏக போகமாக விரிவடைந்து சென்ற இவ்வதிகார ஸ்டாலினிசம் தான் அனைவர் மனக்கண்களிலும் இருந்த 'மார்க்சியம்' என்ற கருத்தாக்கம். '1917 ஸ்டாலினிசமாக வளர்ச்சியுற்றது' என்று கருதும் யமுனா கண்களிலும் இருந்த 'மார்க்சியம்' அதுதான். இதனால்தான் மார்க்சியத்துக்கு எதிரான கருத்தாக்கங்களாக இக்கருத்துக்கள் வளர்த்தெடுக்கப்படுவது சாத்தியமாயிற்று. இம் மாற்றுக்கு எப்பெயர் வேண்டுமானாலும் இருக்கட்டும். சொற்களுடன் எமக்குச் சண்டையில்லை. அது பி.ந. ஆக இருந்தால் எமக்கென்ன ? அதேபோல் மார்க்சியம் பி.ந. என்ற ஒற்றைச்சொற்கள் மட்டும் உலகைப்புரிந்துகொள்வதற்கான ஒற்றைப்பாதை என்று உரிமைகொண்டாடவும் முடியாது. ஒரு தத்துவத்தை — கருத்துக்களை - கோட்பாட்டை — ஒற்றைச்சொல்லில் குறிக்கவேண்டியிருப்பதன் சோகமிது. ஆனால் அவைதம் பரந்த அர்த்தத்தில் ஆயிரம் சிந்தனையாளர்களின் பெயரையும் ஆயிரம் கருத்துக்களையும் முறைகளையும் சொற்களையும் உள்வாங்கியவையாக இருக்கின்றன.

யதார்த்தவாதம் அலுத்துப்போன காலத்திலேயே, Futurist-Formalist காலகட்டங்களிலேயே பல மேதைகளால் இப் பின்நவீனத்துவ கருத்தாக்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. அமைப்பியல் பின்அமைப்பியல் தொட்டு பின்வந்த அனைத்துத் தத்துவங்களிலும் இவையே செல்வாக்குச் செலுத்தியுள்ளன. குறிப்பான் குறி தொடர்பான ஆய்வுகளை அவர்கள் அக்காலத்திலேயே செய்துள்ளார்கள். லுனாஸார்ஸ்கியின் 'தாஸ்யோவஸ்கியின் பன்முகக்குரல்கள்' ரோமன் ஜாக்கோப்சனின் 'மொழியியலும் கவிதையும்'' (Twentieth centuty literary theory ed. by k.m. Newton) இதே புத்தகத்தில் மெட்விடேவின் Art as a technique என்ற கட்டுரையும் நல்ல ஆதாரங்கள்.

பன்முகத்தன்மை, கதையாடல் முதலான அனேக கருத்தாக்கங்களை இவர்களின் எழுத்துக்களில் காணலாம். பன்முகத்துவம் என்ற கருத்தின் தோற்றத்தை 1700களுக்கு கொண்டுபோய் Giambattista முதல் பன்முக வாதி என்ற பாணியில் Isaiah barlin முதலானவர்கள் எழுதுகிறார்கள். (The Fontana of post modernism reader) அப்படியன்றி ஒரு கருத்தின் ஆழமான அர்த்தத்தில் மிக்க நனவுபூர்வமாக - இன்றைய பயன்பாட்டு நிலைக்கு நிகராக - வரலாற்றில் முதல் தடைவையாக Futurist-Formalist கள் மட்டும் தான் பயன்படுத்தினார்கள் என்றே கூறவருகிறோம். இவர்களை யாரும் கண்டு கொள்ள வில்லை. போதக்குறைக்கு லூகாஸ் சீரழிந்த Formalist கலையாக பிரெக்டின் கலையை விமர்சிக்க அதை மறுத்து லூகாசின் விமர்சனம்தான் Formalist யதார்த்தவாத வரையறையைக் கொண்டதாக இருப்பதாக பிரெக்ட் திருப்பித் தாக்கியுள்ளார். இரண்டு பகுதியினருக்கும் Formalism ஒரு சீரழிந்த கலை கோட்பாடுதான். அதற்கு காரணம் பெரும்பான்மையான இந்த மேதைகள் அனைவரும் ஸ்டாலினால் கொல்லப்பட்டவர்கள். மார்க்சியத்தின் கலைக்கொள்கையாக முன்வைக்கப்பட்டதன் மேல் விமர்சனப் பார்வை கொண்டவர்கள். பாட்டாளிகள் கலாச்சாரத்தின் எதிரிகள். இதற்கு நிகரான மேதைகள் பிந்திய ரஸ்ய வரலாற்றில் தோன்றவேயில்லை என்பது ஒரு வரலாற்று உண்மை. மேற்குலக இடதுசாரிகள்தான் இந்த மேதைகளை ஒவ்வொருவராக கண்டு பிடித்தனர். baktin அல்லது medvidev வைக் கண்டுபிடித்ததானது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது மொழியியல், இலக்கியம் பற்றிய கருத்துக்கள் பெருமளவில் அமைப்பியல் பின்அமைப்பியலில் செல்வாக்குச் செலுத்திற்று. மிக அண்மைக்கால மற்றொரு கண்டுபிடிப்பான அலெக்ஸாண்டர் கொன்ஸான்ரினோவிச் வொறொன்ஸ்கி மேலும் அதிகமான செல்வாக்குச் செலுத்தக் கூடும் என்று இடது சாரிகள் எண்ணுகின்றனர். (சில மாதங்களுக்கு முன்பு Frderikchoate ஆல் மொழிபெயர்க்கப்பட்டு இவரது எழுத்துக்கள் merhring book பதிப்பில் வெளிவந்துள்ளது). பி.ந.என்ற சொற்பிரயோகம் எச்சந்தர்ப்பத்தில் முதலாவதாக உபயோகப்பட்டுள்ளது என்பதுடன் அதன் தோற்றம்பற்றிய ஆய்வு முடிந்து விடுவதில்லை. மேலே குறிப்பிட்டுள்ளவர்களை அனுதாபத்துடன் பார்க்கும், இக்கருத்துக்களின் சுதந்திரத்தைப் பேணும் எந்த இடதுசாரி மார்கசிஸ்டுகளுமே ஸ்டாலினிச பாரம் பரியத்தில் இருக்கவில்லை. ஏனென்றால் இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் மார்க்சியத் துரோகிகள் என்று அல்லது ட்ரொக்சிஸ்டுகள் என்று முத்திரை குத்தப்பட்டு அழிக்கப்பட்டவர்கள். இதன் காரணமாகத்தான் புகழ் பெற்ற மார்க்சிய விமர்சகர்களான லூகாஸ், ரேய்மன்ட் வில்லியம்ஸ் போன்றவர்கள் கூட இவர்கள் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இன்று விடுதலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஒடுக்கப்பட்ட குரல்கள் சமகால கோட்பாட்டு மயமாக்கங்களில், தத்துவப் போக்குகளில் செல்வாக்குச் செலுத்துவது என்பது ஒன்றும் பெரிய வியப்புக்குரியதல்ல. ஏனென்றால் இதுவரை காலமும் அறியப்படாத புதிய பாதைகளை அவை திறந்து விடுகின்றன.

இவர்களில் பலர் தாங்கள் மார்க்சியத்துக்கு எதிரான கலைக்கோட்பாடுடையவர்கள் என்பதை பகிரங்கமாக அறிவித்துக்கொண்டவர்கள். (உ-ம்: M.M. Bakhtin The Object, Task, and Methods of Literary History - 20th Century Liteterary Theory ) அவர்களின் இக்கருத்தை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமன்றி அதன் சில மொழியியல் - இலக்கிய ஆய்வுகளையும் மிகச்சிறந்தது என்று அக்காலத்திலேயே ட்ரொட்ஸ்கி புகாரின் முதலானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதில் நகைப்புக்கிடமாக இருப்பதென்ன வென்றால் அக்காலத்திலேயே Prolitcult ரினர் இவர்களை மொங்கிய மொங்கைப் போலவே இன்றைக்கும் மிஞ்சிக்கிடக்கும் அவர் தம் வாரிசுகளும் விமர்சிக்கின்றனர். வகை வகையாகப் பிரிந்துகிடக்கும் அனைத்து மார்க்சியக் கட்சியினருக்கும் இடையில் ஆயிரம் முரண்பாடுகள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் ஒன்றுபடுகிற ஒரே விசயமாக இந்த பி.ந. மீதான விமர்சனம் இருக்கிறது. முதலாளித்துவத்தின் எச்ச சொச்சங்களுக்கு வக்காலத்து வாங்குகிறது என்று Prolitcult டினர் கத்திய அதே வசனங்கள்இன்னும்சாகவில்லை. ஸ்டாலினிசத்தின் எச்ச சொச்சங்களான மார்க்சியக்கட்சிகளுடன் தொடர்பு கொண்டிருந்த இந்த புகழ்பெற்ற மார்க்சிய விமர்சகர்கள் கட்டுடைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலம் இது. யமுனா எழுதுகிறார் 'அல்துஸரும் சரி பூக்கோவும் சரி, தெரிதாவும் சரி கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு நிலைப்பாடு எடுக்கவில்லை. கடுமையான சொற்களால் கட்சிகளை வசைபாடிக் கொண்டிருக்கவில்லை. பூக்கோ இத்தாலியக் கம்யூனிஸ்டுகளோடு உரையாடல்களை மேற்கொண்டார். இறுதிவரை அல்துஸர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியோடு தனிப்பட்ட முறையில் நல்லுறவு வைத்திருந்தார். தம்மை எப்போதுமே மார்க்சிய கட்சிகளுடனும் மார்க்சியத்துடனும் இனம் கண்ட ரெரி ஈகில்டன், ஜேம்சன் போன்றோர் அமைப்பியல் பின் நவீனத்துவத்தின் ஆக்கபூர்வமான பங்களிப்புகளை ஏற்றுக் கொண்டனர்.'

இவர்கள் பங்கு கொண்டிருந்த எந்தக் கட்சியுமே புரட்சிகர கட்சிகள் அல்ல. கட்டவிழ்ந்த கலையைப் பற்றி எவையுமே பேசியதில்லை. மார்க்சின் பெயராலும் மார்க்சியத்தின் பெயராலும் அன்றும் இன்றும் அவர்கள் செய்து வருவதெல்லாம் அவற்றை மழுங்கடிப்பது மட்டுமே. பல விதி விலக்கான புத்தி ஜீவிகளுக்கு அக்கட்சிகளுடனான தொடர்பு என்பது யமுனா நினைப்பது போல் ஒரு Plus point அல்ல. அவர்களது சமரசம் விமர்சனக்கண்கொண்டு பார்க்கப்படவேண்டியது. நீட்சேயின் அவநம்பிக்கை மரபில் வந்த பின் நவீனத்துவ மனிதன் என்ன செய்வதென்று தெரியாது திக்குத் தெரியாத காட்டில் நிற்கிறான் என்ற மார்க்சியத்தின் மரபான பின் நவீனத்துவம் பற்றிய விமர்சனத்தையும் யமுனா அப்படியே விழுங்கிக் கக்கியுள்ளார். பொதுக் கலாச்சாரத்தால் விழுங்கப்படுவதை எதிர்ப்பதானது அவநம்பிக்கை வாதமாகுமா? பின் நவீனத்துவத்தின் மையமிழக்கும் தன்மையை அவநம்பிக்கை வாதமாக புரிந்து கொண்டுள்ளார். அனைத்துக் கோட்பாடுகளின் மேலும் கட்டமைப்புக்களின் மேலும் பின் நவீத்துவம் அவநம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது உண்மைதான். ஆனால் அவநம்பிக்கை வாதிகள் என்ற யமுனாவின் பொதுமைப்படுத்தலோடு அது பொருந்தாது.

மனிதனை ஒரு குறிப்பிட்ட தத்துவ - கலாச்சார அல்லது ஏதோவொன்றுடன் மையப்படுத்தும் தன்மையானது ஏதோ ஒரு விதத்தில் அவனது சுதந்திரத்தைப் பாதிக்கவே செய்யும். இந்த மையப்படுத்தலின் உச்சக்கட்டமாக வரக்கூடிய பொதுக் கலாச்சாரம், ஒற்றைப்பரிமாண அரசு வடிவங்கள் அனைத்துமே அதிகார வடிவங்கள்தான். 'மையப்படுத்தப்பட்ட ஜனநாயகம்' என்ற சொல்லடுக்கு ஜனநாயகம் பற்றிய போலியான நடைமுறையையே சுட்டுகிறது. **மையமிழந்த மனிதன் மட்டுமே பூரண சுதந்திரத்தை நோக்கி நகரக்கூடியவனாக இருக்கிறான்.** அனைத்து விதமான மையவாதங்கள் மேலும் அவநம்பிக்கை கொண்டிருப்பதானது அவனை அவநம்பிக்கைவாதியாக அடையாளப்படுத்தாது. மையப்படுத்தலுடன் கேள்வியின்றி பொது நனவிற்கு அடிபணிந்து இணங்குதல், ஏதோ ஒன்றில் நம்பிக்கை வைத்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் என்பவற்றுக்கு ஏற்பட்டிருப்பவர்களுக்கு மையம் விலகிய அனைத்து நடவடிக்கைகளும் அவநம்பிக்கையாக தெரிவதில் வியப்பில்லை. மனிதன் நம்பிக்கை வைக்க வேண்டிய 'ஏதோ ஒன்று' கடவுளாக இருந்து அறிதல் முறைகளாக தத்துவமாக திரிந்து கொண்டிருக்கிறது. இந்த மையப்படுத்தல் ஒழுங்கு மற்றும் அனைத்து அதிகார நிர்வாகங்களுக்கும் ஏற்றபடி மக்களைக் கட்டமைத்தலை இலகுவாக்குகிறது. மையத்துக்கு எதிரான போராட்டம் ஏதோ ஒரு புள்ளியில் முடிந்து விடக்கூடியது மல்ல. அதன் நிரந்தரத்தில் இயங்கும் சமூகம் மட்டுமே ஜனநாயகத்தை - சுதந்திரத்தை பூரண அர்த்தத்தில் உணர்ந்து கொள்ள முடியும்.

அதிகாரவர்க்கத்தின் ஆழுமையில் இருக்கும் யமுனாவுக்கு இது அராஜகமும் வன்முறையும் குழப்பமும் நிறைந்த ஒன்றாகத் தெரிகின்றது. இதுவே அதன் வெற்றி! இவரின் மைய ஓட்டத்தில் அகப்படாமலே அது இருக்கிறது 'பின் நவீனத்துவத்தில் மிககுறிப்பான குணங்களில் ஒன்று அது மிக மிக உள்ளொடுங்கிய அணுகுமுறையாக இருப்பதும் தனக்குத்தானே மூடுண்டதுமாகவும் அது இருப்பதுதான்'''என்று கூறி அதை வெளிப்படுத்திக் கொள்கிறார். இதே பாணியில்தான் தலித் மையவாதம் பற்றியும் இவர் பேசுகிறார். இந்த உள்ளொடுங்கிய, மூடுண்ட தன்மைகள் பற்றி தனது அடுத்த புத்தகத்திலாவது விளக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவருக்கு மூடுண்டு கிடக்கின்ற இன்னுமொரு விடயத்தையும் இங்கு நாம் குறிப்பிட்டே ஆகவேண்டியிருக்கிறது. சமபாலுறவாளர்கள் முதலாளித்துவ மேற்கத்தைய அமெரிக்க வாழ்க்கை மதிப்பீடுகளில் சரணடைந்து விட்டனர் என்று அழுத்தம் திருத்தமாக கூறுகிறார். இவர்களில் இருந்து மாறுபட்டவர்களாகவே பின்நவீனத்துவ வாதிகளை கணிக்கிறார். (நம்பமுடியாதவர்கள் யமுனாவின் கட்டுரையைத் திருப்பிப் படிக்கவும். நாம் திரிக்கவில்லை!) ஆக ஒரு சமபாலுறவாளர் பின் நவீனத்துவ வாதியாகவோ மார்க்சியராகவோ இருக்கும் சாத்தியம் அவரைப் பொறுத்தவரையில் இல்லாத ஒன்று.

இந் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்திலேயே ஓரினச் சேர்க்கையாளராகவும் சுதந்திர சோசலிசக் கருத்துக்கள் உடையவராகவும் இருந்த ஒஸ்கார் வைல்ட் பற்றி தேடிப்பிடித்து மொழி பெயர்த்தது சினிமா காட்டமட்டுமே தானா? அக்காலத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற பல கலைஞர்கள் முதலாலித்துவத்தின் பிடிக்குள் கிடந்த போது சாத்தியமாகியிருந்த ஒரு ஒஸ்கார் வைல்ட் இன்றைக்கு சாத்தியம் இல்லை என்று கூறுகிறாரா?
அது மட்டுமின்றி இன்னுமொரு வெருட்டும் வெருட்டுகிறார். 'வரலாற்று ரீதியில் சம பாலுறவில் கூட தலித்திய உயிரியல் கூறுகளைப் பார்க்க நேரிடும் Transexual களில் பார்க்க நேரிடும்'. அவரிந்த 'கவனம்!' சொல்வதுடன் தப்ப ஒரு வழியும் சொல்கிறார். தலித்தியம் கருத்தியல் ரீதியானது என்று ஒப்புக் கொள்வதுதான் அது. தலித்தியம் அதை மறுப்பது அறியாமையால் அல்லது வரலாற்றுப் பார்வை கொள்ளாமையால்தான் என்கிறார். கூடவே தனது கருத்தியல் சாரம்சவாதமாகவும் பெருங்கதையாடலாகவும் மாறக்கூடியது என்பதையும் தலித்தியம் ஒத்துக்கொள்ள வேண்டுமாம். அவர் கருத்துக்கள் கலகம் செய்கின்றன!

அங்கவீனர்களுக்காகவும், எலிகளுக்காகவும், குருவிகளுக்காகவும் கூட போராட நினைக்கும் பின்நவீனத்துவவாதி சமபாலுறவைப்பற்றி யோசிக்கிறானாம்! போராட்டம், யோசனை என்ற இரண்டு சொற்கள் மூலமாகவும் அவர் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது தெளிவாகிறது. அவரது இந்த எழுந்தமானமான சொற்தேர்வுகள் 'அவரின் குதிருக்குள்' இருப்பதை எமக்கு காட்டிக் கொடுக்கின்றன. கிரீன் பீஸ் காரர்களுக்கும் பி.ந. வாதிகளுக்கும் வித்தியாசம்மில்லையா? திரள்திரளாக இன்று போராடிக் கொண்டிருக்கும் அனைத்து சம்பாலுறவாளர்களும் அர்த்தமுள்ள கோரிக்கை எதையுமே வைக்கவில்லையா? குடும்ப அமைப்பின் உடைவில் அவர்களுக்கு எந்த பங்குமேயில்லையா? எல்லாக்கேள்விகளுக்கும் விடை மூடுண்டு கிடக்கும்போது அவர் என்னசெய்வார் பாவம்.

இதற்கிடையில் பின் நவீனத்துவசொல்லாடல்களை தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்த்ததாக யமுனா அசௌகரியப்படுகிறார். புலம்பெயர் என்ற சொல்லாடல்
தமிழரின் தாயகமாக தமிழ்நாட்டையும் இலங்கையையும் மையப்படுத்துவதாலும் புலம்பெயர்ந்தவர்கள் என்பது அனைத்து நாடுகளிலும் வாழ்பவர்களை பொதுமைப்படுத்துவதாலும் அச்சொல்லாடல் முடிந்தளவு தவிர்க்கப்படவேண்டியது என்றே நாம் உணர்கிறோம். ஜமுனா அச்சொல்லை பாவித்தவிதம் ஏதோ எல்லாஇடங்களிலும் இப் பி.ந. கருத்துக்கள் ஓடிப்பரவிவிட்டதாக பரந்த அர்த்தத்தில் நாம் எடுத்துக்கொள்ள வாய்ப்பளிக்கிறது. உண்மை அதுவல்ல.
புதியபுரட்சிகர தத்துவங்கள் பற்றி சில கலைஞர்கள் சொற்சிலம்பம் ஆடினாலும் அவர்களது லயிப்பு என்றைக்கும் யதார்த்த பாணிக்காகவே இருக்கிறது. உதாரணத்திற்கு 'சூலிக்கு கதைசொன்ன சூல்களின் கதை'(இருள் வெளி) றெனோபோலின் கதையை எடுத்துக்கொண்டால் அதில் ரசிப்பதற்கே யாருக்கும் இடம் இருக்கவில்லை. 'பொதுமக்களின் ரசனை என்ற கன்னத்தில் ஓர் அடியாக' இருந்தது என்ற குற்றச்சாட்டைத்தவிர்த்து எந்த விமர்சனமும் இல்லை. 'மதிப்பு மறுப்பறிக்கை' (எக்ஸில்) என்ற சுகனின் கதை எவ்வளவு கேலிக்கிடமானதாகவும், வக்கிரமானதாகவும் கருதப்பட்டது என்பது எமக்கெல்லாம் தெரிந்ததே. அக்கதைக்கு ப.வி. சிறீரங்கனின் ஒரு வசனம் தன்னிகரற்ற விளக்கத்தை கொடுக்கிறது. 'ஊரில் ஈடுபட்டும் இருக்கிறேன்' (எக்ஸில்) என்று, வெட்கிக்குனிந்த மேதைகள் முகத்தில் கரி பூசிஇருக்கிறார் அவர். அக்கதையின் சமுதாய முக்கியத்துவம்பற்றி நாம் அழுத்திக்கூறவேண்டியிருப்பதன் தேவை இதுதான். புதிய பரிசோதனைகளை வரவேற்கும் புரட்சிகரச்சூழல் இப்படித்தான் இருக்கிறது. இவர்கள் யாரும் யதார்த்தவாத கருத்தியலைவிட்டு இன்னும் வெளியே வரவில்லை என்பதும் அவர்களின் வாசிப்பு பரிட்சயம் புதிய பொருளாதார சமூகக்காரணிகளை அடிப்படையாகக்கொண்ட இலக்கியவடிவங்களோடு இல்லை என்பதையும் நாம் தீர்மானிக்கவேண்டி இருக்கிறது.

ரெலிபோன் நம்பர்களை வைத்து யாரும் கவிதை எழுதமுடியாது. ஒரு கதையில் ஒன்றுக்குமேற்பட்ட கதைகாரர் அல்லது கதைசொல்லிகள் இருக்கமுடியாது. ஒரு கதையில் அவன் / அவள் என்ற பாலியல் சுட்டுக்கள் தவிர்த்த பாலற்ற கதாபாத்திரம் இருக்கமுடியாது. ஒரு கதையின் பன்முகப்பதிவுகளை மட்டும் வைத்துக்கொண்டு கதையைப்புரிந்து கொள்ளமுடியாது. இப்படியாக எத்தனையோ முடியாததுகளுடன் முக்கிக் கொண்டு இருக்கும் இக்கலைஞர்கள் எங்கே எப்படி எப்பொழுது பின்நவீனத்துவம், தலித்தியம், மார்க்ஸியம் பேசுகிறார்கள்? புலம்பெயர் கலைஞர்கள் என்ற பொதுமைப்படுத்தலின் சிக்கலே இதுதான்.

அனைத்துக்கோட்பாட்டு உருவாக்கங்களுக்கும் எதிரான தன்மை என்பது வெறும் வார்த்தையாடல் அல்ல என்பதை யமுனாவுக்கும் பலருக்கும் சுட்டிக்காட்டாமல் எம்மால் நிறைவுகாணமுடியவில்லை. இந்த முழுமைகளைச் சுமந்து சுமந்து விதிவிலக்குகளால் எம் முதுகுகள் கனக்கின்றன. விதிவிலக்குகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகுகள் கனக்கின்றன. விதிவிலக்குகளைப் புறக்கணித்துக்கொண்டு எந்தமுழுமைகளும் முழுமைப்பட முடியாத நிலையில் முழமைகளை பூசிப்பதில் அர்த்தமில்லை. முரண்பாடுகளை பலப்படுத்தி வடிவமைத்து அவற்றை மோதவிடும் செயற்பாடு கோட்பாட்டுமயமாக்கலின் ஒரு பாங்காக இருக்கிறது. அதேநேரம் இதுவே போராட்டவடிவத்தை கூர்மைப்படுத்துவதாக கூறிக்கொண்டு ஒடுக்கப்படுபவர்களை ஒரு தளத்தில் வடிவமைத்தல் என்ற பெயரில் அவர்களுக்கிடையிலான முரண்களின் இருத்தலை இல்லை என்று கற்பித்து விட்டுக்கொடுத்தலை ஜனநாயகமாகப் போதிக்கிறது.
ஒடுக்குபவர்களின் செயற்பாடுகளின் இயக்கங்களின் அடிப்படையில் அதன் இயக்கத்தை பாடமாகக்கொண்டு கோட்பாடுகள் கட்டமைக்கப்படுவதுடன் அதன் ஒருமுகத்துவம் ஒடுக்குபவர்களின் இயக்கத்தை மேலும் இலகுவாக்கிறது. ஒரு சீரான சமச்சீரான சமத்துவ சமுதாயத்தை அமைப்பதற்கான போராட்டம் என்பது இவ்வாறுதான் ஒடுக்குகின்ற குரலாக இருக்கின்றது. இதற்கு எதிரியாக இருப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

இறுதியாக அவர் இக்கட்டுரையில் ஒழுங்கவிழ்ப்புச்சயெ்திருந்தது பற்றிக்குறிப்பிட்டே ஆகவேண்டும். சினிமாப்பாணியிலான மரபுவழிவிமர்சனங்களில் விழுந்துகிடக்கும் தன்மையோடு அதேபாணியில் திடுக்கிடும் திசைதிருப்பங்களோடு சண்டைக்காட்சிகளும் பாடற்காட்சிகளும் நிறைந்ததாக இருந்தது கட்டுரை. எல்லா மசாலாப்படங்களையும் ஆழ்ந்து பார்த்து அவற்றின் நற்கூறுகளின் அழகியலை உறர்த்திப்பிடிப்பவரல்லவா அவர். மொத்தத்தில் நேர்கோட்டு விமர்சன மரபை உடைத்தெறிந்து ஒரு புதுமை செய்திருக்கிறார்.
○




**மங்கையராய் பிறப்பதற்கே**

(மேடை நாடகங்கள் நான்கின் தொகுப்பு)

ஆசிரியர் : பெ. தவராஜா

நாடக எழுத்துப்பிரதி என்பது ஓர் எலும்புக்கூடுதான்.
நாடகம் நிகழ்த்திக்காட்டும் கலையாகையினால்,
பிரதி மேடையிலேதான் முழு வீரியம் பெறுகின்றது.
பிரதியை வியாக்கியானிப்பவனாகவும்,
கலைஞனாகவும் நெறியாளன் நவீன நாகப்போக்கிற்
காட்சிதருகிறான். ஒருவகையில் நாடக
எழுத்தாளனைவிட நெறியாளன்
பிரதானமானவனாகிவிடுகிறான். ஈழத்து
நாடகவரலாற்றில் 80களுக்குப்பின்னர் அரங்க
நெறியாளர் அரங்காக வளர்ந்து வந்துள்ளது.
தவராஜாவின் நாடகப்பிரதிகளும் இவ்வாறே.
பிரதிகளை வாசிக்கும்போது ஏற்படாத தாக்கத்தினை
அவரது மேடைநிகழ்வுகள் தரும் என்கிறார் கலாநிதி.
சி. மௌனகுரு தனது முன்னுரையில்.

பக். 48 விலை ரூபா 50.

N°200, Old Kalmunai Road, Nochchimunai, Batticaloa






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் நவீனத்துவம் : சில குறிப்புகள்

- துடைப்பான்

பின்நவீனத்துவ சர்ச்சைகள் நிறைந்த இன்றைய காலங்களில் பின்நவீனத்துவத்தின் இயங்கு அரசியல் தளத்தை நோக்கிய கோட்பாட்டுரீதியிலான ஆய்வுகள் புலம்பெயர்தமிழ்ச்சூழலில் தமிழில் வராமை பெரும்குறைபாடாகவே இருந்துவந்துள்ளது. இக்குறையை ஜமுனாராஜேந்திரனின் பின்நவீனத்துவம் தொடர்பான கட்டுரை குறைக்கும் என்ற உணர்வுடனே கட்டுரையை வாசிக்கத்தொடங்கினேன். சற்று ஏமாற்றமே. குறிப்பாக பின்நவீனத்துவம் தொடர்பாய் எழுதமுயலும் ஜமுனாராஜேந்திரன் பின்நவீனத்துவத்தின் அரசியற்போக்கை, அதன் கோட்பாட்டுநிலையை தெளிவுற வைக்கத்தயங்கும் தன்மையை அவதானிக்கமுடிகின்றது. பின்நவீனத்துவம் என்பது அமைப்பியல் போன்றதல்ல. பின்நவீனத்துவம் தனித்த இலக்கியப்போக்கு என்பதுடன் அதற்கோர் அரசியல்சார்பு நிலையையும் தன்னகத்தே கொண்டே கட்டியமைக்கப்படுகின்றது. எனவே பின்நவீனத்துவவாதி என்பவர் பின்நவீனத்துவ அரசியல்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவராகவே இருக்கமுடியும். பின்நவீனத்துவவாதிகளாக இனங்காணப்படும் பூக்கோ, தெரிதா, விட்கென்ஸ்டெய்ன், ஷோபன் ஹேர், லக்கான் போன்றவர்களை இடதுசாரி சிந்தனையாளர்களாக காட்டமுனையும் ஜமுனாவின் சிந்தனையோட்டமே பின்நவீனத்துவத்தின் அரசியற்போக்கை முழுமையாக ஆய்வுசெய்யமுடியாமால் தடுத்துவிடுகின்றது. உண்மையில் ஆரம்பகாலங்களில் இடதுசாரிச் சிந்தனைகொண்டவர்களாக இருந்த பூக்கோ, தெரிதா இவர்களின் பிற்கால அரசியல்சார்புநிலைத்தன்மைகளை ஒருங்கே ஆய்வுசெய்யின் இவர்களின் இடதுசாரித்தனம் பற்றி ஐயத்தையே கொள்ளமுடியும். குறிப்பாக அதிகாரங்களுக்கும் அமைப்பு வடிவங்களுக்கும் இடையிலான உறவுநிலைபற்றிய இடதுசாரிச்சிந்தனையாளர் கிராம்ஷியின் சிந்தனைகளை விரிவான நிலைத்தன்மைக்கு கொணர்ந்த பூக்கோ இறுதியில் ஒருங்கிணைந்த கூட்டசைவு, புரட்சிகரச்சிந்தனைத்தளங்களின் கருத்திசைவு, அமைப்புக்களின் வழிகாட்டலில் ஏற்படும் புரட்சிமாற்றம், புரட்சிகர சமூக எழுச்சி இவை அனைத்தையும் நிராகரித்து தனிநபர்கள் சிறுகுழுக்களாக பிரிவுறுதல், ஒருமைத்தன்மையை ஊக்குவித்தல் முதலியவற்றை வலியுறுத்தியே தனது ஆய்வுகளை நகர்த்தியுள்ளார். அதிகாரம், சர்வாதிகாரம், அமைப்புக்களின் மேலாதிக்கம் இவைகளை நுண்ணிய தளங்களில் ஆய்வுசெய்வதும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான ஜனநாயகத்தன்மையினை பிரதிபலிக்கும் அமைப்புவடிவங்களை உருவாக்குவதுமே ஆக்கிரமிப்பு, மேலாதிக்கம் போன்றவற்றின் படிகளிலிருந்து விடுவிக்க உதவும். அன்றி அமைப்புவடிவங்களையும், ஒருங்கிணைந்த புரட்சிகளையும் போராட்டங்களையும் நிராகரிப்பதல்ல. பின்நவீனத்துவம் எப்போதும் போராட்ட உணர்வுகளையும், அதனைநோக்கிய புரட்சிகர வடிவ அமைப்புகளையும் நிராகரித்தே வந்துள்ளது. அது பொது எதிரிக்கெதிராக ஒன்றுபடும் போக்குக்கு எதிரான செயல்கொண்டதாகவே உருப்பெற்றுள்ளது. இதனாலேயே பின்நவீனத்துவத்தை அதன் அரசியல்சார்நிலையை ஆய்வுசெய்த ஹேபர் மாஸ் போன்றோர் பினநவீத்துவம் மிகவும் பிற்போக்குத்தனம் கொண்ட, ஏகாதிபத்திய சிந்தனை என்று கூறினார்கள்.

○

இந்த பின்நவீனத்துவ சிந்தனையை முன்னெடுத்தவர்களில் பெரும்பான்மையோர் முன்னாள் இடதுசாரிகளாகவே இருந்துள்ளனர். இவ்வாறான இடதுசாரிச்சிந்தனைகளின் தாக்கம்கொண்ட இவர்கள் ஏன் பின்நவீனத்துவசிந்தனைகளை புரட்சிக்கு எதிரான மார்க்ஸிய விரோத மனப்பாங்கோடு உருவாக்கமுயன்றார்கள் என்பதைப்பார்க்கவேண்டும். ரஷ்ய கம்யூனிசத்தின் அன்றையகால பிழைகளும், தங்கள் தங்கள் நாட்டின் கம்யூனிஸ்ட்கட்சிகளின் மரபார்ந்த சிந்தனைகளிலும், அதிகார மேலாதிக்கங்களிலும் அதிருப்தியுற்ற இவர்கள் இவ்வாறான நிலைகளுக்கு மார்க்ஸிய ஆய்வுஅணுகுமுறைகளையும் தீர்வுத்திட்டங்களையும் முன்வைக்காமல் பதிலாக மார்க்ஸிய முரணாணர்களாகவே மாறினார்கள்.

மார்க்ஸியம் பொருளாதாரகட்டமைப்பை மாத்திரமே கவனத்தில்கொள்கிறதெனவும், மொழி, இனம், மதம் கலாச்சாரம், நிறம், பால் சார்ந்த எவ்ஒடுக்குமுறைகளிலும் கவனம் கொள்ளவில்லை என்ற விவாதங்களை முன்வைத்த இவர்கள் அவற்றை ஆய்வுகளுக்குட்படுத்தி மார்க்ஸியத்தின் ஆரோக்கியமான நீட்சிக்கும், விரிவான சிந்தனைப்பரப்புக்கும் கொண்டுசெல்ல முயலாது எதிர் நிலைத்தன்மை கொண்டமனிதர்களாக மாறும் அபாயத்தை இவர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். ரஷ்யாவில் நிகழ்ந்த அதிகார நிருவாக சீர்கேடுகளை மார்க்ஸியத்தின் ஜனநாயக மறுப்பாக காட்டமுயன்ற பூக்கோ போன்றவர்கள் அக்காலகட்டத்தில் தங்கள் எழுத்துக்கள்/ செய்கைகள் அனைத்தையும் மார்க்ஸிய விரோத விமர்சனங்களுடாக ஏகாதிபத்திய சேவகநாயகர்களாகவே மாறியிருந்தனர். பின்நவீனத்துவ இலக்கிய சிந்தனைகளும் அக்காலத்தில் மார்க்ஸியத்தின்பால் நம்பிக்கையும், ரஷ்ய ஆட்சியின்மேல் அதிருப்தியும் கொண்டு விரக்தியும் சோர்வும்கொண்டிருந்த படைப்பாளிகளை நிறையவே உள்வாங்கி அவர்களின் மார்க்ஸிய நம்பிக்கையை சிதறடித்து அவர்களை பின்நவீனத்துவ இலக்கியப்போக்கினுள் உள்வாங்கிற்று. இக்காலத்தில்தான் பின்நவீனத்துவத்தின் அதீத கற்பனைக்கதைசொல்லும் மரபான மாந்தீரீக யதார்த்தவாதம் (மெஜிக்கல் றியாலிசம்), கனவுகளுக்கும் மனப்பிறழ்வு பித்துநிலை எழுத்துகளுக்கு முன்னுரிமை அளித்தல், ஆபாச நிலைகளுக்கும், வேடிக்கைத்தனங்களுக்கும் அங்கீகாரம் அளித்தல் போன்ற இலக்கிய உத்திகள் உருவாயிற்று. படைப்பாக்க இளைஞர்பட்டாளத்திற்கு இது ஓர் கவர்ச்சிப்போதை இலக்கியவழியாக இருந்தமையால் பலபடைப்பாளர்கள் இதனால் கவரப்பட்டனர்.

பின்நவீனத்துவத்தை முன்எடுத்துச்சென்றவர்களில் லெஸ்லி ∴ பீட்லர் என்ற பின்நவீனத்துவ விமர்சகர் முக்கியமானவர். அவர் 'எல்லையைக்கடத்தல், இடைவெளியை நிரப்புதல், பின்நவீனத்துவம்' (Cross the Border - Close the Gap - Post Modernisem) என்ற தனது பிரபலமான கட்டுரையில் பின்நவீனத்துவம் எவ்வகையில் முந்திய இலக்கியங்களிலிருந்து மாறுபட்டிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு பட்டியல் இடுகின்றார்.

1. வேடிக்கை தன்மைகளையும் அறச்சார்பின்மையும், ஆபாசத்தன்மையும், கொண்டிருக்கவேண்டும்.
2. அதீத அறிவார்ந்த தன்மை இருத்தல் கூடாது.
3. கனவுகளுக்கும் தரிசன நிலைகளுக்கும் பித்து நிலைகளுக்கும் (மனப்பிறழ்வு) அதன் விளைவான தரிசனம் அதன் எல்லையான பரவச உணர்வுகளுக்கு இடம் அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு யதார்த்தவாதமும் நவீனத்துவமும், ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் அளித்த முக்கியத்துவத்தை பரவசநிலைக்குத் தரவில்லை என்றும் இலக்கியம் அதைநோக்கிப்போவதே பின்நவீனத்துவபோக்கின் அடிப்படை என்றும் கூறுகின்றார்.

'பின்நவீனத்துவத்தின் அடிப்படைகள்' என்னும் கெ. விஸ்வநாதனின் கட்டுரை இப்படிச்சொல்கிறது.
''பின்நவீனத்துவ படைப்பாளி வன்முறைகளையும், ஆபாசங்களையும், வக்கிரங்களையும், உச்சகட்ட உத்வேகமாக மாற்ற பல்வேறுவடிவங்களை உருவாக்கலாம்.
பேய்க்கதை, திகில்கதை, ஆபாசக்கதை உட்பட பல பிரபல விடயங்களை பயன்படுத்தலாம். ஆனால் தருக்கத்தின் அடிப்படையில் அமைந்த தத்துவத்தை பூரணமாக நிராகரித்து தர்க்கமற்ற பரவசநிலையில் உருவாகும் தரிசனங்களை நோக்கி அவன் படைப்பை கொண்டுசென்றாக வேண்டும்.''

○

1950களிலும், 60களிலும் எழுந்த பின் நவீனத்துவ சிந்தனைகளின் உருவாக்கம் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் தம் செல்வாக்கை நிலை நிறுத்தியிருந்தது. குறிப்பாக பின் நவீனத்துவத்தின் அதீத கற்பனைக்கதைசொல்லும் மரபான மெஜிக்கல் றியலிசம் லத்தீன் அமெரிக்கநாடுகளிலே பரவலாக கைக்கொள்ளப்பட்டது. இக்காலங்களில் லத்தீன் அமெரிக்கநாடுகளில் எழுந்த பரட்சிகர எழுச்சிகள் அமெரிக்கஏகாதிபத்தியத்தை மிகவும் கவலைகொள்ளச்செய்தது. கென்னடியின் கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக 'முன்னேற்றத்திற்கான கூட்டணி' இக்காலத்திலேயே உருவாக்கப்பட்டது. கனடாவின் சர்வதேச வளர்ச்சி நிறுவனம், பொருளாதார கூட்டுறவுக்கான ஜேர்மன் அமைச்சகம், ஐரோப்பிய சமூகத்தின் வளர்ச்சிஉதவிக்கமிட்டி ஆகியவை மும்முரமாக கம்யூனிச எதிர்ப்பு முகாம்களில் ஒன்றாக இயங்கிக்கொண்டிருந்த காலம். லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்க ஆசிய நாடுகளில் அரசுசாராத நிறுவனங்களைத் தோற்றுவித்து இந்நிறுவனங்களுக்கூடாக ஏகாதிபத்திய ஆய்வுநிறுவனங்களையும் சிந்தனைக்குழுக்களையும் சர்வதேச வலைப்பின்னலில் ஒருங்கிணைத்து செயற்பட வைத்துக்கொண்டிருந்தன.
இதன் விளைவாக வெகுஜன கோட்பாட்டுச்சிந்தைனையாளர், பல்கலைக்கழக மற்றும் ஆய்வு நிறுவனங்கள் மூலம் மார்க்ஸியத்திற்க எதிராக தத்துவக்கோட்பாட்டை உருவாக்கும் பணியில் இவை இறங்கின. இக்காலப்பகுதியிலேதான் பிரேசிலைச்சேர்ந்த பவுலோ பீரியரின் 'சுரண்டப்படுவோருக்கான கல்வி'' பவுல் அலின்ஸ்கியின் "அதிகாரத்தின் தத்துவம்" கிட்டியர்சின் "விடுதலை இறையியல்" சூமெக்கரின் "சிறியதே அழகு" போன்ற சிந்தனைகளும் பின் நவீனத்துவ காலகட்ட சிந்தனைகளோடு இணைக்கப்பட்டு உள்வாங்கப்பட்டன. இவர்களின் இவர்களின் அனைத்து சிந்தனைகளிலும் உள்நோக்கமாக காணப்பட்டமை மார்க்ஸிய சிந்தனைகொண்ட அமைப்பு வடிவங்களில் புரட்சியை நோக்கி மக்கள் அணிதிரள்வதை தடுப்பதும் மார்க்ஸிய நம்பிக்கைகளை சிதறடிப்பதுமே. அக்கால கட்டத்தில் இவர்களுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்களில் பூரணவெற்றி கிடைத்ததென்றே கூறவேண்டும். இதே போன்றே அக்கால கட்டத்தில் இந்தியாவில் தெலுங்கானா பரட்சியின்போதும், 1967ல் நக்சல்பாரி எழுச்சியின்போதும் ஏகாதிபத்தியங்களின் நிதிஉதவி பெற்று பல அரசு சாரா நிறுவனங்கள் மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் வர்க்க உணர்வுபெற்று எழுவதை குலைக்க முயன்றன. காந்தி சமாதான கழகத்தின் அவார்ட் (கிராம வளர்ச்சிக்கான தன்னார்வக்குழுக்களின் கட்டமைப்பு) ஜெயப்பிரகாஸ் நாராயணனின் சத்திர சங்கர்ஷ் யுவவாகினி உலகதிருச்சபை கவுன்ஸில் சார்பில் வந்த நகர்ப்புற தொழிற்துறையின் கிராமப்புற இயக்கம், டெல்லிபோரம், பம்பாய் வளர்ச்சிக்கான நகர்ப்புற தொழிற்சாலைக்கட்டமைப்பு, ராக்பெல்லரின் நிதியுதவிபெற்ற ரஜனிகோத்தாரியின் லோகாயன் அமைப்பு முதலியன தோற்றம் பெற்றன. முன்பு புரட்சிகர இயக்கங்களின்பால் ஈர்க்கப்பட்ட பல முற்போக்கு சிந்தனையாளர்களும், நல்லெண்ணம் கொண்டோரும் இந்த அரசசாரா நிறுவனங்களினால் ஈர்க்கப்பட்டு திசை மாறினர். இக்காலகட்டத்தில் பின்நவீனத்துவத்தின் அனைத்துச் சிந்தனைக்கூறுகளும் இறக்குமதிக்கு உள்ளாக்கப்படாவிட்டாலும் கூட இடதுசாரி சிந்தனைகளுக்கு எதிரான ஒருமைத்தன்மையை ஊக்குவித்தல், சிறு குழுக்களாகப் பிரிவுறவைத்தல், முரண்பாடுகளைக் கூர்மையாக்குதல், சீர்திருத்த நடவடிக்கைகளினால் திருப்தியுறவைத்தல் போன்ற செயற்பாடுகளில் தீவிரம் காட்டப்பட்டன. உதாரணமாக சர்வதேச பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியோடு நடைமுறைப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத்திட்டம் 1967 ல் நக்சல்பாரி இயக்கம் ஏற்படுத்திய ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியை பின்னடையைச்செய்ததோடு மக்களின் வர்க்கமயமாதல் நிலையை தடுத்ததோடு சாதிரீதியான முரண்பாடுகளை கூர்மையடையச்செய்து வர்க்கரீதியான போராட்ட உணர்வுகளுக்கு 'உலை' வைத்தது. இவ்வாறு ஒவ்வோரு ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களின் உதவிபெற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகள் அனைத்தும் சாதீயத்தாலும் பொருளாதாரீதியிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் எழுந்த ஒருங்கிணைந்த போராட்ட எழுச்சியைத்தடுப்பதிலும் சாதீய முரண்பாட்டைக் கூர்மைப்படுத்துவதிலும் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்திருந்தன. ஐரோப்பிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் எவ்வாறு இந் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் அங்கே மார்க்ஸிய நம்பிக்கைகளை, புரட்சிகளை மழுங்கடிப்பதில் வெற்றிபெற்றனவோ, அதே வெற்றியை ஆசியநாடுகளிலும் பெற்றுக்கொண்டன.

ஆசிய கிராமப்புறங்களில் ஊடுருவி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளுக்கு ஆப்புவைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்த நிறுவனங்களில் சிலவான EZE (ஜேர்மனி) NOVIB ஆகிய நிறுவனங்களின் சிலவேலைத்திட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது.

1. கிராமப்புற ஏழைகளை குறிப்பாக சமூகரீதியில் ஒடுக்கப்பட்ட பிரிவினர்களை அமைப்பாக்கும் பணியில் ஈடுபடும் பகுதியில் உள்ளகுழுக்களை கண்டறிவது.
2. சேவையகத்தில் பணிபுரிபவர்களைக்கொண்டு, சேவையகத்தின் பங்குதாரர்களாக செயற்படும் குழக்களில் உள்ளோருக்கு செயற்படுவதற்கான திசைவழியையும் பயிற்சியையும் அளிப்பது.
3. புதிய குழுக்களை அல்லது ஏற்கனவே இயங்கும் குழுக்கள் பற்றிய விபரங்களை நிதியுதவி அளிக்கும் முகமைகளுக்காக ஏற்று சோதித்து அறிக்கை அளிப்பது.
4. மகளிர் குழுக்களை அமைப்பது மற்றும் மகளிர் பிரச்சினைகளை எடுத்து செயற்படுத்த ஊக்கமளிப்பது.

○

ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப்பின் ஓரளவு குறுக்கப்பட்டிருந்த ஏகாதிபத்தியத்தின கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகள் சமீப காலங்களில் மீண்டும் இந்தியாபோன்ற சமூகமுரண்பாடுகளின் கொந்தளிப்புக்கள் நிறைந்துள்ள நாடுகளில் துளிர் விடத்தொடங்கியுள்ளது. இந்தியாவின் சமூகவரலாற்றில் சாதீயம் முக்கிய அம்சமாக விளங்குவதோடு சமூக அடக்குமுறையின் முக்கிய கருவியாகவும் இருக்கிறது. சாதீயத்தால் ஒடுக்கப்படும் இம்மக்கள் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்குமுறைச்சூழலுக்கு உள்ளாக்கப்படும் கொடிய இரட்டை ஒடுக்குமுறைச்சூழலையும் நாம் அவதானிக்கமுடியும். சாதி/ வர்க்க எதிர்ப்பு உணர்வினூடாக புரட்சிகரவடிவம் நோக்கி இம்மக்கள் அணிதிரள்வதையும், தலித்தியம் வெறும் சாதிய எல்லையைத்தாண்டி புரட்சிகரஉணர்வோடு சமூகமாற்றத்தை நோக்கி நகர்வதையும் ஏகாதிபத்தியம் நன்கு உணர்ந்துள்ளது. ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின் மார்க்ஸியத்தின் நீட்சியும் அதன் புதிய பரிமாணங்கள் நோக்கிய சிந்தனைப்பரப்பும் ஏகாதிபத்திய நலன்விரும்பிகளை நடுங்கவே செய்துள்ளது. எனவே மார்க்ஸியத்தை எவ்வாறாயினும் குழிதோண்டிப்புதைத்துவிட்டே நாம் மறுவேலை பார்ப்போம் என்று பின்நவீனத்துவ அரசியல் சிந்தனையோடு புறப்பட்ட கூட்டம் குழிதோண்டுவதில் விசுவாசமாகவே செயற்படுவதை அவதானிக்கமுடியும். குறிப்பாக இந்த பின்நவீனத்துவ போக்கினால் மார்க்ஸியத்தை பெரும் கதையாடலாக (Meta Narratives) இனங்காணும் முன்னாள் இடதுசாரியான அந்தோனிசாமி மார்க்ஸ் போன்றவர்கள் மார்க்சியம் போன்ற கதையாடல்கள் நம்பிக்கைகொண்ட மனிதனின் 'காலை வாரிவிட்டதாகவும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் நம்பிக்கைகளை பொய்க்கவைத்துவிட்டதாகவும், மனிதனை மையமிழந்த மனநிலையாளனாய்ஆக்கிவிட்டதாகவும் தன்னுடைய பின்நவீனத்துவம் அரசியல் இலக்கியம் என்னும் நூலில் கவலைப்(!) படுகின்றார். எனவே மார்க்ஸியத்தின் தகர்வை பறைசாற்றிய பின்நவீனத்துவத்தின் அரசியலை வெகுவாக மெச்சிக்கொள்ளும் அந்தோனிசாமி மார்க்ஸ் போன்றவர்களின் ஏகாதிபத்திய விசுவாசத்தை நாம் நிச்சயம் மெச்சியே ஆகவேண்டியுள்ளது.

பின் நவீனத்துவத்தின் சந்தர்ப்பவாத அரசியலை ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையும் கொடுமைகளையும் 'ஜோகுசாய்' ஏற்றுக்கொண்டு இவை எல்லாவற்றையும் எவ்வித பிரக்ஞையுமற்று அல்லது வேடிக்கையாய் விளையாட்டாய் பார்க்கும் மனநிலையே பின் நவீனத்துவ மனநிலை' என இதற்கு மணிமகுடம் சூட்டும் லியோதார்த் போன்ற பின் பின்நவீனத்துவவாதிகளின் அரசியலை நியாயப்படுத்தும் அந்தோனிசாமி மார்க்ஸ் போன்றவர்கள் ஒடுக்கப்பட மக்களுக்கு எவ்வகையான அரசியல் தீர்வை முன்வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கஷ்டப்பட்டு அறியவேண்டியதில்லை. அவர் தனது நூலில் பின் நவீனத்துவத்தின் மாபெரும் பெருமை பற்றிக்கூறுவதைப்பார்ப்போம். "...நவீனத்துவத்தின் உச்சமாகவே பின்நவீனத்துவம் வெளிப்பட்டாலும் இந்த வேறுபாடு முக்கியம். ஆழங்களை எப்படியாவது எட்டிவிடவேண்டும் என்ற அவஸ்தையையை நவீனத்துவம் கொண்டிருந்தது என்றால் மேற்பரப்பில் திளைக்கும் சுகத்தை பின்நவீனத்துவம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டது. இரண்டாம் உலகப்போருக்கு முன்னும் பின்னும் இருந்த ஏக்கம், கவலை, முரண்நிலை ஆகிய உணர்வுப்பின்னணியில் தோற்றம்கொண்ட நவீனத்துவம் எப்படியாவது இந்த முரண்கள் தீரும். தீர்க்கவேண்டும் என நம்பியது. தூரப்படுத்தல், பிரிந்து நிற்றல், ஆழம், சாரம் மனிதனை மையமாக வைத்துப்பார்த்தல் ஒப்பமை எனப்பல்வேறு உத்திகளை இதற்குக் களனாகக்கொண்டது. ஏதோ ஒருவகையில் ஒத்திசைவு உறுதித்தன்மை ஆகியவற்றின் மூலம் வரையறுக்கப்பட்ட ஒழுங்குத்தன்மையை நோக்கிய நகர்வாகவும், ஏக்கமாகவும் நவீனத்துவம் இருந்தது. ஆனால் பின் நவீனத்துவமோ நவீனத்துவவாதிகளின் உயிர் முனைப்புகளை (high seriousness) விட்டொழித்து விளையாட்டுத்தனத்தை வாடிக்கையாக்கிக்கொண்டது. ஒழுங்குகளின் நிலைத்தன்மைக்கு பதிலாக இயக்கத்தன்மைக்கு அழுத்தம் கொடுத்தது. ஆலன் ஒயில்டு சொல்வதுபோல இழந்துபோன சொர்க்கத்தைப்பற்றி நவீனத்துவம் கவலைப்பட்டது என்றால் இழந்துபோன சொர்க்கத்தை பின்நவீனத்துவம் புறக்கணித்து ஒதுக்கியது. இந்தச்சூழலை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை பின்நவீனத்துவம் கொண்டிருந்தது"


○ ○ ○

இந்த பின்நவீனத்துவ சிந்தனைப்போக்கு சமீப காலங்களில் புகலிடத்தில் சில நபர்கள் மத்தியிலும் பரவத்தொடங்கியுள்ளது. இதன் காரணங்களையும் இதன்பின்னால் இயங்கும் தமிழகக்கோட்பாட்டுச்சிந்தனையாளர்களையும், இந்த சிந்தனையாளர்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் தன்னார்வக்குழுக்களையும், சாதிச்சங்கங்களையும் எதிர்வரும் காலங்களில் பார்ப்போம்.

இக்குறிப்புகளுக்கு பயன்பட்டவை :

1. வஞ்சக வலை விரிக்கும் தன்னார்வக்குழுக்கள் (வெளியீடு: கீழைக்காற்று வெளியீட்டகம்
2. சுபமங்களா கட்டுரைகள்
3. பின்நவீனத்துவம், அரசியல், இலக்கியம் - அ. மார்க்ஸ் (இக்குறிப்பினை எழுதிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் காலக்குறி இதழ்-9 வாசிக்கமுடிந்தது. இவ்விதழில் பின்நவீனத்துவம் தொடர்பான விரிவான கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. வாசகர்கள் படிக்கமுயலவும்)

○




இதழ் – 8
ஸ்கன்டினேவியச் சிறப்பிதழ்

இந்த இதழினை
கணனிமூலம் பதிப்பித்துதவியவர்கள்

தமயந்தி
பானுபாரதி
ஜொவிதா
பிறேம்
சுவிதா
கருணாகரமூர்த்தி
நிருபா
கங்கா
வின்சன்
ஜெயக்குமார்

ஓவிய எழுத்துக்கள்
ஓவியங்கள்
அ. தேவதாஸன்
யமுனா ராஜேந்திரன்

அட்டைப்படங்கள்:
புகைப்படம் : தமயந்தி

வடிவமைப்பு :
புவனன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– வின்சன் –

# பண்பாடு!

இற்றைக்காலத்தில் பண்பாடுஎன்ற சொல் மிகவும் நாகரீகப்பாணி சார்ந்த கருத்தாக்கமாக அடையாளம் காணப்படுகிறது. அதேநேரத்தில், ∴பிரஞ்சில் எப்படியோ தெரியவில்லை, ஆங்கிலமொழியில் இன்றைக்கிருக்கக்கூடிய இரண்டு மூன்று சிக்கலான சொற்களில் "பண்பாடு" (Culture) என்ற சொல்லும் ஒன்று. பண்பாடு என்பதன் கருத்துருவம் பல்வேறு தலைப்புக்களைத் தன்னகத்தே ஈர்க்கக்கூடியது, பல படிமுறைச்செயல்களை(process), வேறுபாடுகளை, சிக்கல்களையும் தன்னகத்தே ஈர்க்கக்கூடியது. அன்றாட வாழ்விலும் இலக்கியக்கோட்பாட்டு நிகழ்விலும் சமூக மற்றும் கலைப்பிரிவு ஆய்வுத்துறைகளிலும்கூட மிகவும் "∴பாஸனாகிப்போன" சூடான தலைப்பாகவிருக்கின்ற இக்கருத்தாக்கம் அது இவ்வளவுதூரம் விவாதிக்கப்படும் அளவுக்கு முக்கியத்துவம்வாய்ந்ததல்ல என்ற ஓர் கருத்தும் நிலவத்தான் செய்கின்றது. எது எப்படி என்பது அவரவர் அறிவுக்கும் தேடலுக்கும் தேவைக்கும் புரிதலுக்கும் உட்பட்டது.

அதற்குமுன்னதாக பண்பாடுஎன்ற சொல்! பண்பாடு என்ற சொல்லைக் கருத்தாக்கப்படுத்துவதே இன்றைக்கு ஆய்வுப்புலங்களில் மிகவும் ஆர்வமானவிடயம். சுருக்கமாக (ஈழத்)தமிழில் சொன்னால் "கலாச்சாரம்". கலை+ "ஆச்சாரம்" யாருடைய சொல் என்பது பற்றியும் அது ஏன் பயன்படுத்தப்படக்கூடாது என்பது பற்றியும் நான் இங்கு சொல்லவேண்டிய தேவையில்லை. மானிடவியல் (Anthropology) என்ற துறைசார் படிப்பு விரிவடைந்து இன்று பண்பாட்டு மானிடவியல் (cultural anthropology) என வளர்ந்துவிட்டது. இப்படிப்புத்துறை தமிழில் வந்தநேரம்தான் பண்பாடு என்ற சரியான சொல் எடுத்தாளப்படத்தொடங்கப்பட்டது.

மானிடவியல் முன்பு மனிதர்களை, மனிதர்களின் வகைகளைக் குறிப்பாக உடலியல்ரீதியாகப் படிப்பதாக இருந்தது. இவற்றின் மூலம் குறிப்பிட்ட இனம், குறிப்பிட்ட நிறம், குறிப்பிட்ட பிரதேசத்தைச்சேர்ந்தவர்கள்தான் உயர்வானவர்கள், அல்லது முன்னேறிய மனிதர்கள் என்ற "மாபெரும் கண்டுபிடிப்புக்களை" முன்வைத்தனர்.

ஆனால் இப்போது அதன் பிரிவுகளில் ஒன்றான பண்பாட்டுமானிடவியல் மனிதர்களை, மனிதர்களின் வகைகளை அவர்களின் நுணுக்கமான கூறுகளை அவர்களின் பண்பாட்டின்வழியாக கூர்ந்து நோக்கப்புறப்பட்டிருக்கிறது (வெளிக்கிட்டு வெகுகாலம்). இதன்மூலம் அவர்கள், பண்பாடு எதுவும் ஒப்பீட்டளவில் உயர்வு தாழ்ச்சி சொல்லமுடியாதவை. அந்தந்தப் பண்பாட்டுக்கூறுகள் அவ்வப் பண்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற எளிய உண்மையை வலியுறுத்தினார்கள். ஆகவே ஒவ்வொரு ஆளும் அவரவர் அளவில் முக்கியமானவர். அதன் வழி உலகின் அனைத்து மக்களும் அவரவர் பழக்க வழக்கங்களும் உயர்வுதாழ்வற்றவை... என்ற இந்தப்படிப்புத்துறையின் வெளியீடுகளே இப்போது பல்வேறு பெயர்களில் 'டப்பரப்பா...ம்' என்று எக்காளம் முழங்கும் நண்பர்களுக்கு முன்னோடி.

பண்பாடு பற்றிய படிப்புத்தான் மேற்கத்திய புத்திஜீவிகளுக்கும் சில புதிய பக்கங்களைத் திறந்து விட்டது. அதுவரைக்கும் திருவாளர் ஜேம்ஸ் ∴பிரேஸர்போல[1] நிறையப்பேர் வெளிநாடுகளுக்குப்போய்விட்டுத் திரும்புகிறவர்களைக் கண்டு, கேட்டு எழுதுபவைகளே மானிடவியல் எழுத்தாகவும் அதையே நினைத்துக் கொண்டு இன்றுவரைகளும் இருக்கிறார்கள். ஐயோ பாவம்!

பண்பாடுபற்றிய பார்வை சரியாக இருந்திருக்குமானால், பண்பாடுபற்றிய கூறுகளைப் புரிந்துகொள்ளக் கூடுமாயிருந்திருக்குமானால் ஈழத்தில் தமிழர்களிடையே எழுந்திருக்கின்ற பல சிக்கல்கள் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்பிருந்திருந்திருக்கும். எது சிக்கல் அல்லது எவை சிக்கல்கள், எவராலெல்லாம் எழுந்தது/எழுந்தன, எவராலெல்லாம் தவிர்த்திருக்கமுடியும் என்பதெல்லாம் மற்றும் இன்னபிறவும்பற்றிக் குறிப்பிடுவது என்வேலையல்ல. ஆனால் பண்பாடுகளைப்படிப்பது துறைசார்ந்த கருப்பொருளாக மாறிய விதமும், அது யாராலெல்லாம் முன்நின்று படிக்கப்பட்டுப் பின் எவ்விதமாகவெல்லாம் நல்ல/தீய வழிகளில் பயன்படுத்தப்பட்டன என்பன இயல்பாகவே இந்தத்தொடரில் தவிர்க்கமுடியாதன.

பண்பாடு என்பதனை அதன் எதிரான பதமான இயற்கை என்பதனால் உருவகப்படுத்துவது எளிது. இயற்கை பண்பாடு என்பது சாலப் பொருந்தும். இயற்கையிலிருந்து மனிதர் மாறுபாட்டைச் செய்ய முற்படத்தொடங்கியபோது பண்பாட்டுக்குள் நுளையத்தொடங்கினர். மனிதனுடைய கூர்ப்புச் செயற்பாடு, அவனைச் சமூகப்பிராணியாக்கிப் பின்னர், இயற்கை படிப்படியாக அவனது கட்டுப்பாட்டுக்குள் வரத்தொடங்கியது. ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு நிலவியல் பகுதியிலும் இருந்த மனிதர் வெவ்வேறு விதமாக இயற்கையைப் பயன்படுத்தத் தொடங்கினர். புறக்காரணிகளைப்பொறுத்து பண்பாடும் பண்பாட்டைப்பொறுத்து மனிதரும் மாறுபட்டனர், மாறுபடுகின்றனர். (இயற்கை முன்னேற்றமடையாதது, நல்லதல்லாதது, அல்லது மனிதனின் முன்னேற்றங்கள் சரியல்ல, அறிவியற்கண்டுபிடிப்புக்கள் கூடாதவை என்று யாராலும் சொல்லமுடியாதது போலவே பல்வேறு படிநிலைகளில் உள்ள பண்பாடுகளை ஒப்பிட்டு யாராலும் மதிப்பிட முடியாது. அப்படியே யாரேனும் உயர்வுதாழ்வு சொல்லி வகைப்படுத்தினாராயின் மாறிவரும் உலகத்துக்கு வேடிக்கை காட்ட ஒருவர் கிடைத்துவிட்டார் என்று நினைத்துக் கொள்ளவேண்டியதுதான்.)

எனவே இந்தப்பொதுவான, அறிந்த விடயங்களின் தொடர்ச்சியாகப் பண்பாட்டின்/பண்பாடுகளின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், வழக்கடிபாடுகள், நெறிகள் (norms), விழுமியங்கள்(values), ஆடைமுறைகள், உணவுமுறைகள், நம்பிக்கைகள், போர்முறைகள், பொருட்களைப்பயன்படுத்தும் முறைகள்(பொருள்சார் பண்பாடு-material culture), அலங்காரமுறைகள் எனத்தொடரும் விடயங்களை ஒவ்வொரு பண்பாட்டைக்குறித்தும் குறிப்பாகப் பார்ப்பதும் அறிவதுமே பண்பாட்டுப் படிப்பு.

பண்பாட்டை நாம் அறிந்துகொள்வதும் பண்பாடு எம்மை அறிந்துகொள்வதும் எப்படி மாறுபடுகிறது என்பதற்கு ஓர் உதாரணம்: "எக்ஸில்"-4இல்(நவ.-டிசம்பர்1998 ப:8) வந்த தர்மினியின் கவிதை. கவிதையின் 3,4,5வது வரிகள்

[1]இவரை உதாரணமாக வைத்தே arm chairesearch என்ற சொல் உருவாக்கப்பட்டது! தகவல் என் உபயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சேற்றைப்பூசிக்கொண்டு/நாறவில்லை/மணக்குதாம்'' எனும்போது

"ஈழத்துத்"தமிழ் தெரிந்த வாசகர் ஒருவருக்கு மணக்குதாம் என்ற சொல் உகந்த, பிடித்தமான வாசனை என்று பொருள் தரும் அதேவேளை தமிழ்நாட்டைச்சேர்ந்த ஓர் வாசகருக்கு மணக்குதாம் என்ற சொல்கூட பிடிக்காத விருப்பமில்லாத வாசனையையே பொருள்தரும். இந்த இடத்தில் கவிதை செயலிழந்துவிடுகின்றது. இது கவிதையின் பிழையல்ல. கவிதை பண்பாட்டு எல்லை கடந்து வாசிக்கப்படுவதால் நிகழ்வது. சில எழுத்தாளர்கள் தங்கள்தங்கள் மொழிகளில் கிடைக்கின்ற பொதுவான பொருள்வெளியீட்டுச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுவார்கள்.
(இதேவேளை ஈழத்து வழக்குத்தமிழ்மொழியில் எழுதும் மார்க்சிய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் தமிழ்நாட்டில் எப்படிப் புரிந்துகொள்ளப்படும் என்பதை நினைத்தால்...!)

நாங்கள் ஒரே பண்பாடு, ஒரே இனம், ஒரே மொழி என்று எண்ணுகின்ற தமிழ்ப்பண்பாட்டினால், அதன்மொழியின்மூலம் வாசிப்பிற்குப் பொதுவான பொருளைத்தர முடியவில்லைவில்லை. அது மொழியின் குற்றமல்ல. இதைத்தான் பண்பாட்டுப் படிப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். தமிழ்நாட்டுப் பண்பாடும் ஈழத்துப்பண்பாடும் வேறு வேறானவை. ஈழத்திலும் தமிழ்நாட்டிலும்கூட பண்பாடு ஒருபடித்தானது என்று சொல்லிவிடமுடியாது. மதுரையில் மோர்விட்டுச்சாப்பிட்டு விருந்தை முடித்துக்கொள்வார்களாயின், மதுரைக்குவடக்கே பாயாசம் விட்டுச் சாப்பிட்டு முடித்துக் கொள்வார்களாயிருக்கலாம். யாழ்ப்பாணத்தில் எப்போதாவது சொதி வைத்து உண்பது வழக்கமாயின், மட்டக்களப்புப்பகுதியில் ஒவ்வொருநாளும் சொதி உணவுடன் பயன்படுத்தப்டுவதாக இருக்கலாம். அப்படியாயின் ஈழத்தமிழா் உணவில் சொதி அடிக்கடி இடம்பெறுவதில்லை என்ற பொதுக்கூற்று பண்பாட்டு வேறுபாட்டினால் பிழையாகிவிடுவதை அவதானிக்கலாம்.

ஏறக்குறைய ஒரே நிலவியல் பகுதியில் வாழ்பவர்களிடையேயே இத்தகைய வேறுபாடுகள் என்றால் மற்ற வகைகள் வெளிப்படுத்தும் புரிதற் சிக்கல் எண்ணிலடங்காது. பரிஸில் இந்தியத்தமிழர்கள் நடத்துகின்ற ஓர் மீன்கடையில் 'கணவாய்'ஐக் "கனவா" எனச் சிலநாட்கள் எழுதியிருந்தனர். பின்னர் அது குறித்து யாரோ சொன்னொர்களோ என்னவோ இப்போது "கணாவாய்" என எழுதியுள்ளனர். இதுபோலவேதான் இந்திய இதழ்களில் "இறா", இறால்மீன், என்றெல்லாம் எழுதுவார்கள். எழுதுவது சரி, பிழை என்பதல்ல விடயம். எழுத்து வழக்கே இவ்வளவு சிக்கல் தருகிறதென்றால் பேச்சுவழக்கு எத்தகையது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனக்குத்தெரிந்த, ஆப்பிரிக்கநாட்டைச்சேர்ந்த ஓர் ஆள் அவர் நடந்து செல்லும்போது தனது காலடிக்குச் சற்று முன்னால் துப்பிவிட்டு அதைத்தாண்டி நடந்து செல்வார். காட்டில் நடந்தாலும்சரி, புல்வெளியில் நடந்தாலும் சரி, மெற்றோவினுள் நடந்தாலும்சரி அப்படியேதான். அவரிடம் கேட்க தயக்கமாக இருந்தது. பின்னர் நீண்டநாள் தேடலின்பின் அதற்கு விடையும் கிடைத்தது. அவர்களுடைய இனக்குழு வழக்கப்படி காட்டில் நடந்து செல்கையில் அருகே துப்புவது வழக்கமில்லை. அதற்கு விலங்குகள் தொடர்பான சில நம்பிக்கைகளும் பாதுகாப்புணர்வுமே காரணம் எனத் தெரிய வந்தது. ஆக எந்தவோர் பண்பாட்டு நடவடிக்கையும் அது எச்சில் துப்புவதாயிருந்தாலும் எழுதுவமாயிருந்தாலும் பெரும்பாலும் பழக்கம் தொடர்பானதாகவே இருக்கும். அப்படி எச்சில் துப்புவது இப்போது இருக்கும் நெருக்கடியான வாழ்நிலையில், நகர அமைப்பில் சுகாதாரக்கேடாய்த் தெரிந்தாலும் அவரது அடுத்த சந்ததி பரிஸில் வளரப்போவதால் அதன் நடவடிக்கை மாறுபடக்கூடும்.

மொழியின் எழுத்து, கவிதை, பேச்சிலிருந்து அன்றாட நடைமுறைவரை எல்லாமே பண்பாட்டு மயக்கம் தரக்கூடியவைதான். ஒவ்வொரு பண்பாடும் பிறபண்பாட்டை அப்படித்தான் புரிந்து கொள்கிறது.

இதைப்போலவே ஒவ்வொருவரும் பிற பண்பாட்டைச் சேர்ந்தவர்களின்மீது காழ்ப்புணர்ச்சிகொள்வதும் நிகழ்கிறது. வெளிநாடுகளில் வாழும் "தமிழர்கள்" அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டவர் உட்பட அனைத்துப்பிறநாட்டவரையும் ஏளனத்துடன் அல்லது வெறுப்புடனேயே(பெரும்பாலும்) அணுகுகின்றனர். "வெள்ளை", "கறுவல்", "அடை" என்பதெல்லாம் பிற இனத்தவரை இனமையவாதப்போக்குடன் (ethnocentrism)அணுகுவதால் உருவாகுவதேயாகும். என்னுடைய இனம் சிறந்ததென்று ஒவ்வொரு இனமும் தன்னைப்பற்றிக் கூறிக்கொள்வதில் தப்பேயில்லை. ஆனால் "மற்ற" இனமும் நல்லதே என்ற எண்ணம் இருக்கவேண்டும். இப்படி இல்லாவிடினும் "மற்ற" இனம் மோசமானது என்ற எண்ணமாவது இருக்கக்கூடாது. அது கூடினால், மிகையாகினால் பின்பு வெறியாகி ∴பாஸிஸமாகும் வாய்ப்பு நெருங்குகின்றது என்று பொருளாகும்.

ஒரு மனித உயிர் ஓர்புதிய பண்பாட்டில் விடப்படும்போது ஒரே நேரத்தில் பண்பாடு அவனு/ளுக்குள் நுழைவதும் பண்பாட்டுக்குள் அவள்/ன் நுழைவதும் நிகழத்தொடங்கும். இந்தப் பண்பாட்டின் வயமாகும் செயற்பாடு பரஸ்பரக் காழ்ப்புணர்ச்சியுடனேயே நிகழ்கிறது. இது இயல்பான உளவெளிப்பாடு. ஆனால் நம்மைப்போன்றவர்கள் அதே இயக்கப்போக்குடன் (dynamics)இருக்கமுடியாது. பொது ஊடகங்கள் சாதாரணனின் பார்வையை முன்வைக்கும்போது, பொது ஊடகங்களில் எழுதும் வித்துவான்கள் சாதாரணனின் பார்வையை அங்கும், தாங்கள் சிறப்பானவர்கள் என்ற "சிறப்புப்பார்வையை" இங்கும் வைப்பதாக எண்ணிக்கொண்டு எழுதுவார்களேயானால் அதை அப்படி எழுதுபவர்களும் வெளியிடுபவர்களும் ஐயோ பாவம் வகையே. ∴பாஸிஸம் இப்படி எங்காவது வெளிப்படும்போது கண்டிக்காவிடினும் கண்டுகொள்ளத்தவறினால் நாங்கள் வரலாற்றில் தொடரப்போகும் பெரும்பிழையொன்றிற்கு முன்னோடிகளாயிருக்கிறோம் என்பதேயல்லாமல் வேறேதும் அதற்குப் பொருளல்ல.

பண்பாட்டையும் அதன் நுணுக்கமான கூறுகளையும் பற்றிய தெளிவான பார்வையிருக்குமானால் பண்பாடு "பிற", "மற்ற" மனிதர்களோடு கொள்ளும் உறவுகளில் எவ்வளவு முக்கியப் பங்கு கொள்கிறது, என்பதும் அதனால் உறவுகளும் பார்வைகளும் இதன்வழி எமது தேர்வுகளும் சீராகும். பார்வைகள் சரியாகவேண்டுமானால் ... தேவை. ஆனால் அதேவேளை விழுமியங்கள் பண்பாட்டுச் சார்புத்தன்மையுடையவை (cultural relativism). அதாவது ஓர் பண்பாடு எந்தச் சமூகத்தைச் சேர்ந்ததோ அந்தச் சமூகத்தைப்பொறுத்து அவ்வவ் விழுமியங்கள் வேறுபடும்.

எனவே, பண்பாட்டையும் அதைச்சார்ந்த மனிதர்களையும் நமது வெளிப்பார்வைகளுக்குள் அடக்குவது இயலாதது என்ற உண்மையே பின்நவீனத்துவத்தின் முதற்படி. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பகுதி மூன்று

அமைப்பியல் / கட்டுடைப்பு / பின்நவீனத்துவம் பற்றிய விவாதங்களில் முக்கியமான கருத்தாடல் சந்தர்ப்பங்களாக அமைந்தவை அ. மார்க்ஸ், தமிழவன், எம். ஏ. நுஹ்மான் போன்றவர்களுக்கு இடையிலான உரையாடல் நிகழ்வுகளாகும்.

தமிழவன் போன்றவர்களின் அமைப்பியல் ஆய்வுகள் விமர்சனங்கள் குறித்து அ. மார்க்ஸ் சொல்கிறார்: [1]

*அமைப்பியலுக்குள் பலபோக்குகள் உள்ளன. ஒரு பிரதியை எப்படிவேண்டுமானாலும் வாசிக்கலாம் என்கிறபோது அதனை இடதுசாரி அணுகல்முறையிலும் வாசிக்கலாம் வலதுசாரி நோக்கிலும் அணுகலாம். தமிழவனும் நாகார்ஜுனனும் அவரது வழித்தோன்றல்களும் மேற்கொள்ளும் வாசிப்புகளின் அரசியல் எத்தன்மையானது என்பது முக்கியம். அப்பட்டமான வலதுசாரி வாசிப்பையும் கட்டவிழ்ப்பையும் மேற்கொள்வதே இவர்களின் பணியாக இருந்துள்ளது, இருந்துவருகிறது. இந்தியச்சூழலில் வலதுசாரி வாசிப்பென்பது வருணாசிரம/ பார்ப்பனிய வாசிப்பென்பதை விளக்கவேண்டியதில்லை.*

தமிழவன் நாகார்ஜுனன் போன்றோரின் வருணாசிரம / பார்ப்பனீய, பெரியாரிய / திராவிடஎதிர்ப்பு அமைப்பியல் அணுகுமுறையை விமர்சனபூர்வமாகப்பார்க்கும் தலித்தியக்கோட்பாட்டாளர்களின் கோட்பாடு எவ்வகையில் அமைகிறது? அழகரசன் பின்நவீனத்துவமும் தலித்தியமும் என்னும் தனது கட்டுரையில் சொல்கிறார்: [2]

தமிழ்ச்சூழலில் தலித்கண்ணோட்டம் ஒருவிமர்சனக்கண்ணோட்டமாக உருப்பெற்றநிகழ்வு, உலகஅளவில் (பின் நவீனத்துவவாதிகளால் கோட்பாட்டளவில் பேசப்படும்) விளிம்புகளை மையப்படுத்த முயல்கின்ற கலாச்சாரப்போக்குகளோடு நெருங்கிய தொடர்புடையதாகவே இருக்கிறது. குறிப்பிட்டுச்சொன்னால், தலித் கண்ணோட்டம், அமைப்பியல் ரீதியிலான 'நான் மற்றும் நீ' என்ற இருண்மை எதிர்வை உடைக்கின்ற செயற்பாடாகவே இருக்கின்றது. மேலும் வாழ்க்கைக்கும் கலைக்கும் இடையிலான இருண்மை எதிர்வைக்கடக்க வாசகன் என்ற நிலையில் தத்தம் வாழ்வோடு இயைந்த நிலையில் பிரதியல் பங்கேற்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் உள்ளது. இதுமட்டுமன்றி அன்றாடவாழ்வின் (கலாச்சார) கொடூரங்களிலிருந்து விலகிய நிலையில் செயல் படுகின்ற படைப்பாளன் தன்னுள் கொண்டிருக்கவேண்டிய குற்றஉணர்வின் தேவையையும் அன்றாடவாழ்வின் யதார்த்தங்களில் மூழ்கடிக்கப்பட்டவாசகன் பிரதியின் பன்முகத்தன்மையை உள்வாங்க முடியாமல் போவதை ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் தலித் கண்ணோட்டம் இருக்கிறது.

தலித்கோட்பாட்டில் பிரதியை வாசிப்பதும், கட்டவிழ்ப்பதும் இடதுசாரி தலித்தியக்கண்ணோட்டத்தலிருந்து நிகழ்கிறது. வாழ்க்கைக்கும் கலைக்கும் இடையிலான இருண்மை எதிர்வைக்கடக்கும் வாசகன் அன்றாடவாழ்வின் கலாச்சாரங்களிலிருந்து விலகிய நிலையிலுள்ள எழுத்தாளன் கொள்ளவேண்டிய குற்றஉணர்வு, வாழ்வின் யதார்த்தங்களில் மூழ்கிய வாசகன் பிரதியின் பன்முகத்தன்மையை உள்வாங்கமுடியாமல் போகிறவை என்கிறவற்றின் அடிப்படையில் தலித்விமர்சனம் அமைகிறது.

வாசக விழிப்புணர்வு, எழுத்தாளனின் அதிகாரம், கல்விப்பரவல், இடதுசாரி/ தலித்கண்ணோட்டம் போன்றவை தலித்தியப்பார்வையின் அடிப்படைகளாகிறது.

தமிழவனின் அமைப்பியலைப் பின்பற்றுபவர்களிடம் எழுத்தாளனின் அதிகாரம், பிரதியில் சொல்லப்படும் அதிகாரம், வாசகன் இருமையைக்கடந்துபோகும் சுதந்திரம்/ செயல் போன்றவற்றுக்கான இடம் ஏதேனும் உண்டா?

மார்க்ஸியத்தை ஏதேச்சாதிகாரம்(Authoritarian) மொத்தத்துவம் (Totalitalitarion) சாராம்சவாதம் என்றுதான் பின்நவீனத்துவவாதிகள் குறிப்பிடுகிறார்கள்.[3] தமிழவனும் இதைத்தான் குறிப்பிடுகிறார். அவரும் மார்க்ஸியத்தை மொத்தத்துவம் சாராம்சவாதம் என்றுதான்குறிப்பிடுகிறார்.[4]
இச்சொல்லாடல்கள் பின்நவீனத்துவத்தின் முக்கியமான கருத்தாக்கங்கள். லியோதார்த்தின் கருத்தாக்கங்கள்.

*வெங்கட்சாமிநாதனை மறுத்திருக்கும் நுஹ்மானின் முழுமைத்துவமும் சாராம்சமும் வெங்கட்சாமிநாதனின் தத்துவங்களே. வானமாமலை, கைலாசபதி இப்படித்தமிழிலக்கிய விமர்சகர்கள் எல்லோருமே சாராம்சத் தத்துவக்காரர்களே ஆவர்.*

அ.மார்க்சும், தமிழவனும் மார்க்ஸித்தை சாராம்சவாதமாக்குவதில், பெருங்கதையாடல் ஆக்குவதில் கருத்தளவில் உடன்படவே செய்கிறார்கள். முதலாளித்துவம், தாராளவாதம், மார்க்ஸியம் பற்றிய லியோத்தாரின் பார்வையை இருவருமே பகிர்ந்துகொள்கிறார்கள்.
வெ.சா. தவிர்த்த நுஹ்மான், ந.வா. கைலாசபதி போன்றோர் மார்க்ஸியவாதிகளென்பது குறிப்பிடத்தக்கது. இதில் ஞானியையும் சேர்த்துக்கொள்ளலாம். அ. மார்க்ஸ் தமிழவன் இருவருமே

யமுனா ராஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்நவீனத்துவவாதிகள்தான். பிற்பாடு எதில்தான் இருவருக்கும் முரண்பாடு?

அ.மா. குழுவினர் மைய எதிர்ப்பாளர்கள் விளிம்புநிலை நோக்குக்கொண்டவர்கள். விடுதலை அரசியலே அவர்கள் நோக்கு. பிரதியில் அதிகாரத்தைக்கட்டுடைப்பது அவர்களின் பிரதானநோக்குகளில் ஒன்று. பிரதியில் பார்ப்பனியம் பெண்ணியம், சமபாலுறவு போன்றவற்றை கட்டுடைத்துச்சொல்வது அவர்களது நோக்கு. இலக்கியத்தின் ஒருமைபற்றி இவர்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. தமிழவன் அமைப்பியலை எப்படிப்புரிந்துகொள்கிறார்?

*'மீண்டும் சொல்கிறேன். எனக்கு இலக்கியத்தில் நம்பிக்கை உண்டு அமைப்பியலின் பெயரில் சிலர் இலக்கிய அழிப்புக்குப் புறப்பட்டிருப்பதை 'வித்தியாசம்' என்ற இதழில் நானும் வேறுநண்பர்களும் சுட்டிக்காட்டிக்கண்டித்திருக்கிறோம். நுஹ்மான் இவற்றைப் படித்திருக்கவேண்டும். நுஹ்மான் வலியுறுத்தும் கருத்தில் எனக்கு உடன்பாடு இருந்தாலும் நானும் அவரும் மாறுபடும் இடம் முக்கியமானது.*

*இலக்கியத்தை ஒரு நவீன அறிவுத்துறையாக அணுகுவதில் அவருக்கு விருப்பமில்லைபோற் தெரிகிறது. எனக்கு உண்டு. அதனை ஒரு சமூக விஞ்ஞானமாக, நவீன கோட்பாடாக ஆக்குவதில் எனக்கு உடன்பாடுண்டு. இன்னுமொரு பெரிய மாறுபாடு, நான் இலக்கியத்தை ஒரு 'முழுமையாக' பார்ப்பதை இப்போது ஏற்பதில்லை. நுஹ்மான் கருதுவது போலன்றி முழுமையில் எனக்கு உடன்பாடில்லாததால் மையம், ஓரம் என்ற கோட்பாட்டினுள்*

**இலக்கியப்படைப்பு சமூகஉறவுகள் பற்றியது ஆகையால் சமூக உறவுகளில் உள்ள அதிகாரத்தை கடந்த / நிகழ்காலத்திற்கேற்ப கண்டுபிடிக்க மறுகட்டமைப்புச்செய்ய நாம் பிரதியில் அதிகாரத்தை தெளிவாகக் காணத்தான் வேண்டியிருக்கிறது.**

*நம்பிக்கையில்லை. எந்த மனிதாய இடையீடுமற்றவிதமாய் குறிகள் கட்டமைக்கும் பிரதியில் ஆசிரியன் ஒரு குறியாக மட்டுமே இருக்கமுடியும். முற்றிலும் உணர்வு புகமுடியாத ஒரு பிராந்தியமாக இலக்கியம் மாற்றப்படுகிறது.*

1. தமிழவனுக்கு தலித்தியம் பேசுகிற விளிம்பு, ஓரம் கோட்பாட்டில் நம்பிக்கையில்லை.

2. மனிதாய இடையீடு அற்ற, முற்றிலும் உணர்வு புகமுடியா பிராந்தியம் இலக்கியம். மனிதனும் (ஆசிரியன்) இங்கு ஒரு குறியீடு மட்டுமே என்பது தமிழவனின் நிலைப்பாடு.

மனித இடையீடு, நடவடிக்கை, மனித உறவுகளுக்கிடையில் அதிகாரம் போன்றன எவற்றிலுமே தமிழவனுக்கு அக்கறையில்லை.

முழுமையாக பார்ப்பனீய மேலாதிக்க சிந்தனைகளை முன்வைத்த ஞானக்கூத்தனின் கூற்றிலிருக்கும் அதிகாரம் பற்றியும் தமிழவனுக்கு இதனாற்றான் அக்கறையில்லாமல் போகிறது.

தமிழவனின் பார்வைக்கு நிறையமுன்னோடிகள் உண்டு. ஏங்கெல்ஸ் இயங்கியலை, சமூகவிஞ்ஞானத்தை இயந்திரமயமாகப்பார்த்திருக்கிறார். இன்றைய உளவியலாளர் லக்கான் உளவியலை விஞ்ஞானமாக்க நினைத்தார். அல்தூஸர் மார்க்ஸியத்தை விஞ்ஞானமாக்க நினைத்தார். இந்த விஞ்ஞானவாதம் (sientism) மனிதநடவடிக்கையால் விளைந்தவைகளை, மனிதனைவிலக்கி அருவமாகப்பார்க்கிறது. மொழி, சிந்தனை கலை இலக்கியம் போன்றவை மனித நடவடிக்கை, மனித இடையீடு போன்றவற்றின் விளைவானது என்பதை முற்றிலும் மறுக்கிறது. சம்பந்தா சம்பந்தமில்லாமல் சமூகவிஞ்ஞானத்துறைக்கு இயற்கைவிஞ்ஞான சூத்திரங்களையும், கணித சூத்திரங்களையும் பாவிப்பதை மோசடி என்கிறார் அலன் ஸாகல். (Alan Sakal)[6]

உயிர்க்கூற்றியல் (genetics) தோன்றியபிறகு சமூகவிஞ்ஞானிகள் தமது துறையின் இருப்பின் நியாயம் குறித்து பயப்படத்துவங்கி உள்ளனர். இயற்கைவிஞ்ஞானமும் ஒரு கட்டமைப்பு constract தான் என அமைப்பியலாளர் சொல்வதால் பயப்படத்துவங்கியுள்ளனர் இயற்கை விஞ்ஞானிகள். இது பரஸ்பரமாக அவரவர்துறையின் இருத்தல் பற்றிய கேள்வியாக எழுந்திருக்கிறது எனும் ஸாகல், பரஸ்பர பயத்திலிருந்துதான் இருதுறை சார்ந்தவர்களும், தீவிரமான அருவசிந்தனைகளில் (abstract) சரணடைகிறார்கள் என்கிறார்.

நிலவுகிற பொருளாதார / அதிகார / கலாச்சாரக்கட்டமைப்புகளில் இத்தகைய சிந்தனையாளர்களால் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டுவரமுடிவதில்லை. அல்தூஸரின் செயல்முடக்கம், இலக்கியம், கல்வித்துறைசார்ந்த ஆய்வுகளிலன்றி தமிழவன் குழுவினர் வேறு பிரதேசங்களில் ஈடுபாடுகாட்டாமலிருக்கிற செயல்முடக்கத்தோடு ஒப்பிடத்தக்கதாகும். தமிழவன் குழுவினரின் அணுகுமுறையில் அதிகாரம் குறித்த அக்கறைகளோ சமூகமாற்றம் குறித்த செயல்திட்டங்களோ துப்பரவாக இடம்பெறுவதில்லை.

மொழியின் மானுடப்பரிமாணத்தையும், மனிதாபிமானப்பார்வையையும் அதிகாரச்செயற்பாட்டையும் முற்றிலும் அருவநிலைக்கு இட்டுச்செல்பவை தமிழவனின் அணுகுமுறைகள்.

தமிழவன் பிரதியில் மொழிக்கு முக்கித்துவம் அளிக்கிறார். பிரதியில் அதிகாரம்பற்றி அவர் அதிகம் அக்கறைப்படுவதில்லை.

அ. மார்க்ஸ் பிரதியில் இலக்கியத்தின் முக்கியத்துவத்தை காண்பதில்லை. சிலவேளை அதைப்பற்றி முற்றிலுமே கவலைப்படுவதில்லை. பிரதியில் செயற்படும் அர்த்தம் தரும் அதிகாரமே அவருக்கு முக்கியம்.[7]

*இலக்கியப்பிரதியில் இரண்டுவிதமான மொழிகள் ஊசலாடுகின்றன. தர்க்கவயமான மொழிகள் (discussive) மொழி, உருவம் சார்ந்த மொழி (figurative) என அவற்றைச்சொல்லலாம். மொழியின் குறியீட்டுத்தன்மையின் விளைவாக தர்க்கவயமான மொழியே முற்றிலும் ஆசிரியரின் கையகப்படாதபோது இன்மையின்மூலம் அர்த்தம்பெறும் உருவம்சார்ந்த மொழி எத்தனை அர்த்தம் கொடுக்கும்!*

இலக்கியப்பிரதியில் தர்க்கவயமானமொழி, இன்மையின்மூலம் ஆர்த்தம்பெறும் உருவம்சார்ந்த மொழி போன்றவற்றைக்காணும் மார்க்ஸ் அம்மொழியினளவில் உறைந்திருக்கும் அதிகாரத்தில் அக்கறை செலுத்துகிறார்.

இப்போது நமக்குச்சில விசயங்கள் தெளிவாகிறது. மார்க்ஸியத்தை சாராம்சவாதம், மொத்தத்துவம், எதேச்சாதிகாரம் எனத்தான் வரையறை செய்கிறார்கள் அ. மார்க்சும், தமிழவனும். ரவிக்குமார் சொல்கிறமாதிரி இவர்கள் 'மார்க்ஸியம் கடந்தவர்கள்'

தமிழவன் இலக்கியப்பிரதியில் அதிகாரம் தவிர்த்த இலக்கியத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் அளிக்கிறார்.

அமைப்பியல் கட்டுடைப்பு போன்றவை பற்றி கருத்துச்சொல்லவந்த நுஃமான் என்ன சொல்கிறார்? [8]

*'இலக்கியப்பாதிப்புகளைச்சாத்தியமாக்கும் உள்ளார்ந்த ஒழுங்குமுறைகளை வெளிக்கொண்டுவருவதே அமைப்பியல் விமர்சனத்தின் குறிக்கோள் என்று பார்த் கருதினார் எனவும் அது உள்ளடக்கம் பற்றிய ஒரு அறிவுத்துறையாக இருக்கக்கூடாது எனவும் கல்லா கூறுகின்றார். ஆயினும் தமிழில் அறிமுகமாகியிருக்கும் அமைப்பியல் விமர்சனம் இலக்கியப்பிரதியின் இலக்கியத்தன்மையைக் கோட்டை விட்டுவிட்டு அதற்குப்பல்வேறு அர்த்தப்பரிமாணங்களை வலிந்து காட்டுவதிலேயே அக்கறை காட்டுகின்றது.*

பிரதியின் உள்ளடக்கம் என்று சொல்வதைவிட நாம் இங்கு 'தர்க்கவயமான மொழி, இன்மையில் அர்த்தம்பெறும் மொழி' என்ற கருத்தாக்கங்களோடு வைத்துப்பார்ப்போம். உள்ளடக்கம் பற்றிய அறிவுத்துறை என்பதை பிரதியின் தர்க்கவயமான செயற்படும் இடம்பற்றிய துறை என்று கொள்ளலாம். அதிகாரம் நேரடியாகச் செயற்படும் இடம் தர்க்கவயமான மொழி செயற்படும் இடம். இன்மையில் விளையும் மொழிசெயற்படும் இடம் பிரக்ஞைபூர்வமற்ற படைப்பாளியின் மொழி செயற்படுமிடமாகிறது. சமூக உறவுகளில் இருக்கும் அதிகாரம் உள்ளடக்கம் / தர்க்கம், / உருவம் இன்மையால் அர்த்தம் பெறும் மொழி என இரண்டிலும் செயற்படுகிறது. இந்த இருவகைமொழி செயற்படும் பிரதேசம் இலக்கியப்பிரதியைப்பொறுத்து இயங்கியல் ரீதியானது. மனிதனுக்குள் உள்ளார்ந்தும் வெளிப்போந்தும் மொழியே படைப்பாக்க கட்டமைப்பு பெறுகிறது. வெளியிலான அதிகாரமும் அவனுக்குள்ளான அதிகாரமும் படைப்பில் இவ்வகையில் செயற்படுகிறது. இலக்கியப்படைப்பு சமூகஉறவுகள் பற்றியது ஆகையால் சமூக உறவுகளில் உள்ள அதிகாரத்தை கடந்த / நிகழ்காலத்திற்கேற்ப கண்டுபிடிக்க மறுகட்டமைப்புச்செய்ய நாம் பிரதியில் அதிகாரத்தை தெளிவாகக் காணத்தான் வேண்டியிருக்கிறது.

இந்தவகையில் இலக்கியத்தன்மையை நிராகரிக்கிற போக்குக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்துதான் நுஃமான் 'வலிந்து கற்பிப்பதில் அக்கறை காட்டும்' வெறுமனே அதிகாரம் சார்ந்து கட்டுடைக்கும்போக்கை முற்றிலும் நிராகரிக்கும் எல்லைக்குப்போகிறார்.

அநேகமாக பிரதியில் அதிகாரம் பற்றிய அக்கறையே அவரிடம் இல்லாதுபோகிறது. சமூகமாற்றத்திலும் இலக்கிய அனுபவத்திலும் நாட்டம்கொண்டுள்ளவர் எத்தகையதொரு நிலைப்பாட்டை மேற்கொள்ளமுடியும்? 'இலக்கியப்பாதிப்புகளைச் சாத்தியமாக்கும் உள்ளார்ந்த ஒழுங்குமுறைகளை வெளிக்கொண்டுவருவது' எவ்வகையில் சாத்தியமாகும்?

இலக்கியம் மனிதனுக்கே அனுபவமாகிறது. இலக்கியப்பாதிப்புகள் செம்மையானமுறையில் மனிதனுக்கே ஏற்படவேண்டும். வாசகன் இலக்கிய நுகர்திறன் பெற சமூகம் ஜனநாயகமயப்படவேண்டும். வாசகன் கோருவதற்கு நிறைய தளங்கள் விரியவேண்டும். அதிகாரகட்டுடைப்பு என்பது இவ்வகையில் இலக்கியப்பிரதியினுள் நிகழ்ந்து இலக்கியப்பிரதியின் பாதிப்புகள் அதிகளவினதாக விரிந்துசெல்லும். இவ்வகையில் 'இலக்கியத்தின் பாதிப்பைச் சாத்தியமாக்கும் ஒழுங்குமுறையும்' அதிகாரக்கட்டுடைப்பும்ஆசிரியன் வாசகன் உறவின் ஜனநாயகபூர்வமான உறவிலேயே சாத்தியம். ஆசிரியனின் ஆதிக்கத்தை Authority நெகிழ்த்துவதன் மூலமே சாத்தியம்.

அ. மார்க்ஸின் அணுகுமுறைகளில் நிறைய 'வலிந்து கற்பிக்கும்' போக்குகள் உள்ளன. ராஜ்கௌதமனின் அணுகுமுறையில் 'இயல்பாகக் கற்பித்துக்கொள்ளலுக்கு எதிரான போக்குகள்' இருக்கின்றன. பு.பி., மௌனி, கு.ரா. குறித்த விமர்சனங்கள் தனிப்பட்ட ரீதியிலான தாக்குதல்கள் எனும் தளத்தில் இயங்குகின்றன. பிரதியைக்கட்டுடைப்பது என்னும் ஆய்வு நடைமுறை பிரச்சாரப்பாணி தனிநபர் உணர்சிகரத்தாக்குதல்களாக முடிந்துவிடுகின்றன. எம். எஸ். எஸ். பாண்டியன், அ. மார்க்ஸ், இரா. வெங்கடாசலபதி போன்றவர்களிடம் எதிரிப்பட்டியல் தயாரிக்கும் மனோபாவம்தான் சிலசமயங்களில் எஞ்சி நிற்கிறது. எம். ஏ. நுஃமானின் பார்வைகள் அவரது இலங்கை சமூக அரசியல் கலாச்சார வாழ்பனுபவங்களில் இருந்துவிடுகிறது. அவரது கலாச்சார வாழ்வில் கைலாசபதி, வெ.சா தமிழவன் போன்றவர்களை அவர் அறிந்திருக்கிறார். சாதியப்போராட்டம் தேசியம், இனம், மதம் போன்றவை குறித்து அவருக்கு நிறைய கருத்துநிலைகள் வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கின்றன.[9]

*ஈழத்துச்சூழலில், குறிப்பாக யாழ்ப்பாணச்சூழலில் வேளாளர்களே ஆதிக்கச்சாதியினராவர். சாதியமைப்புக்கு எதிரான தாழ்த்தப்பட்ட சாதியினரின் போராட்டங்கள் 1950களின் பிற்பகுதியிலிருந்தே இங்கு உக்கிரம் பெற்றுவந்திருப்பினும் அது ஒரு மொத்தமான வேளாள எதிர்ப்புக்கருத்துநிலையாக வளர்ச்சியடையவில்லை. அதற்குக்காரணம் வேளாளர்களையும் முக்கிய அங்கமாகக்கொண்ட இடதுசாரி இயக்கங்கள் சாதி எதிர்ப்புப்போராட்டங்களைத் தலைமைதாங்கி நடத்தியமை எனலாம். தமிழ்நாட்டில் தோன்றுவதற்குமுன்னரே தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய இலக்கிய வெளிப்பாடுகள் ஈழத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தன. எனினும் 'தலித்தியம்' போல ஒரு தனி இலக்கியப்பிரிவாக இல்லாமல் முற்போக்கு இலக்கியத்தின் முக்கிய பகுதியாகவே அவை இங்கு கற்றுக்கொள்ளப்பட்டன. ஆகவேதான் தலித்தியம்போன்ற ஜாதியம் சார்பான குறுங்குழுவாதக்கருத்துநிலைகள் (sectarian ideology) ஒரு கலாச்சாரக்கோட்பாடாக இங்கு காலூன்ற முடியவில்லை.*

தலித்தியம் ஒரு கலாச்சாரக்கோட்பாடாக வளர்ச்சியடைந்ததற்கான தமிழக நியாயத்தை நு.ஃமான் அறிந்துதானிருக்கிறார். தலித்திய நோக்கு இடதுசாரி இயக்கங்களின் நோக்காக தமிழகத்தில் இல்லை. தலித்கோட்பாட்டாளர்கள் இடதுசாரி இயக்கங்களை கடுமையாகத்தாக்கி வருகின்றார்கள். பார்ப்பனிய எதிர்ப்பு தலித் அரசியலாளர்கள் அகில இந்திய அளவில் சந்தர்ப்பவாத அரசியல்கூட்டுக்களையே மேற்கொள்கின்றனர். மாயாவதி பிஜேபி கூட்டு. ராமதாஸ், பிஜேபி, கோபால்சாமி ஜெயலலிதா கூட்டு அத்தகையதுதான். ப. கிருஷ்ணசாமியின் அரசியல் அதிகாரத்துக்கான செயற்பாடுகளும் அதைநோக்கித்தான் செல்கிறது. இலங்கையில் தமிழ்தேசியப்பிரச்சினையில் யாழ்ப்பாணியம், சைவம், முஸ்லிம்மக்கள் வெளியேற்றம் போன்றவையும் தேசிய விடுதலையின் எதிர்காலச்சமூகம்பற்றிய விவாதங்களை எழுப்பியிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுக்கும், கொழும்புவாழ் தமிழ்பெண்களுக்கும் இடையிலான பெண்ணிலைவாதம் தொடர்பான விவாதங்கள் நடக்கிறது. தாராளவாதம், மார்க்ஸீயம் மட்டுமல்ல தேசியமும் பெண்ணிலைவாதமும் கூட இன்று ஆய்வுக்குரியதாகத்தான் இருக்கிறது.

இவைபற்றியெல்லாம் விளங்கிக்கொள்ளமுடியாமல் அ. மார்க்ஸினால் நு.ஃமான் நேர்மையற்றவர் என்று மிகச்சாதாரணமாகச்சொல்லிவிட முடிகிறது.[10] அ. மார்க்ஸின் பிரச்சினைகள் இரண்டு. 1. தன் வாசிப்புத்தான் இறுதியானது 2. தீர்ப்பு வழங்குவதற்கும் தானே உரிமை எடுத்துக்கொள்வார். ஜனநாயகபூர்வமான உரையாடலுக்கு அவரின் பிரதியில் இடமில்லை.

தமிழகத்தில் இரா. வெங்கடாசலபதி அ. மார்க்ஸ் போன்றோரின் அணுகுமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது கட்டுடைப்பில் குறுங்குழுவாதத்தன்மையையும் வன்முறையையும் மிகச்சாதாரணமாகவே இதனால்தான் இனம்காண முடிகிறது. இன்னும் எம். ஏ. நு.ஃ.மானுக்கு முப்பதுவருடத்துக்குமுந்திய மேல்கட்டுமானம்/ அடிக்கட்டுமானம் அரிச்சுவடிகளைச் சொல்லித்தரக்கூட ஆ. இரா. வெங்கடாசலபதி முயன்றுவிடுகிறார்.

எம்.ஏ.நு.ஃ.மானின் பாரதியும் மொழியின் நவீனமயமாக்கமும் நூல் பற்றிச்சொல்லவந்த ஆ. இரா. வெங்கடாசலபதி சொல்கிறார்.[11]

*மொத்தத்தில் தேசிய இயக்கமும் பாரதியும் முன்வைத்த மொழி எளிமையாக்கம் மற்றும் தரப்படுத்துதல் பெரும்பான்மையும் கீழ்வர்க்கத்தினரையும் கீழ்ச்சாதியினரையம் இந்துசமயம் சாராதவர்களையும் விலக்கினவாக இருந்தன என்றே சொல்லவேண்டி இருக்கிறது. மொழியில் நோக்கு என்ற போர்வையில் இதனைக்காணாமல் தப்பித்துக்கொள்ள முடியாது.*

...

*மொத்தத்தில் மொழியின் நவீனமயமாக்கம் பற்றிப்புரிந்துகொள்வதற்கு, மொழியை மேற்கட்டுமானத்தின் ஒருபகுதியாக மட்டுமே காண்பது சமூகமாற்றத்தில் மொழியும் மொழி அடையாளம் ஆற்றும் பங்கையும், பண்பாட்டு அரசியல்மோதல்கள் எப்படி மொழிக்களத்திலும் மொழியினூடாகவும் நிகழ்கின்றன, இதன் விளைவாகவும் மொழிமாற்றமும் வளர்ச்சியும் எப்படி ஏற்படுகின்றன போன்றவற்றைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு உதவாது.*

...

*மொழி என்பது அதிகாரச்செற்பாடான அரசியலோடு நெருங்கிய தொடர்புடையது. இதற்கு பிரதி மட்டுமன்றி, நுஹ்மானும் நானும்கூட விலக்கல்ல.*

சமூக அரசியல் கலாச்சார வாழ்வில் அக்கறையற்ற, மொழியமைப்பை அருவமாக்கி வழிபடுகின்ற பார்வையிலும் நுஹ்மானுக்கு உடன்பாடில்லை.
பின்நவீனத்துவஅரசியல்நிலையை நு.ஃ. மான் அறிந்துதானிருக்கிறார். காலச்சுவட்டிலும் இலங்கையில் வியூகத்திலும் வெளியான அவரது நேர்முகமும் இதைத்தான் தெளிவாகச் சொல்கிறது. வன்முறைபற்றிய விமர்சனம் என்பது இன்று ஸ்டாலினோடும், பொல்போட்டோடும் கலாச்சாரப்புரட்சியோடும் மதத்தோடும் (ஆப்கான்) தேசியத்தோடும் (ருவாண்டா, இலங்கை) இன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. நுஹ்மான் கல்லரோடு நின்றுவிடுகிறார். தமிழவன் 1980களின் அமைப்பியலாளர்களோடு நின்றுவிடுகிறார். அ. மார்க்ஸ் சந்தால் மெ.ஃ.பே பாக்கின் வரை போகிறார். கிராம்ஸ்கி, டெரி ஈகில்டன், கோலின்னிகோஸ் என்று இவர்கள் பயணம் போகவில்லை. பிரெடரிக் ஜேம்சன், அய்ஜஸ் அகமது போன்றவர்கள் இவர்களின் விவாதங்களுக்குள் வருவதேயில்லை.

இன்று பின்நவீனத்துவத்தின் ஆக்கப்பண்புகளான சோசலிச விமர்சனம், பெண்ணிலைவாதம், சமபாலுறவு, தேசீயம், ஜனநாயகம், பன்முகம் போன்றவற்றை மார்க்ஸியர்கள் விமர்சனத்துடன் ஏற்கிறார்கள். Illusions of post modernism என்று எழுதுகிறார் டெரி ஈகில்டன். இதனை சோசலிசத்துடன் இணைக்கவேண்டுமென பரிந்துரைக்கிறார்.

மொழி வெறுமனே அமைப்பு மட்டுமல்ல, அதிகாரக்கட்டமைப்பு மட்டுமல்ல, மொழி ஜனநாயகத்திற்கான கருவியாகவும் இருக்கிறது. மனித நேசிப்புக்கான இடமும் மொழிக்குள் இருக்கிறது.

மொழிபற்றி மார்க்ஸீயவாதிகள் இந்த பின் நவீனத்துவ யுகத்தில் எத்தகைய கருத்துக்கொண்டிருக்கிறார்கள்?[12]

*மொழி, பிரக்ஞையைப்போலவே மனிதனின் இருத்தலில் இருந்து பிரிக்கப்படமுடியாதது. மொழி நிஜவாழ்வின் சிக்கல்களை, பதட்டங்களை, முரண்பாடுகளைக்கொண்டிருக்கிறது. புதிய கருத்துமுதல்வாதம் இவையெவற்றையும் கணக்கிலெடுப்பதில்லை.*
*'அருவமான இலக்கண வகையின அமைப்பாகமட்டுமே' மொழியை அணுகுவதன் மூலமாக பக்தினின்(bakhtin) வார்த்தைகளில் சொல்வதானால் கருத்தியல்ரீதியில் தோயப்பட்ட, முரண்பாடுகளினுள் ஆழ்ந்த பதட்டம் நிறைந்ததாகப் புரிந்துகொள்ளாமல் -கருத்துமுதல்வாதம், மொழி, வாழ்வு வரலாறும் மற்றும் சமூகத்துக்கிடையிலான உறவைக்குழப்பியடித்து விடுகிறது. இப்புதிய கருத்துமுதல்வாதமானது கருத்தியல் பதட்டம், முரண்பாடு, மற்றும் எதிர்ப்புணர்வு போன்றவற்றைப்புரிந்துகொள்ளவேண்டுமெனச்சொல்கிறது, ஆனால் பழைய கருத்துமுதல்வாதத்தை விட ஒருபடி முன்னே சென்று விடுகிறது. மொழியை அருவமாக்கி விடுவதுமட்டுமல்ல, நடைமுறையில் சமூகஅமைப்பைக்கூட ஒரு மொழி அமைப்பாக மாற்றிவிடுகிறது.*

தமிழவனின் அமைப்பியல் மொழிக்கட்மைப்புவழிபாடு அலதூசரின் வாதம்போலவே விவாதத்திற்குரியது. அ. மார்க்ஸின் சகிப்புத்தன்மையற்ற உணர்ச்சிவசமான தட்டையான கட்டவிழ்ப்புவாசிப்பு வன்முறைத்தன்மைகொண்டது. கட்டவிழ்ப்பு மொழியில் / சமூகத்தில் ஜனநாயகத்தன்மை வேண்டியதாக பன்முகத்தன்மையைக்கோருவதாகத்தான் அமையவேண்டும்.

அ. மார்க்ஸின் பங்களிப்புகள் விஷயங்களைத் தமிழுக்கு அறிமுப்படுத்திய கட்டுரைகள் இருக்கிறது. பிரெக்ட் பற்றிய பாக்தின் பற்றிய பின்நவீனத்துவ அரசியல்பற்றிய அவரது கட்டுரைகள் முக்கியமானவை. எத்தனைதான் இருந்தாலும் தமிழவனின் 'ஸ்ரக்சுரலிசம்' புத்தகம் கல்வியூட்டல் என்னும் காரியத்தைச்செய்ததென்னும் அளவில் முக்கியமான ஒரு புத்தகம்தான். படைப்பும் படைப்பாளியும் பற்றிய புத்தகமும் அத்தகையதொன்றுதான். இவைகளை விமர்சனரீதியில் நாம் கற்கவேண்டும்.
60பதுகளில் மேற்கில் முனைப்புப்பெற்ற பின்நவீனத்துவம் அமைப்பியல்மீதான விமர்சனம் 1980களிலேயே மார்க்ஸிய வட்டாரங்களில் துவங்கிவிட்டது. இன்று நிச்சயமாக அணிகள் பிரிந்துவிட்டன. போராடும் இயக்கங்களே நின்றுபிடிக்கின்றன. பிரிட்டிஷ் கம்யூனிஷ்ட் கட்சியினர் அன்றாட மக்கள் பிரச்சினைகளிலிருந்து விலகிவிட்டனர். சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சி மட்டுமே செயற்படுகிறது. அது பெண்ணிலைவாதம், சமபாலுறவு, தேசீயம் போன்ற விவாதங்களில் பங்கெடுக்கிறது. கண்ணைமூடிக்கொண்டு எதையும் ஆதரிப்பதில்லை. தாராளவாத அரசியலின் எல்லைகளை அது புரிந்திருக்கிறது. பின்நவீனத்துவவாதிகள் பேசுகிற பெரும்பான்மையான விஷயங்கள் தனிநபர் விடுதலை/ சுயமரியாதை சார்ந்தவைதான். தாராளவாதக் கருத்தியல்தான். அ.மார்க்ஸ் பேசுகிற வானவில் கூட்டணியின் திட்டங்களும் அதைத்தாண்டிப்போகமுடியாது. ஆகவேதான் அமைப்பியல் கட்டவிழ்ப்பு போன்றவற்றை மட்டும் இங்கே விடுதலைக்கானதாக போராடுவோர் ஏற்பதில்லை.

*நான் சொல்லக்கூடியது இதுதான். பிராமணியம் எதிர்ப்பிராமணியம், தலித்தியம், இந்துத்துவம், சிங்கள பௌத்தம், தமிழ் இனத்தேசியம், இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பனவெல்லாம் குறுங்குழுவாதக்கருத்துநிலைகளே. இவை தீவிரம் பெறும்போது பகுத்தறிவுக்குப் புறம்பான வன்முறைக்கும் அழிவுக்கும் இட்டுச்செல்லும்.*

....

*இந்த நிலையில் எந்த ஒரு குறுங்குழுவாதக்கருத்துநிலைக்குள்ளும் தன்னை விழுத்திக்கொண்டு அதை நியாயப்படுத்தாது அவற்றுக்கு வெளியே நின்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவற்றின் சமூக ஊற்றுமூலத்தையும் உள்ளடக்கத்தையும் வெளிப்படுத்தும் ஆரோக்கியமான சிந்தனைப்போக்குள்ள அறிவுஜீவுகளின் பணிமுக்கியமானது.*

*ஒவ்வோரு குறுங்குழுவாத அல்லது பிரிவினைவாதக்கருத்துநிலைக்கும் அதற்குரிய நியாயப்பாடுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் பிறிதொன்றின் மேலாண்மைக்கு எதிராக உருவாகி இயங்குகின்றன. பண்பாட்டுமேலாண்மைக்கு பொருளாதார சமூகமேலாதிக்கத்தின் வெளிப்பாடு ஆகும். நாம் பண்பாட்டுச்சமத்துவத்திற்காகப்போராட வேண்டும். ஒரு பன்மைத்துவ சமூகத்தில் எல்லாச்சமூகப்பிரிவினர்க்கும் பொருளாதார சமத்துவமும் அதிகாரப்பகிர்வும் இல்லாமல் பண்பாட்டுப்பன்மைத்துவத்தை நிலைநாட்ட முடியாது என்பதனையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வகையில் சமத்துவத்துக்கான போராட்டம் குறுங்குழுவாதக்கருத்துநிலைக்கு எதிரான போராட்டம் ஆகும்.*

*இந்து முஸ்லீம் என்ற பார்வையில் எவ்வளவு கோளாறு உள்ளனவோ, அவ்வளவு கோளாறுகள் பிராமணர், பிராமணர் அல்லாதவர் என்ற பார்வையிலும் உள்ளது. இத்தைகைய பார்வைக்கு எதிரான ஒரு பன்முகத்துவ அணுகுமுறையைப் பிரயோகிப்பது நமக்கு விமோசனம் தரலாம் என்று தோன்றுகிறது.[13]*

ஏகாதிபத்தியம், நவகாலனியம், முதலாளியம் போன்றவற்றை நாம் கட்டாயம் கவனம் கொள்ளவேண்டும். பிராமணியத்தை கருத்தியல்ரீதியில் வரையறை செய்யவேண்டும். பெரியாரிய அம்பேத்கரிய கருத்தியலின் வரையறைகள் முதலாளிய தாராளவாதத்துள் அடங்குபவை. சமபாலுறவு வழிபாடு அறிவுநிலைப்பட்டதல்ல; எந்தவழிபாட்டையும் போலவே அது மாயையே ஆகும்' சமப்பாலுறவாளர்கள் கொலை செய்யமுடியும். பெண்ணிலைவாதிகள் வன்முறையாளர்களாக இருக்கமுடியும். மார்க்ஸீயம் பற்றி எத்தனைவிமர்சனத்துடன் செயற்படுகின்றோமோ அதே விமர்சனத்துடன்தான் தலித்தியமாயினும் சரி, எந்த விடுதலைக்கோட்பாடாயினும் சரி நாம் கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவேண்டும்.

படைப்பாளர்கள் பற்றிய தலித்கோட்பாட்டாளர்களின் விவாதம் அடிக்கடி எனக்கு Farewell my concubine எனும் சீன திரைப்படத்தையும், எஸ். வி. ஆர்., மொழிபெயர்த்த 'வெறிநகரம்' சீனக்கதையையும் (மௌனம், பாரிஸ்/ காலச்சுடு, மறுபிரசுரம்) ஞாபகமூட்டியது. தியானென் மென்சதுக்கம்பற்றியும், கலாச்சாரப்புரட்சி அத்துமீறல்கள் பற்றியும் கேள்வியெழுப்புபவர்கள் இதைப்பற்றிய சுயஉணர்வு கொண்டிருக்கவேண்டும் என்றுதான் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது.

மார்க்சீயம் தொடர்ந்து தனது கருத்தியல் எல்லைகளை விடுதலைநோக்கி உடைத்துக்கொள்கிறது. சுயவிமர்சனத்திலிருந்து மறுபடி புத்தெழுச்சி பெறுகிறது. இதனாலெல்லாம்தான் பின்நவீனத்துவம் தலித்தியம் என புதுப்புது சிந்தனைகளையும் அது எதிர்கொண்டு மறுபடிவரலாற்றில் மறுபிரவேசம் மெற்கொள்கிறது.


குறிப்புகள் :


1. அ.மார்க்ஸ், பின்நவீனத்துவம், எதிர்நவீனத்துவம் / தலித்தியம்/ நிறப்பிரிகை வெளியீடு / ஜனவரி 1995
2. அழகரசன்/ மேற்குறிப்பிட்டநூல்/ ஜனவரி, 1998
3. தலித் பெண்ணியம், அ. மார்க்ஸ், இருள்வெளி, பிரான்ஸ்
4. தமிழவன், காலச்சுவடு, நுஹ்மானுக்கு ஒரு பதில், செப்.96
5. தமிழவன், காலச்சுவடு, நுஹ்மானுக்கு ஒரு பதில், செப்.96
6. Intellectual Impostures. Alansakal, uk 1998
7. அ. மார்க்ஸ் : எம். ஏ. நுஹ்மானின் இலக்கிய அடிப்படைவாதம், நி.பி., இலக்கிய இணைப்பு, நவ 1995
8. பிரதியின்மரணம் : எம். ஏ. நுஹ்மான், காலச்சுவடு, 14ஜுன்1996
9. எம். ஏ. நுஹ்மான் : காலச்சுவடு, செப். 1996
10. அ.மார்க்ஸ், நிறப்பிரிகை, நவ.1995
11. ஆ. இரா.வெங்கடாசலபதி, பாரதியும் மொழியின் நவீனமயமாக்கமும், காலச்சுவடு, மார்ச்1996
12. டேவிட் மெக்னெல்வி, language, history Classe struggle : I defence of History monthly review press 197
13. எம்.ஏ. நுஹ்மான், கருத்துநிலையும், கட்டவிழ்ப்பும், காலச்சுவடு, செப்,1996
14. அ.மார்க்ஸ், மார்க்ஸீயத்தின் பெயரால், விடியல், கோவை, 1994


**திருத்தம் :**


சென்ற இதழ் கட்டுரையின் முதல்பகுதியில் இடம்பெறும் Signifier எனும் ஆங்கிலச்சொல்லுக்கான தமிழ்ப்பதம் குறிப்பான்கள் என்றிருக்கவேண்டும்.

நன்றி பெற்றோம்



**காலச்சுவடு**

இதழ் 23 அக். – டிசம்பர் 98
151, K.P. Street, Nagar Koyil 629 001,



**காலம்**

SELVAM
P.O. Box : 73505
509, St. Clair Ave. W.
TORONTO, M6 C1 CO, Canada



**கவிதாசரண்**
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை 600 019




**புலம்**

இதழ் 6 கார்த்திகை – மார்கழி 98
IBC-Tamil, P.O. Box –1505 LONDON SW8 2ZH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



……………………………

தோலைபேசி மணி ஒலிக்கிறது. ஒருவர் ரிசீவரை எடுக்கிறார். மறுமுனையில் அவரது தம்பி கதைக்கிறார் என்பதை விளங்கிக்கொண்டேன். உரையாடல் நடைபெறுகின்றது.

……………………

இலங்கைக்குப் போறியோ? அப்ப எனக்கு ஒண்டைக் கூட்டிக்கொண்டு வருவாய்தானே?

……………………

எடுப்பிக்கிறதோ? அதொண்டும் வேண்டாம். மொஸ்கோ போலந்துக்குள்ளால வாறதுகள் வேண்டாம். நேரடியா இலங்கையிலயிருந்து வேணும்.

……………………

நீ தனியப் போகாதை. மனிசியையும் கூட்டிக்கொண்டு போ.

……………… )

ஆயிரம் மார்க்குகளை
மணியோடரில் அனுப்பிவிட்டு
இரவில் விழிமூடாமல்
வேலைக்கும் போகாமல்
அத்தானே நீ அங்கு
அவசரத்தில் காத்துள்ளாய்

பத்தாம் திகதியன்று
பதிவுத்திருமணம் பின்
மூன்று நாட்களில்
பெரியகொண்டாட்டம்
காட்டும் அடிச்சாச்சு
கலியாணவீட்டிற்கு
கமரா மன்னுடனும்
கதைச்சு முடிச்சாச்சு
நேற்று நெடுநேரம்
தொலைபேசியில் நீ....

மவளயல ஆடிததரயாதவளும
வேண்டுமென்றாய்
உன் பணத்தில்
நான் மொஸ்கோ வந்திறங்கி
பதின்மூன்று மாசமாச்சு

இருபது மாசமாய்
வாசுகி இங்கு
படாத பாடு படுகிறாள்
கமலாவின் கதையள் பற்றி
கனக்கச் சொல்லியுள்ளன்
எடுப்பம் எடுப்பமென்று
அகலியாவின் அண்ணை
எண்ணூறு டொலர்களைஅனுப்பி
அவளை இன்னமும்
ஏன்தான் எடுக்கவில்லையோ?

ஏஜென்ஸிக்காரன் நேற்று
எனைத்தேடி வந்தான்
விடிய விடியப் பேசு
விரைவில் அனுப்பிறன் என்றான்
பத்தாம் திகதிக்கு
பதினாறு நாள்த்தானே இருக்கு
அதனாற்தான் அன்றிரவை
அவனோடை கழிச்சிட்டன்

உனக்காக நானென்று
உறுதியான பின்பு
அவசரமாய் எழுதுகிறேன்
இம் மடலை இன்று
அத்தானே நான்
உன்னிடத்தில் வந்திடுவேன்
பத்தாம்திகதிக்கு முன்பு


- நிருபா
13.10.97
20.00மணி
[illegible] Berlin [illegible] புகையிரதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கால் குத்தியிருந்து
ஒரு மழை ஒழுகிய இரவில்
அகதியானதைப்பற்றி
கண்கலங்கினாய் உம்மா
பின்னருமென்ன காலையும்
சூரியன் மறைந்து போதலும்
கலங்கிய கண்களுடன்
காத்திருந்தாய் என் உம்மா
அது ஓலைக்குடிசையாய் இருக்க
வசதியாய் இருந்த உனக்கு
அது இழக்கப்பட்டது
முகாம் வாழ்க்கை...
தூக்கணாங்குருவிக்கும்
காக்கையும்கூட வல்லபமாய்
கூடுகட்டி அந்தமுகாமருகில்
வாழ்ந்ததைக்கண்டாய்.
உன் ஈழை வியாதிக்கும்
உப்புக்காற்றுக்கும் இடையில்
இரண்டாவது போராட்டமாரம்பித்தாய்
வழி நெடுக உன் நினைவுகளினூடு
கால் இழைக்க என்னால்
நடக்கமுடிகிறது உம்மா
உன்னால்....
அந்த நிலாவைப்பார்த்துச்
சிரித்தாய்
வடக்கின் புகை மேகங்களுக்கு
மேலால் இன்னும் நிலவாக
இருக்குமா அது?
சிக்கல்பட்டது வாழக்கை.
விதிக்கு நீ ஏசாமலிருப்பதற்காக
உன்னை நேசிக்கத்
தூண்டுகிறது
உம்மா எட்டு வருஷங்கள்
மணல் கோடுகளை கீறுவதும்
அழிப்பதுவுமாய் ஓடி ஓடி
மறைகின்ற வாழ்க்கை
இனி என்னவேண்டும் தாயே.
என் நாடி நிமிர்த்தி நீ சொல்
அதுவே வேண்டும்.
எங்களுக்கும் பரம்பரை பூமி
வேண்டும்
விலகியிரா வரம் வேண்டும்.

**- இளைய அப்துல்லாஹ்**
*8. 10. 1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலக் கனவில் குழலூதும் கண்ணன்

**- தமிழரசன்**

லண்டன் தமிழர் நலன் நலன்புரிச்சங்க வெளியிடான 'இன்னுமொருகாலடி' இதழில் 'தமிழ் தழுவும் உலகும் உலகம் தழுவும் தமிழும்' என்றொரு கட்டுரை வெளிவந்துள்ளது . அதை ஐரோப்பிய புலம்பெயர்ந்தோர் இலக்கியவட்டத்துள் அறியப்பட்டவரான நா.கண்ணன் எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கியம், இந்துசமயம், வரலாறு, அறிவியல், நவீனவிஞ்ஞானம் தமிழ்ப் பாரம்பரியம் சகலதையும் சேர்த்திணைத்து ஒரு புதிய ஆய்வும் பண்டைய தமிழர் வாழ்வியலை அதன் இயல்பை அறிவியலால் சோதிப்பது, அவை மனித குலத்திற்கு படைத்தளித்துள்ளவற்றை வெளிக்கொணர்வது என்று பாவனை காட்டுகின்றார். எனினும் இன்று திரண்டு வளர்ந்து வரும் மனிதனின் சிந்தனைப் படையெடுப்பின் முன்பு, நவீன அறிவியல் சிந்தனைகள் முன்பு தமிழ் இந்து தத்துவப்போக்குகளிற்கு புதிய முகம் படைப்பதும் அவற்றின் அரக்கத்தனமான மானிட விரோதங்களிற்கு பல்துறை அறிவியல் முடிசூட்டி விடுவதுமே இவரின் பிரயத்தனமாகும், இவை வரலாற்றின் புதியதல்ல, உலகெங்கும் இன, சாதி, சமய சண்டைகளும் முரண்பாடுகளும் மூர்க்கம் பெற்றுள்ளவேளையில் நேற்றுவரை மனிதாபிமானிகளாகமுற்போக்காளர்களாக தெரிந்தவர்களெல்லாம், தம்மை பிரகடனம் செய்து கொண்டவர்களெல்லாம் சீலை துணி இல்லாமல், தேசிய மற்றும் மதவாதப் பெருமிதங்களால் தம்மை அலங்கரித்துக் கொள்ளும் கால கட்டத்தில் ஆய்வாளர் கண்ணனும் தன்பங்குக்கு தன் வர்க்கக்கடமையைச்செய்ய பண்டைய தமிழ் இந்துப் பெருமைகள் பூண்டு வலம் வருகின்றார். தமிழ் மக்களின் பழம்பெரும் இலக்கியங்கள்,சமய நூற்கள் இந்திய தத்துவ ஞானம் இவைகளிலுள்ள முன்னேறிய சிந்தனையையும் பழம்பெரும் அறிவியலையும் இலக்கியம் மற்றும் வரலாற்றுப் போக்கிலிருந்து அகழ்ந்தெடுத்து இன்றைய நவீன விஞ்ஞானப்போக்குகளோடும் மனிதவியற் சிந்தனைகளோடும் ஒப்புநோக்கும் முயற்சியாய் இதை அவர் காட்ட முயல்கிறார். ஆனால் இது உண்மையில் வரலாற்றுக்குழப்பமும், சம்பவங்களையும், செய்திகளையும்,மனம் போனபடி தாறுமாறாய் தொகுத்து விளக்குவதும் வலிந்து பண்டைய சமய நூற்கருத்துக்களை இன்றைய அறிவியலோடும் புதிய கண்டுபிடிப்புகளோடும் இணைத்து நிறுவும் முயற்சியாயே காணமுடியும். இப்போ பொதுவாக நிலவிவரும் சமயத்துவ கோட்பாடுகளையும் இனமேன்மைச் சிந்தனைகளையும் இன்றையசீர்திருத்தவாத கோட்பாடுகளுக்கு இசைவாக தகமைக்கும் முயற்சியே இதுவாகும்.

தமிழ் மொழியில் மட்டுமல்ல ஏனைய மொழிகளிலுமுள்ள பழம்பெரும் இலக்கியங்களின் மனிதாபிமானக் கூறுகளை அறிவியல் அம்சங்களை மனிதத் தேடல்களை வளர்த்தெடுப்பதும் கூர்மையானவிமர்சனத்தினூடு படிப்பதும் மிகவும் அவசியமாகும். இன்றைய போர்க்குணங்கொண்ட மனிதாபிமானமும் இடைவிடாத தேடல்கொண்ட அறிவும் கோருவதற்கேற்ப எம்மூதாதையரின் அரும்பெரும் அனுபவச்செல்வங்களை மாபெரும் சிறப்புகளை கருத்து முதல்வாத இருட்டிலிருந்து மீட்டெடுத்து தேசியவாத மதவாத விருப்பு வெறுப்புகளிற்கு அப்பால் உள்வாங்குவது ஒரு போதும் பிற்போக்கு வாதமாகாது. சித்தாந்த மட்டத்தில் அதன் வெளிச்சத்தில் வெறும் புகழ்ச்சி, துதிபாடல், ஊகம், இவைகளிலிருந்து அதை மீட்டெடுத்து மனிதத்திற்குச் சொந்தமாக்கவேண்டும்.

ஆனால் ஆய்வாளராய் தோன்றும் அறிவுசால் கண்ணன் என்ன செய்கிறார்? அவரின் முழுப்பிரயத்தனமும் எதை நோக்கியது?

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று சிவனை சொல்வார்கள் தமிழர்கள். இச்சிவன்தான் தமிழ்ச்சங்கங்களின் தலைவன் என்றும் சொல்வார்கள். தமிழ்ச்சங்கத்தால் ஒரு நூல் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் பலவாதங்கள் செய்ய வேண்டியிருந்தது. அக்காலத்தில் அனல்வாதம், புனல்வாதம் இப்படி,அதாவது தரத்தில் சிறந்த காலத்தால் அழியாத படைப்புகளிற்கே சிவன் தலைமை தாங்கும் சங்கத்தின் முத்திரை கிடைக்கும் என்பது கருத்து'

இங்கு இவர் சமயப்பிரசங்கி ஆகிவிடுகின்றார் முற்றிப்பழுத்த சைவப்பழங்களிற்கும் பொய்மையான தமிழ்ச்சுகத்தில் நீராட விரும்புவர்களிற்கும், ஆய்வுதேடல் கொள்கை கோதாரி ஒன்றும் இல்லாதவர்களுக்கும் இது ஆட்சேபனைக்குரியதாய்ப்படாது. சிலர் மலரையொத்த பெருமனிதர் கண்ணனின் மனம் வாடிவிடுமே என்று வாளா இருக்கவிரும்புவர். எங்களூர் தங்கம்மா, அப்பாக்குட்டி முதல் தமிழ்நாட்டின் வாரியார் வரை விழுந்தெழும்பிய சமயவாதப்போக்குள் சங்கத்தமிழின் துணையோடு ஆய்வாளர் கண்ணன் புகுந்துள்ளமையை நாம் பரிசீலிக்கவேண்டும். முதலில் கண்ணணார் புகழ்ந்தேற்றும் தமிழ்ச்சங்கத்தையும் பின்பு சிவனாரையும் விசாரணைக்கு அழைக்கலாம்.

இறையனார் அகப்பொருளாசிரியரின் களவுரையில் தரப்படும் 'தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்
என மூன்று சங்கம் இரீ இயனார் பாண்டியர்' என்ற செய்தியே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் தென்மதுரை, பாடலிபுரம், மதுரை போன்ற இடங்களில் நிலவின என்பதற்கு ஆதாரமாய்க்கொள்ளப்படுகிறது.

- முதற்சங்கம் - 4440 ஆண்டுகள் 89 மன்னர்களையும் 4449 புலவர்களையும் கொண்டியங்கியது.
- இடைச்சங்கம் - 3700 ஆண்டுகள் 59 மன்னர்களையும் 3700 புலவர்களையும் கொண்டியங்கியது.
- கடைச்சங்கம் - 1852 ஆண்டுகள் 49 மன்னர்களையும் 449 புலவர்களையும் கொண்டியங்கியது.

என்பது போன்ற கருத்துக்களோடு சிவன் தலைச்சங்கத்திற்கு தலைவனாக இருந்தான் என்ற கருத்தும் கி.பி 7ம் நூற்றாண்டளவில் எழுந்த சமயம் சார்ந்த ஐதீகமாகும். இந்த வாதத்தை ஏற்றால் மூன்று தமிழ்ச்சங்கங்களும் சேர்ந்து நிலவிய ஆண்டு 10,000 ஆண்டுகளிற்கும் அதிகம் என்றாகிறது. மனித நாகரீகம் வளர்ச்சி பெற்றே 8,000 ஆண்டு கூட ஆகியிராத நிலையில் எந்த வரலாற்றுணர்வு கொண்டவனும் இதை ஒப்பமாட்டான் ஒருவேளை இந்துசமய மற்றும் கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்ததமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியின் சொந்தக்காரர்கட்கு, தேசிய அரிப்பெடுத்துத் திரிபவர்கட்கு,சொறியச்சொறிய சுகம்தரும் கதகதப்பான உண்மையாய் கனவுலக சீவியங்கட்குப் பொருந்தி வரக்கூடும் ஆனால் வரலாற்று ரீதியிலான ஆய்வுகள் தமிழ் இலக்கியம் தோன்றிய காலப்பகுதியை பின்வருமாறு வகைப்படுத்துகின்றன.

- பழங்காலம்

  சங்க இலக்கியம் : கி.மு .500 முதல் கி.பி 200 வரை.
  அகம்புறம் பற்றிய பாடல்கள்
  நீதி இலக்கியம் : கி.பி. 100 முதல் கி.பி 500 வரை
  திருக்குறள் முதலான நீதிநூல்கள் கார் நாற்பது போன்றவை
  பழையகாப்பியங்கள் : சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொகை.

- இடைக்காலம்

  பக்தி இலக்கியம் : கி.பி 600 முதல் கி.பி 900 வரை
  நாயன்மார்கள் ஆழ்வார் பாடல்கள் முதலியநூல்கள் கலம்பகம்

- காப்பியகாலம் : கி.பி 900 முதல் கி.பி 1200 வரை
  சேக்கிழார், கம்பர், ஓட்டகூத்தர், புகழேந்தி இவற்றோடு, சீவகசிந்தாமணி பெருங்கதை முதலிய சமண பௌத்த நூல்கள், இறையனார் களவியல் முதலிய நூல்கள்

சங்க இலக்கியம் தோன்றிய காலம் அரசு ஒரு நிறுவனமாய் முளைவிட்டு வளர்ந்த வீரயுக காலகட்டமாகும். குலக்குழு, இணைக்குழு அடிப்படையிலான சமூகங்கள் பெண்ணை உதறிவிட்டு ஆணாதிக்க சமுகஅமைப்பை நோக்கி நடந்தகாலகட்டமாகும். ஆனால் மிகவும் பிற்காலத்தில் கி.பி 7ம் நூற்றாண்டுக்காலப் பகுதியில் இந்து, சைவ, வைஷ்ணவ மறுமலர்ச்சியின் காலத்தில் புதிதாக தோன்றிய வளர்ந்துவந்த சமுக பொருளாதார அரசியல் நிலைமைகள் நன்று இறுக்கமாய் நிறுவனமயப்பட்டு வந்த அரசுக்கும் அரசனுக்கும் ஏற்ப ஒத்தமொழியும் சமயமும் தேவைப்பட்டன. விவசாயம் நிலப்பிரபுத்துவம், வர்த்தகம் இவைகள் வளர்ந்து சமுகச் சக்திகள் வர்க்கரீதியிலான பிளவும் பலமும் அதிகரித்து வந்த வேளையில் பலமான அரசை நிறுவ மக்களை வர்க்க பேதங்கட்கு அப்பால் அணிதிரட்ட மதத்தின் அவசியம் உணரப்பட்டது. எனவேதான் பாண்டியரும் பல்லவரும் தம்மிடையே யுத்தம் செய்துகொண்டு இருந்தபோதிலும் பக்தி இயக்கங்களை ஆதரித்தனர். சைவ,வைஷ்ணவ சமயங்கள் அரச ஆதரவிலேயே வளர்ந்த சமயங்களாகும். ஒப்பீட்டு அடிப்படையில் முற்போக்கான கடவுள் மறுப்பு மதங்களாக விளங்கிய பௌத்த சமண சமயங்களை சைவ,வைஷ்ணவ சமயங்கள் மூர்க்கமாய் எதிர்த்து அழிக்க முற்பட்டன. அரசின் துணையோடு இறுதியில் அவற்றை அழித்தன.

சைவசமய மறுமலர்ச்சிக்காலகட்டத்தில் தமிழின் பழைய மரபையும் பழந்தமிழ் இலக்கியங்களையும் சைவ சமயத்தோடு இணைக்கும் முயற்சியில் நாயன்மாரும் மறுபுறம் வைஷ்ணவ சமயத்திற்கு தமிழின் தொன்மையால் உரமூட்ட ஆழ்வார்களும் முயன்றனர். இச்சமயத்தில்தான் சிவன் தமிழ்ச்சங்கத்தலைவன் என்ற ஐதீகம் வரலாற்று வேடம் புனைந்து கொண்டது. எனவே இறையனார் அகப்பொருளாசிரியரின் களவுரையில் வரும் மூன்று சங்கம் பற்றிய கதை கட்டுக்கதையே ஆகும். தலைச்சங்கத்தின் கடவுள்களான திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் குற்றமெறிந்த குமரவேள், ஆகியோரோடு அரசர்களும் கொண்டுவரப்பட்டனர். அரசனை கேள்வி நியாயங்கட்கு அப்பாற்பட்ட பிறவியாய் உயர்த்த செய்யப்பட்ட தந்திரமுமாகும். மதம் அதிகாரத்துக்குப்பணிந்து செல்ல மக்களிற்கு கற்றுக்கொடுத்தது. எல்லா அதிகாரமும் சமூக ஒழுங்கும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதாய் நிரூபிக்க முயன்றது, சைவ,வைஷ்ண மதங்கள் தமிழ்மொழியின் பாரம்பரியத்தையும் செழுமையையும் தமதாக்கிகொண்டு வளரப்போட்டியிட்டன. எனவே சங்க இலக்கியங்களின் காலத்தையும் தொன்மையையும் மிகவும் பின்தள்ளினார்கள். சைவத்தையும் தமிழையும் இணை பிரிக்கமுடியாத ஒன்றாய் சோடனை செய்ய வரலாற்றுப்புனைவுகளில் இறங்கினர். பழந்தமிழ் சங்கம் நிலவின என்பதும் அது பண்டைய மன்னர்களால் ஆதரிக்கப்பட்டிருக்கும் என்பதும் உண்மையே எனினும் சமயவாதிகள் தம்பக்தி இயக்கங்கட்கு அவற்றை பலியிடவிரும்பினர். இலக்கியச்சுவையும் பக்திப்பிரவசமும் கொண்ட பாடல்களை நாயன்மாரும் ஆழ்வார்களும் பாடினர். இச்சந்தர்ப்பத்திலேயே கண்ணன் மொழியும் சிவன் தலைவர் என்ற கடவுளின் தலையீடும் தமிழ்ச்சங்கம் பற்றிய கதைகளும் புகுந்தன. இதை உள்ளபடியே சமயக் கண்ணோட்டத்தில் உள்வாங்கிக்கொண்ட கண்ணன் ஊகங்களால் கோயில்கட்டி தமிழர்களின் கடவுளாக சிவனை நியமிக்கின்றார். அவரது சமயக்கண்ணோட்டம் அவரின் ஆய்வு செய்யும் முனைப்பை அடித்து நொருக்கிவிடுகின்றது. எனவே சமய கற்பனைகளோடு தான் செயற்கையாய் கற்பித்து கொண்டவைகளையும் துணைக்கொண்டு மிக மிகப்பலவீனமாக தமிழ்தழுவும் உலகை தழுவமுயன்று தோல்வியை தழுவுகின்றார்.

இங்கு தமிழ்த்தெய்வம் என்று தலையில் தூக்கிவைத்து கண்ணன் கொண்டாடும் சிவன் வழிபாடுபற்றி ஆய்வது நன்று. தமிழகத்தில் ஆதியில் இறந்தோர் வழிபாடு, ஆவிவழிபாடு, நடுக்கல் வழிபாடு, மரவழிபாடு, விலங்கு வழிபாடு, விலங்கு மனித உருவம் இணைந்த வழிபாடு என்பனவே விளங்கின. குறிஞ்சியின் தொடக்கத்தில், காற்று, கறுப்பு, அணங்கு, கொற்றவை போன்ற பெண் தெய்வங்களும் பின்பு முருகன் என்ற ஆண் தெய்வமும் வீரயுகத்தின் தோற்றத்தோடு தோன்றுகின்றனர். வேல், முருகன் தோற்றத்திற்கு முன்பே தோன்றிவிட்டமை இரும்பு யுகத்தின் அறிவிப்புமாகும். பெண் சமத்துவமும் மதிப்பும்பெற்ற காலம் போய் ஆணாதிக்கசமூகம் வேர்விடத்தொடங்கியது. சங்க இலக்கியத்தில் காட்டப்படும் மழுப்படை உடையான், அழித்தற்கடவுள், கணச்சியோன் என்ற தொடர்களும், கலித்தொகையில் காட்டப்படும். கபாலம் ஏந்தியவன், சாம்பலைப்பூசியவன், என்பவை சிவனையல்ல தமிழர்களின் ஆதித்தெயவமான மாடன் அல்லது சுடலை மாடனைக் குறிக்குமென்று கருதப்படுகின்றது; மாடு என்றால் செல்வம் என்று பொருள்படும் மாடுகளை பண்டைய எகிப்தியர்,கிரேக்கர் போன்று தமிழரும் தெய்வமாக வணங்கினர். மாடுகளைக்கவரவும், கவரப்பட்டவைகளை மீட்கவும், அவற்றைக்காக்கவும் உயிர்நீத்தவர்கட்கு நடுகல் நடப்பட்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. படையல்கள் படைக்கப்பட்டன. பழந்தமிழர்களின் தெய்வமான மாடன் வணக்கம் இன்றும் தமிழ்நாட்டில் கிராமமக்களிடம் உண்டு. ஊகங்கள் சொல்லப்பட்டாலும் கி.பி. 6ம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் சிவவழிபாடு தொடங்கியது. சைவ சமயத்தின் எழுச்சியுடனேயே, சிவனைப்பற்றி இருக்கு வேதத்தில் குறிப்புண்டு. இங்கு சிவன் உருத்திரனின் மறுபெயராலும் கீழ் நிலைக்கடவுளாயுமே குறிப்பிடப்படுகின்றான். புராணகாலத்திலேயே சிவன், விஷ்ணு, பிரம்மா என்று மூன்று தெய்வக்கோட்பாடும் சிவன் தலைமைத் தெய்வமாய் உயர்ந்தமையும் நடைபெற்றன. திராவிடரின் லிங்க வழிபாடு அவனோடு இணைக்கப்பட்டு சிவலிங்க வழிபாடாயிற்று. பழந்தெய்வமான மாடு சிவனுக்கு எருதுவாகனம் ஆயிற்று, பெண் தெய்வங்களான கொற்றவை, காளி, உமா, பார்வதி, சக்தி என்போர் சிவனுக்கு மனைவியர் ஆக்கப்பட்டனர். முருகன் மகனாக்கப்பட்டான். திருமால் விஷ்ணுவாய் பெயர் மாற்றப்பட்டு சிவனுக்கு மைத்துனன் ஆனான், வடநாட்டிலிருந்து வந்தபிள்ளையார் முருகனுக்கு அண்ணனாயும் சிவனுக்கு மகனாயும் ஆனான் (கோ என்ற சொல் ஆநிரை என்று பொருள்படும் அதிலிருந்து கோன், கோவேந்தன் என்பவையும் இறையைப்பெறுபவன் என்ற சொல்லிருந்தே இறைவனும் வந்தனர்)

அடுத்துக்கண்ணன் அனல்வாதம், புனல்வாதம் பற்றிப்பேசுகின்றார். அவற்றில் வெற்றி பெற்ற நூல்கட்கே தமிழ்ச்சங்கத்தில் இடமென்று திருவாய்மலர்ந்தருளுகின்றார், சம்பந்தரால் அனல்வாதம் என்ற பெயரில் நெருப்பிலும் புனல்வாதம் என்ற பெயரில் நீரிலும் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்த தலைசிறந்த பௌத்த சமண நூல்கள், கடவுள் மறுப்பு நூல்கள் அழிக்கப்பட்டகாலத்தையே தமிழ் வளர்ந்த சிறந்த நூல்கள் தோன்றிய காலமாய் கண்ணன் காண்கின்றார். வரலாற்றில் சைவ, வைஷ்ணவ சமயங்களின் தகாத செயல்கள் பற்றி அவர் பேச விரும்பவில்லை அல்லது அறியவில்லை மேலும் கிபி. 7ம் நூற்றாண்டு பக்தி இயக்ககாலத்திய நிகழ்ச்சிகள் கி.மு.வுக்கு முற்பட்டசங்ககால இலக்கியங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு படுத்தப்படும் வரலாற்றுக் குழப்பத்தையும் கவனிக்க அவருக்கு புத்தியை செலவிடமுடியவில்லை. வழிவழி வந்த சமயவழி நின்று ஒழுகும் சிந்தனைகளைக்கையேற்றுவிடுவதால் வரலாற்று முரண்களையும் பொருத்தமின்மையும் அவர் கவனிக்கத்தவறுகின்றார். ஒரு இலக்கியவாதி ஆய்வாளன் என்ற வகையில் எந்தப்பாரபட்சமும் இன்றி நடுநிலையாய் நின்று நோக்க வரலாற்றுண்மைகளை கௌரவிக்க அவரால் இயலாமல் போய்விடுகின்றது. அவரது சைவ வைஷ்ணவ சமய பந்த பாசங்கள் அவரை இயல்பாய் இயங்க விடவில்லை. சமண, பௌத்த சமயங்களை புறச்சமயமாய் நினைக்கும் போக்கும் இந்திய தமிழ் நாட்டு தமிழர்களிடம் மட்டுமல்ல இலங்கைத் தமிழர்களிடமும் உண்டு. கந்தரோடை போன்ற பகுதிகளில் பௌத்த சமய இடிபாட்டுச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது அதை சிங்கள மக்களது பண்பாட்டுமிச்சம், குடியேற்றம் என்று கருதுமளவு போனார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல இலங்கையின் வடபாகத்திலும் தமிழ் பௌத்தர்கள் சைவ சமய ஆதிக்கம் தோன்றும் முன்பு வாழ்ந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். நாயன்மாரினதும் ஆழ்வார்களதும் தமிழில் தன்னைப் பறிகொடுத்து விட்ட கண்ணன் மற்றய சமயபோக்குகளை ஆய முடியாமல் இடறுபடுவது விளங்கிக்கொள்ளக்கூடிதே. திருப்பாணாழ்வாரின் இறை பக்தியை விளங்கிக்கொள்ளாமல் உயர் ஜாதி இந்துக்கள் கொடுமை செய்த போது பிராமணரான தொண்டரடிப்பொடியாழ்வார் குரல் கொடுத்தமை தலித்துகளின் போராட்ட மொழி என்கிறார் ஆய்வாளர் கண்ணன். நாம் இங்கு கண்ணன் விளங்கிக்கொண்ட வழியில் விளங்கிக்கொள்ளாமல் அரசு ஆதரவு பெற்ற இடைத்தரகனாக விளங்கிய பிராமண சமுகமானது தனியே நின்று பௌத்த சமண மதங்களை தோற்கடிக்க முடியாத நிலையில் தமிழ்ச்சமூகத்தின் ஏனைய சமூகப்பிரிவுகளையும் வர்க்கங்களையும் தன் தலைமையை ஏற்கச்செய்யவும் அதனூடு பக்தி இயக்கத்தை சகல மட்ட மக்களிடமும் எடுத்துச்சென்று பௌத்த சமண மதங்களை நிர்மூலம் செய்யும் தந்திரமுமாகும் அந்நிலையிலேயேதான் தொண்டரடிப் பொடியாழ்வார் மட்டுமல்ல அப்பரும் கூட

ஆவுரித்தின்றுழலும் புலையரேனும் கங்கைவார்
சடைக்கன் பாராகில் யாம் கண்டீர் அவர் வணங்கும் கடவுளாரே
என்று பாடவேண்டியுள்ளது.

குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை
நலம் தானிலாத சண்டாளர்கள் சண்டாளர்களாகினும்
வலம் தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு ஆள் என்று உள்
கலந்தார் அடியார் தம் அடியார் எம் அடிகளே.

என நம்மாழ்வாரும் பக்தி இலக்கியம் படைக்க வேண்டிவந்தது. வேடனாகிய கண்ணப்பனும், புலையனாகிய நந்தனும், பிராமணாராகிய சம்பந்தரும், சுந்தரரும், வளர்ந்து வந்த நிலவுடமை அமைப்பின் ஆதிக்கத்திற்கு தொண்டு செய்யும் பொருட்டே ஒன்றிணைய வேண்டிவந்தது. வணிகர்களும் நிலவுடமையாளர்களும் பொருளாதார சமுகப் பலங்களைப் பெற்று வந்த நிலையில் பிராமணிய சமூகமானது விட்டுகொடுப்புகளைப்புகளைச் செய்து இயைந்து போகும் போக்குகளையும் கைக்கொள்ள வேண்டிவந்தது. வேளாள சமூகம் உட்படபிராமணரல்லாத மேல்மட்ட சமூகங்கள் பலம் பெற்று விவசாயத்திலும் வர்த்தகத்திலும் தம்மை நிலைநாட்டியிருந்தன. நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமாங்கே பொசிந்த கதையாய் இந்து சமயம் தமிழ் மொழியின் அரவணைப்போடு வளரவேண்டிய வரலாற்றுத்தேவை எழுந்தபோது மத்தியில் வலுப்பட்ட பலமான நிலவுடமை அரசுகள் தோன்றிய போது சமூகத்தில் சில மேல்மட்டத்திலான மாற்றங்களும் பழையசிந்தனைகளில் தளர்ச்சியும் தோன்றுவது தவிர்க்கமுடியாதாயிருந்தது. அதன் பொருள் சமூக நிர்ப்பந்தங்களையும் மீறி ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமூக அநீதிகளைப் பாடவில்லை என்பதல்ல அவர்களின் நலன்களையும் வர்க்கச்சார்பையும் மீறி அவர்கள் சமூகத்தின் பெரும்பான்மையான நீதிகிடைக்காத மக்களுக்காக குரல்கொடுத்தமையை ஒரு தலித்தின் ஒடுக்கப்படும் மனிதர்களின் குரல்மட்டத்திற்கு உயர்த்தமுடியாது என்பதே பொருளாகும். ஆண்டவனையும் அரசனையும் மட்டுமல்ல அந்தணர்கள் செல்வர்கள் குரலை மட்டுமல்ல அடிமட்ட மனிதனின் அவலக்குரலுக்கு செவிசாய்க்காவிட்டால் அவர்களால் ஒரு புதிய சமூக நிலைமைகளை வேரூன்றச்செய்திருக்கமுடியாது.

சங்கம் தழைத்த காலத்தில் வாழ்ந்த சான்றோருக்கு உலகுதழுவிய பார்வை இருந்தது என்று உதாரணத்திற்காக, யாதும் ஊரே யாவரும் கேளீரையும் கனியன்பூங்குன்றனாரையும் எம்மிடம் கூட்டிவருகின்றார் கண்ணன். இரண்டாயிரம் ஆண்டுகட்கு பிறகு நடக்கப்போகும் தமிழனின் இடப்பெயர்வை மனதில் வைத்து எழுதிய தீர்க்க தரிசனம் பாடலில் தெரிகின்றது. என்று கிண்டர்காடின் வகுப்பு நடத்தி எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றார். நாயினும் கீழான எமக்கெல்லாம்கிட்டாத இப்பேரறிவு பரமசிவனின் சித்தத்தால் கண்ணனுக்கு வாய்த்தது போலும். இலங்கைத்தமிழன் தமிழீழம் கேட்டு பரதேசியாய் இடம்பெயர்ந்ததை ஒரு குடும்பமாய் காண அவா கொண்டு உலகைத் தரிசிக்கப்புறப்பட்டதாய் பொருள் கொள்கின்றார். சங்கத்தமிழர்கள் தம்வாழவை ஐந்துதிணைகளாக வகுத்து ஒவ்வொரு திணைக்கும் உரித்தான மரம்,செடி,பூ எனப்பாகுபடுத்தி ஆய்ந்துள்ளனர் என்ற மட்டத்தில் நிறுத்தியிருப்பாரேயானால் அவரும் தன்பிறவிப்பெரும்பயனை அடைந்திருப்பார். சிற்றறிவினராகிய நாமும் எம்மண்டையைப் போட்டு கசக்கி கசடறக்கற்க வேண்டிவந்திருக்காது. ஆனால் என் செய்குவோம் இவ்வாறு விவாதிக்க வேண்டுமென்பது காடுடைய சுடலைப் பொடி பூசும் சிவபிரானின் திருவுளம் போலும். கண்ணன் சொல்கின்றார் தமிழர்கள் இவ்வாறு ஐந்து திணைகளாக வகுத்துக் கொண்டது இந்த நூற்றாண்டின் சூழலியல் ஆய்வுடன் மிகவும் ஒத்துப்போகின்றது. விரிந்த பார்வையைக் காட்டுகின்றது. உளவியல் ஆய்வுத்திறனைக் காட்டுகின்றது. இதைச் சற்று நோக்குவோம்.

அன்றைய இயற்கையுடன் இணைந்த வாழ்வை உறவை இவர் சூழலியலாய்ப் பார்க்கின்றார். கற்பிக்க முயல்கிறார். அன்றய சங்ககால குறுகிய வளர்ச்சியுறாத உற்பத்தி உறவுகளில் பழங்குலக்குழுச் சமூகங்களின் வாழ்வை விளங்கத் திறனற்ற போது மானுடவியல் மற்றும் வரலாற்று ரீதியில் விடை தேட முடியாத போது அதை தம் சொந்த ஆர்வங்களாலும் கற்பனையாலும் குறைபாடான சிந்தனைகளாலும் நிரப்புகின்றார். இன்றைய வளர்ச்சிபெற்ற மாபெரும் நுகர்வுச்சக்தி கொண்ட மனிதகுலத்தின் சூழலியற் பிரச்சனையை மனதில் இருத்தி வைத்துக்கொண்டு பழந்தமிழரை அதனுள் குந்தவைக்க இடம் தேடியலைகின்றார். அன்றைய எம் தமிழ்மக்களின் சமூக வளர்ச்சித்திரத்தையொத்த சமூக ஞானமும் உளவியல் வளர்ச்சிமட்டமும் நிலவியிருக்கும் என்பதை நாம் எந்த எடுகோளுமின்றியே
விளங்கிக் கொள்ளமுடியும். ஆனால் கண்ணன் நிரூபிக்க முயல்வதுபோல் தமிழ்மக்களுக்கு மட்டுமே இத்தகைய வாழ்வியல் முறைகளை உருவாக்கும் சாத்தியமும் திறமையும் இருந்தது என்பது வரலாற்று நோக்கில் பொருளற்றதாகும் மனிதகுலத்தின் சகல பிரிவினரும் தம் புவியியல் மற்றும் இயற்கைச் சூழலுக்கேற்ப தம்வாழ்வை வகுத்துக் கொண்டனர். அதையே அவர்களது தொடக்ககால இலக்கியங்களும் தொல்சான்றுகளும் காட்டுகின்றன. மனிதகுலம் தனது நீண்ட நெடிய பாதையின் அனுபவங்களாகவே இன்றைய அரசியல், சமுக விஞ்ஞான வளர்ச்சியையும் மானிட மேன்மைக்கான சித்தாந்தங்களையும் அது உருவாக்கிக்கொண்டுள்ளது. அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதசிந்தனையும் வாழ்வியலும் கண்டு கேட்டு அனுபவித்தவையின் தொகுப்பாகும். அதை தயார்நிலையில் தமிழர்கள் திடீரென்று பெற்று இருந்தனர் என்பது பேதமையே.

ஆதி மனிதன் இயற்கையை வழிபட்டான் இந்தியர்கள், தமிழர்கள், ஆல், அரசு, கொன்றை, வில்வம், தாமரை, துளசி, மல்லிகை, முல்லை வேங்கை மரம் செடி கொடிகளையும் ஊர்வனவற்றில் பாம்பு, பல்லி, பறப்பனவற்றில் கருடன், காகம், கிளி, புறா, மயில், அன்னம், சேவல், நாலுகால் விலங்கினங்களில் அணில், ஆடு, ஆமை, எருது,பசு, எருமை, பன்றி, எலி, கரடி, குதிரை, குரங்கு, சிங்கம், புலி, மான், நாய், யானை, ஆகியவற்றையும் வணங்கினார்கள். குலச்சின்னமாய் கொண்டிருந்தார்கள். இடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல், மழை, நெருப்பு, நீர், ஆகாயம், சந்திரன், சூரியன், நட்சத்திரம் இவைகளை வணங்கினார்கள். தெய்வங்களாகினார்கள் என்பதன் பொருள் கட்டுக்கடங்காததாய் தோன்றும் இயற்கையை மனிதன் தன் வயப்படுத்த கற்பனையான மற்றும் நேரடி வழிகளில் முயன்றான் என்பதே. அவன் வாழ்வோடு ஒவ்வொருமணித்துளியும் போராடவேண்டியிருந்தது. உணவுக்காகவும் பாதுகாப்புக்காகவும் போராட வேண்டியிருந்தது. தன்னைச் செலவு செய்ய வேண்டியிருந்தது. எனவே எதிர்காலம் பற்றியகருத்தாக்கங்கள் குறைவாயும் நிகழ்காலத்தின் நடப்பு நிகழ்ச்சிகளிலேயே பெரும்பகுதியாய் தங்கிநின்றான். ஓய்வுநேரம் மிகவும் குறைவாயும் சிந்தனைக்கான பொழுது மட்டுப்பட்டுமே இருந்தது. அத்தகைய மனிதனை அன்றைய ஜீவியை இன்றைய சுற்றாடல் பாதுகாப்பு, இயற்கைப் பாதுகாப்பு, விண்ணியல், மண்ணியல் போன்றவை தொட்டிருக்க இருந்த வாய்ப்புக்கள் மிகவும் குறைவானதே இன்றைய மனிதனின் பிரச்சனைகள் இயற்கையைப்பற்றிய புரிதல்கள் என்பன எம் காலத்தின் தேவையாகும் மனித முன்னேற்றத்தால் கோரப்பட்டவையாகும். எம் முன்னோர்கள் இன்று வளர்ந்துள்ள அறிவியற்துறைகளை அவைகளின் ஆரம்பங்களை அடையாளம் கண்டுடிருக்ககூடும் ஆனால் கண்ணன் நிரூபிக்க ஆசைப்படுவதுபோல் இன்றைய சகலதும் அன்றே அறியப்பட்டு இருந்தன என்ற பழமைவாத மிதப்பு தம்பட்டம் அடிக்கும் தமிழ்த்தேசியவாத பேராசையே அன்றி வேறல்ல துரும்பைத்தூணாக்குவது ஆய்வாளருக்குரிய கோலமல்ல. ஆதிமனிதனின் சமயக்கருத்துக்கள் உருவாகும் முன்பு வாழ்ந்த தாண்டிவந்த கட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

01) மந்திரங்கள் உருவாதல், இயற்கை, ஆவி, பேய், பிசாசு வழிபாடு

02) மனிதனைப்போல் உருவம் படைத்த கடவுளின் தோற்றம், முன்னோர்கள், வீரர்கள் வழிபாடு.

03) சமயங்களின் தோற்றம் பல தெய்வசித்தாந்தங்கள்.

இவைமனித இனத்தின் சகலபிரிவுக்கும் பொருந்தக்கூடியதே. ஒவ்வொரு மக்களுக்கும் வரலாற்று வளர்ச்சிககட்டமும் பொதுவான ஒழுக்கவிதிகளும் உண்டு. எம் முன்னோர்களும் சமூக நியதிகட்டு உட்பட்டே ஒழுகியிருப்பர். காட்டு மிராண்டிக்கால கட்டத்துக்குப்பின்னர் பாலுறவு விதிகள் முதல் நல்லது கெட்டது உண்மை பொய் யாவும் உணரப்பட்டு இறுக்கமான சமூக கட்டுக்கோப்புள்தான் சமூகங்கள் இயங்கின. இத்தகைய தன்மைகள் இன்றி சமூகம் நீடித்திருக்கமுடியாது. மனித குலத்தின் மூத்தஇலக்கியங்கள் யாவும் இதையே புலப்படுத்துகின்றன. புராணங்கள், இதிகாசங்கள், பழங்கதைகள் யாவும் மானுடவியல் அடிப்படையில் வரலாற்றுக்கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ளப்படும்போது இதையே அடையாளம் காட்டுகின்றன. எனவே எம் முன்னோர்களை பிற்காலத்தில் எழுந்த சமயவாதச்சிந்தனைச் சிறையிலிருந்து விடுவித்துப்புரிந்துகொள்வதும் விமர்சனத்தோடு கூடிய ஆய்வு நோக்கோடு கற்பதும் கற்பிக்கவேண்டியதும் அவசியமாகும். தவறின் ஆய்வாளர் கண்ணனைப்போல் உலகின் முதற்குரங்கே தமிழ்க்குரங்கு தான் என்று நிரூபிக்கவெளிக்கிட வேண்டிவரும். ஆண் உறுப்பை லிங்கத்தை வழிபடும் வழக்கம் தமிழர்களிடம் மட்டுமல்ல, மத்தியதரைக் கடற்பகுதி மக்கள், கிரேக்கம், எகிப்து, ரோம், அசிரியா, முற்காலஅமெரிக்கா, ஜேர்மனி, ஸ்லாவேனியா, பிரான்ஸ், போன்ற நாடுகளிலும் நிலவிவந்துள்ளன. ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் கி.பி.12 நூற்றாண்டு வரையிலும் நிலவிவந்துள்ளன நரமாமிசம் உண்பதையும் சகல மக்களினங்களும் தாண்டியே வந்துள்ளனர். என்பது வரலாற்றுச்சங்கதியாகும். அதற்கு தமிழனோ ஆபிரிக்கனோ, ஐரோப்பியனோ விதிவிலக்கல்ல.

கி.பி.1250ல் தமிழ் நாட்டு அம்மன் கோவில்களில் நரபலி கொடுக்கப்பட்டு வந்துள்ளது. கொங்கு நாட்டில் சென்னிமலை, பேரூர், அவிநாசி, கண்ணூர், போன்ற இடங்களிலும் இவை இடம்பெற்றுள்ளன. பழங்காலத்தில் தமிழர்கள் மத்தியில் கள்வேள்வி என்றொரு ஆட்டம் நடைபெற்று வந்துள்ளது. அதில் ஆடவரும் பெண்டிரும் இணைந்து ஆடுவர். ஒரு கணம் இன்னொருகணத்தோடு போரிட்டு வென்ற பின்பு இது நடைபெற்றது போரில் இறந்தவர்களது தலைகளை அடுப்பாக்கி அவர்களது கைகள், கால்கள் விறகாக்கி எரியூட்டி வேகவைத்துச்சாப்பிடும் வழக்கம் செயல்பற்றி சங்க நூலில் பாடலுண்டு இவைமனித மாமிசம் சாப்பிடும் பழக்கத்தின் தொடர்ச்சியேயாகும். இப்பழக்கம் அன்றைய மந்திர நம்பிக்கையுடன் தொடர்புடையதாகும். போரில் இறந்தவரின் உடலைச்சாப்பிட்டால் அவனது பலம் வரும் என்ற நம்பிக்கை இவைபற்றிய சங்கப் பாடல்கள் புறநானூறு, பதிற்றுப்பற்று என்பவற்றில் உண்டு. நாகரீகம் வளர மனிதனைப்பலியிடுவது உண்பது நிறுத்தப்பட்டு விலங்குகள், பறவைகளைப் பலி கொடுத்து உண்ணல் தொடர்ந்தது. இப்போ கோயில்களில் அடிக்கும் தேங்காய் மனிதத்தலையின் குறியீடாகும். தேசிக்காய் மனித இரத்தத்தைச்சுட்டும் பாவனையுமாகும். (தேசிக்காய் வெட்டி குங்குமம் பூசிவிடுவர்) இதை வைத்து கொண்டு தமிழனை இன்று காட்டுமிராண்டி என்று தீர்ப்பெழுத முடியாது. அவை தமிழ் மக்களது தொன்மைகால வாழ்வின் எச்சங்களாகும். இமயத்தில் புலிக்கொடி பொறித்த தமிழனின் பெருமை சொல்லிப்புல்லரித்துப் போயிருக்கும் இன்றைய வீரத்தமிழரின் வாரிசுகட்கு இது துன்பமூட்டக்கூடியதுதான். ஆனால் என் செய்குவோம் வரலாற்றின் உண்மைகள் எந்த புனைவுகளையும் விட வலிமையாகும் மனிதகுல வாழ்வோடு இணைந்து வழிநடப்பவை.

கண்ணன் குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல், பாலை, நிலங்கள் பற்றிப்பேசுகையில் பண்டைத்தமிழ் இலக்கியம் தரும் ஏழுவகையான புறவாழ்க்கையையும் ஏழுவகையான அகவாழ்க்கையையும் பற்றிப்பேசாததையும் புலனடக்கம் காட்டுவதின் காரணம் யாதோ? அதில் ஐந்திணைகள் மட்டுமே சிறப்பெய்தியமைக்கான காரணத்தின் பின்னே ஒரு உண்மை வர்க்க உண்மை மறைந்துகிடக்கின்றது. ஐந்திணைகளும் உயர்வர்ணத்திற்குரியவை. எனவே தான் சங்கத்தமிழன் பற்றி வாயடிக்கும் கருணாநிதி முதல் ஆய்வாளர் கண்ணன் ஈறாக தம் வர்க்கநலன் காக்கும் கற்பு நெறிதவறாமல் ஐந்திணை ஒழுக்கம் பற்றி மட்டுமே பேசுகின்றார்கள்.

> 'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட்கான வான்'

இது அன்றைய இலக்கியங்கள் மேல் சாதியினரைக் கருவாய் கொண்டு இருப்பதை அறிவிக்கின்றன.

> 'பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய
> திணைதொறும் மரீசிய திணைநிலைப் பெயரே'

என்ற பாடல் குலவழியாகவும் தொழில் வழியாகவும் சமூகம் பிரிக்கப்பட்ட செய்தியும்,

> கட்டில் நிணக்கும் இழிசனன் (புறம்)
> துடி எறியும் புலைய
> எறி கோல் கொள்ளும் இழிசன

என்றும் கட்டில் பின்னுபவனும் பறை அடிப்பவர்களும் இழித்துரைக்கப்படுவது பற்றிய செய்திகளை பொற்காலக்கனவில் சீவியம் நடாத்தும் கண்ணனிடம் ஒரு சொட்டும் காணமுடியவில்லை. புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் நிறை புலன் கொண்ட கண்ணன் இவை பற்றிய செய்திகளை அறியவில்லை என்பது நம்பமுடியாததாகும். பழந்தமிழ்ச் சமூகத்தின் அநீதியான அழுக்கு நிறைந்த பகுதிகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு இவர் ஒரு பண்பட்ட உலகப்பார்வையே குறிஞ்சிக்கு கந்தனையும் பாலைக்குக் காளியையும் படைத்தன என்கின்றார். மக்களின் வாழ்வியல் நிலைமைகளே அவர்களின் உயர்வுகளை நிர்ணயிக்கின்றன என்றார் மார்க்ஸ். பாலையில் அதாவது மணல் சார்ந்த பகுதி என்பதால் இயல்பில் ஏனைய ஐந்திணை மக்களைவிட அதிக உழைப்பைக்கொண்டவர்களாகவும் பண்பாட்டு ரீதியில் கரடு முரடானவர்களாகவும் இருந்திருப்பர் என்பது விளங்கக்கூடியதே. எனவே அவர்கள் அத்தகையகுணம் கொண்ட கடவுளான காளியைக் கொண்டிருந்தமை உலகப்பார்வையையோ உளவியலையோ பண்பாடுகளையோ வெளிக்காட்டவில்லை. அது அவர்களது வாழ்வின் இயல்பான வெளியீடு, சமூக உளவியல் தேவையின் படைப்பு, இங்கு கடவுள் எனும் போது சமயம் சார்ந்த சித்தாந்தந்தங்களும் சமயமும் தோன்றிராத நிலையில் ஐந்திணை மக்களின் கடவுளர்களான, மாயோன், சேயோன், வருணன், வேந்தன், யாவரும் அவர்களின் முன்னோர்களாக குழுத்தலைவர்களாக வீரர்களாக இருந்திருப்பர், அது அன்றைய சமூகத்தின் தேவை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு இவைகளின் அடிப்படையிலும் எழுந்தவையேயன்றிக் கண்ணன் சித்தரிக்க முயல்வது போலன்று நன்னெறியும் மனிதகுலத்தின் பொதுவான நலங்கள் பற்றிய அடிப்படைச் சிந்தனையையும் சிறு குழுக்களாகவும் குலங்களாகவும் பிளவுபட்டு இடைவிடாமல் தம்மிடையே யுத்தம் செய்து வந்த மக்களிடம் தோன்றியிருக்க முடியும் என்பது கண்ணனின் கற்பனையே வேறெதுவும் அல்ல. தமிழனைப் பரந்தவனாய் உலக மனிதனாய் காட்ட கண்ணன் இலக்கியத்தில் மணல் வீடுகட்டி விளையாடுகின்றார். எம்மையும் கூடி விளயாட வருந்தி அழைக்கின்றார்.



சங்ககால மக்கள் இயற்கையை, காதலை, தொழிலை, வாழ்வைப்பாடினர். விலங்குகள், பறவைகள், மனிதர்கள், புராதானநம்பிக்கைகள் பாடுபொருளாயின. நிலத்துக்கு நிலம் இயற்கையமைப்பும் தொழிலும், சமுகச்செல்வமும் பழக்கவழக்கங்களும் மாறுபட்டு இருந்தமையால் அவர்களின் இலக்கியமும் அவ்வாறே மாறுபாட்டையும் சிறப்பையும் தனித்துவத்தையும் காட்டி நின்றன. இதைக்கண்ணன் உலகம் கண்டு கேட்டிராத புதுமை தமிழன் செய்த புண்ணியம் என்று தலையில் ஏற்றிவைத்து கொண்டாடவும் தில்லை திருநடராசனை ஒத்த களி நடம் புரியவும் விரும்புகின்றார். சங்கம்தான் இலக்கியத்தின் தொடக்கமாயிருந்தது என்கின்றார் கண்ணன். வாய்மொழி இலக்கியமாய் மக்களால் காலம் காலமாய் பாடப்பட்டவைதான் முதலில் தொகுக்கப் பட்டிருக்கவேண்டும் அத்தோடு புலவர்களும் பாடினர் என்பதில் சந்தேகமில்லை. உலக புகழ்பெற்ற கிரீசின் புராதன கவிஞர் ஹோமர் இயற்றியதாய் சொல்லப்பட்டு வந்த இலிக, ஒடிசு, போன்ற காவியங்கள் மக்களின் வாய்மொழி இலக்கியமாய் நிலவி வந்ததையே ஹோமர் தொகுத்துள்ளார் என்று ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். இவை சங்ககால இலைக்கியம், தொல்காப்பியம் போன்றவைக்கும் பொருந்தக்கூடும். பண்டைய தமிழ்மன்னர்கள் தமிழ்ப்புலவர்களை ஆதரித்துள்ளனர். அவர்கள் அரசன் அவன் நீதி நெறிதவறாமை, அறம் போன்றவற்றை பிரச்சாரம் செய்த போது மக்கள் இலக்கியங்கள் அவர்களின் வாழ்வியயலைப்பாடின. அவையே சகலதையும் விடத்தொன்மையானவை என்பதும் அவற்றில் பல சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன என்றும் நம்பலாம்.

திருக்குறள் பற்றி கண்ணன் இத்தகைய நூல் தலை சிறந்த இலக்கியம் உலகில் உண்டா? என்று இறும்பூதெய்துகிறார். திருக்குறள் அற்புதமான படைப்புத்தான் சந்தேகமில்லை. திருக்குறள் ஏன் தோன்ற வேண்டிவந்தது. அன்பையும், அறத்தையும், இல் வழ்க்கை உயர்வையும் அது ஏன் போதிக்க வேண்டிவந்தது? சமூகத்தின் இழிநிலையும் பண்பாட்டு சமூக நெருக்கடிகளுமே இதை உருவாக்கும் தேவையை ஏற்படுத்தியிருக்கும். காரணகாரியமின்றி எதுவும் உருவாவதில்லை படைக்கப்படுவதில்லை. அதற்கான தேவை அல்லது கோரல் இன்றி அது உருவாகியிருக்க முடியாது. தமிழனின் தலைசிறந்த அறிவுகாரணமாய் அது பிறக்கவில்லை மாறாய் கொலையும், தீமையும்,ஒழுக்கக்கேடும்,வறுமையும் பெருகிய நிலையிலேயே அது பிறந்திருக்கும். திருக்குறள் உயரிய சமூகம் பற்றிய கருத்துமதல்லாத கனவைப்படைத்தது யதார்த்தத்தை அது மாற்றியிருக்காது என்பதை நாம் உணரமுடியும்.

திருக்குறள் பற்றிப்பேசிய கண்ணன் மின்னல் வேகம் மனோவேகத்தில் வரலாற்றுக்கட்டங்களை தாண்டி சிந்து நாகரீகத்தில் வந்து கால் பரப்புகின்றார். அதை தமிழ் நாகரீகம் என்று கொண்டாடுகின்றார். சிந்துவெளிநாகரீகம் திராவிட நாகரீகம் என்று ஐயம் திரிபுற நிரூபிக்கப்படாத நிலையில் அதன் எழுத்துக்கள் இன்னமும் வாசிக்கப்படாத நிலையில் வரலாற்றுப்பார்வையுடன் தொடர்பற்ற தமிழ்க்கற்பனைகளில் சுகம் காணுகின்றார். சிந்துவெளி நாகரீக கட்ட ஓட்டு முத்திரைகள் ஈராக் நதிக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டதை வியந்து போற்றுகின்றார். சிந்து நாகரீகம் சுமேரிய நாகரீகத்துடன தொடர்பு கொண்டு வர்த்தக கலாச்சார உறவுகளைக் கொண்டிருந்தது என்பதும் உலகின் பழைய நாகரீகங்களில் ஒன்றாக அது விளங்கியதும் என்பதும் உண்மையே. அவர்கள் எருது, புலி, நெருப்பு, நீர், மரவணக்கங்களையும் உருவவழிபாட்டின் ஆரம்பங்களினையும் கொண்டுள்ளனர். செம்பு, வெண்கலத்தின் பயன்பாட்டினையும் அறிந்திருந்தனர். இரும்பை அறியவில்லை. தென்னிந்திய மக்கள் கற்காலத்திலிருந்து நேரே இரும்பு காலத்திற்கு வந்துள்ளனர். செம்பு, வெண்கல காலங்களை அவர்கள் கொண்டிருக்கவில்லை. எனவே இவர்களிடையே தொடர்பு நிலவியிருக்கும் என்பது சாத்தியமற்றது. சிந்து நாகரீகத்தை ஆய்ந்த புதை பொருளாய்வாளர்கள், பணக்காரர்களும், வர்த்தகர்களும் பெரியவீடுகளிலும், ஏழைகள் குடிசைகளிலும் வாழ்ந்துள்ளதை நிரூபித்துள்ளனர். புதைகுழிகள் கூட செல்வன், எளியவன் வேறுபாட்டை அங்கு கொண்டுள்ளன. எனவே சிந்து நாகரிகத்தின் செத்துப்போன செல்வர்களின் நாகரீகம் பற்றி மட்டுமே கண்ணன் பேசுவதைக் கவனிக்கமுடியும். எனவே வரலாற்றில் ஆதிக்கம் செலுத்திய வர்க்கங்களின் உயர்குடிகளின் நாகரீகத்தை மட்டுமே இவர் பேசுகின்றார். தமிழுணர்ச்சி வேகத்தில் வரலாற்றின் ஓரங்களில் அநாதரவாய்கிடக்கும் ஏழை மனிதர் பற்றி கவனமெடுக்க கண்ணனின் பேரறிவு இடம் தந்திராது. வேதங்களில் இருக்கும் சிந்துவெளி எழுத்துக்களும் ஆதித்திராவிடமொழியாய் இருக்கலாமென்று ஊகங்களையும் துணையாகக்கொண்டே தம் சொந்தவிருப்பங்கட்கு ஏற்பவே சிந்து வெளி நாகரீகம் பற்றிய புனைவுகள் இடம் பெறுகின்றன. உண்மையான வரலாற்றின் அடிப்படையில் பொய்மைகளிலும், மயக்கங்களிலும் மூழ்காத பார்வையே எமக்கு வேண்டும் எழுத்துக்கள் வாசிக்கப்பட்ட பின்னர் மட்டுமே பல வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டுகளைத் துலக்க முடியும். தமிழன் பெருமையை சிந்து நாகரீகத்தில் பொறிக்க ஆசைப்படும் பொறுமையற்ற அவசரக்குடுக்கைகள் தமிழர்கள் மத்தியில் பெருந்தொகையுண்டு.

சிந்து நாகரீகத்தை தமிழ் நாகரீகம் என்று நிறுவும் தமிழ்ப்பணியை முடித்துக்கொண்டு வரலாற்றுப்பாதையில் தாறுமாறப் பிரயாணம் செய்து ஆதி எதியோப்பியரிடம் கிட்டத்தட்ட ஹோமோ சாப்பியன்களிடம்(Homosapiens) அவர்கட்கு அருகாமைக்கு வந்து சேர்கின்றார். கண்ணன், எத்தியோப்பியர்கள் சிறந்த கப்பலோட்டும் திறன் கொண்டவர்களாகையால் அரபிக்கடலைக்கடந்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வந்திருக்கலாமென்கிறார். வரலாற்றின் இருட்டான அறியாக்காலங்களை கற்பனையாய் உயிருட்டி ஊகங்களால் அழகுபடுத்துகின்றார்.

உண்மையில் திராவிடர்கள் மத்திய ஆசியப்பகுதிகள் அல்லது சுமேரியர்கள், எகிப்தியர்கள்,ஈரானியர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வரும் முன்னரே இந்தியாவிலும் அதன் அயல் நாடுகளிலும் வாழ்ந்த புராதன மக்கள் அல்லது வேடர்கள் நீக்ரிடோ, புரோடோ, மற்றும் ஒஸ்ரலோயிட் ஆகியோராகும். இலங்கையில் ஒஸ்ரலோயிட் வேடர் வகையைச்சேர்ந்த புராதனமக்கள் பரவியிருந்தமை நிருபிக்கப்பட்டுள்ளது.சிங்கள மொழியில் தற்போதும் வழக்கத்திலுள்ள அலியா, ஓயா, கொட்டியா, போல், தம்பிலி போன்ற சொற்கள் அம்மக்களின் மொழிக்குரியவையே அதே பொல் தமிழ் மொழியிலும் அம் மொழியின் எச்சங்கள் உள்ளன. மீசை, வீசை போன்றசொற்கள் அம்மக்களின் ஆஸ்டிரிக் மொழிக்குரியவை அது இன்னமும் உரியமுறையில் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. கண்ணன் பேசும் ஆதி எதியோப்பிய மனிதன் முதல் ஆபிரிக்கப்பகுதிகளே முதன்முதல் மனித இனம் கருக்கொண்ட பகுதிகளாகும். அங்கிருந்துதான் எம்மனித இனத்தின் மூதாதையர் நெருப்புக்கண்டு பிடிக்கப்பட்டபின்னர் அண்ணளவாக ஒருமில்லியன் வருடம் முன்பாக மற்றய கண்டங்களுக்குப் பரவத்தொடங்கினர். பல்லாயிரமாண்டுகளாக மனிதகுலம் தாண்டிவந்த நிழ்வுகளை வரலாற்று முன்னேற்றத்தை வரலாற்றில் முந்தநாள் முளைவிட்ட தமிழ் மக்களின் பண்பாட்டோடு பொருத்த முயற்சிக்கின்றார். ஆதிமனிதனின் செழிப்பான சிந்தனையிலிருந்து உலகப் பார்வைகொண்ட தமிழன் பிறந்து வந்துள்ளான். மனித இனம் சேகரித்துவந்துள்ள சிறப்பான உயர்பண்புகள் தமிழன் ஊடாகத்தான் பாதுகாக்கப் படுகின்றது என்பதையொத்த கருத்தாடல்கள் ஒரு இனமேலாண்மைக் கோட்பாடே அறிவியற்கண்ணை குருடாக்கும் தேசியவாதமே அனைத்தையும் தமிழ்ச்சாதிக்கு மட்டுமே உரித்தாகும் மிகையுணர்வு இவரது எழுத்து முழுமையையும் ஆக்கிரமித்துள்ளது. எத்தியோப்பியரும் எகிப்தியரும் கப்பல் கட்டிய கடலோடிய காலங்களை கொஞ்சமாவது வரலாற்று வெளிச்சத்தில் பரிசீலித்திருக்கலாம் எங்கும் தமிழ் எதிலும் தமிழ்ப்பண்பாடு தடக்கி விழுந்த இடமெல்லாம் தமிழின் தடயம் இப்படியான போக்குள்ளவர்களால் ஒருபோதும் சரியான நேர்மையான வரலாற்றுப் பார்வையை பெறமுடியாது தேசியவாத பெருமிதங்களில் கண்ணிழந்து போனவர்களின் தொகை சிறிதல்ல.

தமிழ் மொழியியல் ஆய்வுகள் தமிழ் மொழிக்கு துருக்கிய, பிராஸீ, பின்லாந்து மொழிகளோடு தொடர்புள்ளது என்று முதல்முறையாக சற்று ஆய்வு நோக்கைக்காட்டுகின்றார். எனவே நாமும் அவரோடு இணைந்து நடக்கலாம். கொஞ்சம் அவரின் கிருபையால் திராவிட மொழிகளோடு தொடர்புள்ள மொழிகளைத்தேடலாம்

கோலமி ***(Kolami)***, பார்ஜி ***(pargi)***, நாய்கி (Naiki), கோந்தி (Gondi), கூ(Ku), குவி(Kuvi),

கோண்டா(Konda), மால்டா(Malda), ஓரோவின் (Oroan), கட்பா(Gadba), குருக் (Khurukh), பிராகூய் (Brahui) போன்ற மொழிகளோடு தமிழ், திராவிடமொழிகள் தொடர்புடையவை. இன்னமும் தமிழப்பெருமை கொண்டாட ஆசைப்பட்டால் பழைய ஈப்ரு மொழியில் தோகை என்ற தமிழ்ச்சொல் தொகை, துகி எனவும் அகில் என்பது அகலத் என மருவியும் காணப்படுகிறது. Sandal wood (சந்தனக்கட்டை) rice (அரிசி) Ginger (இஞ்சி) Peper (பிப்பிலி) போன்ற தமிழ்ச்சொற்கள் பழைய கிரேக்க மொழியூடாக ஆங்கிலத்தை வந்தடைந்துள்ளன. தாய்லாந்து மொழியில் தமிழ்த் தேவாரம் உண்டு. இன்றும் அரச சம்பிரதாயங்களில் கோவில்களில் பாடப்படுகிறது. இந்தோசீன நாடுகளில் தமிழ்ச்சொற்களுண்டு. மலாய் மொழியில், மச்சான், மாப்பிளை, பூங்கா போன்ற தமிழ்ச்சொற்கள் உண்டு.

திபேத்திய மொழியில் தமிழின் சிறப்பெழுத்தான 'ழ' உண்டு. இலங்கை தமிழராகிய நாம் நெஞ்சை நிமிர்த்தி தமிழ் மொழியின் காவலர்கள் நாமே என்று காட்டவிரும்பினால், புறநாநூற்றில் வரும் நொதுமலாளர் என்ற தமிழ் நாட்டில் தற்போது வழக்கற்ற தமிழ் பண்டிதர்கள் மட்டுமே அறிந்த சொல்லை சாதாரண பேச்சு வழக்கில் கொண்டவர்கள் யாம் யாம் யாமே. ஐது, அலை, மகளே உட்பட ஏராளமான பழந்தமிழ்ச்சொற்களை அன்றாடம் பாவிக்கும் பெருமைமிகு தமிழ்நாத்தாக்கள் நாம் நாம் நாமே. தமிழ் மொழி உலகில் இன்று பேசப்படும் பிரதான இருபது மொழிகளில் ஒன்று. இன்று இந்தியாவில் வழக்கிலுள்ள மொழிகளில் தொன்மையானது என்ற வரலாற்று உண்மைகளை ஏற்பது 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்று தலையால் தெறிப்பதற்கும் மற்றைய இனங்களைவிட நாம் மேலானவர்கள், உயர்ந்தவர்கள், வழிகாட்டிகள் என்று பாடிப்பரவசமடைவதற்குமல்ல தமிழ் மொழி ஏனைய உலகின் மொழிகளைப் போல் மற்றய மொழிகளின் செழுமையும் சிறப்பையும் உள்வாங்கித்தான் வளர்ந்தது. திராவிடர்களின் தொடக்ககால அண்டைமொழிகளான முண்டாமொழிகளிடமிருந்து தமிழ் மொழியானது தவளை, இளநீர், போன்ற சொற்களோடு எதிரொலிச்சொற்களான சாப்பாடு > கீப்பாடு, பணம் > கிணம், வீடு > கீடு, போன்றவற்றையும் கடன் வாங்கியுள்ளது. மரத்திய மொழியிலிருந்து, சேமியா, கிச்சடி, கசாயம், ஜாடி, குண்டான், வில்லங்கம், அபாண்டம், சலவை, கொட்டு, தடவை, இவற்றையும் சீனமொழியிலிருந்து பீங்கான், கிரேக்க மொழியிலிருந்து. மத்திகை (சவுக்கு) சுருங்கை (தரைக்குள் செல்லும் வழி) கன்னல், .மலாய் மொழியிலிருந்து கிடங்கு, கிட்டங்கி, சவ்வரிசியில் என்ற சவ் என்ற பதத்தையும். அராபிய மொழியூடாக வசூல், இலாகா, சைத்தான், தாக்கிது, மக்கர்,முகாம், லாயக்கு, ரத்து, தணிக்கை, மகசூல், ஜில்லா, பாரிசீக மொழியிலிருந்து சால்வை, சப்பந்தி, லுங்கி ரசீது, ரஸ்தா, திவான், தயார், சுமார், துருக்கிய மொழியிலிருந்து துப்பாக்கி, வான்கோழி, ஆகியவையும் உருது மொழியிலிருந்து ஆயிரம் சொற்கள் வரை தமிழில் உண்டு என்றும் மதிப்பிடப்படுகின்றது. அதில் அக்கப்போர், அக்கிரகாரம், அக்கு, அசல், ஆசாமி, அண்டா, அபினி, அமுல் அலாதி, ராஜினாமா, ராத்தல், இனாம், கச்சேரி, அத்திவாரம், உசார், ரொக்கம், கம்மி, ஊதுவத்தி, கெடுபிடி, சந்தா, சராசரி, போன்றவையும் போர்த்துக்கேய மொழியில்லிருந்து கடதாசி, ஏலம், ஜன்னல், பொத்தான், கமிசு, கழிசான், பேனா, பாண், அலுமாரி, மேசை, கதிரை, சாவி, கோப்பை, பீப்பாய், வராந்தா, கிராதி, புனல், டச் மொழியிலிருந்து கக்கூஸ், துட்டு, தோப்பு பிரஞ்மொழியின், போத்தல், லாந்தர், டாக்குத்தர், ஆஸ்பத்திரி, பீரோவையும் ஆங்கிலத்திலிருந்து பலநூறு சொற்களையும் தமிழ் கையேற்றுள்ளது. கொடுத்துப் பெறுவது மொழிகளின் பொது இயல்பு தனித்து ஒரு மொழியால் தூயமொழியாய் ஒரு போதும் இயங்கமுடியாது. எனவே தமிழர் நாகரீகம் கண்ட நியாயமான பெருமைகளை சிறப்பை

**சமண, பௌத்த சமயங்களை புறச்சமயமாய் நினைக்கும் போக்கும் இந்திய தமிழ் நாட்டு தமிழர்களிடம் மட்டுமல்ல இலங்கைத் தமிழர்களிடமும் உண்டு. கந்தரோடை போன்ற பகுதிகளில் பௌத்த சமய இடிபாட்டுச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது அதை சிங்கள மக்களது பண்பாட்டுமிச்சம், குடியேற்றம் என்று கருதுமளவு போனார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல இலங்கையின் வடபாகத்திலும் தமிழ் பௌத்தர்கள் சைவ சமய ஆதிக்கம் தோன்றும் முன்பு வாழ்ந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதிப் பெருக்கவைக்காமல் மிகைப்படுத்தி வீங்கிச் சாகப்பண்ணாமல் வெளியிடவேண்டும்.

தொண்டரடிப் பொடியாழ்வாரின் குரலை தலித்துக்களின் போர்க்குரலாகவும் ஆண்டாளின் பாடல்களை பெண் விடுதலைச் சிந்தாகவும் இவையே இன்றைய தலித், பெண் விடுதலை உணர்வுகட்கு அடிப்படை எனற போக்கில் கண்ணன் விவாதிக்க முயல்கிறார். சிவன், திருமால், முருகன் போன்றோர் பெருந்தெய்வ வணக்கத்திற்கு உரியவர்களாயும் அதாவது பிராமணர் மற்றும் வேளாளவகுப்புக்களின் தெய்வமாயும் அடித்தள சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களின் தெய்வங்களான சுடலைமாடன், மாடன், பிடாரி, காடன், இருளன், நொண்டி மதுரை வீரன், காளி, மாரி, கூளி, சொக்கி கறுப்பண்ணன் போன்றவை சிறுதெய்வ வழிபாடு என்றும் இழிவுபடுத்தப்பட்டன. ஆனால் மாடன், காளி உட்பட ஆதித்திராவிடர்களின் தெய்வங்கள் இம்மக்களிடையே காணப்படுவது கவனத்துக்குரியவை. கி.பி.16ம் நூற்றாண்டின் பின்பே மாடன் வணக்கம் சைவ சமயத்துடன் இணைந்து கொண்டது. நால் வருணப்பாகுபாடும் சூத்திரனுக்கு ஒரு நீதியும் பிராமணனுக்கு ஒரு நீதியும் பிறப்பால் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வும் தீட்டும் இன்றைய மற்றும் அன்றைய இந்து இந்தியாவின் அன்றாட ஒழுக்கமாய் இருக்கையில் கட்டுரையாளர் இவைபற்றி இந்து சமய வரம்புக்குள் நின்று மட்டும் விளக்கம் தருகின்றார். முற்பிறப்பில் நல்வினை செய்தோர் பிராமணராயும் செல்வராயும் பிறப்பர். தீமை செய்தோர் எளிய சாதியாயும் ஏழையாயும் பிறப்பர் என்ற கர்ம தத்துவ காட்டுமிராண்டித்தனங்களை இன்றைய அறிவியலால் அடித்துத்தகர்க்கும் செயலுக்கு ஏன் கண்ணன் அவர்களால் அறைகூவல் விடமுடியாமல போனது?

'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்று அப்பர் குறிப்பதும்.

'புஷ்டத்திரணையும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும் உண்டற்கு
வேண்டி நீ ஓடித்திரியாதே '

என்று பெரியாழ்வார் பாடுவதும் யாரை நோக்கி? யாரைப்பழித்து? கண்ணன் தொண்டரடிப்பொடியாழ்வாரின் குரலை மட்டுமே காட்டி இவற்றைக்காட்டாமல் விட்டது பரிபூரண கிரகிப்பு இன்மையா? அல்லது வேத, உபநிடத, இதிகாசம், புராணங்களில் நம்பிக்கை வைத்து நால் வருணப்பாகுபாட்டை ஏற்று தர்ம சாத்திரங்கள் வரையறுத்த விதிகளிகன் படி ஒழுகும் நல்ல இந்துவாக ஆய்வாளர் கண்ணன் இருக்க விரும்புகிறாரா? இல்லையெனில் இந்து சமயத்தை எதிர்த்துப் போராடி வீழ்ந்த சாருவாகம், பொருள் முதல்வாத அடிப்படையில் எழுந்த சமயங்களான சாங்கியம், நியாயவைசேடிகம், இவை பற்றி விஞ்ஞானக்கரிசனைகாட்டும் கண்ணன் பேசவில்லை, இறை மறுப்பு இயக்கங்களான பிராமணிய எதிர்ப்பு சாதிய எதிர்ப்பு இவைகளுடன் பிறந்த பௌத்த சமண மதங்கள். பற்றி அதற்குரிய முக்கியத்துவத்தோடு அணுகவில்லை. மாறாய் இந்துசமய பழையமைவாத கோட்பாட்டுக்கு அரண்செய்யும் முடமான சமயக் கருத்துக்களைத் தேடுகின்றார். குறைந்தபட்சம் திருமூலர் முதல் இராமலிங்க அடிகளார் ஈறாக சித்தர்களும் ஞானிகளும் மதம் எனும் குறுகிய எல்லையுள் நின்று ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய மருத்துவ வளர்ச்சி, சாதி எதிர்ப்பு, பிராமண வேத எதிர்ப்பு, குரட்டுப்பழக்கவழக்க எதிர்ப்புபல சமயங்களில் கடவுளர் எதிர்ப்பு, நையாண்டி இவை பற்றியும் வஞ்சனை செய்யாமல் பேசியிருக்க வேண்டும். சித்தர்கள் மாபெரும் சமூகக்கலகக்காரர்களாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக விளங்கினார்கள். என்ற உண்மையை உணரவிடாமல் கண்ணனை தடுத்தாட்கொண்ட சக்தியாதோ? சிவபாக்கியர் பிராமணியத்துக்கு எதிரான பெரும்கலகக்காரராய் மானிட சமயத்தவம் கோரும் மனிதரானார்.

பறைச்சியாவது ஏதடா பனத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ பனத்தி போகம் வேறதோ?
பறைச்சியும் பனத்தி பகுந்துபாரும் உம்முள்ளே
என்றும்

சாதியாவது ஏதடா? சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில் வாளி, காரை,கம்பி,பாடகம்,பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?
-எனவும்

மாதமாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதமற்று நின்றலோ வளர்ந்துரூபம் ஆனது
நாதமேது வேதமேது நாற்குலங்கள் ஏதடா?

மனிதனின் சமூகத்துன்பங்களைப் பாடினார்கள். புனித வேடம் தாங்கிய இந்துமதமனித விரோதங்களை அம்பலப்படுத்தினார்கள். இந்து மதம் அதன் கோட்பாடுகள் மீது நையாண்டியாய் அனுபவ உணர்வில் எளிமையான தமிழ்ப்பாடல்களைப் பாடினார்கள்.

'நூறு கோடி ஆகமங்கள் நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாள் இருந்து ஓதினால் என்ன பயன்? என்று கேட்கும் நெஞ்சுரம்.

'சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே
வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ? என்று கேட்கும் துணிவு ஒரு புரட்சியே. ஆண்டாளின் பாடல்கள் ஒரு கலகக்காரியின் குரல்தான். பெண் தன் பாலியல் தாபங்களை வெளிப்படையாய் பாடுவதென்பது பெண் அடிமைத்தனத்தால் நிரம்பிய இந்து சமயக்கூடாரத்துள் ஒரு புரட்சிதான். சைவ, வைஷ்ணவ, சமய எழுச்சிகள் பிராமணீய சமயக்கோட்பாடுகளை கீழிறக்கியிருந்த சூழலிலேயே ஆண்டாளின் பாடல்கள் இடம் பெறுவதையும் கருத்தில் கொள்வது சிறப்பானதாகும். பௌத்த தத்துவப் போக்குகளான மாத்தியமிகமும் விஞ்ஞான வாதமும் அறிவையும் பிரபஞ்சத்தையும் இறைவன் படைத்தமையை மறுத்தனர் 'கடவுளுக்குத் தொடக்கம் இல்லை என்றால் அவனே நிலவவில்லை' என்றனர். பொருள் முதல்வாத அடிப்படையில் போதனை செய்த சர்வாகாகர்கள் ஆன்மாவையும், பரமான்மாவையும், கடவுளையும் உடலிலிருந்து பிரிந்து தனியே ஆன்மா நிலவமுடியும் என்பதையும் மறுத்தனர். ஆண்டாளின் பெண்விடுதலைக் கருத்து மட்டுமல்ல இந்திய மண் இத்தகைய மனித குலத்தின் முன்னேற்ற விதிகளையும் தொட்டிருக்கின்றது. மதம் மனிதனைக்கட்டி வைத்திருப்பதை மார்க்ஸ் 'மதம் துன்பக்கடலில் உழல்பவர்களது பெருமூச்சு இதயமற்ற உலகத்தின் இதயம் உயிரில்லாப் பௌதீக சூழ்நிலையின் உயிராகும் மக்களுடைய அபினி அது' என்றார். தொண்டரப்பொடியாழ்வர் திருப்பண்ணார்வாரைப் பாதுகாக்கப் போய் கண்ணன் சொல்லும் பாடல் வரிகள் "அவர்கள்தான் புலையர் போலும்" என்பது எங்கே எளிய சாதிக்காரனைப்பெருமைப் படுத்துகின்றது? அதே பிராமணிய அகங்காரம் கொண்ட மேல்வர்க்கப் பழிப்புரைதான் அது. வரலாற்றில் எழும் ஒவ்வொரு புதிய நிலைக்கும் ஏற்ப மதங்கள் தம்மை தகவமைத்துக்கொள்ளும் முயற்சியே அது. எனினும் முன்னேற்றம் என்பது மனித இனத்தின் பொதுவான சமூகவிதி என்பதால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இச்சம்பவங்களும் ஏறுமுகமாகவே இருந்திருக்கும் என்பதை ஒப்பலாம். தனி மனிதர்கள் வரலாற்று வளர்ச்சியின் விருப்பங்கட்கு ஏற்ப நடை போடுபவர்களே அன்றி அவர்கள் தலைச்சன்களாகி விடமுடியாது.

'ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கருத்து' இல் வெளிப்படும் ஊழியை கண்ணன் சிக்கெனப்பிடித்துக்கொள்கிறார். ஊழிக்கு முன்பு வெறும் கருமைதான் இருந்தது அதுவன்றோ கருங்குழிக் கோட்பாட்டை உணர்த்துவது என்று சமயத்தின் தொத்துப்பறி அறிவில் இருந்து கொண்டு ஆராய்ச்சி நடத்துகின்றார். ஊழி என்ற சொல்லை அதுதரும் கருமை என்ற பொருளை கருங்குழிக்கோட்பாடு என்று கண்ணன் கருதும் விஞ்ஞானச்சொல்லுடன் ஒப்பிட முடியுமா? அப்படியாயின் அணுவைத்துளைத்து ஏழ்கடலைப்புகுத்தி என்பதிலுள்ள அணு என்ற இலக்கியச்சொல்லை இன்றைய விஞ்ஞானச்சொல்லான அணுவுடன் ஒப்பிட முடியுமா? நைட்ரஜன் வாயு வழியே அல்பா அணுக்கூறுகளைச்செலுத்தினால் ஹைட்ரஜன் உருவாகிறது. காரணம் நைட்ரஜன் அணுக்கள் உடைபடுவதேயாகும். இந்த அணுக்குண்டுக்கு அடிப்படையான கோட்பாட்டைதான் அன்றே தமிழர்கள் எம் முன்னோர்கள் அணுவைத்துளைப்பது பற்றிப் பேசிவிடடனர் எனலாமா? அணுவைப்பிளக்கமுடியாது என்றுசொன்ன டால்டனைவிடப் பேரறிஞர்கள் என்று கொண்டாடலாமா? 'வலவன் ஏவா வானவூர்தி' என்று (புறம்) சங்க இலக்கியம் பேசுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே இன்றைய விமானத்தை கண்டு பிடித்து விட்டான் என்று தமிழனின் பெருமையை முரசயறைலாமா? அணுவை எலக்ரோன்களை ஆதி மூலத்தை, ஆட்டுகுட்டியை சகலதையும் முதன் முதல் தமிழனே கண்டுபிடித்தவன் என தோள்தட்டலாமா? பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய புரிதல்கள் பாசுரங்களில் வெளிப்படுகின்றது என்கிறார். இறைவன் உலகைப்படைத்தான் என்று சொன்னதை வைத்துக்கொண்டு சொற்சிலம்பம் ஆடுகின்றார். பிரபஞ்சம், விண்வெளி, வானவியல் என்று சகலதையும் நம்மாழ்வாரின் சமயவாத சிந்தனைச் சிறையுள் கொண்டு வந்து நுழைக்கிறார். ஆழ்வார்கட்கு ஒரு இலக்கியவாதிக்குரிய கற்பனையும் இயற்கைபற்றிய தேடலும் ஊகமும் அனுபவங்களும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இன்றைய அறிவியலுக்கு தமிழ், இந்து வட்டங்கட்குள்ளேயே அடிப்படையும் மூலமும் உண்டு என்ற போக்கில் செயற்படுகின்றார். அவற்றை தேடியலைகின்றார் கண்ணன்.

இந்தியர்கட்கு உரியதை உரிமை கோருவதும் உள்ளபடி விளங்கிக்கொள்வதும் அவசியம். கி.பி.476 இல் ஆரியப்பட்டா வானவியலை ஆராய்ந்து பூமி தன்னைத்தானே சுற்றுவதைக் கண்டுபிடித்துள்ளார். கி.பி. 505 இல் பிரம் 'ஸ்ம்கிதா சூரிய சந்திர கிரகணங்களைப்பற்றி அறிவியல் ரீதியில் ஆய்ந்தபோதிலும் கிரகணசமயத்தில் வானத்தில் ராகுவும் கேதுவும் வருகின்றார்கள். அவை விலக பிராமணர்கள் பூசைசெய்து தலை முழுகவேண்டும். என்று இந்து சமயத்தையும் திருப்திப்படுத்தவேண்டி வந்தது. பிரம்மகுப்தர் பூமியின் சுற்றளவை கிட்டத்தட்ட கணக்கிட்டார் இவரே அல்ஜிப்ரா எனும் கணிதவியலையும் கண்டுபிடித்தவராய் கருதப்படுகின்றார் (கி.பி.198) அதே சமயம் தம் வாணிப அனுபவத்தினூடாக தமிழர்கள் பின்னக் கணக்கையும் அறிந்திருந்தனர் $1/320 \times 1/7$ எனும் பின்னத்தையும் இம்மி எனவும் அதில் ஏழில் ஒரு பங்கை அணு எனவும் அதில் பதினொன்றில் ஒரு பங்கை மும்மி என்றும் அதில் ஒன்பதில் ஒரு பங்கை குனம் என்றும் குறித்துக் கணக்கிட்டனர். எனவே எம் முன்னோர்கள் சகல சம்பத்தையும் கரைத்துக் குடித்தவர்கள் என்று பாசாங்குகளில் மூழ்காமல் உள்ளதை உள்ளபடி உரைப்பது கட்டுரையாளர் தமிழ் கூறு நல்லுலகிற்கும் புகலிட இலக்கியத்திற்கும் செய்யும் மெத்தப்பெரிய உபகாரமாகும். நாயன்மாரும் ஆழ்வார்களும் வளர்த்த இயக்கம் இந்தியா முழுமையும் பரவி இன்று அமெரிக்க வீதிகளில் □ரே ராமா □ரே கிருஷ்ணா ஆகிவிட்டதை எண்ணி பக்தி பரவசமடைபவர் இந்தியாவில் இராமன் பெயரால் முஸ்லிம் மக்களின் இரத்தம் உறுஞ்சப்பட்டதையும் சீக்கியரும் ஏனைய சிறுபான்மை மதங்களும் நிர்மூலம் செய்யப்படுவது பற்றியும் கொஞ்சம் தயை கூர்ந்து சிந்தித்திருக்கலாம். பாரதீய ஜனதாவும் ஏனைய இந்துப்பாசிச அமைப்புக்களும் மலைப்பாம்பாய் மக்களை வளைத்து வருவது பற்றி சற்றுச் சமூகப் பொறுப்புணர்வோடு சிந்தித்திருக்கலாம். ஆனால் புத்திர சோகத்தோடு அமெரிக்க ஹரே ராமா ஹரே கிருஷ்ணா பற்றிப் பேசுகின்றார். 1970 களில் அமெரிக்க ஐரோப்பிய இளம் தலை முறை நிலவுடமைப்பண்பாடுகளில் கீழைத்தேய ஆன்மீகங்களில் ஈடுபாடு கொண்டது அவை வரைமுறையற்ற சுதந்திரம் கோரும் பண்பாட்டு மயக்கங்களாயும் சீரழிவாயும் வெளிப்பட்டன. அவர்களை ஹிப்பிகள் என்ற பெயரில் நாம் அறிவோம். தற்போதைய ஹரே ராமா ஹரே கிருஷ்ணா மயக்கங்களும் கூத்தடிப்பும் இயக்கங்களும் இத்தகையவையே. தம் சொந்த சமூகங்களின் ஆக்கினைகளைத் தாங்க முடியாத போது சமூகத்தின் மாற்றம் பற்றிய நுண்ணுணர்வு இல்லாத போது சோர்ந்து துவண்டு கீழைத்தேசத்தின் பழங்கதைகளுள் சரணடைகின்றார்கள். மேற்கத்தைய முதலாளிய சமூகம் மனிதனைப்வெறும் நுகர்வுக்கான அடிமையாக்கிவிட்டது. ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே சிறைப்பட்டு சுயநலமும் பொருளாசையும் பெருகி மனிதப்பார்வை அறுந்து கிடக்கின்றான். அன்பும், மனித நேயமும் அருகிய நிலையில், அத்தகைய நிலையில் கீழைத்தேச மதங்கள் இந்து, பௌத்த மதக் கோட்பாடுகள் கற்பனைச்சித்திரங்கள் கவர்ச்சியூட்டுகின்றன. அவற்றின் சமூக மற்றும் வர்க்க உள்ளடக்கங்களை விளங்க இந்த விடலைகளால் முடிவதில்லை. எதிர்காலம் குறித்து நம்பிக்கையற்ற அரசியல் சூனியமான விரக்தியடைந்தவர்களது தங்குமடமாய் இந்த சமய அமைப்புக்கள் விளங்குகின்றன. சோர்வடைந்த பலவீனர்களான முதலாளிய சமூக நோயாளிகளை இந்துசமயம் தத்தெடுத்துக்கொண்டமை பற்றி பொருத்தமற்ற மகிழ்வில் ஆழ்ந்துவிடுகின்றார் கண்ணன். அதனால்தான் போலும் ஒரு அறிஞன் சொன்னான் மதம் ஒவ்வொரு நாட்டின் தொட்டிலிலும் தத்துவம் அதன் மயானங்களிலும் இருக்கின்றன என்றான். பரவாயில்லை நாம் மயானங்களில் இருந்து தொடங்குவோம். ஏன் எனில் முதலாளியத்தை மயானத்திற்கு கொண்டு வர. எந்தக்கலாச்சாரத்திற்கும் வருவது போல் இருண்டகாலங்கள் தமிழுக்கும் வந்து போயின என்று கண்ணன் சோகத்தை சிந்துகின்றார். பாரசீகரின் துருக்கியரின் படையெடுப்பு பற்றி முறையிடுகின்றார். சுத்தமான இந்துப்பார்வை காட்டுகின்றார் இன்றைய 'அகண்ட பாரதம்' 'இந்து இந்தியா' இவைகட்கு நெருக்கமான சிந்தனை தெரிகிறது. அசோகன் புத்த சமயத்தில் சேருமுன் கொல்லவில்லையா? ராஜராஜசோழன் கொள்ளையிடல், எரியூட்டல், கால்நடைகளைக்கவரல், விளை நிலங்களைப் பாழாக்கல் இவைகளைச் செய்யவில்லையா? கடல்கடந்து இலங்கையிலும் அயல் நாடுகளிலும் செய்த கொடுமைகளை எந்த ஏட்டில் எழுதுவது?

தமிழ் வீரனென்று கொண்டாடும் வீரபாண்டிய கட்டப்பொம்மன் மற்றய பாளயங்களைக்கொள்ளையிடவில்லையா? கொள்ளையிடுவதும் தீயிடுவதும் கொலை செய்வது இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற பேதமின்றி சகல அரசர்களதும் தொழிலாகும். அனைவரும் மக்களை ஒடுக்கியவர்களே. கண்ணன் வரலாற்றிலிருந்து இஸ்லாமியப்படை எடுப்பாளர்களை மட்டும் இருண்ட காலத்தைப்படைத்தவர்களாய் உணர்த்த முயல்வது இந்துக்காச்சலின் விளைவே. திராவிடர்கள், ஆரியர்கள் மங்கோலியர்கள், கிரேக்கர்கள், ஈரானியர்கள் பல்வேறு மத்திய ஆசிய குடியேறுகளின் ஒன்று திரண்ட பண்பாடே இந்தியநாகரீகம் வரலாற்றில் நடந்து முடிந்தமைக்கு சமகால அரசியல் இலாப நட்டக்கணக்குகளின் அடிப்படையில் விடை எழுதாமல் உயர்ந்த மானிட சிந்தனையாலும் அறிவியலாலும் தீர்ப்பு எழுத வேண்டும், சீறாப்புராணம், மஸ்தான் பாடல்கள், செய்க் அபதுல் காதர் நயினார் லெப்பை, பிச்சை இபிராகிம் புலவர் போன்றவர்களின் தமிழ் இலக்கியத்தொண்டை செத்தும் கொடுத்தான் சீதக்காதி வள்ளல் என்று தமிழுலகு போற்றும் சீதக்காதியை கண்ணன் பேசவேண்டும் இஸ்லாமியக்கலாச்சாரம் இல்லையெனில் தாஜ்மகால் இல்லை,இந்தியக்கொடி பறக்கும் டெல்லி செங்கோட்டையையும் இல்லை, ஏன் இந்தியாவும் இல்லை பல்வேறுபட்ட மக்களின் கலாச்சார சிறப்பின் வடிவமே இந்தியா.மனிதன் மகத்தானவன் அபூர்வமான உயிரி,அறிவியலின் தந்தை,இனமத உணர்வுகள் ஏற்படுத்தும் சிந்தனைக் கைதிகளாக நாம் சிறைப்படாமல் உலகமனிதத்தை நோக்கி வளரவேண்டும் எதிர்கால மனிதன் பிரபஞ்சத்தை வெல்ல வல்லவன் அதிசயங்களை படைக்கக்காத்திருப்பவன் கண்ணன் தி.மு.க.வின் திராவிடம் தமிழ், தமிழின உணர்வு,சீர்திருத்தவாத சமயம் சார்ந்த அறிவியல் சிந்தனை இவைகளிலிருந்து பல் வகையான கதம்பக்கூட்டு சாம்பார் சிந்தனைப் போக்குகளை வளரத்தடுக்கமுயல்கிறார் சொல்வார்கள் கொள்வார்கள் இருக்கலாம் எனறு கருத்துக்களை உறுதியாய் தெளிவாய் சொல்லாமல் ஊசலாடுகின்றார், இடம் மாறுகின்றார், தன் கருத்துக்களோடு முரண்பாடுகின்றார். குழப்பமான இந்து, தமிழ், மேற்கத்தைய அறிவியல் இவைகளின் தெளிவற்ற கலவையாயும் தெனபடுகின்றார், இவற்றின் பின்பு திட்டவட்டமான வர்க்க அடிப்படையும் சிந்தனைப் பரப்புமுண்டு கற்றவர்கள் போல் தென்படும் இவர்கள் உண்மையான மனிதக்கல்விக்கும் புரட்சிகர அரசியல் பாரம்பரியங்கட்கும் தம்மை உட்படுத்திக் கொள்ளாவிட்டால் யாவும் ஆற்றில் போட்டு குளத்தில் தேடும் தந்திரமாகவே முடியும் 'அறியாமை என்பது ஒரு பேய் பல துன்பியல் நாடகங்கட்கு அது காரணமாகக்கூடும்' என்றார் மாக்ஸ்.

மனிதனின் தேடலை அவனது பரிபூரண விடுதலையை நோக்கியதாய் வளர்த்தெடுப்பதுவே கற்றதினாலாய பயன் என்றறிக. புகலிட இலக்கியத்திற்கு செய்யும் பெரும் தொண்டென்றறிக.

- பேர்லின் 09.09.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாச்சார அரசியல்

குறிப்பேடு

### அஞ்சலி : நமது பொறுப்பு


அதிர்ச்சியடையவைத்த நீண்டநாட்களுக்கு துக்கம் தருகின்ற நிறைய மரணங்கள் சமீப இரண்டாண்டுகளில் நடந்திருக்கிறது. சில மரணங்கள் தகவல் தொடர்பு சாதனங்களால் நம்மூளையில் ஏற்றப்படுகிறது. பிந்திக்கேட்கநேரும் சிலமரணங்கள் அந்தநிமிச சொந்த இழப்புபோல் நம்மைத்தாக்குகின்றது.



மிகச்சமீபத்தில் இரண்டு மரணங்கள். ஒன்று கோ. கேசவனுடையது. மற்றயது அ. செ. முருகானந்தத்தினுடையது. அ. செ. மு. முன்பொருமுறை பத்திரிகைச்செய்திகளில் மட்டும் இறந்திருந்தார். இப்போது நிஜமாகவே மரணித்துவிட்டார். சிலவிசயங்களை நம்ப மனம் ஒப்பவில்லை. கோ. கேசவனின் இளவயது மரணம் கொடுமையானது. இதேமாதிரி இளவயதில் (53 வயது) பெருவின் கெரில்லா இயக்கத்தலைவர் நெஸ்பர் ஸெர்ப்பா கர்ட்லோனி பெரு ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது அஞ்சலியில் கார்டியன் பத்திரிகை Hostage to peruviam history என்று எழுதியிருந்தது. பிணைக் கைதிகள் பிரச்சினையில் சுட்டுக்கொல்லப்பட்ட வரலாற்றின் பிணைக்கைதி எஸர்ப்பா. ஒருவகையில் அகாலமரணத்தை எய்தும் இடதுசாரிகளும், வறுமையிலும் அதன்விளைவாலான நோயிலும் மரணமுறும்கலைஞர்களும் வரலாற்றினது பிணைக்கைதிகள் மட்டுமல்ல மானுடவாழ்வின் பிணைக்கைதிகளாகவே இருக்கிறார்கள். சதா துன்புறுவது அவர்களுக்கு இன்பமாக இருக்கிறது. அவர்கள் மானுடத்தின் துயரங்களில் அழுந்தியே மடிகிறார்கள். தம்மை ஒருபோதும் துயரங்களிலிருந்து விடுவித்துக்கொள்ள அவர்கள் முயல்வதே இல்லை.

தற்கொலை செய்துகொள்ளமுயன்றார் அகிராகுரொஸாவா. சமீபத்தில் தற்கொலை செய்துகொண்டே தன்னை நிலை நாட்டி மறைந்தார் ஜப்பானிய திரைப்படமேதை இட்டாமி. பத்திரிகைகள் தம்மீது சொன்ன அவதூறுகளை மரணத்தின்மூலமே அவரால் பொய்யாக்கமுடிந்தது. அவரைத்தொடர்ந்து இயற்கை மரணமெய்தினார் குரொஸோவா. எத்தனையோ மேதைகள் நம் கவனத்திற்கு வராமலே இறந்துபோகிறார்கள். மூத்த நக்ஸலைட்போராளி நாகபூசன் பட்நாயக், ஆங்கிலக்கவிஞர் மெட்ஹீக்ஸ், ஜப்பானிய நடிகர் மிப்யூன், அமைப்பியலின் தத்துவ வறுமையை சதா எதிர்த்துப்போராடிய இ. பி. தாம்சன். பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்திற்கெதிராக விளிம்புநிலை மக்களின் வரலாற்றை தனது History workshop Journal மூலம் வைத்த ரஃ. பேல் ஸாமுவேல், ஸ்டாலினியத்தின் கொடுமைக்கெதிராக கணவனின் ஆன்மவிளக்கை அணையாது காப்பாற்றிய புகாரினது துணைவியார் லாரிசா என எல்லோருமே சமீப காலத்தில் மரணமெய்தியவர்கள்தான்.

தேசீயம், ஜாதீயம் இனம்போன்று இன்று அதிகம்பேசப்படுபவைபற்றி அக்கறை செலுத்தியவர் கோ. கேசவன். பின் நவீனத்துவம் பற்றியும் சிந்தித்தார். ஆயினும் இவற்றின் குறுங்குழுவாத நோக்குகளை அவதானிப்பதற்கே அவர்



அவைகளை அணுகிச்சென்று பார்த்தார். அவரை ஆச்சார மார்க்ஸியர் என்பார்கள். ஆம் அதற்கான தேவை இன்று இருக்கிறது. அவர் அழகியல் சோவியத் அழகியலைத் தாண்டிப்போகவில்லைத்தான். ஆனால் மார்க்ஸியஎதிர்ப்பு அழகியலுக்குள் அவர் சரணடையவில்லை.

மேற்கில் ஒருமனிதனாக சிந்தனையாளன் இறக்கும்போது அவனைப்பற்றிய அஞ்சலியாக அவனது முழு அறிவுத்துறைப்பங்களிப்பும் தொகுக்கப்பட்டு அதனது தொடர்விளைவுகள் பற்றிப்பேசுவார்கள். தமிழின் துரதிர்ஷ்டம் மரணஅஞ்சலிகள் வெறும் பெட்டிச்செய்திகளாகிமட்டுமே போய்விடுவதுதான். தர்மு சிவராம் மரணமுற்றபோது, அ.செ.மு. வின் வறுமைபற்றிய செய்தி முதன்முதலாக அறிந்தபோது பத்மநாபஐயரும், மு. புஷ்பராஜனும், அ. ரவியும், நானும், அப்போது லண்டனிலிருந்த மு. பொ. வும் அவ்வப்போது பேசி இந்நடைமுறைகளை எப்படிக்கையாளலாம் என ஒருசில அடிப்படையான யோசனைகளுக்கு வந்திருந்தோம்.

நோயுற்ற எழுத்தாளர்களுக்கு மருத்துவச்செலவுகளுக்கு உதவுவதற்கெனவும், மரணமுற்ற எழுத்தாளர்களின் இறுதிச்சடங்குகளை கௌரவமாக நடத்திவைப்பதற்கெனவும், மரணமுற்ற எழுத்தாளர்களின் பிரசுரிக்கப்படாத எழுத்துக்களை தொகுத்துப்பிரசுரிப்பதற்கெனவும் ஒரு நிரந்தர வைப்புநிதியை உருவாக்கமுயற்சிசெய்வதென யோசனைக்கு வந்திருந்தோம். இதனது அங்கமாக மரணமுற்ற படைப்பாளிகளின் படைப்புக்கள்பற்றி கருத்தரங்குகள் ஏற்பாடுசெய்வதற்கும் உதவுவதென யோசனைக்கு வந்திருந்தோம். ஈழம், இந்தியா, ஐரேப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா என எல்லா இடங்களிலுமிருந்து வசூலிக்கப்பட்டதாக வைப்புநிதி இருக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட எல்லா நாடுகளிலும் வாழும் எழுத்தாளர்/ கலைஞர்களின் நலனுக்காக இந்தநிதி பயன்படுத்தப்படவேண்டும். இவ்வேண்டுகோளை எல்லா சிறுபத்திரிகைகளினூடாகவும் வெளியிடுவதென்றும்,மையப்படுத்தப்பட்ட வங்கிக்கணக்கொன்று நிறுவுவதென்றும் பரிந்துரைகள் வந்தன. மரணங்கள் தொடர்கின்றன. பரிந்துரைகள் நடைமுறைக்கு வரவில்லை என்பது சோகம். சொந்தமனிதர்களின் மரணங்கள், பொறுப்பற்ற பெற்றோர்களினால் பிள்ளைகளின் மரணங்கள், பிள்ளை களால் நிராகரிக்கப்பட்ட பெற்றோர்களின் மரணங்கள் என இவை தனிமனித சோகங்களெனில் எழுத்தாளர்/ கலைஞர்களது அகால மரணங்கள், வறுமையால் நேரும் மரணங்கள் நம்முடைய வரலாற்றுப்பொறுப்பின்மைஆகாதா? காலம் நமக்கான வரலாற்றுப்பொறுப்பையும் கூட்டுச்செயற்பாட்டையும் வேண்டி நிற்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### காலக்குறி :
### மறுபடியும் கார்ல் மார்க்ஸ்

சிறுபத்திரிகைகள் வெறுமனே அரசியல்சாரா இலக்கியம் பேசிக்கொண்டிருந்த காலம் போனது; அதேபோல அரசியல் சாரா அமைப்பியலோ பின்நவீனத்துவமோ இனிச்சாத்தியமில்லை. கருத்தியல் சார்ந்துதான் இனிப்பத்திரிகைகள் வரமுடியும். ஆயினும் விவாதங்களை நாகரீகமாக முன்வைக்கும் பத்திரிகைகள் அருகிவருவது ஒருஅறிவுத்துறைச்சோகம்; தமிழகச்சூழலைவிட புலம்பெயர்சூழல் மிகமோசமான சூழ்நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. இந்தப்பின்னணியில்தான் ஏ.ஜே. கான் அவர்களை ஆசிரியராகக்கொண்டு காலக்குறி வருகிறது;

சுபமங்களா கருத்தியல் விவாதங்களை ஒருங்கிணைத்தது. காலச்சுவடு அழகியல் சார்ந்த விசயங்களுக்கு அழுத்தம்தர, நிறப்பிரிகை பின்நவீனத்துவ அரசியலை முன்வைத்து கலாச்சாரத்தை அணுகுகிறது. காலக்குறி அழகியல் பின் நவீனத்துவம், மார்க்ஸியம், அமைப்பியல் இவைகளுக்கிடையேயான கருத்துமோதலை முன்வைக்கும் இதழாக வருகிறது.

கோணங்கி எஸ். ராமகிருஷ்ணன், அமரந்தா, ஜமாலன் போன்றவர்கள் தொடர்ந்து எழுதிவருகிறார்கள். காலக்குறி : A sign of the Time என்ற உள் அட்டையைப் பார்க்கிறபோது தவிர்க்கவியலாமல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்கட்சியிலிருந்து பிரிந்துபோய் signs of the Time : A manifes to the New times முன்வைத்த ஜனநாயக இடதுசாரிகள் தான் ஞாபகம் வருகிறார்கள். அவர்கள் Marxism Today என்று இதழ் கொண்டுவந்தார்கள். இறுதி இதழில் The End என்று போட்டு மார்க்ஸியத்தின் இறுதியை அறிவிப்பதாகச் சொன்னார்கள். அதே இதழ் ஆறு ஆண்டுகளின்பின் *1998* அக்டோபரில் மறுபடியொரு சிறப்பிதழ் கொண்டுவந்தது. எந்த அரசியலை நம்பினார்களோ அந்த அரசியலை Wrong என்று அட்டைப்படக் கட்டுரையுடன் நிராகரித்தே இந்த இதழ் வெளியானது. மேலும் இதே இடதுசாரிகள் Signs of the time எனும் அதே பெயரில் பின்-அமைப்பியல் பின்நவீனத்துவம் குறித்து கருத்தரங்கும் நடத்தினார்கள். ஆனால் அவர்கள் மறுபடி மார்க்ஸீயம் நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். மார்டின் ஜேக்குஸ், ஸ்டுவார்ட் ஹால், பீட்ரிஸ் கேம்பல் போன்ற சிந்தனையாளர்களே அவர்கள். இவர்களே நேற்றுவந்த Marxism Today இதழின் பதிப்பாசிரியர்கள்.

காலக்குறி இதழும் புத்தெழுச்சிபெறும் மார்க்ஸியம் நோக்கிவந்துகொண்டிருக்கிறது. பின் நவீனத்துவத்திற்கு எதிரான கட்டுரையொன்றும் NGO க்களுக்கும் தாராளவாத எதிர்ப்புரட்சி அரசியலுக்கும் இருக்கும் உறவை அலசும் இலத்தீனமெரிக்கா பற்றிய கட்டுரையொன்றும் அதனது ஒன்பதாவது இதழில் வெளியாகியுள்ளது.

நிறப்பிரிகை காலச்சுவடு போன்ற இதழ்களுக்கு அடுத்து தமிழகத்திலிருந்து பரந்த தளத்தில் செயல்களை விரித்திருக்கும் இதழாக காலக்குறி வந்திருக்கிறது. தனி இதழ் இந்தியவிலையில் 25 ரூபாய்கள்.

சந்தாக்களுக்கும் விபரங்களுக்கும்

A.J. Khan
*«Kalakkuri» 18, Alagiri Nagar, 2nd Street*
*Vadapalani, Chennai – 6000 026, Tamil Nadu*

● – யமுனா ராஜேந்திரன்

☆————☆

## இரு துயர்

– அ.இரவி –

# 1.

### சசி. கிருஷ்ணமூர்த்தி

நெஞ்சில் விழுந்த பலமான அடி இது. நம்பக்கூட முடியவில்லை. சசி.கிருஷ்ணமூர்த்தி இறந்து போனாரா? உடன் நினைவுக்கு வந்தது அவரது மனைவியும், பிள்ளைகளும். இளமையான குடும்பமாக இருக்கையில் நல்லூரில் இருக்கிற அவரது வீட்டிற்கு அடிக்கடி போவோம். அரைகுறையாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற வீடு. போய்ச் சிறிது நேரத்தில், எனக்கும் சசிக்கும் பெரிய கோப்பையில் கோப்பி வரும். பிறகு கதை. நீண்ட கதை. எங்களது ஈடுபாடு இலக்கியத்தினதும், சினிமாவினதும், அரசியலினதும். இப்போது யோசித்துப் பார்க்கிறேன். அப்போது மூன்று விசயங்களிலும் எங்கள் இருவரிற்குமிடையில் மிகுந்த உடன்பாடு இருந்தது. அவரிடமிருந்துதான் மோகமுள், செம்மீன், மரப்பசு, அம்மா வந்தாள் முதலான அற்புதமான நாவல்கள் வாசிக்கக் கிடைத்தன. அந்தப் புத்தகங்களுக்கு, அழகான வெள்ளை உறை இட்டு, சசி.கிருஷ்ணமூர்த்தி என்று நீண்டதாகவும், சாடையான கிறுக்கலாகவும் எழுதியிருப்பார்.

அவரை நினைவு படுத்திக்கொண்டு போகின்றபோது, மீண்டும் மீண்டும் எனப்பலமுறை துயரில் அழுவேன். அவரது புன்னகையின் நினைவே என்னைத் துயரப்பட வைத்துவிடும்.

'புதுசு' நடாத்துகிற ஆரம்பக்காலம். யாழ்ப்பாணம் போக பஸ்ஸிற்கும் காசு இல்லாத நாட்கள். விளம்பரம் வேண்ட சைக்கிள் உழக்கி யாழ்ப்பாணம் போவோம். ஒரு விளம்பரம் கட்டாயம் கிடைக்கும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேடியோஸ்பதி. அந்தக் கடையின் முன்மேசையில் சசி கிருஷ்ணமூர்த்தி, புன்னகையுடனும், நம்பிக்கை தரும் வார்த்தைகளுடனும் இருப்பார். பொழுதுபடட்டும், ஆறுமணியாகட்டும் என்று சொல்லிவிட்டு, பிறகு ரீ வாங்கித் தருவார். அதன்பிறகு முனியப்பர் கோயில் பக்கம் போவோம். இருந்து கதைக்க அங்கு வசதியாக இருந்தது. பண்ணைப் பக்கமிருந்து காற்றும் வேறு வந்தது.

அப்படிக் கதைத்துக் கொண்டாற் போலத்தான் ஒருநாள் தன் கலியாணம் பற்றிச் சொன்னார். அதைச் சொல்ல புன்னகை சற்றும் குறையாமல், ஆனால் வெட்கப்பட்டுத்தான் சொன்னார்.

நாங்கள் கோப்பாய்க்குச் சைக்கிள் உழக்கி, அவரது கலியாணவீட்டு விருந்து நாளுக்குப் போனோம். அன்பளிப்பாக அப்போது அவருக்குக் கொடுக்க, 'புதுசு'வில் சில வார்த்தைகளே எங்களிடம் இருந்தன. ஆவணி, ஐப்பசி 1981 இதழ் புதுசுவில் 'புதுசுகளோடு அதிக நெருக்கம் கொண்ட திரு.சசி கருஷ்ணமூர்த்தி அண்மையில் திருமண வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ளார். தம்பதிகளை புதுசுகள் வாழ்த்துகின்றார்கள்' என்று எழுதியிருந்தோம். அதே கையால் அவரது மறைவின் துயரைப் பகிரவும் எழுத வேண்டியிருக்கிறது.

அவர் எங்களுக்கு விட்டுச் சென்றவை என்று சொல்ல சில நினைவுச் சாசனங்கள் உள்ளன.

அப்போது நமது அமைப்பிற்கு அவர் சில முக்கியமான அரசியல், இராணுவக் கட்டுரைகளை தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருந்தார். அது அந்த நாளில் அவசியமானதும், மகத்தானதுமான தேவையாக இருந்தது. யோ.பெனடிக்ற் பாலன் அவர்களும் இவ்வாறான முக்கியமான தேவைகளை நிறைவேற்றி இருந்தார் என்பதையும் இந்த இடத்தில் நினைவுகூர்தல் பொருந்தும்.

எனினும் சசி கிருஷ்ணமூர்த்தியின் வேறொரு செயற்பாட்டையே முக்கியமான சாசனமாக நாம் கொள்வோம். யேசுராசாவுடன் இணைந்து திரைப்பட வட்டம் என்கின்ற அமைப்பைத் தொடக்கி, யாழ்ப்பாணத்தில் முக்கியமான திரைப்படங்கள் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் தந்திருந்தார்.

யூலிஸ் பூசிக்கின் 'தூக்கு மேடைக் குறிப்புகள்', 'மக்ஸிமின் இளமைக் காலம்' (Youth of Maxim -ரஷ்யத் திரைப்படம்), 'இறவா நாள் (The day which does not die -ரஷ்யத் திரைப்படம்), மக்ஸிம் கோர்க்கியின் மகத்தான நாவலான 'தாய்'இன் திரைப்பட வடிவம் (Mother -ரஷ்யத் திரைப்படம்) ஆகிய மகத்தான திரைப் படங்களை பார்க்க வசதிதந்தவர் சசி கிருஷ்ணமூர்த்தி. திரைப் படங்கள் பற்றிய எமது பார்வை விசாலிக்கவும், விமர்சனபூர்வமாக அணுகவும், ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தவர் சசி கிருஷ்ணமூர்த்தி.

யாவும் நினைவிலாடி பெரும் துயரெழுப்புகிறது. அவரது செயல்களும், புன்னகையும் மறைவதற்கு இன்னும் கனகாலம் எடுக்கும். அப்படியும் மறையாது என்றே நினைக்கிறேன்.

●

# 2.

## தோழர். சாருமதி

ஏனென்றால், கவிஞர் சாருமதியாக அவரை அறிய முன்னம் தோழர் சாருமதியாகவே அவரை அறிந்தேன். 80களின் ஆரம்பத்தில் அவருடன் அரசியல் வேலைகளில் ஒத்தோட முடிந்தது. பிறகு காலமும், கருத்தும் எப்படியோ பிரித்துக் கொண்டது.

ஆயினும் எம் தொடர்பு வேறொரு வகையிலும் தொடர்ந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்புப் பட்டத்தை நான் கற்க நேர்ந்தபோது, எனக்கு இரண்டு வருடங்களின் முன்பாக சாருமதி அதனைக் கற்றுக் கொண்டிருந்தார். இதனாலும், பழைய தோழமை உணர்வாலும் மிகுந்த நேசம் ஏற்பட்டது.

கண்ணால் கண்ணீர் வரவர (அழுது அல்ல) சிரித்துச் சிரித்து கதைகள் சொல்வார். மிகுந்த நகைச்சுவை உணர்வுடையவர். கொஞ்சம் புளுகு போலத்தான் இருக்கும். அப்படி நாங்கள் நினைத்துவிட்டால் அல்ல என்று ஆதாரங்கள் தந்து உண்டு என்று நிறுவி விடுவார். இப்போதும் நினைவிருக்கிறது- 1992ஆம் ஆண்டு கொழும்பில் நேர்முகத்தேர்வு ஒன்றிற்கு நானும் சாருமதியும் காலையிலிருந்து மாலைவரை காத்திருந்தபோதும், வயிறு குலுங்கச் சிரித்தே நான் வலியால் துடித்துப் போனேன்.

இந்த நகைச்சுவையுணர்வு அவரது கவிதைகளில் காணக் கிடைப்பதில்லை. கோபம், வேகம் இவையே அவரது கவிதையாக அமைகின்றது. கவிஞர் சுபத்திரனின் மிகப்பெரிய பாதிப்பாக சாருமதி இருந்தார். முன்னைய குமரன் இதழ்கள் பலவற்றில் சாருமதியின் கவிதை விரவிக் கிடக்கும்.

**"அந்த இரவுகளிலும் நாங்கள்**
**துயில் கொள்ளச் சென்றோம்**
**இரவுகள் அமைதியானவை என்று.....**
**..................................................**
**..................................................**
**அண்ணாந்து நானும் பார்த்தேன்**
**சூரியனும் என்னைப் பார்த்துச் சொன்னது**
**நீ ஒரு தமிழனென்று"**

இந்தக் கவிதை ஒன்று இவர் அறியப்பட நிலைத்து நிற்கிற கவிதை.

தமிழ்நாட்டில் சாருமதி நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தபோது, தான் இறக்கப் போகிறேன் என்று உணர்ந்த சமயம் தன் இறப்பிற்குப் பின் செய்ய வேண்டிய சில காரியங்களை தன் குடும்பத்தினரிடம் தெரிவித்திருந்தார். தன் உடல் மட்டக்களப்பில் புதைக்கப்பட வேண்டும் என்பது ஒன்று, தனக்குக் கட்டப்படும் நினைவுச் சின்னத்தில் தொழிலாள வர்க்கத்தின் அடையாளமான அரிவாளையும், சுத்தியலையும் கட்டாயமாகப் பொறிக்க வேண்டும் என்பது இரண்டாவது. கொம்மியுனிச சித்தாந்தங்கள் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு, அவரது மறைவு குறித்த துயரில் இன்னும் இன்னுமென அமிழ்ந்து போகச் செய்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக்கலா மன்றத்தின் கலை வண்ணம் நாடகநிகழ்வை முன்வைத்து நாடகம் பற்றி சிலகுறிப்புகள் :

– ச. தில்லைநடேசன்.



தமிழில் நாடகத்தை கண்டு பிடித்த வஸ்கொடகாமாக்கள் தாங்களே என அறிவு முற்றிய சில நவீனநாடகக்காரர்களின் எழுத்துகளை வாசித்தபின்பும். பல்கலைக்கழக வட்டம், நாடகஅரங்க கல்லூரியில் நடந்த நாடகங்களே நாடகமெனவும் அதன் வரலாறே அரங்க வரலாறாகவும் எழுதி சாதாரண கிராமரசிகனை மலங்கடிக்கும் வரலாற்று ஞானிகளின் எழுத்துகளை வாசித்தபின்பும். எனக்குள் வந்தசந்தேகம் நான் சிறுவயதில் பார்த்தவை, நடித்தவை, நடிக்கவைத்தவை எல்லாம் என்ன? வெறியாட்டும், மாரடிப்பாட்டமும், குதிரை ஆட்டமும் கரகாட்டமும், காவடி ஆட்டமும், எங்கள் கிராமமே அரங்கான சூரன்ஆட்டமும், எந்த வயதில் என்னுட் புகுந்ததென தெரியாத நாட்டுக்கூத்தும், இசைநாடகமும், வசனநாடகமும், அரங்க கலையில்லாமல் வேறென்ன? மககள் வாழ்வோடு ஒன்றிய இந்த வடிவங்களை கழுத்தை திருகி புதைத்துவிட்டு எங்கள் கலை என்று எதனை மார்தட்டுவது. நான் நவீன நாடகத்தின் எதிரியல்லன் எமது செழுமை மிக்க கலைவடிவங்களின் தளத்திலிருந்து உள்வாங்காத எந்த கலைவடிவமும் இங்குதனித்து நிற்கமுடியாது என்பவன். இதனை திருமறைக்கலாமன்றத்தின் கலைவண்ண நிகழ்வில் கண்டேன். மேற்குலகில் உள்ள பெரியபெரிய நாடகநெறியாளர்களெல்லாம் யதார்த்த பாணி மரபிலிருந்து தப்ப எங்களிடமே சரணடைந்தார்கள். நாங்கள் இன்னும் மேற்குலகை பார்த்தபடி. ஐரோப்பியர்களின் தாசர்களுக்கு தாசர்களாய் பாரிசில் 27/9/98 திருமறைக்கலாமன்றத்தின் கலைவண்ணம் மலர்ந்தது.

1) சகுந்தலை - இசைநாடகம்
2) சோழன்மகன்- நாட்டுக்கூத்து? (நவீனநாட்டுக்கூத்து)
3) ஜீவப்பிராயத்தனம் - நவீனநாடகம்

## நாட்டுக்கூத்து - சோழன்மகன்

துண்டுபிரசுர அறிவிப்பு நாட்டுக்கூத்து.

மேடைஅறிவிப்பு நவீனநாட்டுக் கூத்து. நாட்டுக்கூத்தின் ஜீவன் தாளம். தாளவாத்தியமான மத்தளமும் அண்ணவியார் அடிக்கும் தாளநாதமும். கூத்துக்கலைஞன் காலில் கட்டிய சலங்கை ஓசையும் ஒத்தகணத்தில் ஒலிக்கும் நுட்பமான கலை அது. தோற்றம், சூழல், விசானம்,ஆடற்றரு, நாலடி, எட்டு, பாஞ்சாலபட்டயம், கண்ணி, தீரமானம்.....எனப்பல ஆட்டவகைகள் இணைந்தே கூத்து. சோழன் மகனில் ஒரு ஆட்டத்தைக்கூட முழுமையாக பார்க்கமுடியவில்லை மத்தளமும் அண்ணாவியாருமில்லாமல் நான் பார்த்த முதல்கூத்து இது தான்.

போர்த்துகேயநாடக தாக்கம் கூத்தை குற்றுயிரும் கொலை உயிரும் ஆக்கியுள்ளது. வட்டக்களரிக்கூத்து படச்சட்ட மேடைக்கு வரும் போது சிலவிடயங்கள் இழப்பது தவிர்க்க முடியாது. ஆனால் இங்கு முதலுக்கே மோசம். இருந்த கொஞ்சநஞ்ச ஆட்டத்தில் தென்மோடிக்கூத்தின் சாயலைக்காண முடிந்தது. தென்மோடிக்கூத்தில் கர்நாடக இசையின் தாக்கம் மிகமிக குறைவு. ஆனால் இதில் அதன் தாக்கம் அதிகம். இது இசைநாடகமரபின் தாக்கத்தால் விளைந்திருக்க வேண்டும். இதுவேஆட்டம் அதிகம் இழந்ததற்கு காரணமாகலாம். சந்தேகம் இல்லாமல் இது மரபுக்கலையே. ஆனால் இதனை இப்போது கூத்து என்று சொல்ல முடியாது. அப்படியானால் இதனை எப்படி அடையாளப் படுத்துவது. நவீனநாட்டுக் கூத்தா? இது மற்றொரு அபத்தமாகும்.

நவீனத்துவம் இன்னும் சரியான அர்த்தத்தில் அறியப்படவில்லையோ என்று கேள்வி எழுகின்றது. இத்தனைக்கும் திருமறைக்கலா மன்றம் மரிய சேவியர் அடிகளார், யோன்சன் ராஜ்குமார் போன்ற திறமை மிக்கநெறியாளர்களை கொண்டது. தாசீசியஸிடம் நாடகம் பயின்ற கலைஞர்களை கொண்டது. நாட்டுக்கூத்து நவீனமான உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ளக்கூடியது. அதன் வடிவம் அப்படிப்பட்டது. சோழன் மகன் கதை. மனுநீதிச் சோழனின் கதை. பசுவைக் கொன்றதற்காக மகனையே கொன்றதாக கரடி விடப்பட்டகதை. ஒரு வேளை பசுவுக்காய் மகனை கொன்றவன் ஒரு பஞ்சமனுக்காக கொன்று இருப்பானா என்றால் இல்லை, அதுதான் மனுநீதி. உலகத்திலேயே தோன்றிய குரூர மோசடிச்சட்டம் பிராமணர்களையும் அரசர்களையும், மேட்டுகுடிகளையும்தான் அது மனிதர்களாக ஒப்புக்கொள்ளும் வர்ணத்திற்கும் ஒரு சட்டம். சாதிக்கொரு நீதி சொல்லிய இந்திய சமூகத்தின் உயிர் கொல்லி. இதன் பொட்டுக் கேட்டை எழுதி மாளாது. இதைக்காப்பாற்றிய மனுநீதி சோழனின் கதை எப்படி நவீன நாட்டுக் கூத்து கதையாகலாம்.

## இசை நாடகம்– சகுந்தலை

கூத்து பெர்சிய நாடக மரபின் தாக்கத்தால் விளைந்தது இசைநாடகம். இதன்போது ஆடல் முற்றாக இழக்கப்பட்டது. படச்சட்ட மேடையில் இசை முதன்மை பெற்றது. பாடுதலும் நடித்தலும் ஒருங்கிணையும் போதே இசைநாடகம் செழுமை பெறும் வெறும் சங்கீத ஜாலங்கள் இசை நாடகமாகா. இங்கு வசனம் இரண்டாம் பட்சமே. பிரெஞ்சு ஓபேராக்கள் போல் இவ்வடிவம் நிலைத்திருக்க ஜீவித நியாயம் கொண்டது. சகுந்தலை கதையும் புராணக் கதைதான். மகாகவி காளிதாசனே இக்கதையை முதலில் நாடகமாக்கியவன், இந்த நாடகத்தின் அரங்கேற்றத்தினோடேயே ரஷ்சியாவில் நவீன நாடகயுகம் பிறந்ததாம்

சகுந்தலை தமிழ் நாடகத்தை யார் எழுதினார்களோ தெரியவில்லை. சங்கரதாஸ் சுவாமிகளா? தமிழ் நாடகங்களில் ஏன் பிரதி எழுதியவர் பெயர் சொல்லபடுவதில்லையோ? இவ்விசைநாடகம் சிறப்பாக நடித்து காண்பிக்கப்பட்டது. துஷ்யந்தனின் பாத்திரம் ஏற்றவர் முன்பு பெண்வேடங்களிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்திருப்பதாக அறியமுடிகிறது. அந்த சாயல் லேசாக தெரிந்து சில இடங்களில் அவர் நடிப்பையும் மீறி பாட்டு வந்தது. மற்ற நடிகர்கள் அனைவரும் பாத்திரத்தோடு ஒன்றினர் நல்ல உத்திகள். எமது மரபுக்கு ஒற்றார் போல் ஒருவர் பலபாத்திரம் நடித்தது நன்று ஆர்மோனியம் பாடலோடு இசைந்து வந்தது. ஆர்மோனியம் அளவுக்கு அதிகமாகன இடங்களில் வரும் போது கதைக்கான சூழல் உருவாக்கத்தை கெடுத்துவிடும். ஆனால் இசை நாடகத்தில் இது தவிர்க்கமுடியாத வாத்தியம். இசை நாடகம் புதிய உள்ளடக்கங்களையும். கிராமிய இசையையும் உள்வாங்க வேண்டியது அதன் வளர்ச்சிக்கு அவசியம்

## நவீன நாடகம்—ஜீவப்பிரயத்தனம்

ஈழத்தில் நவீன நாடக பிரக்ஞை வந்து கிட்டத்தட்ட 25 வருடங்கள். ஆரம்பத்தில் குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே நிகழ்த்துகை பார்வையாளர்கள் வட்டத்தை கொண்டிருந்தது. நவீன நாடகம் நாடகபட்டறை குரல் பயிற்சி மூச்சுப்பயற்சி என சொல் ஜாலம் காட்டி எங்கே நாடகத்தை மேட்டுக்குடி தன்மை கொண்டதாக மாற்றிவிடுமோ என்ற நிலையில் அதனை சிலர் உடைத்தனர். அதில் திருமறைக்கலா மன்றமும் ஒன்று. நாடகப்பட்டறைகள், சஞ்சிகைகள் நாடகம் பற்றிய கலந்துரையாடல்கள் என மக்கள் மத்தியில் கணிசமான அளவு நவீன நாடகத்தை எடுத்துச் சென்றனர். போராட்ட காலமது நவீன நாடக இயங்கு வட்டத்தை இன்னும் பரவலாக்கியது

நவீன நாடகம் கம்ப சூத்திரமல்ல அது எங்கள் கலையின் வேரிலேயே தங்கி நிற்கின்றது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தினர். தமிழில் நாடகம் ஒரு பாடம். ஆனால் அது யாழ்நகரை சுற்றிய சிலபாடசாலைகளிலும் வேறு சில பெரிய பாடசாலைகளிலுமே படிப்பிக்கப்படுகின்றது. வெறும் புத்தகப்படிப்பு கலைஞனை உருவாக்கிவிடாது. சங்கீத ஆசிரியர்கள் உருவானதுபோல் நிறைய நாடக அசிரியர்கள் ஒருவேளை உருவாகலாம். இவர்களின் கதை இயங்குகை வட்டமும் ஓரளவுதான். நவீனத்துவத்தின் முழுவீச்சை எட்ட பாடசாலை, மதநிறுவன அமைப்புக்கள் ஒருபோதும் அனுமதிக்காது. நவீனத்துவம் குடும்பம், மதம், அமைப்பு வடிவங்களை கேள்வி கேட்கும் விமர்சனத்திற்குள்ளாக்கும். உள்ளடக்கங்களை வாழ்க்கை முரண்பாடுகளை புனிதங்களை போட்டுடைக்கும்
(யாழ். பல்கலைகழகத்தில் அண்மையில் மும்மதங்களை கேள்விக்குள்ளாக்கிய நாடகமொன்று தடைசெய்யப்பட்டது)

ஜீவப்பிரயத்தனங்களின் கரு ஒரு பேழை. அந்த பேழையை தாய் நிலம், தமிழ் கலை கலாச்சாரம் என ஊகிக்கலாம். பின்புலம் பனை. பனை முழு தமிழ் நிலத்தின் குறியீடாகமுடியுமா? தமிழ் கலை கலாச்சாரம் பேழை என்றால் கலாச்சாரம் ஐ மாறாவடிவமா? எமது கலாச்சாரம் முழுவதும் பேணப்படவேண்டிய பொக்கிசமா? சாதியமும் பெண்ணடிமைத்தனமும் பேணமுடியா உயிர்கொல்லிகள்.

ஆரம்பத்தில் பேழை ஒன்றை தூக்கியபடி ஆண்,பெண் என பலவயதினர் ஊர்வலமாக வருகின்றர்கள் அப்பேழையில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என எழுதப்பட்டுள்ளது சந்தோசமாக ஆடிப்பாடுதல், உழைப்பு (உழவு,மீன்பிடி) இராட்சதன் வருகின்றான். பேழையை உடைத்து சந்தோச வாழ்க்கையைக் கெடுக்கின்றான். முன்னோர்க்கு முன்னோர் தந்த பேழையை திரும்பவும் கட்டுகின்றனர் திரும்பவும் அசுரன் அழிக்கவர கண்ணனை துணைக்கழைக்கின்றார். கண்ணன் (இந்தியா) தன்வழிக்கு வராத அவர்களை பேழையை அழிக்கின்றான். மீண்டும் பேழையைக்கட்டுதல். அவர்களிற்குள் பிரச்சனை ஒரு பகுதி அரசோடு சேர்கின்றது இன்னொரு பகுதி வெளிநாட்டிற்கு பறக்கின்றனர். அந்நிய கலாச்சார ஊடுருவல் எஞ்சியவர்கள் பேழையைக் கொண்டு எதிர்த்தல் போராட்டத்திற்கு புலம் பெயர்ந்தவர்களை துணைக்கழைத்தல்.

குறியீட்டு உத்திக்கு இரண்டு பக்கமும் தாக்கலாம் தப்பிக்கலாம். இதன்பலமும் பலவீனமும் இதுதான். வரலாற்று நிகழ்வுகள் பல மறைக்கப்படுகின்றது என எழும் விமர்சனங்கள் நியாயமானவையே.

நாடகத்திற்கு இசை ஒளி போன்றவை கச்சிதமாக பொருந்தின. சில கட்டங்கள் அரங்கிலிருந்தவர்களை கடந்தகால வாழ்வினை நனவிடைதோய்தல் செய்தது.

திருமறைக்கலாமன்றம் 'கலைவழி இறைபணி' செய்யும் கலைக்குழுஎன்ற வகையில் இதற்கு மேல் எதிர்பாக்க முடியுமோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் அநேகமான கலைநிகழ்வுகளும் கலைக்குழுக்களும் இல்லாத நிலையில் இவர்கள் செயற்பாடு தெம்பைத்தருகிறது. எனினும் புதிய புதிய உள்ளடக்கங்களை தேர்வு செய்யுமாறு வேண்டிக்கொள்ளமட்டுமே எம்மால் முடியும். ஒப்பனை நடிகர்களின் நடிப்பு அருமை. மேலும் மேலும் திருமறைக்காலாமன்றம் செழிப்புற தம் கலைப்பணியை தொடரட்டும்.

○



○

### லண்டன் தமிழர் நலன்புரிச்சங்கத்தின் 4ம் ஆண்டு மலர் வெளியீடு

கடந்த 3 ஆண்டுகளாக கனதியான இலக்கிய மலர்களை வெளிட்டுவந்த லண்டன் தமிழர் நலன்புரிச் சங்கத்தினர் அடுத்த ஆண்டுக்கான மலர்வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

மலருக்கான ஆக்கங்களை அனைத்துலக படைப்பாளிகளிடமும் கோருவதோடு எதிர்வரும் பொங்கல் பெருநாளுக்கு முன்பதாக கிடைக்கும்படி செய்யுமாறும் வேண்டுகின்றனர்

தொடர்புகள், மேலதிக விபரங்களுக்கு,

*Mr. Pathmanaba Iyer*
*T.W.A.N.*
*P.O. Box : 13794*
*London E12 5TX*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'படைப்பாற்றல் இல்லாத சமூகம் எழுச்சிகொள்ளமுடியாது'

♦

வணக்கம்.

ஸ்கன்டினேவியச் சிறப்பிதழ் எதிர்பார்த்ததுபோல் சுகமாக அமையவில்லை.
தமயந்தியும், விஜயேந்திரனும் தம்மால் இயன்றதைச் செய்தனர்.
மொத்தத்தில் ஒரு சிறப்பிதழ் வெளிக்கொண்டுவருதற்குரிய உழைப்பு அம்மாவிடம் இருக்கவில்லை / போதவில்லை.

○

அம்மா முதல் ஆறுஇதழ்களுக்கும் இருந்த வரவேற்பைவிட 7வது இதழுக்கான வரவேற்பு சற்று தூக்கலாகவே இருந்தது இதமான விடயம். என்றபோதும் பின்நவீனத்துவக் கட்டுரை மற்றும் உரைகல் தொடர்பான முகச்சுழிப்புகளும் இருக்கவே செய்தது.

நவீனத்துவகாலத்திற்குப் பிந்திய காலம் பின்நவீனத்துவகாலம் என்கிறனர் பின்நவீனத்துவவாதிகள். பின்நவீனத்துவ விமர்சன அணுகுமுறைகள் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் கிட்டத்தட்ட ஒரு முடிவுக்கே வந்துகொண்டிருப்பதாக உணரப்படுகிற ஒருகாலகட்டத்தில் இப்போதுதான் நாம் பி.ந. பற்றி அறிய முற்படுகிறோம். ஒரு தத்துவம் அல்லது ஒரு புதிய இலக்கிய / விமர்சனக்கோட்பாடுகள் பற்றி கற்றுக்கொள்வதற்குத் தயக்கம் காட்டுவது நல்லதல்ல. அம்மாவில் வருகின்ற கட்டுரைகளும் வெளிப்படுத்துகின்ற எழுத்துமுறைகளும் சிலவேளை திருப்திதரவனவல்லாமல் இருக்கலாம். அதைக்கூட சரிசெய்து வளர்த்தெடுக்கவேண்டியது நீங்கள்தான்.

○

உரைகல் பற்றி...
எழுத்தாளர் எழுத்துக்களுக்கு எல்லைக்கோடு விரிப்பது என்பது கொஞ்சமல்ல நிறையவே சங்கடமான விடயம். மறுபுறம் இதுவரை வந்த அம்மா இதழ்களில் ஒருசில சொல்லாடல்களைத்தவிர ஏதும் சிக்கல்தரக்கூடியனவாக உணர்ந்து கொள்ளமுடியவில்லை. ஆயினும் தனிநபர்மீதான தாக்குதல் / அதீத தனிநபர் அரசியல் விமர்சனப்போக்குகளுக்கு அம்மா தளமல்ல. தளம் தாண்டி மேலேறவிரும்புபவர்களுக்கு அம்மா தடைக்கல்லுமல்ல – அம்மா வாழ்த்தி வழிவிட்டொதுங்கிக்கொள்கிறாள். அம்மாவை 'புரிந்து' கொள்பவர்கள் மட்டும் அம்மாவில் பங்கேற்க.

○

ஒரு சில நண்பர்கள் அம்மாவின் சுமையில் பங்கேற்க பணம் அனுப்பிஉதவியிருந்தார்கள். நன்றிகள். உங்கள் பணம் கிடைக்கப்பெற்றதை ஏதோவகையில் அம்மா உறுதிப்படுத்தியிருப்பாள். தவறின் தொடர்பு கொள்க. மற்றும் உங்கள் கணக்கு விபரங்களை நீங்களே வைத்துக்கொள்வதும் அம்மாவின் பழுவினைக் இன்னும் கொஞ்சம் குறைக்கும். ஓர் இதழுக்குரிய போட்டோகொப்பி + அட்டை செலவு அண்ணளவாக 15 பிராங்குகள் முடிகிறது. தவிர தபாற்செலவு. இதைவிட இலங்கை, இந்தியா ஏனைய இதழாளர்களுக்கென 100 பிரதிகள்வரை இலவசமாக அனுப்பிவைக்கப்படுகிறது. இப்படி ஒரு நிலுவையும் இருக்கிறதென்பது விபரம் அறிந்துகொள்ளவிரும்புகிற நண்பர்களுக்கான தகவல்.

○

உலகின் நாற்புறங்களிலுமிருந்து பணவசதி, அல்லது நல்ல தொடர்புகள் உடையவர்களால் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒரு பிரதி அச்சாவது மகிழ்ச்சியான விடயம்தான். ஆனால் ஓர் 'நல்ல' படைப்பாளிக்கும் மேற்குறிப்பிட்ட பணம் தொடர்பான விடயத்திற்குமான தூரம் அதிகமாயிருப்பது துயரமான விடயம். வெளிவருகின்ற நூல்களைப்பார்த்து பெருமூச்சோடு எங்காவது ஒருமூலையில் வெதும்பிக்கொண்டிருக்கும் படைப்பாளிமீது ஆகக்குறைந்தது இலக்கியத்தில் ஈடுபாடுகொண்டுள்ள நண்பர்களது பார்வையாவது விழுதல் அவசியமாகிறது.

முதற்கட்டமாக சில தேவைகளை, அவசியங்களை வெளிப்படுத்த, அதன்மூலம் அவசியமான சில படைப்புக்களாவது வெளிவர ஓர் பாலமாக இருக்க அம்மாவிரும்புகிறாள். அக்கறைகொண்டோர் தொடர்பு கொள்க.

○

தொடர்புகளுக்கு:
S. Manoharan, (Esc. E13) 210, Ave. du 8. Mai 1945, 93150 Le Blanc Mesnil, France.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செய்தி

பல வருடங்களுக்கு முன்பு கைவிடப்பட்ட டன்னமூரா சுரங்கத்தின் இடிபாடுகளினுள், உடற்பயிற்சிக்காக மலையேறப் பழகும் நான்கு இளைஞர்களால் ஒருசில நாட்களுக்கு முன்பு அழுகியநிலையில் கண்டு பிடிக்கப்பட்ட சடலம் யாருடைய தென்பது பொலீசாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. சுமார் ஒரு வருடத்துக்குமுன்பு சமீபத்திலுள்ள நகரொன்றின் அகதிகள் முகாமிலிருந்து காணாமற்போன 23 வயது சிறீலங்காத்தமிழ் இளைஞரே அதென்று தாம் நிச்சப்படுத்தி யிருப்பதாக தீயர்நகரப் பொலிஸ் அதிகாரி நேற்றுப் பத்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

காணாமற்போவதற்கு இரண்டு நாட்களுக்குமுன்பு, தான் அகதிஅந்தஸ்துக்கோரிய விண்ணப்பம் அரசாங்கத்தால் மூன்றாவது —அதாவது கடைசி முறையாக— மறுக்கப்பட்ட செய்தியை அறிந்திருந்த அந்த இளைஞர் மிகவும் மனமுடைந்த நிலையில் காணப்பட்டதாக அவ்விளைஞரைக் கடைசியாகச் சந்தித்த சாட்சிகள் மூலம் தெரியவந்திருக்கிறது. அத்துடன் அகதிகள் முகாமினுள் அவர் விட்டுச்சென்ற உடமைகளுக் குள்ளிருந்து ஒரு தற்கொலைக் கடிதமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ....

18 ஐப்பசி 1995
தினசரிப்பத்திரிகை
*(Dagens Nyheter)*
*சுவீடன்.*

**சாதாரண மனிதர்கள்**

கொழும்பிலிருந்த சுவிற்சலாந்து தூதுவராலயத்தினுள்ளிருந்து வேலுப்பிள்ளை ஏமாற்றத்துடன் வெளியே வருவது இது முதலாவது தடவையல்ல. கலங்கிய மனதுடன் எந்தத் திசையில் போகிறோமென்ற எண்ணமே இல்லாமல் நடக்கமுற்பட்டார் அவர். அறுபது வயதைத் தாண்டிவிட்ட அவருடன் வழக்கம்போல அன்றும் துணையாக வந்திருந்த கடைக்குட்டி மகள் பத்மினி, அவரது கையை மெதுவாகப் பற்றி அருகிலிருந்த பஸ் நிறுத்துமிடத்தை நோக்கி அழைத்துச் சென்றாள்.

'என்ன மேனை இவங்கள் இப்பிடி ஒவ்வொருமுறையும் சொல்லிறாங்கள், உண்மையிலையே அந்த நாட்டிலை விசாரிச்சுப் பாத்திருப்பாங்களோ!' அவரது குரல் கம்மியது.

'சுவிஸ்சிலை எவ்வளவு தமிழர் இருக்கினம். அவைக்குள்ளை அண்ணனைக் கண்டுபிடிக்கிறதெண்டா லேசான வேலையே! அண்ணை முன்னமே கனதரம் விலாசமும் மாறியிருக்கு. ஆனபடியா நாங்கள் குடுத்த விலாசத்திலை அவங்களால கண்டுபிடிக்க ஏலேல்லை. செஞ்சிலுவைச்சங்கத்திலையும் சொல்லிவச்சிருக்கெல்லே ஐயா, எப்பிடியெண்டாலும் கெதியிலை தெரியவரும்.'

தான் சொல்வதைத் தானே நம்பமுடியாமலிருக்கையில் தனது தந்தைக்கு அது எப்படி நம்பிக்கையைக் கொடுக்கும் என்ற சந்தேகத்துடன்தான் சொன்னாள் பத்மினி.

அவர்கள் பேருந்து நிலையத்தை நெருங்கும்போது அவர்கள் போகவேண்டிய வண்டியொன்று இருவரையும் இடிப்பதுபோல நெருக்கமாக வந்து, காத்திருப்பவர்களைத் தாண்டிச்சென்று நின்றது. அதில் ஏறிக்கொள்வதற்காக ஓடியவர்களின் தொகையைப் பார்த்ததும், அவர்களுடன் போட்டிபோட்டு ஓடி ஏறக்கூடிய நிலையில் தகப்பன் இல்லையென்பதைப் புரிந்துகொண்ட பத்மினி அதைக் கவனிக்காததுபோல ஒதுங்கி நின்றுகொண்டாள். காத்திருப்பவர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த அந்த பேருந்து நிலையம் அதை முழுவதுமாக மூடி மறைக்குமளவிற்கு ஒட்டப்பட்டிருந்த நாட்டைச் சுபீட்சமாக்குவதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்ட அரசியல் விளம்பரங்களின் போலித்தனத்தை அனுபவித்ததாலோ என்னவோ ஒருபக்கமாக இடிந்து சரிந்துபோயிருந்தது.

அவருக்கு தனது மூத்த மகன் வேல்முருகன் மேலிருந்த விசேடப் பற்றை பத்மினி நன்றாக அறிவாள். வேல்முருகனும் அதேபோலத்தான். தந்தைசொல் என்றால் உண்மையிலேயே வேதம்தான் அவனுக்கு. அதற்கான சான்றுகளில் ஒன்றுதான் கொழும்பில் கிடைத்த வேலையை ஏற்க மறுத்த அவன் விடுதலை இயக்கத்தில் சேர்ந்ததை அவர் மற்றைய பெற்றவர்கள் போலல்லாது ஏற்றுக்கொண்டது. அவனது உயிரே போய்விட்டதுபோன்று செத்தவீட்டுக்கு அழுவதுபோல அழுத தாயையையும் அவர்தான் அப்போது சமாதானப்படுத்தினார்.

அவளது இன்னொரு சகோதரன் தமையனைப்போலவே அவனைத்தொடர்ந்து ஒரு வருடத்தில் விடுதலை இயக்கத்தில்போய்ச் சேர்ந்தான். அதைக்கேள்விப்பட்டு வருத்தமாகப் படுத்த அவர்களது தாயார் தகுந்த மருத்துவத்துக்கு யாழ்ப்பாணத்தில் வழியில்லாததால் உயிர்தப்பவில்லை. செத்தவீட்டுக்காக வந்திருந்த மூத்தவனை மனம்மாற்றி இயக்கத்தைவிட்டு வரச்செய்தவர் தகப்பனார்தான். ஆனால் இயக்கத்திலிருந்து விலகி ஊரிலோ கொழும்பிலோ வாழ்வதனால் சந்திக்கவேண்டிய அபாயங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக மட்டுமன்றி தனக்குக் கீழுள்ள நான்கு சகோதரிகளின் வாழ்க்கைக்கும் வழிசெய்வதற்காகத்தான் அவனை மிகவும் மனவருத்தத்துடன் வெளிநாட்டுக்கு அனுப்ப ஒப்புக்கொண்டார் வேலுப்பிள்ளை.

நீண்ட நேரமாக வானத்தில் நிறைந்துவிட்ட கருமுகில்கள் மெதுவாக மழைத்துளிகளாக விழத்தொடங்கின. தனது கைப்பைக்குள்ளிருந்த குடையை விரித்து தனக்கும் தகப்பனுக்கும் மேலாகப் பிடித்துக்கொண்டாள் பத்மினி.

**– சாள்ஸ் ஜெயரட்ணம் போமன் –**



1 -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நாங்கள் விசாரிக்கத் தொடங்கி இப்ப எவ்வளவு காலம். எப்பவுமே ஒழுங்காகக் கடிதம் போடாமல் இருந்தவனில்லை அவன். உன்ரை அக்காளின்ரை கலியாணப்பேச்சு நடக்குதெண்டு தெரிஞ்ச உடனை சீதனம், கலியாணச்செலவு எல்லாத்துக்கும் காசு அனுப்பிவச்சவன். எனக்கென்னவோ அவனுக்கு ஏதோ ஆபத்தெண்டு மனசு சொல்லுது'

'என்ன ஐயா நீங்கள் இப்பிடி மனசை விடலாமே! அண்ணையோடை சுவிஸ்சிலை இருந்து கனடாவுக்குப் போன சினேகிதன் முகுந்தன்ரை விலாசம் எடுத்துத்தரச்சொல்லி கொழும்பிலை இருக்கிற அவரின்ரை அக்காவிட்டைச் சொல்லியிருக்கு. முகுந்தனுக்கு நிச்சயமா எதாவது தெரிஞ்சிருக்கும். ஏனெண்டா, அவரின்ரை சுவிஸ் விலாசத்துக்குத்தானே அண்ணைக்குக் இப்ப ஒரு வருசத்துக்குமேல எழுதிறனாங்கள்'

'அது மட்டுமில்லை, இப்ப உன்ர கலியாணமும் முடிவாகியெல்லே இருக்கு. ஒழுங்கெல்லாம் செய்யுங்கோ நான் எல்லாத்துக்கும் காசு அனுப்பிறன் எண்டு மட்டுந்தான் எழுதினவன். அவன்ர காசு வராட்டி மாப்பிளைவீட்டாருக்குக் குடுத்த வாக்கு என்னாகிறது?'

'எனக்கென்னவோ யா நீங்கள் அவ்வளவு காசு குடுக்க உடன்பட்டதிலை சம்மதமில்லை'.

'உனக்கென்ன தெரியும் இதப்பற்றி? வெளிநாட்டுப்பெடியனெண்டா இப்பிடித்தான் சீதனம் கேப்பாங்கள். அதுமட்டுமில்லை பெடியனுக்கு ரெண்டு தங்கச்சிமாரும் இருக்காம்'

'அவைக்கு இருக்கிற தங்கச்சிமாருக்காக எங்கடை அண்ணையே கஸ்டப்படவேணும். அண்ணையெண்டா தன்ர தங்கச்சிமாருக்குக் கலியாணம் நடந்தாப்பிறகு தான் சீதனம் எதுவும் வாங்காமல் கட்டிறதெண்டு சொல்லி ஒற்றைக்காலிலை நிக்குது. இந்த வெளிநாட்டுக்காரருக்கென்னண்டா எங்கடை காசு வேண்டிக்கிடக்கிது. அதுவும் அமெரிக்கன் டொலரிலை!'

தன் தமையனை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்ட பத்மினியைவிட வேலுப்பிள்ளைக்கு மகனை நினைத்துப் பூரிப்பாக இருந்தது. அதேசமயம் தன்னைவிட அதிகமாக நகையும் பணமும் சீதணமாகத் தனது தங்கைக்குக் கொடுக்கப்பட இருப்பதை அறிந்து சாடைமாடையாகத் தனது மனஸ்தாபத்தை வெளிப்படுத்திய அமெரிக்காவிலிருக்கும் அவளது மூத்த சகோதரியின் வார்த்தைகள் ஞாபகம் வர இவளும் கலியாணம் நடந்தபின் எப்படி மாறுவாளோ என்று நினைத்துக்கொண்டார்.

'உன்ரை கொண்ணனுக்கு வயசு முப்பதுக்கு மேலையாயிட்டுது. அவன் தன்ரை சுகத்தப் பாக்காமை உங்களையெல்லாம் கரையேத்திறதை மட்டுமே நினைச்சுக்கொண்டிருக்கிறதப் பற்றி எனக்குக் கவலையில்லையே! வயசுபோன நான்தான் உங்கடை அம்மா போய்ச் சேர்ந்தாப்பிறகு இங்கை இருந்து வாழ்வோ சாவோ எண்டு நாளாந்தம் கவலைப்படுறன். வாழவேண்டிய நீங்களாவது எங்கயாவது நிம்மதியா இருக்கலாமெல்லே. நீங்கள் சுகமா இருக்கிறியளெண்டு தெரிஞ்சாத்தானே என்ரை கடைசிக்காலத்திலை நிம்மதியா இருக்கலாம்!'

'சும்மா சாகிறதைப்பற்றிக் கதைக்கிறதை நிப்பாட்டுங்கோ யா! அண்ணையிட்டையிருந்து நிச்சயமா கெதியிலை கடிதம் வரும். இனியும் இதிலை பஸ்சுக்கு நிக்கிறதிலை பலனில்லை, ஒரு ஆட்டோ பிடிச்சுக்கொண்டு வீட்டை போய்ச் சேருவம் வாங்கோ!'

\- - - - -

## ஈழத்தமிழ் இளைஞன் ஒருவனின் ஒருநாள்

*15-01-1993*

சுவீடன் நாட்டின் தென்பகுதியிலிருக்கும் துறைமுகங்களிலொன்றான ஈஸ்ட்டார்ட் நகரிற்கு அந்த பிரயாணிகள் கப்பல் வந்து சேரும்போது நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. தன்னை டென்மார்க்கிலிருந்து கூட்டிவந்திருந்த இருவரும் சொல்லிந்தந்தபடி அவர்களைவிட்டு விலகி மற்றப் பயணிகளுடன் கலந்துகொண்டு கப்பலைவிட்டு வெளியேறி, வெளியேயிருந்த துறைமுக அலுவலகக் கட்டிடங்களைநோக்கி நடந்தான் அவன்.

சுங்கவரி அதிகாரிகளின் சோதனைக்காக வரிசையில் காத்திருக்கும்போது அவனது எண்ணம் அடுத்ததாக வரவிருக்கும் கண்டமான, எல்லைக்காவலர்களின் பார்வையில் சந்தேகம் வராமல் தப்புவதைப்பற்றியே சுற்றிக்கொண்டிருந்தது. அவர்களிடம் காட்டுவதற்காக அவனிடம் தரப்பட்டிருந்த அடையாள அட்டை அவனது சட்டைப்பையிலிருந்தது. டென்மார்க்கில் வசிக்கும் தமிழனொருவனின் அந்த அடையாள அட்டையின்படி அவனது பெயர் இப்போது சேவியர் அருந்தவச்செல்வன். இப்படிக்கூட யாழ்ப்பாணத்தில் பெயர் வைப்பார்களா என்ற சந்தேகம் இன்னும் அவனைவிட்டு விலகவில்லை. ஆனாலும் அந்தப் பெயர் வித்தியாசமாக இருப்பதே ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இலகுவாக இருப்பதையிட்டுத் திருப்திப்பட்டுக்கொண்டான்.

அங்கு நிலவிய மௌனத்தைக் கிழித்துக்கொண்டு தனது இருதயம் பெரிய சத்தத்துடன் அடித்துக்கொள்கிறதோ என்று பயமாக இருந்தது அவனுக்கு. வலது கையால் அடையாள அட்டை இருந்த சட்டைப்பையையும் நெஞ்சையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டான். மற்றவர்கள் தனது பதட்டத்தை கவனிக்காமலிருக்கவேண்டுமே என்று பயமாக இருந்தது. இந்தக் கட்டத் அதைவிடவும் விசித்திரமானதையும் வெற்றிகரமாகத் தாண்டிவிட்டால் சுவீடனுக்குள் நுழைந்துவிடலாம் என்ற எண்ணம் அசாத்தியத் தைரியத்தைக் கொடுத்த அதேசமயம், தன்னைப்போல சுவீடன் நாட்டுக்குள் நுழைய முற்பட்டு மாட்டிக்கொண்டதால் இலங்கைக்கோ அல்லது கடைசியாகத் தங்கியிருந்த நாட்டுக்கோ திருப்பியனுப்பப்பட்டவர்கள்பற்றிய கதைகளைக் கேள்விப்பட்டிருந்ததால் உள்ளுக்குள் நடுங்கிக்கொண்டிருந்தான்.

இலங்கையிலிருந்து அகதியாகப் ரோப்பாவுக்குள் கால்வைத்ததிலிருந்து ஜேர்மனி, பிரான்ஸ் சுவிற்ஸலாந்திலிருந்து, நெதர்லாந்து என்று ஒவ்வொரு நாடாக எங்கே நன்றாக உழைக்கலாம் என்று அலைந்ததில் அலுத்துப்போயிருந்தான் அவன். உழைப்பை மட்டுமே யோசித்துக்கொண்டு அலைந்ததில் எங்கும் நிரந்தரமாகத் தங்கும் அனுமதி கிடைக்கவில்லை. இனியாவது ஒரு நாட்டில் நிரந்தரமாகத் தங்கலாமென்றால் ரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்த நாடுகளெல்லாம் தங்களது அகதிகள் கொள்கைச் சட்டங்களை இறுக்கிக்கொள்ளவே புதிய நாடொன்றைத் தேடவேண்டியதாகிவிட்டது. ஜூண்பர்கள்வாயிலாக சுவீடனில் அகதியாகப் பதிவுசெய்தால் நிரந்தரமாகத் தங்கும் உரிமை கிடைத்துவிடும் என்று கேள்விப்பட்டிருந்தான் அவன். ஆனால் வரும் வழியில் டென்மார்க்கில் சிலநாட்கள் தங்கியிருந்தபோதே ரோப்பிய ஒன்றியத்தில் சேரவிருக்கும் சுவீடனும் தனது அகதிகள் கொள்கைகளைச் படிப்படியாக கடினப்படுத்தியிருந்ததை அறியமுடிந்தது. ஆனாலும் மனதைத் ஜளரவிடாது தனது பயணத்தை தொடர்ந்தான்.

இடது தோள்பட்டையில் ஓரிரு மாற்றுடைகளுடன் இருந்த பிளாஸ்டிக் பையொன்றுதான் இப்போது அவனது சொத்தாக இருந்தது. அவனை எல்லை அதிகாரிகள் விசாரிக்க முற்பட்டால் நண்பனொருவனிடம் விருந்தினராக வந்திருப்பதாகச் சொல்லத் திட்டமிட்டிருந்ததால், ஜஅவனை அதிக உடமைகளெதையும் கொண்டுசெல்ல வேண்டாமென்று தடுத்துவிட்டிருந்தார்கள் டென்மார்க்கில் சந்தித்தவர்கள். அதனால் கடந்த சில நாட்களாக அவன் அங்கு தங்கிய இடத்திலேயே தான் சுவிற்ஸலாந்திலிருந்திலிருந்து கொண்டுவந்திருந்தவற்றில் அதிகமானவற்றை விட்டுவிட்டு வந்திருந்தான். சுவீடனிற்கு இவன் வந்துசேர்ந்து விலாசத்தை அறிவித்தவுடன் அவற்றை அவர்கள் தபால்மூலம் அனுப்பிவைப்பதாக ஏற்பாடு.

துறைமுகத்தின் எல்லைக்காவல் அதிகாரிகளின் சந்தேகப்பார்வைகளிலிருந்து தப்பி வெளிவாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தபோதுதான் தனது பொருட்களைத் தன்னுடன் கொண்டுவந்திருக்கலாமோ என்ற எண்ணம் அவனுள் எழ ஆரம்பித்திருந்தது. ஒருவேளை அவர்களை தனது பொருட்களை அனுப்பாமல் விட்டுவிடுவார்களோ? அந்த விலாசம்கூட அவனுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. எந்த விலாசங்களும் அவன் எழுத்தில் கொண்டுவரக்கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தார்கள் எல்லைகளுக்கூடாகக் கடத்திவந்தவர்கள். தேவையான ஓரிரு தொலைபேசி இலக்கங்களையும் ஞாபகத்தில் மட்டுமே வைத்திருக்க வேண்டியிருந்ததால் அவற்றை அடிக்கடி மறந்துவிடாமல் மனதுக்குள் சொல்லிப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இப்போது அவற்றைச் சிந்திப்பதில் பயனில்லையென்று தன்னையே தேற்றிக்கொண்டு தன்னைக் கூட்டிக்கொண்டுவந்தவர்களது தலை எங்காவது தெரிகிறதா என்று சுற்றுமுற்றும் தேடினான்.

தாசன் மட்டும் தனியாக வெளியே நிற்பது தெரிந்தது. சிவராமன் காருடன் எங்காவது காத்திருக்கக்கூடும் என்று ஊகித்துக்கொண்டான் அவன். இவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தாசன் தன்னருகில் இவன் நெருங்கியதும்,

'நீர் எனக்குப்பக்கத்திலை வரவேண்டாம், கொஞ்சம் பின்னாலையா தனியப் போறமாதிரி வாரும். நான் போய் ராமைக் கூட்டிக்கொண்டு காரேடை வாறன் நீர் அந்தா தெரியுது அந்த சிவப்புக் கட்டிடம்" அதடிக்கு மெதுவா வாரும். எங்கடை கார் வந்த உடனை 'டக்'கெண்டு வந்து ஏறவேணும். எங்களைப் பொலீஸ் ஒருத்தன் நோட்பண்ணிப்போட்டானெண்டு நினைக்கிறம், . . . . . ஆனா எங்களப்பிடிச்சு ஒண்டும் செய்யேலாது. எங்களோட கூட வாற ஆக்களைத்தான் சந்தேகப்படுவாங்கள். மாட்டிக்கொள்ளவேண்டாம், கவனம்!' என்று எங்கோ பார்த்தபடி சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான்.

அவனைக் கூட்டிவந்த அவர்களிருவருக்கும் இவனைப்போன்று அகதிகளாக வந்திருப்பவர்களை ரோப்பிய நாட்டு எல்லைகளுக்கு ஊடாகக் கடத்திச்செல்வதே முக்கிய தொழில். எனவே பொலிசார் சந்தேகக் கண்ணுடன் அவர்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் இருக்கலாம். அவர்களுடன் சேர்ந்து தானும் பொலிசாரின் கண்களில் அகப்பட்டுக் கடைசிநேரத்தில் தனது முயற்சியில் தோல்வியடைந்துவிடக்கூடாது என்று முடிவுசெய்துகொண்டான் அவன். வேறெங்கோ பார்ப்பதுபோலப் பாவனைசெய்துகொண்டே தாசன் எந்தப் பக்கமாகப் போகிறானென்பதைக் கவனித்துக்கொண்டு தன்னை யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் நோட்டமிட்டான். ஐ

கப்பலிலிருந்து இறங்கியவர்கள் தமது கார்களைநோக்கி, காதுகளைத் துளைக்கும் கடற்காற்றிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள குளிர் உடைகளால் தலைவரை போர்த்துக்கொண்டு முகமூடிக் கொள்ளைக்காரர்கள் போல நடந்துகொண்டிருந்தார்கள். அந்தக் குளிர்காலக் கும்மிருட்டில் ஆங்காங்கே இருந்த வெளிச்சக் கம்பங்கள் தம்மால் இயன்றவரை தமது கடமையைச் செய்துகொண்டிருந்தாலும் தமது முயற்சியில் ஓரளவுதான் வெற்றியடைந்திருந்தன. அச்சந்தர்ப்பத்தில் எவரும் தன்னைக் கவனித்துக்கொண்டிருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை.

வீதியில் தேங்கிநின்ற கரைந்த பனியைச் சிதறவைத்துக்கொண்டு அவனை ஏற்றிக்கொண்ட கார் புறப்பட்டது. சிவராமன்தான் ஓட்டினான். அவனுக்குத்தான் சுவீடன் வீதிகள் நல்ல பழக்கம் என்று அவர்களிடையேயான சம்பாசணையிலிருந்து புரிந்தது.

'எங்களிரண்டுபேரையும் ஒரு பாஸ்போட்பொலீஸ் கவனிச்சிட்டான். முந்தியொருக்கா ஒரு ஆளைக் கூட்டியரேக்கை அவனிட்டை மாட்டப்பாத்தனாங்கள், தப்பீட்டம். ஆனபெடியா இண்டைக்கு எங்களைத் தொடர்ந்து பிடிக்கப்பாப்பான்'

பின்னால் தொடரும் வாகனங்களைப் பார்க்கும் கண்ணாடியில் தங்களைத் தொடரும் வாகனங்களைக் கவனித்தபடியே சொன்னான் சிவராமன்.

காருக்குள் ஏறியதும் இனித் தனது வாழ்வில் ஒரு நல்ல திருப்பம் ஏற்படும் சந்தர்ப்பம் கிட்டிவிட்டது என்ற உற்சாகத்திலிருந்தவனுக்குத் திகிலாக இருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தான். இப்போது அவர்களது கார் இருளைக் கிழித்துக்கொண்டு சென்றுகொண்டிருந்ததால் தொடரும் வாகனங்களின் முன்பக்க வெளிச்சக் கதிர்கள் ஒவ்வொன்றும் குரூரமாகத் தெரிந்தன.

அவனுக்கு ஆஸ்திரியாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையேயான எல்லைப்பிரதேசத்தைத் தாண்டும்போது காடுகளுக்கூடே நடந்துவந்த ஞாபகம் வந்தது. அப் பயண ஆரம்பத்தில் குழந்தைகளும் பெண்களும் வயோதிகர்களுமாக சுமார் நாற்பது பேர் இருந்தார்கள். சிறு குழுக்களாகப் பிரிந்து அவர்கள் நடந்தார்கள். ஒவ்வொரு கணமும் எல்லை காக்கும் காவலர்கள் கண்டுவிடுவார்களோ என்று பயந்து நடக்கவேண்டியிருந்தது. அதேசமயம் அவர்களுக்குள் சிலர் அந்தப் பகுதியைக் களவாகத் தாண்டும்போது வேறு ஆட்களுக்கு நடந்ததாகக் கேள்விப்பட்ட மனதை நடுங்கவைக்கும் சம்பவங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

ஓரிரு தடவைகள் இவனது குழுவினர் மரங்களுக்குள் ஒழிந்து நின்று எல்லைக்காவலர்கள் தமது வாகனங்களில் அவ்வழியே கடப்பதை காணமுடிந்தது. அந்தப் பயணத்தின் மிகக் கொடுமையான ஞாபகம் இவனது குழுவில் கைக்குழந்தை ஒன்றுடன் பயணித்த இளம் தம்பதியினருக்கு நேர்ந்த கொடுமைதான். வாரங்களாக காய்ச்சலாலும் பேதியாலும் தவித்த அந்தக் குழந்தை எவ்வித மருத்துவ உதவியும் இல்லாமல் கொஞ்சங் கொஞ்சமாகச் செத்துப் போனதை கண்ணால் கண்ட அந்த அனுபவம் இப்போது திடீரென்று கிளர்ந்தெழுந்து உடலைச் சிலிர்க்க வைத்தது.

'பின்னாலை ஒரே ஒரு கார்தான் வந்துகொண்டிருக்கு. ஆனா எங்களுக்குப்பின்னாலையே வாறதைப்பாத்தாச் சந்தேகமாயிருக்கு...... நீங்கள் பின்னாலை பாக்காதையுங்கோ!'

சிவராமன் முதலாவது வசனத்தைச் சொல்லி வாய் மூடமுதல் மற்றவர்களிருவரும் திரும்பிப் பார்த்துவிட்டிருந்தார்கள். அவர்கள் இப்போது ஒரு நேர் வீதியில் போய்க்கொண்டிருந்தார்கள். கரைகளில் நிற்கும் மரங்கள் அக்கும்மிருட்டில் நெருக்கமாக நிற்கும் போர்வீரர்களை ஞாபகப்படுத்தின. வாகனம் இப்போது திடீரென்று வேகமெடுத்து ஓடத்தொடங்கி பின்னால் வந்த வாகனத்திற்கு இடையிலுள்ள இடைவெளியை அதிகரித்துக்கொள்ளத் தொடங்கியது.

'இப்ப ஒரு வளைவு வருது. நான் டக்கெண்டு காரை நிப்பாட்டுவன். நீங்கள் ரெண்டுபேரும் மினக்கெடாமல் றங்கி மரங்களுக்கை எங்கையாவது ஒளிஞ்சுகொள்ளுங்கோ!'

சிவராமன் சொன்னவுடன், தாசன் அவனிடம் எடுத்து நீட்டிய அவனது தோள்பையை வாங்கிக்கொண்டான் அவன். நிறுத்தப்பட்ட வாகனத்தின் வலதுபக்கக்கதவைத் திறந்துகொண்டு இருவரும் வெளியே பாயவும் வாகனம் சீறிக்கொண்டு வேகமெடுத்தது. கதவு நன்றாகச் சாத்தப்பட்டதா என்ற அவனுடைய சந்தேகத்தை வெளிப்படுத்தவும் நேரமில்லாமல் தாசன் அவனது கையை இழுத்துக்கொண்டு வேகமாக ஓடினான், சிங்கள இராணுவத்தின் விமானத்தின் சத்தம் கேட்டதும் ஒளித்துக்கொள்ள ஓடும் அவசரத்துடன்.

'எனக்குப் பின்னாலை ஓடி வாரும். . . . சிவா திரும்பிவந்து சிக்னல் தருவான். அதுவரையும் எங்கயாவது இருட்டுக்கை ஒழிச்சுநிப்பம்'

சொல்லிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்த தாசனுக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்கள் ஒன்றும் புதியதில்லை என்பதை அவனது சகஜமான பாவனையிலிருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அப்படிப்பட்டவனைத் தொடர்ந்து ஓடுவது இலகுவான விசயமாக இருக்கவில்லை. உருகியும் உருகாமலும் கண்ணாடிப்பதமாகவிருந்த பனி படர்ந்திருந்த நிலத்தில் கால்களை வைத்ததும் சளக்கென்று சில சென்ரிமீற்றர்கள் உள்ளே இறங்கின. அதைத்தாங்கக்கூடிய சப்பாத்துகளை அணிந்திராததால் அவனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையுயர்ந்த சப்பாத்துக்களுக்குள் மிக விரைவிலேயே ஸ்குளிர் நீர் நிறைந்தது.

- - - -

போரோஸ் புகையிரத நிலையத்தில் அந்தக் குளிர்கால முன்பகலில் அவர்கள் மூவரும் வந்து சேர்ந்தபோது கடந்த இரவைவிட ஒன்றும் அதிகமாக வெளித்திருக்கவில்லை.

'நான் சொன்னதைப்பற்றி நல்லா யோசியும். இப்பஜனபேர் ஐரோப்பாவிலை ஒரு நாட்டிலையிருந்து வேறை நாட்டுக்கு மாறிப்போய் பதியிறபடியால் ஒவ்வொருத்தரையும் வேறை ஏதாவது நாட்டிலை இருந்து வந்திருக்கிறாங்களோ எண்டு செக்பண்ணிறது வழக்கமாப் போயிட்டுது. ஆனபடியா நாங்கள் சொன்னமாதிரி நீர் அசைல் அடிக்கேக்கை வேற பேரிலை பதியிறது நல்லது.'

தான் வாங்கிவந்திருந்த பையிலிருந்து இனிப்புபணிஸ் ஒன்றை எடுத்துக்கொண்டு பையை அவனிடம் நீட்டியபடி சொன்னான் சிவராமன். அவனது முகத்தைப் பாராமலே அதை வாங்கிக்கொண்ட அவன் பதிலெதுவும் சொல்லவில்லை. அவனது பார்வை கண்ணாடிச் சுவருக்கு வெளியேயிருந்த கட்டிடத்தின் முகட்டுக்கு மேலாகத் தூரத்தே தெரிந்த தொழிற்சாலையொன்றின் புகைபோக்கியின் உச்சியிலேயே நிலைத்திருந்தது. பழுப்புநிறப் புகைகக்கிக்கொண்டிருந்த அதன்மேல் உட்கார்ந்துகொள்வதற்காக அதைச்சுற்றி பறந்தபடி சளைக்காமல் போராடிக்கொண்டிருந்தது ஒரு வெள்ளைப்பறவை. அப்பறவை அப்புகைபோக்கிக்கு மேலாகப்பறந்தால் உடனே செத்து விழுந்துவிடக்கூடுமென்ற எண்ணம் அவனைக் கவலைப்படவைத்தது. எதற்காக அந்த முட்டாள்பறவை அங்கே அலைகிறதென்று கோபத்துடன் நினைத்துக்கொண்டான்.

பேர் மாத்திக்கொள்ளிறதப்பற்றி நீர் கூடுதலா யோசிக்கிறீரெண்டு நினைக்கிறன். எல்லாம் உமக்குப் பெமிசன் கிடைக்கிறவரைக்குந்தானே! அதுக்குப்பிறகு கொஞ்சக்காலத்திலை காசைக்குடுத்து உம்மடை உண்மையான பேரையே புதுசா வச்சுக்கொள்ளலாம்'

டென்மார்க்கிலிருக்கும் அவனுடைய நண்பன் இந்திரலிங்கமும் இதேவிசயத்தைத்தான் அவன் சுவீடனுக்கு வரமுன்பு அங்கு தங்கியிருந்துபோது பல தடவைகள் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருந்தான். என்றாலும் முடிவெடுப்பது அவனுக்கொன்றும் இலகுவாக இல்லை. அவனது தந்தை அவனுக்குத் தான் வைத்த பெயரைப்பற்றி எவ்வளவு பெருமையாக இருக்கிறாரென்பதை அறிந்தவன் அவன். ஆனால் அவனுக்குத்தான் அப்பெயரில் ஒருவித வெறுப்பு. நண்பர்களிடையே நாகரீகமாக இல்லாத அந்தப்பெயர் பலதடவைகள் நக்கலடிக்கப்பட்டு அவனது ஆத்திரத்தைக் கிழறியிருக்கிறது. ஆனால் குடும்பத்தில் மூத்தமகனாகிவிட்டதால் தாங்கிக்கொள்ளவேண்டிய எத்தனையோ அன்புத்தொல்லைகளில் இதுவும் ஒன்று என்று அவன் நினைத்துக்கொள்வதுண்டு.

'ஊரிலை தெரியவந்தா அப்பா சரியாக் கவலைப்படுவார்'

'நீர் சொல்லிறது உண்மைதான். ஆனா பிடிபட்டுத் திரும்பிச் சிலோனுக்கு அனுப்பினால் உயிரோடை இருக்கிறதே நிச்சியமில்லை எண்டதோடை ஒப்பிட்டுப்பாரும்'

'வீட்டிலை இதையெல்லாம் விளங்கிக்கொள்ளமாட்டினம்'

'மேனை பிறந்து உனக்கு எங்கடை குலதெய்வம் முருகன்ரை பேரை வச்சாப்பிறகுதானடா எங்கடை குடும்பம் தலையெடுக்கத்தொடங்கினது. ஸ்டைலில்லையெண்டு அந்தப் பேரை அவமானமா நினையாதையப்பு' தந்தை எப்போதோ அவனுக்கு ஆறுதலாகச் சொன்ன வார்த்தைகள் இப்போ நினைவுக்கு வந்தன.

'இந்த ஊரில இருக்கிற ஒரு குடும்பத்தின்ர டெலிபோன் நம்பர் நாங்கள் தந்திருக்கிறமெல்லே நீர் அவையோடை பிறகு கதையும். உமக்கு வாற கடிதங்களுக்கு நீர் அவயின்ர விலாசத்தக் குடுத்தா வீட்டுக்கு இதைப்பற்றி ஆறுதலா எழுதலாம். . . . .அல்லது கொஞ்சக்காலத்துக்கு வீட்டுக்கு எழுதிற கடிதங்களை சுவிசுக்கு உமக்கு நம்பிக்கையானவற்ர அனுப்பி அவை மூலமா ஊருக்கு அனுப்பிவையும். ஒண்டு ஒண்டரை வருசத்துக்குள்ளை உமக்குப் பெமிசனெல்லாம் கிடைச்சிடும். அதுவரைக்குந்தானே!'

இவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போது குளியலறைக்குப் போயிருந்த தாசன் திரும்பிவந்தான்.

'ஜேம்ஸ்பொன்ட் படங்கள்மாதிரி காடுகளுக்கை ஓடவச்சிட்டுச் சிரிக்கிறியே!'


தன்னைப்பார்த்துச் சிரித்த சிவராமனைப் பொய்க்கோபத்துடன் திட்டிக்கொண்டே அவர்களிருவரின் அருகே வாங்கிலிலிருந்த பைக்குள்ளிருந்து பணிஸ் ஒன்றை எடுத்துக் கடிக்கத்தொடங்கினான்.

'ஸ்டொக்கோமில இருந்து வாற கோச்சி வாறதுக்கு இன்னும் கொஞ்ச நேரந்தான் இருக்கு. வந்த உடனை நீர் அதிலதான் வந்தமாதிரி இங்கையிருந்து நடந்து போய் பொலிசிலை அசைல் கேளும். நாங்கள் இனி வெளிக்கிட்டாத்தான் இரவுக்குள்ள டென்மார்க்குக்குத் திரும்பிப்போச் சேரலாம். நடந்து போற வழியிலையே வேற பேரிலை பதியிறதா எண்டதைப்பற்றி முடிவு செய்யும்'

சிவராமன் சொல்லிக்கொண்டே எழுந்து வெளியே போகும் வழியை நோக்கி நடந்தான். தாசனும் அவனைப் பின்தொடர்ந்தான்.

எப்பவாவது ஒரு நாள் நாங்கள் எங்கையாவது சந்திப்பம். குட் பாய்!"

செய்தி உண்மை. மற்றவை யாவும் கற்பனை!
□□□□





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழப்போர்கள் உக்கிரமாக முதல் எண்பதுகளின் ஆரம்பத்தில் பெர்லினில் வந்து இறங்கிய தமிழ்மக்களின் வாழ்க்கை பற்றியும் அவர்கள் வாழ்ந்த அகதிக்குடியிருப்புகளுடன் விடுதிகளுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புகளை ஏற்படுத்திய சிறிய கூறான ஜெர்மன் சுதேசிகள் பற்றியும் அவர்கள் பழக்கவழக்கங்கள் பற்றியும் சிறிய அளவில் நாவலில் குறிப்பிடப்படுகிறது. அது பரந்த அளவில் ஜெர்மனியரின் வாழ்வுநிலை பற்றிப்பேசும் மகோன்னதபடைப்பு என நான் எவ்விடத்திலும் பீற்றிக்கொள்ளவில்லை.

தமிழரசனோ , நட்சத்திரன் செவ்விந்தியனோ அதில் வரும் சபீனாவைப்போலவோ அல்லது மற்றப்பெண் பாத்திரத்தைப்போலவோதான் ஒரு சராசரி ஜெர்மன்காரியிருப்பாள் என்று விளங்கிக்கொள்ள முயன்றால் அது உங்கள் புரிதலிலும் விமர்சனப்பார்வையிலுள்ள கோளாறேயன்றி என்னதல்ல.

நான் என்ன எழுதியிருக்கிறேனோ அதற்குள் உள்ள குறை நிறைகளை ஆய்வதுதான் விமர்சனம்.. அதைவிடுத்து தமிழரசன் கி. ஜெர்மனியில் ரஷ்யஆதிக்கம் பற்றிக்குறிப்பிடுகிறேன் அமரிக்க பிரித்தானிய பிரான்சிய ஆதிக்கங்கள் மற்றும் உளவுத்துறை (அதுவும் முகவுரையில்) பற்றிப்பேசவில்லை என்று கூறுவதிலிருந்து அவர் பூக்கடையில் புண்ணாக்கு வாங்க வந்திருப்பதையே பார்க்கமுடிகிறது . அவரது ஆர்வங்கள் அவையாக இருக்கலாம். தப்பில்லை. எனில் அவர் அவை பற்றிப்பேசும் வேறு சரித்திர நூல்கள் எதிலாவது தன் திறனாய்வுகளைச் செய்திருக்கவேண்டும் .

போரின் பின்னால் ரஷ்யஆதிக்கத்திற்கு உட்பட்டுப்போன ஜெர்மனியருக்கும் மேற்கு ஜெர்மனியருக்கும் சமூகஉளவியலில் வளர்ச்சியில் (Social moralities and it's values) பெரிதும் வேறுபாடுகள் உண்டென்பதே சமூகாய்வாளர்கள் துணிபு. நாஸிஸம் இரண்டு ஜெர்மனிகளிலும் உண்டேயெனினும் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுப்போயிருந்த கிழக்கு ஜெர்மனியில்தான் இது ஓங்கிவளர்ந்துள்ளது என்பது இரகசியமேயல்ல.
ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த கி. ஜெர்மனியின் Nietz, Chemnitz, Dresden, போன்ற நகரங்களில்தான் வெளிநாட்டுக்காரர் நாஷிகளால் தாக்கப்படும் அபாயம் அதிகம். சோஷலிச அரசிருந்த அவுஸ்த்திரியாவை ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால் பார்க்கப்போய் நாஸிகளால் தாக்கப்பட்டு தலையில் தையல்போட்டுக்கொண்டு வந்த பேர்லின் தமிழர்களை தமிழரசன் அறியாமலிருக்க முடியாது. சமீபத்திய ஜெர்மன் தேர்தல் முடிவுகளை அவதானிக்கும் ஒருவரே கிழக்குப்பகுதியிலேயே நாஜிகள்-றிப்பப்ளிக்கானர்கள் அதிகளவு வாக்குக்கள் பெற்றுள்ளதைக் காணலாம். இந்த உண்மைகளைச் சொல்வதனால் மாத்திரம் ஒருவன் மார்க்ஸிய- பொதுவுடமைவாத விரோதியாகிவிடுகிறானா?

தமிழ் மக்கள் அகதிகளாக நாடுவிட்டு நாடுவருவதிற்கும் - எல்லைக்காவல் படைகளுக்கு அஞ்சி ஒடுங்கி, பனிக்குள்ளும் சேற்றுச்சகதிக்குள் புதையுண்டும், ஆற்றோடு அள்ளுப்பட்டும் போகும் அவலங்களிற்கும் இலங்கை பேரினவாத அரசுகளின் கொடுமைகளை விடவும் மே.ஜெர்மன் அரசே காரணம் என நிறுவ முனையும் அரசியல் ஞானம் எனக்கு வேண்டாம். நான் பாமரனாகவே இருந்துவிடுகிறேன் .

உலகில் எந்த நாட்டில்தான் நாஜிஸம்-பாஸிஸம் இல்லை? உலகில் யார்தான் எம்மை வாவென்று வரவேற்கிறார்கள்? அகதிகளை புறந்தள்ள முழுவுலகமுமே தயாராகவே இருக்கிறது என்பது ஏதும் இரகசியமான விடயமா? மே. ஜெர்மன் அரசு வெளிநாட்டவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளால் மாத்திரமல்ல உலகோடொத்த வியாகூலங்கள் பல எமக்குமுண்டு.

மே.ஜெர்மனி தனது அரசியல் கெடுபிடிகள், நெருக்குவாரங்களுக்குள்ளும் இலங்கைத்தமிழர் ஒரு இலட்சம் பேருக்கென்றாலும் அடைக்கலம் தந்திராவிட்டால் இன்று வன்னிப்பரப்பில் கூரைக்கும், இதர நுகர்பொருட்களுக்குமான பகிர்வுப்போட்டியும் வாழ்வுஅவலமும் இரட்டிப்பாகியிருந்திருக்கும். பகையேயாயினும் அவன் செய்த ஒரு நல்ல காரியத்தை நினைவுகூர்தல் என்ன பாவம்? நான் சொன்னது அதைத்தான். இதனால் நான் முதலாளித்துவ அடிவருடியாகிப்போகிறேன்.

மாமா எனக்கு வதிவிடம் தந்து சோறும் போட்டு வளர்த்ததை நான் நினைவு கூர்கிறேன். உன் செவியில் பிடித்தொருநாள் முறுக்கினாரே மறந்து போச்சா என்று கேட்கிறார் தமிழரசன். வித்தியாசம் அவ்வளவுதான்.
ஒரு நன்மை நினைவுகூரப்படுமென்று கூறினால் தீமைகள் மறைக்கவும் மறக்கவும் படுமென அர்த்தப்படுத்தி ஆர்ப்பரிப்பது திரிபுவாதம் அன்றி வேறென்ன?

வெளிநாட்டவருக்கு எதிராக ஜெர்மன் அரசு எடுக்கும் நடவடிக்கைகளை நான் நியாயப்படுத்தியிருந்தேனாயின் தமிழரசன் கூறுவது பொருத்தமாயிருக்கும்.
அதைவிடுத்து
முதலாளித்துவ அரசுகளுக்கு சாமரம் வீசுகிறேன் என்று கூவுவது அபத்தத்திலும் அபத்தம்.

என்னை ஒரு முதலாளித்துவ நலன்விரும்பியாக காட்ட நிறுவமுனையும் அவரது பகீரதப்பிரயத்னங்களை அடியுடன் சாய்க்க வல்ல ஒரேயொரு சிறிய கேள்வி இதோ தமிழரசனுக்கே முதலாளித்துவத்திலும் அவர்கள் முதலிலும் காதல் அதிகமென்பதை ருசுப்படுத்துகிறது.

தமிழரசன் போற்றிப்பரவும் சோஷலிச அரசுகள் நிலவும் ரஷ்யாவிலேயோ, (அன்று) கிழக்கு ஜெர்மனியிலோ , போலந்திலோ அல்லது இன்னொரு கிழக்கு ஐரோப்பிய நாடொன்றிலேயோ போய் அவர் அரசியல் தஞ்சம் கோராமல் இன்னும் அவர் மேற்கு ஜெர்மனியின் தாவாரத்தில் ஒதுங்கியிருப்பது ஏன்? இம்முதலாளித்து நாட்டின் முதலையும் , வசதிகளையும், உதவிகளையும் பிரியமுடியாதபடி அவருக்கது உள்;ளூர இனிப்பதால்தானே?

அடுத்தது பிராமணீய ஏடுகளின் மொழிக்கு பறிகொடுத்துவிட்டு ஈழத்து எழுத்து நடைக்காக பிச்சா பாத்திரம் ஏந்திநிக்கிறார் என்பது தொடர்பாக...............

எனது ஊராகிய புத்தூரிலேயே நாலு விதமான பேச்சுவழக்கிருக்கிறது. ஒருவருடன் ஐந்து நிமிஷம் உரையாடினாலே போதும். அவர் வாதவத்தையைச் சேர்ந்தவரா, நாரந்தனையைச் சேர்ந்தவரா, நவற்கீரியைச்சேர்ந்தவரா, புத்தர்கலட்டியைச்சேர்ந்தவரா என்பதைத்தெரிந்து கொண்டுவிடலாம்.

இரண்டு மலையாள திரைப்படங்களை அடுத்துப் பார்க்க நேர்ந்தால் அதிலே பொறுக்கிக்கொண்ட வார்த்தைகளை வைத்துக்கொண்டே தாகமாயிட்டுண்டு வெள்ளம் கொண்டா, ஊணு கழிஞ்சா, அச்சன் எவ்விட, எங்கன தாமசம் என்று வீட்டிலே மலையாளம் பேசுவோம் தமாஷாக.

அந்த வகையில் பிறிதொரு மொழியின் அழகைத்தரிசிக்க மறுக்கும் சிறுமையும் என்னிடமில்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதுடன் யாதும் மொழியே என்பதையும் சேர்த்துக்கொண்டுவிட்டேன்.

படைப்பில் நான் சொல்லவருவதை எந்தவொரு வார்த்தையால் அழகாகவும் அர்த்தப்பிறழ்ச்சியின்றியும் சொல்லமுடிகிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வார்த்தை எந்த நாட்டின் , எந்த பிரதேசத்தின் பேச்சுவழக்கு என்பதைக் கவனத்தில் கொள்ளாது பிரயோகிக்கின்றேன்.

வார்த்தைகள் எதிலும் அடங்கிவிடாத எண்ணங்கள், கற்பனைகள், தரிசனங்கள், அனுபவங்கள், ரசங்கள் , உணர்வுகளுடனுமான போராட்டம் என்னது. சமயங்களில் இவை அனைத்தையும் நான் காணுமாறே எழுத்தில் சிறைப்பிடிக்க வழக்கில் உள்ள வார்த்தைகள் போதவில்லையே எனத்தவிப்பது கூட உண்டு.
ஒரு கவிஞன் - நான் இன்னும் வார்த்தைகளுள் அகப்படாத மொழியையும், வார்த்தைகளுள் மறைந்து போய்விட்ட மொழியையும் தேடுகிறேன்- என்று கூறியபோது நம் அவஸ்த்தையின் ஒற்றுமை கண்டு அசந்து போனேன். தனித்தமிழில் எழுதுபவர்கள எழுதட்டும். தேச, பிரதேச வழக்குகளைப் பிழிந்து தருபவர்கள் தரட்டும். அவையும் சந்தேகமில்லாமல் சிறப்பான சீரிய முயற்சிகளேதான். அவர்களுக்கு என் சிரம் சாய்ந்த வணக்கங்கள்.

இது என் மொழி . அவ்வளவுதான்.

எல்லாம் அறிந்த நாகரீக பாசாங்கு என்னிடம் உள்ளதாகக்கூறுபவர் -பணத்தை அள்ளிவீசக்கூடிய ஒரு ∴ ப்ரண்ட் நாலுதரம் திருமணமானவனாகவோ, பன்னிரண்டு பிள்ளைகள் உள்ளவனாகவோ இருக்கலாம்- என்பது ஒரு Poetic exaggeration என்பதைப் புரியாது அறியாமையுடன் பன்னிரண்டு பிள்ளைகளுள்ளவனை எங்கே தேடுவதென்கிறார் தமிழரசன்!

இவ்வாறே தமிழரசன் தப்புத்தப்பாக அர்த்தப்படுத்திக்கொண்டு மேலும் பல விடயங்கள் பற்றி அதிகமாகவே பேசுகிறார்...................

1. கிழக்கு ஜெர்மன் மக்களின் வருகையை ஊக்குவிக்கவே அரசியில் தஞ்சம்கோரும் சட்டஉரிமையை மேற்கு ஜெர்மனி வழங்கியது.
அப்படியாயின் பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, சுவீடன் போன்ற இதர ஐரோப்பிய நாடுகள் எதற்கு அரசியல் தஞ்சம் கோர அனுமதிக்கின்றனவாம்?

2. இவர் பேசும் பெண்ணியவாதம் அறிவியற்களத்தில் தன்னைக் கொஞ்சம் அலங்கரித்துக்கொள்ளவே தேவைப்படுகிறது.

இவருக்கும் இப்பனுவல் பொருந்திவருகிறதா என்ன?

3. முதலாளித்துவத்தில் கொண்ட காதலாலேயே முதலாளித்துவ ஜெர்மன் அரசுக்கு சாமரம் வீசுகிறேன். சோழர்கள் பல்லவர்களுக்கு இணையான ஆதிக்க மனோபாவம், ஆளுமை , அரசாண்மை, இறைமை , முதலாளித்துவம், , ஏகபோகம் , இவற்றில் இவரது ஆழ்மனங்கொண்ட காதலாலேதான் இவர் சாதா தமிழ்மகனாக இராமல் தன்புனைபெயரிலாவது தமிழ் அரசனாக வாழ ஆசைப்படுவதைக்காட்டுகிறது.

4. என்னுடைய கலாச்சாரந்தான் சிறந்ததென்று பீற்றுகிறேன்.

இவ்வாறு அலறுபவர் தன் மெய்மறந்து கூறுகிறார். முன்னேற்றமடையாத விவசாய நாடுகள் மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளிலிருந்தும் முதலாளித்துவ ஜெர்மனிக்கு வருபவர்கள் மாட்டுவண்டியிலிருந்து பென்ஸ்காருக்கு குதித்த கதையாய் கலாச்சார அதிர்வுக்குள்ளாகிறார்களாம். ஒன்றை மாட்டுவண்டி எனவும் மற்றதை பென்ஸ்காரெனவும் விபரிக்கும் இக்கலாச்சார ஒப்பீடு எப்பிடியிருக்குதுங்கோ?

5. நீக்கிரோ என்பது ஆபிரிக்க மனிதனை இழிவுபடுத்தும் சொல்லாகும்.

உயிரியலாளரும், மானிடவியலாளரும் முழுமனித இனத்தையும் 5 பெரு வர்ணத்துள் வகைப்படுத்துகிறார்கள். அவை இந்தோ ரோபொயிட், அவுஸ்திரோலொயிட், கார்க்கசொயிட், மங்கலொயிட், நீகிரொயிட் என்பதாகும். நீகிரொயிட் என்பதன் சுருக்கப் பதமே நீகிரோ என்பது. ஒரு இனத்தின் பெயரைக் குறிப்பிடுவது அவர்களைப் பழிப்பதாகாது. ஒருவரை சிங்களவர் எனக்குறிப்பிடுவதோ, தமிழர் எனக்குறிப்பிடுவதோ பழிப்பதாகாது. பி.பி.சி யிலேயே Blacks என்கிறார்கள். அதுவும் பழிப்பதாகாது. யாரும் போர்க்கொடி தூக்கவுமில்லை.
வெறுமனே கானாக்காரன் என எழுதினால் கானா தேசத்தைப்பற்றி அறிந்திராத ஒரு வாசகன் அவனையும் ஒரு வெள்ளை ஐரோப்பியன் எனக்கருதும் வாய்ப்புண்டு. நீகிரோவர் என்ற வாரத்தையின் பிரயோகத்தை அறிவார்ந்த தளத்தில் நோக்குவதே நமக்கு விருப்பம். பாமரத்தனமான முறையில் புரிதல் , பொருள் கொள்ளும்போது அது இழிவுச்சொல்லாகவோ தரக்குறைவானதாகவோ தோற்றமளிக்கலாம்.
எந்தவகையில் விமர்சகர் பொருள்கொள்கிறார் என்பது அவர் தான் எங்கு நிற்கிறார் என்பதைக் காட்டிக்கொள்வதாகும்.

6. பாலியல் விடயமாக விமர்சகர் வரிக்குவரி குத்துக்கரணம் அடிப்பதால் அதுபற்றித் தனக்கு என்ன கருத்து உண்டென்பதை இறுதிவரை சொல்லாமலே சொதப்பிப் போகிறார்.
(அ) செக்ஸ் நல்ல விஷயந்தான், இயல்பானதுதான், வேண்டியதுதான் இதனை வெறுப்பதாகச் சொல்வது வெறும் ஆசாரப்பாவனையே என்று பொழிகிறார் ஒரு இடத்தில் (செக்ஸை வெறுப்பதாக இவரிடம் சொன்னது யாரோ? இடந்தெரியாமல் தடம் புரள்கிறாரே?).
(ஆ) நமது சமூகத்தில் விபச்சாரிகளிடம் போவது இருக்கவில்லையென்று ஒரு கொம்பனாலும் சொல்லமுடியாதென்கிறார் இன்னொரிடத்தில்.
(இ) முதலாளித்துவ சமூதாயத்தில் செக்ஸ் ஒரு வியாபாரப்பண்டம் ஆகிப்போய்விட்டதால் விபச்சாரம் இத்தனை வளர்ந்துவிட்டது என்கிறார். (சோசலிஸ நாடுகளில் விபச்சாரம் இல்லை என்பதுதான் அவர் துணிவு போலும்!)
(ஈ) திலகன் சபீனாவுடன் உறவுகொள்கின்றான் என்றவுடன் (அத்வைதத்தின் பெயரைக்கொண்ட அத்வைதனே சபீனாவுடன் உறவு கொள்கிறான் என்கிறார் தப்பாக. இஃதே இவர் எத்தனை மேம்போக்காக நாவலைப் படித்தருக்கிறார் என்பதற்கு அத்தாட்சி.) ஊரில் காதலி இருக்க சபீனாவுடன் சோரம்போகிறானே என்று அலறி முறைகேடான உறவு சோரந்தான் என்பதை அவர் வாயாலேயே ஒத்துக்கொண்டுவிடுகிறார்.
திலகன் சோரம் போவதை ஆணாதிக்க மனோபாவத்தால் நியாயப்படுத்துவதாக அபவாதம் வேறு சொல்கிறார். நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்வது மட்டுமே நியாயப்படுத்துவதாகுமா?

விமர்சகருக்கு புரிதல் போதவில்லை.

ஒரு நல்ல விமர்சகன் எதேச்சாதிகாரமுள்ள நீதிபதியாக இருத்தல் அசாத்தியம்.
அபாண்டங்கள், அபவாதம், ஒருதளப்பார்வை தவிர்த்துப் படைப்புக்களை இன்னும் ஆழ்ந்தும் நுணுகியும் பார்க்கும் ஆற்றலும், பக்குவமும் வாய்த்த பின்னால் முயல்வாரயின் தமிழரசனும் இத்துறையில் தேறலாம். வாழ்த்துக்கள்!

மீதி அவர் விளாசல்கள் நூல் விமர்சனம் சம்பந்தப்படாத விசிறல்களாக இருப்பதாலும், இத்தகு சொதப்பலான விமர்சனங்களுடன் மேலும் வினைக்கெடவோ, கவனம் கொள்ளவோ தற்போது முடியாதிருப்பதாலும் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

-அம்மா-வில் நயாகரனின் எழுத்துக்களைப் படித்த அளவில் சில விஷயங்கள் அவருக்கு வேறு கலரில் தெரிகிறதுபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகள் அடங்கிய அந்த இடத்தை.... அவள் நிச்சயமாக விளங்கிக்கொள்வாள்.

அவளைப்போல அழகான கைகள் எனக்கும் இருக்க வேண்டும். அவளுடன் சேர்ந்து பொம்மைகளுடன் விளையாட வேண்டும். அவளைப்போல் அழகான கால்கள் எனக்கு இருக்கவேண்டும். இந்தப் பழைய பைன்மரங்களில் ஏறக் கூடியனவாய்....

○

இன்னும் ஒரு மணித்தியானத்தில் அவர்கள் போகப் போகிறார்கள். தங்கள் விடுமுறையைக் கழிப்பதற்காய் தெற்கு நோக்கி விமானத்தில் பறக்கப் போகிறார்கள். அவர்கள் மூன்றுபேரும் மட்டும். எனக்கு இது தெரியாது என்பதே அவர்களின் நினைப்பு. ஆனால், எனக்குத் தெரியும். சில மாதங்களுக்கு முன் ஒரு இரவு அப்பாவும் அம்மாவும் இதைப் பற்றி கதைத்தார்கள். அப்பா என்னையும் கூட்டிக்கொண்டு போக விரும்பினார்.

இப்பொழுது அம்மாவின் முறை. அம்மா அப்பா தன்னைத் தவறாக நினைத்து விடாமல் விளக்கவேண்டியிருந்தது. மிகக் கவனமாக விளக்கவேண்டியிருந்தது.

'அவளைக் கூட்டிக்கொண்டு போக எனக்கும் விருப்பம்தான். அது உங்களுக்கும் தெரியும்தானே. ஆனால், அதனால் ஏற்படப்போகும் கஷ்டங்களைப்பற்றி யோசித்துப் பாருங்கள். நாங்கள் மூன்றுபேரும் சந்தோசமாக இருப்பதற்காகவே இப் பயணத்தை ஆயத்துப் படுத்தினோம். அதுவும் நிறையப் பணம் செலவழித்து. அங்கு வருவோர்கூட எங்களைப் போலவே நிறையப் பணம் செலவழித்து, சந்தோசமாக இருக்கவே வருகிறார்கள். அவர்களையும் நாம் குழப்பக் கூடாது. எனவே அந்தச் சூழல் எங்கள் மகளுக்கு ஏற்றதல்ல.

அம்மா அப்பாவை இன்னும் அமைதிப்படுத்தினார். இந்தப் பத்து நாட்களும் தங்கள் மகளைப் பராமரிப்பு நிலையத்தில் கொண்டுபோய் விடலாமாம். அவள் அங்கே நன்றாகப் பராமரிக்கப் படுவாளாம். அப்பா அங்கே சென்று நேரிலே பார்த்தவராம்.

அம்மா சொல்வதும் சரியென்றே அப்பாவுக்கும் பட்டது. தன் மகளுக்காக.... அவளது சந்தோசத்துக்காக..... அவளை விட்டுச் செல்வது சுயநலமாகாது என அப்பா நினைத்தார்போலும்!

தாம் திரும்பி வரும்போது ஏதாவது பரிசு கொண்டு வரலாம் எனத் தீர்மானித்தனர். அங்கேயிருந்து இயற்கைக் காட்சிகளைக் கொண்டுவர முடியாவிட்டாலும், சிலவேளை கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் கறுப்புக் கண்ணாடி.

அவர்கள் இருவரும் கொஞ்ச நாட்களாகவே நிறையக் கதைத்தார்கள். சில சமயங்களில் சண்டையும் பிடித்தார்கள். என்னால்த்தான்.... என்னால்த்தான் இவையெல்லாம் என என்னால் உணர முடிகிறது. எனினும், நான் ஒரு பிழையும் விடவில்லை. அது எனக்குத் தெரியும். சூரியன் அந்தப் பைன்மரங்களுக்கு வெப்பத்தைக் கொடுக்கிறது. எவ்வளவு ரம்மியமான காட்சி அது! எனக்கு அப் பைன்மரங்களாக இருக்க விருப்பம். ஒன்றுக்கொன்று ஆதரவாய்.... ஒன்றையொன்று புரிந்துகொண்டு.... மிக சந்தோசமாய்.... ஒற்றுமையாய்..... புதுப்பொலிவுடன்..... அப்பொழுதுதான் தம் வேர்களில் இருந்து வளர்ந்து வந்தவைபோல் மிக அழகாக காட்சியளிக்கின்றன.

நான் ஒருமுறைக்குப் போகாவிட்டால் பரவாயில்லை. அவர்கள் தனியே இருக்க விரும்புகிறார்கள்.

அவர்கள் மூவரும் மட்டும்!

அவர்கள் பார்த்து ரசிக்கப்போகும் அந்த நீலக் கடலில் நான் பார்ப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஏனெனில் நான் நிறமங்கல் உடையவள்.

.○


*இச் சிறுகதை பற்றி.....*
*1990ஆம் ஆண்டு பரிசு பெற்ற 10 சிறுகதைகளில் ஒன்று. இக் கதை 3ஆம் பரிசைப் பெற்றது. Ngr Livet Begynder' (வாழ்க்கை தொடங்கும்போது) என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.*

○


**கி. கிறிஸ்ரியனின் இரண்டு நூல்கள்**




**'உள்ளத்தில் மட்டும்'**
- குறுநாவல்கள் -



**திருப்பம்**
-சிறுகதைத்தொகுதி -

தொடர்புகளுக்கு
**M.G. Christian**
**3, Villa Guy de Maupassant**
**91860 Epinay Sous Senart**
**France**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## – தர்மினி –

'அவங்கள் கூப்பிடேயிக்க பதுமையா நடந்து வா. நான்தானொரு ஆள் எண்ட மாதிரி நெஞ்சு நிமிர்த்திக் கொண்டு, தலையச்சி ிலிப்பிக் கொண்டு போகாத'

இந்த மனிசி இப்பிடித்தான், இடம், பொருள், ஏவல் தெரியாமல் கதைக்கிறது. இதுதான் இவவோட தாண்டிக்குளம் தாண்டமாட்டனெண்டு சொன்னனான். சும்மாயிருக்கிற எனக்கு உலைவைக்கிற மாதிரி நடுங்குவா. இன்னும் எங்கட முறை வரேல. சனங்கள் விபரம் சொல்லிப் பதியுதுகள். கிழவங்களையும் சேட்டுக் கழட்டி அடையாளங்கள் பார்த்துப் பதியுறாங்கள். எங்கட ஆட்களுக்கு கதையொண்டும் விளங்குதில்லை. சின்னக்கவுண்டர், பெரிய கவுண்டர், நாட்டாமை எல்லாப் படமும் பார்க்கிறாங்கள். கோவை சரளாவும், லூஸ்மோகனும் கதைக்கிறது மட்டும் விளங்குது.

'சட்டையக் கழட்டுடா'
'என்னடா காயம்'
'ஷெல் பீஸ் பட்டது சேர்'
'உண்மையச் சொல்லுடா'
'பள்ளிக்கூடம் போய்ற்று வரேக்க ஷெல் விழுந்தது சேர்'
'டேய் உண்மயச் சொல்லுடா. இல்லேன்னா ரொம்பக் கஷ்டப்படுவ'

'ஐயோ கடவுளே! இவளுக்கு நான் சொன்னனான். தலைய இப்பிடி வெட்டாதயடி அவளவையள் மாதிரிக் கிடக்குமெண்டு. என்ர சொல்லக் கேட்டாளா?'

'அம்மா சும்மாயிருங்க இப்ப ஏன் ஒப்பாரி வைக்கிறீங்க'

'அங்க பாரடி சும்மா அந்தப் பொடியன வெருட்டுறாங்கள். தாய் தகப்பன் இல்லாமத் தட்டத்தனிய வந்த பொடியன் போல'

'அதுக்கேனம்மா என்ர தலைவெட்டுக்கதை உங்களுக்கு?'

'பின்ன என்ன? உன்ர தலை வெட்டுக்காகத்தானே வவுனியாவால கொண்டுபோகப் பயந்து கடலையும், தண்ணியையும் பார்க்காமல் வெளிக்கிட்டனான் இங்கால. களவெடுத்த மாதிரிப் பார்வையும், பொம்பிளைப்பிள்ள மாதிரியா நடக்கிறாய்?'

'நான் என்ன செய்தனான்? நான் ஏன் இவங்களுக்குப் பயப்பிடவேணும்? சும்மா வெருளாதையுங்கம்மா'

நேற்று ராத்திரி முழுக்க நித்திரையில்ல. ஆனாலும் இண்டைக்கும் நித்திரை இல்லாமல் அம்மா கதைச்சுக்கொண்டு இருக்கிறா.

'எடி தங்கைச்சி'
'என்ன?'
'எனக்கெண்டால் விசராக்கிடக்கு. போட்டுக்கு ஆயிரக்கணக்கில குடுத்து வந்தும் நிம்மதியில்லாமலிருக்கு. நானும் வெளிக்கிட்டது இங்கால கொண்டுவந்து அண்ணன் மாரிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டால் எனக்கு நிம்மதியெண்டுதான். அந்த மனுசனுக்கு நடந்த மாதிரி எனக்கொண்டு நடந்தால் நீ அந்தரிச்சுப் போவாயெண்டுதான் நேவியையும் கடலையும் பார்க்காமல் வெளிக்கிட்டனான். இப்ப என்னடா எண்டால் இதுவும் நிம்மதியாவா இருக்கு. தங்கைச்சி'

'என்ன?'
'எடி பிள்ள'
'இப்ப என்ன சொல்றீங்க?'
'மல்லாவிக்குத் திரும்பிப் போவமா? போட் ஏதும் கிடைக்குமா? போகலாமோ?'
'இல்ல. சி.ரி.பி ஓடுதாம்'
'அங்க ஆமிக்குப் பயமெண்டு இங்க வந்தால், இங்கயும் வெட்டுறாங்கள் பயமாக் கிடக்கு. இதவிட ஏதோ நம்மிட தண்ணியக் குடிச்சுப்போட்டு, அவன் மேலால போட்டால் ஒரேயடியாப் போய்ச் சேந்திடலாம்போல இருக்கு.'

அம்மா மாதிரி வயசான ஆட்கள் இப்பிடித்தான் வர்றதுக்குப் பட்ட கஷ்டங்களை மறந்திற்றும் கதைப்பினம். பக்கத்தில இருக்கிற ஆட்களின்ர ஊர், பெயர் கேட்டு மெல்ல மெல்ல சூழ்நிலைக்குப் பழகியாச்சு. ஓடி ஓடித் திரிஞ்சு வந்த களைப்பெல்லாம் தீர்ந்தாப்பிறகு இனியென்ன எண்டதுதான் எல்லாருக்கும். இளம் பொடியங்கள் வெளிநாட்டுக் காசையும், ரெலிபோனையும் நம்பித்தான்.

எங்கட இடத்துக்கு முன்னுக்கு வேம்புகள் இருக்குது. அக்கம் பக்கத்துச் சனங்கள் கூடிக்கூடியிருந்து கதைச்சபடி. நானும் அம்மாவும் மத்தியானங்களில சாப்பிட்டாப் பிறகு இந்த வேம்புக்குக் கீழ இருந்துதான் கதைக்கிறது.

'அக்கரைக்கு இக்கரை பச்சையெண்டது உண்மைதான் பிள்ளை.'

'இல்ல, இப்ப ரெண்டு ஷெல் சத்தம் கேட்டுதெண்டால் அங்க கிடந்து உருண்டு பிரண்டதெல்லாம் ஞாபகம் வரும்.'

'பின்ன என்ன? அங்க மனிசருக்கு நிம்மதியில்லை எண்டு இங்க வந்தால் இங்கயும் நிம்மதியா நித்திர வருகுதா? உன்னை அவங்களிட்டை அனுப்பிப் பேட்டனெண்டால், பெரிய நிம்மதியா அங்க நம்மிட ஊரில ஒரு மாமரத்துக்குக் கீழயாவது இருப்பன். நேற்றுப் போனில உன்ர கொண்ணன் என்ன சொன்னவன்? கொஞ்சம் பொறுக்கட்டாமோ? பழையபடி அங்கேயும் போய் ஊர் வேலைதானாமோ அவனுக்கு? மற்றப் பொடியங்களைப் பார். ரெண்டு மூண்டு சகோதரங்களுக்கு சீதனம் குடுத்து எடுப்பிச்சுப் போடுறாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஒருத்தியக் கூப்பிடக் கஷ்டமாக் கிடக்காமோ?'

இப்பிடித்தான் அனேகமான தாய், தகப்பன், சொந்தபந்தமெல்லாம் நினைக்கிறது. அங்கயிருக்கேக்க பாக்கவேணும். அடிக்கடி கொழும்புக்கும் வவுனியாவுக்கும் போய் 'வந்திட்டன் காசு அனுப்பு' ஒரு வசனம். திரும்பி வரேக்க அரைவாசிக் கொழும்பை அள்ளிக்கொண்டு வருவினம். 'உங்களுக்கென்ன ஹலோ எண்டால் கிலோவில கிடைக்கும்' ஊரில ஏத்திவிட, "இந்தா, கொழும்பில இருந்து கொண்டுவந்த துணி, செருப்பு' விலாசமா விசுறுவினம்.

'அம்மா ஏன் இப்ப அவசரப் படுறீங்க? ஓடித் திரிஞ்ச களைப்புத் தீர மூச்சு விடுங்க.'

திடீரெண்டு ஒரு நாள் யாழ்ப்பாணத்த விட்டு மூட்ட முடிச்சோட வெளிக்கிட்டால், போற இடம் தெரியாது. ஒண்டவிட்ட ரெண்டவிட்ட சொந்தங்களையெல்லாம் தேடித் திரிஞ்சு போனால் 'அந்தரப்பட்டு வந்து நிக்கிறீங்களே' எண்டு ஒரு கொட்டில் போட்டுத் தந்து குடியிருத்திச்சுதுகள். நான் அடிக்கடி யோசிக்கிறனான், இதே வன்னியாட்கள் பிரச்சினையெண்டு யாழ்ப்பாணத்துக்கு ஓடி வந்தால், எங்கட யாழ்ப்பாணத்தார் என்னமாதிரிக் கவனிப்பினம்? வன்னிச் சனம் கொட்டிலிலை இருந்தாலும் இடமில்லையெண்டு சொல்லாமல் தாங்கள் முத்தத்திலை படுத்துக் கொள்ளுங்கள். யாழ்ப்பாணத்தார் ஆளுக்கொரு றூமில் இருந்துகொண்டு வசதி இல்லையெண்டு கூசாமல் சொல்லுற சனங்கள்.



பிறகு அங்க பிரச்சினை தொடங்க, ஒருத்தரப் பாத்து ஒருத்தரா இஞ்சால வெளிக்கிடத் தொடங்கியாச்சு. அது பெரிய ஸ்ரோறி.

'வாற புதன் எல்லாம் சரியாக இருந்தால் போகலாம்' பக்கெண்டுது. இன்னும் ஒரு கிழமை இருக்குது. அதுவரையிலும் இந்தக் கடற்கரையில, தெரியாத இடத்தில என்ன செய்யிறது.

இப்படித்தான் எங்கட நாட்டிலை திடீர் - திடீரெண்டு பெயர் தெரியாமல் இருந்த இடங்களெல்லாம் ∴பேமஸ் ஆகியிரும். இப்ப இந்தச் சின்ன ஊரும் அதில ஒண்டு. எங்களமாதிரி ஒவ்வொரு இடமாக மூட்டை முடிச்சக்களோட ஓடி ஓடிக் களைச்சுப் போனதால 'ஒரு ராத்திரி உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு பயணம் செய்தாப் போதும்' இதுதான் எல்லாரோட நினைப்பும். அந்தஸ்த்து வேறுபாடே இல்லாமல் சனமெல்லாம் பனை வடலிகளுக்கும், வேம்புகளுக்கும் கீழ கூட்டங் கூட்டமாக போட்டில இடத்துக்காகக் காத்துக்கொண்டு. சிலபேர் மாசக்கணக்காகக் காவலாம். அம்மாவும் நானும் நடுறோட்டில. சீ.... கடற்கரையில.

'என்ன பிள்ளை போட் போகாதாமே?'
'இப்படி நாங்க நினைச்சவுடனே போக இயலாதாம். பார்க்கத் தெரியேல்லையே இவ்வளவு சனங்களையும். ஒரு கிழமைக்குக் கடலைப் பாத்தபடி காவல் இருக்க வேண்டியதுதான். பஸ் நிற்க ஏறிப்போறது மாதிரி நினைச்சு வந்தது எங்கட பிழை'

இடைக்கிடை போன போட்டுகள் இடையில பழுதாகித் திரும்பியும் வரும். நேவியிட்ட பிடிபடும். சனங்கள் முன்னுக்கு வச்ச காலத் தூக்கி ரெண்டடிகள் பின்னுக்கு வச்சிட்டு, கொஞ்ச நேரத்தில 'துணிஞ்சு' ஏற வேண்டியதுதான். ஆளையாள் சொல்லிக் கொள்வினம். இதுக்கிடையில அம்மா போட்காரனட்டப் போய் ரெண்டாயிரத்தைக் கூடுதலாகக் குடுத்து 'தம்பி ஆண்துணை இல்லாதனாங்க கட்டாயம் புதன் உம்முட போட்டில ஏத்திப்போடவேணும்' எண்டு சொல்லிப்போட்டு வந்திட்டா. கையில வெளிநாட்டுக்காசு இருந்தது நல்லதாகப் போய்ற்று. ஆனால் நிற்கிற சனத்தைப் பார்த்தால் வாற புதனும் சந்தேகம்போலக் கிடக்கு.

'இண்டைக்கு போக ஏலாது. நேவி ஓட்டமாத் தெரியுது. அதோட ரெண்டு நாளைக்கு காத்தும் ஒரு மாதிரியாக இருக்கு' ஓட்டி சொல்ல விசர் பிடிக்காத குறை. என்னடா இது கடற்காத்து, தண்ணிப் பஞ்சத்தில குளிக்காத கடி, பத்தைகள், சோறில்லை. இனி அவ்வளவுதூரம் திரும்பி என்னண்டு மல்லாவி போறது. பக்கத்தில ஒரு வேதக்கோயில். சனங்கள உள்ளுக்குப் போய் இருக்க விடாமல் பூட்டி வச்சிருக்கிறாங்கள். கோயில் தென்னைகளுக்குக் கீழயும் இருக்க விடுகிறாங்களில்லை. கோயிலும், வளவும் ஊத்தையாப் போயிருமாம். 'உங்கட கோயிலுக்கு மேல ஷெல் விழும் இருந்து பாருங்க' எண்டு நான் சொல்லிப்போட்டு, கடற்கரையில வடலிகளுக்கடியில அம்மாவோட வந்திருந்தனான். எங்களோட நாலைஞ்சு குடும்பங்களும் சேர்ந்திருந்தம். 'ஷெல் பட்டுச் செத்திருக்கலாம் போல இருக்கு' அடிக்கடி இந்த வசனம்தான் அங்க கேட்கும்.

ஒருமாதிரி நாங்க பயணம் வெளிக்கிட்டாச்சு. மினிபஸ்ஸில அடைஞ்சமாதிரிச் சனம். கரையில நிண்டவரையும் கடலுக்க கால் வச்சாப் போதுமெண்டிருந்த எனக்கு இப்பதான் பயம் வருகுது. நெடுந்தீவு, கிளாலி.... நேவி பிடிச்சால் வெட்டுவானோ? போட்டுக்கு ஒரு சூடு பட்டால் காணும் கதை முடிஞ்சுது. நல்ல கொண்டிசனான போட்டுகளை கடலுக்க இறக்க மாட்டாங்களாம், அகப்பட்டால் நட்டமெண்டு. எல்லோரும் ஆடாமல் அசையாமல் முழிசினபடி.

பக்கத்தில இருந்த அம்மா நடுங்கினபடி 'தங்கைச்சி நல்ல படியாய் போய்ச் சேர்ந்திட்டால் வேளாங்கண்ணி மாதாவுக்கு ரெண்டு பவுணில சங்கிலி போடவேணும்' நடுக் கடலில வச்சுச் சொல்லுறா.

'அம்மா'
'ம்......'
'அம்மோய்'
'என்னடி?'
'வேளாங்கண்ணி மாதாவுக்குச் சங்கிலி போடவேணும் எண்டீங்க'
'ஓம் பிள்ளை, அஞ்சாவது றூம் மனிசி பைப்படியில சொன்னது, தாங்க வாற கிழமை போறதெண்டு, நானும் போகவோ?'

'அப்ப திரும்பிப் போறது என்ன மாதிரி?'
'துணிஞ்சு இந்தக் கடலிலயே வந்திட்டமாம் பிறகென்ன?'
'அதைத்தானம்மா நினைச்சுக் கொண்டிருந்தன். நாங்க எதுக்குப் பயப்பிட வேணும். நீங்க ஒண்டுக்கும் யோசிக்காதையுங்க. என்கொரு பயமுமில்லை. உங்களுக்குப் பயந்து பயந்து பழகிப் போச்சு. இஞ்ச எவ்வளவு படிக்கலாம். ஒண்டரை வருசமாக என்ர படிப்பு பாழாப் போச்சு. நான் படிக்கப் போறன்.'

அம்மாவும் இப்ப அக்கம் பக்கத்து ஆட்களோடயும் நல்ல ஒட்டு. முன்னுக்கு இருக்கிற தியட்டரில பழைய படம் ஏதோ ஓடுதாம். நானும் அம்மாவும் பின்னேரம் போறம்.

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- நிருபா -**



அவளுக்குக் காற்றென்றால் மிகவும் பிடிக்கும். கடற்கரைக்காற்று! லீவுநாட்கள் எப்போது வருமென்று காத்திருப்பாள். நகரத்தில் வசிக்கும் அவள் ஐநூறு கிலோமீற்றர்களையும் தாண்டி கடலுக்கு வருவாள். மணிக்கணக்காகக் காற்றுடன் கலந்திருப்பாள். கடும் குளிர்காலங்களைத்தவிர மற்றய நாட்களை காற்றோடு கழித்தாள். அவள் தனது நண்பிகளையும் விட்டுவைப்பதில்லை. "சோம்பேறியள் நீங்கள். வெளிக்கிடுங்கோ கடலுக்குப் போவம்" என்பாள். சிலர் விரும்பிச் செல்வார்கள். சிலர் இவளது கரைச்சல் தாங்கமுடியாது செல்வார்கள்.
அந்த நகரத்திலுள்ள பூங்காக்கள், குளக்கரைகள், மரங்கள் நிறைந்த சாலைகள் வேறு எங்கு காற்று சுதந்திரமாக அசைந்தாடுகிறதோ அங்கெல்லாம் அவள் நூற்றுக்கணக்கான நிமிடங்களை காற்றோடு வாழ்ந்தாள்.
குளிர்காலத்தில்கூட யன்னல்களைத் திறந்துவிட்டு ஆழமாக உறங்குவாள். மாலை நேரங்களில் வேலையால் திரும்பியவள் சில கணங்கள் திறந்த யன்னல்களுக்கு வெளியே முகத்தை நீட்டி காற்றோடு பேசுவாள்.
சில தினங்களில் காலை ஐந்துமணிக்குத் துயில் கலைத்து சில மரங்கள் நிறைந்த சாலையில் நடந்தாள் காற்றைக் காண. கிராமத்துக் காற்று, புயற்காற்று, வயல்வெளிக்காற்று, கடற்கரைக் காற்று, அமைதியான காற்று..... இப்படியே காற்றைப் பற்றி கதையாக கனவாக காற்றாகியிருந்தாள்.

அவள் மழையில் நிறைய மனங்கொண்டிருந்தாள். இலையுதிர் காலங்களில் நிறையவே மழைபெய்யும் என்பதனைத் தெரிந்து வைத்திருந்தவள் அந்தக் காலங்களிற்காகக் காத்துக் கிடந்தாள். மழையிலிருந்து ஒதுங்கிக்கொள்ள தொப்பி, குடை, மழைக் கோர்ட் எதனையும் அவள் பாவிப்பதில்லை. தலையில் பொழிய ஆடைகள் குளிக்க மனங்குளிர்ந்து மழையோடு உறவுகொண்டாள்.
இலைகள் தம்மை இழந்து அழிய இருள்காலம் அல்லது குளிர்காலம் வந்துதொலையும். தனக்குள் அழும் வானம். தன்னை வருத்தி பஞ்சுகளைச்செய்து பனிகளாய்த் தரைக்கு எறியும். தன் சினம் போக்கும்?
'இயற்கையே உன்னை நான் எப்படிப் புரிந்துகொள்ள?" என்பாள்.
"படித்தால் எல்லாம் விளக்கமாகப் புரிந்துவிடும்." என்று பகிடியாக நான் கூறினேன்.
'உங்களுக்கு இயற்கைமீது ரசனையே இல்லையா? நீங்கள் எதையும் ரசித்ததாகத் தெரியவில்லையே"
'ஒவ்வொருத்தரும் வெவ்வேறு விதமாக ரசிப்பார்கள். ஏனக்கு ரசனை இல்லை என்று நீங்கள் எப்படிக் கூறமுடியும்?"
"ஒரு விடயத்தை நாம் ரசிக்கிறோம் என்றால் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும். அசைவுகளில், முகபாவனைகளில், வார்த்தைகளில்..... இப்படி எதுவுமே இல்லாமல் எப்படி ரசிப்பது? உங்களைப்போல் ரசனை இல்லாமல் என்னால் இருக்க முடியாது."
'என்னைப் பற்றி என்னைவிட அதிகம் தெரிந்துவைத்திருக்கிறீர்கள். நன்றி" நான் நறுக்கென்று முடித்துக்கொண்டேன். இது எனது இயல்பு.

கிராமத்தில் குடிசையில் வாழ்ந்தாளாம். மழை சோவென்று பெய்யும் நாட்களில் படிப்பையும் கட் அடித்துவிட்டு மழையை ரசித்தாளாம். மழையில் குளித்து அடியும் வாங்கினாளாம். பின் காய்ச்சலில்.
'சிறு துளிகளாகப் பெய்யும் மழை பிடிக்காது. சோவென்று ஊத்தித்தள்ளவேண்டும். அதுதான் மனதிற்கு அமைதியைத்தரும். அப்போது மனசில் எவ்வளவு ஆசைதோன்றும்?'

மரங்கள் மீதும், பூக்கள் மீதும், தாவரங்கள் மீதும் பிரியம் வைத்திருந்தாள். தனது சிறிய அறையில் பல விதமான தாவரங்களை வாழவைத்தாள். ஒவ்வொருநாளும் அவர்களுடன் உரையாடினாள். அவர்கள் பூக்களை வழங்கும்போதும் இலைகளை விரிக்கும்போதும் மனம்மகிழ்ந்தாள். லீவுநாட்களில் வெளியேசெல்லும்போது அவர்களைக் கவனிப்பதற்கு என்னைப் பொறுப்பாக்கினாள். இடையிடையே எனது பொறுப்பின்மை வெளிப்பட்டது. ஒருதடவை தண்ணீர் ஊற்ற நான் மறந்துவிட்டேன். அவள் திரும்பி வந்தபோது அவள் செவ்வரத்தை அரை உயிரை விட்டிருந்தது. எவ்வளவு முயற்சிசெய்தோம். செவ்வரத்தை செத்தேபோனது. அவள் சில தினங்கள் என்னுடன் கதைக்கவில்லை இன்னுமொரு செவ்வரத்தையை வழங்கியும்கூட! நான் சாகடித்தது பற்றியகதை தொடர்ந்தவண்ணமே இருந்தது.
ஊரிலிருந்து வேப்பங்கொட்டைகள் கொண்டுவந்தாள். மூன்றை முளைக்கவைத்தாள். அவற்றில் ஒன்றுதான் உயிர்த்தது. அதன் ஒவ்வொரு வளர்ச்சியிலும் ஆனந்தம்கொண்டாள். தோழிகள் வரும்போது தனது குழந்தையைப்போல் வேப்பங்குட்டியைக் காண்பிப்பாள்.

தாவரங்களை நேசித்தவள் அவர்களினால் ஆக்கப்பட்ட மருந்துகளில் நம்பிக்கைகொண்டிருந்தாள். அவைகளைமட்டுமே உள்வாங்கினாள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம் கொண்டிருந்தாள். விடுதலை என்பதில் மோகம். ஆம்! அளவில்லா மோகம்! விடுதலை உணர்வு அவள் உயிரில் உறைந்திருந்தது. ஆண், பெண், கறுப்பு, வெள்ளை, சாதி மத பேதங்களின்றி அனைத்து மனிதர்களும் எல்லா உரிமைகளுடனும் சமத்துவமாக வாழவேண்டும் என்பதே அவள் முதற்கொள்கையாகவிருந்தது.
அவளது உரையாடல்கள் ஆரம்பத்தில் விளங்கிக்கொள்ள முடியாதவையாயிருந்தன.
அவள் மொழியில் வரட்சியிருந்தது. ஒரு கிழமையில் ஐந்து புத்தகங்களை வாசித்தாள். தமிழ், ஆங்கிலம், ஜேர்மன், ஸ்பானிஷ் என்று பல மொழிகளில் படித்தவற்றை பின் எளியமொழியில் எனக்கு ஒப்புவித்தாள். அவள் கருத்தில், மொழியில் நானும் எடுபட்டேன்.
மனிதநேயம், அன்பு நட்பு, காதல், என்பவற்றில் ஊறிப்போயிருந்தாள். உலகில் நடைபெறும் அடக்குமுறைகள், அநீதிகள், பெண்களுக்கெதிரான கொடுமைகள், யாவற்றிற்குமெதிராகப் பொங்கியெழுந்தாள். தன் முன்னே நடக்கும் ஒவ்வொரு அநீதியைக் கண்டதும் அந்த இடத்திலேயே எதிர்ப்பைக்காட்டினாள். அதனால் அவளது ஒவ்வொருநாளும் போராட்ட நாளாகவே இருந்தது.

அவள் ஒருநாள் திடீரென்று தற்கொலை செய்துகொண்டாள்.
'நீ ஏன் தற்கொலை செற்துகொண்டாய்?" என அவளிடம் கேட்டேன்.
தான் தற்கொலைசெய்துகொண்டதை நான் கண்டுபிடித்துவிட்டேன் என்று அதிர்ச்சியாக இருந்தாலும் சமாளித்துக்கொண்டு 'நான் மழையையும் காற்றையும் நேசித்தேன். தாவரங்களையும், மரஞ்செடிகளையும் அதற்கும் மேலாக விடுதலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசித்தேன். இன்னமும்..."
'அது எனக்குத் தெரியும்தானே."
நான் ஒருவனை நேசித்தேன். அவனுக்கும் பூக்களில் ஆசை. தாவரங்கள், காற்று இவற்றில் மோகம் கொண்டிருந்தான்."
"அதற்கும் உன் தற்கொலைக்கும் என்ன சம்மந்தம்?" எனக்குப் பொறுமை இல்லை. விடையை விரைவில் கேட்டு அறிந்துவிட வேண்டுமென்கிற அவா.
அவனுக்குப் பிடித்தவை எனக்குப் பிடித்தன. எனக்குப் பிடித்தவை அவனுக்குப் பிடித்தன. அதனால் எம்மை எமக்குப் பிடித்தது."
"சந்தோசமான விடயம்தான். அதற்கு நீ ஏன் தற்கொலைசெய்து கொண்டாய்?"
"அவன் என்னைத் தன்னுயிராக நேசித்தான். அவன் என்னசெய்தான் தெரியுமா? நறுமணம் வீசும் தாவரங்களைப்பிழிந்து சாறெடுத்தான். தண்ணீரைக் கொதிக்கவைத்து தொட்டிக்குள் ஊற்றினான். பல்வகை மூங்கில்களை எடுத்துவந்து கொட்டினான். பூக்களைத் தூவினான். என்னை அதற்குள் தோய்த்தெடுத்தான். பின் என்னை அருந்தினான். இருவருமாக பல ஆயிரம் நிமிடங்கள் நறுமணங்களில் துயின்றிருந்தோம். ஒருவரின் சுவாசத்தை ஒருவர் குடித்தோம். சிலவேளைகளில் அவசரமாக சிலவேளைகளில் ஆறுதலாக.....
என்னைப்போல் என்னோடு கடற்கரைக் காற்றை உள்வாங்கவும், மரங்கள் நிறைந்த சாலையில் கைகோர்த்து நடக்கவும் தாவரங்களைப்பற்றிப் பேசவும் அவனுக்கு நிமிடமேனும் இருந்ததில்லை. அவன் தலையெல்லாம் தாகம். தன் மக்கள்மீதான தாகம். 'நீ எனது ஒரு கண்ணென்றால் மற்றது எனது மக்கள்' என்பான்.
அவன் தாவரங்களை நேசித்தான் என்று சொன்னேனல்லவா? அவர்களை வீட்டிற்குள் வளர்ப்பதை விரும்பவேயில்லை அவன். 'ஒரு செவ்வரத்தை எம்மூர் முற்றத்தில் எவ்வளவு சுதந்திரமா நிற்கிறது.' என்று பெருமூச்சுடன் கூறுவான்.
அவன் ஒருநாள் ஊருக்குச் சென்றுவிட்டான். தனது ஐயாயிரத்து ஐநூறு நாட்களையும், சொந்தங்களையும், நட்புக்களையும் கதறக் கதற விட்டு விட்டுத் தன் இருகண்களைமட்டுமே எடுத்துச்சென்றான்.

'இங்கு எமது மக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் நிர்க்கதியாகி நிற்கின்றனர். உயிர் இழப்புக்கள், பட்டினிச் சாவுகள். மீண்டும் மீண்டும் போர். ஐயாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து பெருமூச்சுவிட்டு மனங்குளம்பி, அதிருப்தியாகி நாட்களை வீணடிப்பதைவிட இவர்களுடன் இங்கிருந்து என்னால் இயன்றவரை முயல்வேன். இங்கும் சூழல் மாசுபடுத்தப்பட்டுத்தான் உள்ளது. ஆயினும் இங்குள்ள காற்றைச் சுவாசிப்பதில் சுகம் இருக்கிறது.'

கடிதங்களாய், கவிதைகளாய் மின்சாரத் தந்திகளாய் வந்துசேர்ந்த அவனை பூரிப்புடன் எனக்குள் அள்ளி எடுத்துப் பத்திரப்படுத்தினேன். நறுமணங்களும், தாவரங்களின் ரசங்களும், பருகிய ஞாபங்களும் என்னைச் சுட்டெரித்தன. தண்ணீரைக் கொதிக்கவைத்தேன். இலைகளையும் மூலிகைகளையும் தொட்டிக்குள் கொட்டினேன். என்னைப் பருகினேன். மீண்டும் மீண்டும். ஒரு பகலில் பல தடவைகள்....கொதிப்புக் குறைந்ததாக இல்லை.
ஊருக்குப் பறந்து சென்றேன். சிவப்பு மண், மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், பூஞ்செடிகள், வாழைத்தோப்பு, மா, பலா மற்றும் கனிகளை வழங்கும் மரங்கள் மத்தியில் ஒரு வட்டக் குடிசையில் அவன் வசித்தான். நறுமணங்கள் வீச, சோவென்று காற்றுச் சுழன்றுவீச, மழைகொட்ட, பாம்பும், பல்லியும், தவளையும் நடமாடித்திரிய மெதுவாக மெதுவாக எம்மை நாம் பருகினோம். குண்டுச் சத்தங்கள் கேட்டன. உயிர்கள் சிதைந்தன. எதுவுமே எம்மைத் தொந்தரவுசெய்யவில்லை.

தாவரங்களையும், மிருகங்களையும், பறவைகளையும், காற்றையும், மழையையும், அவனையும், எல்லாவற்றிற்குமேலாக விடுதலையையும் நேசித்தேன்.

குண்டுகள் பொழிந்தன. உயிர்கள் சிதைந்தன. பட்டினிச் சாவு. பயத்தில் சாவு. துப்பாக்கி மனிதர்கள் நடமாடினார்கள். பயம். பயம். பயம்.

எனது தாவரங்களின் ஞாபகம். எனது அவர்களில் சிலரை நீ கொன்றாய். எனது நாலாயிரத்து எழுநூற்று முப்பத்திஐந்து நாட்கள்! நான் மீண்டும் பறந்துவந்தேன். அவனது மடலும் என்னைப் பின் தொடர்ந்தது.

'எனது இருகண்களையும் எடுத்துவந்தேன். அவை இப்போது துயர்நிறைந்த எனது மக்களாகிவிட்டன. நான் சேகுவரா அல்ல. என் சக்திக்கு இயன்றவரை.....
நான் இங்கு தரித்து எண்ணூறு நாட்கள் மறைந்துவிட்டன. எனது முதல் முயற்சியில் ஐம்பது பேர் நிம்மதியாக வாழுகின்றனர். இருள்சூழ்ந்திருந்த தமது வாழ்க்கைக்கு ஒளிகாட்டிவிட்டதாகவும் தாம் இப்போதுதான் நிம்மதியாக மூச்சுவிடக்கூடியதாக இருப்பதாகவும் கூறுகின்றனர்.
நறுமணங்களில் நாம் மயங்கிக்கிடந்த நாட்கள் இனிமையான நிகழ்வுகள். அவைகள் இனிமேல் திரும்பிவரமாட்டா. உனது கருத்துக்களும், விடுதலை உணர்வும், எமது நேசிப்பும் எமக்குள் இன்னும் இன்னும் ஆழமான நட்பாக நடமாடட்டும்.'

அவனை வாசித்தேன். மறு கணமே தற்கொலை செய்துகொண்டேன். மீண்டும் மீண்டும் ஐந்து தடவைகள்."
"இதற்காகவா தற்கொலைசெய்தாய்? உனக்கு வெட்கமாக இல்லை?"
கூறிவிட்டு அங்கிருந்து அவசர அவசரமாக வெளிக்கிட்டேன் அவள் என்னைக் கேள்விகேட்பதற்குமுன்.

○●







**சினுவா ஆச்சிபியின்**

## சிதைவுகள்

**(ஆபிரிக்க நாவல்)**

**தமிழில்**
**என். கே. மகாலிங்கம்**

**காலம் வெளியீடு**
P.O. Box : 73505
509, St. Clair Ave. W.
TORONTO
M6 C1 CO, Canada




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - வயலைக் குமரன் -

நோர்வே



நூருன் இறந்து விட்டதாக ரகுவுக்குத்தான் முதலில் செய்தி கிடைத்தது. அவளின் கணவர் தொழில்நுட்பவியலாளராக அந்த நகரசபையில் பணியாற்றி வருவதாலும், அன்று ஏதோவோர் அலுவலாக ரகு அகதிகள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாலும் அந்தச் செய்தி அவனுக்கு முதலில் கிடைத்திருந்தது.

நூருன் இறந்து விட்டதை ரகு தனது சக தொழிலாளர்களிடம் துக்கத்தோடு தெரிவிக்கின்றான். யார் முகத்திலும் எந்தச் சலனமும் இல்லை. அவரவர் தமது வேலைகளைக் கவனித்தவாறு ஏதோ ஒரு செய்தித்தாளைப் படிப்பதைப்போலக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஐந்து வெளிநாட்டுத் தொழிலாளர்களைத் தவிரவும் எவர் முகத்திலும் ஓர் ஈ கலையும் எந்தச் சலனத்தையேனும் காணமுடியவில்லை.
'இவங்கள் என்ன மனிசரப்பா' மனதுக்குள் திட்டிக்கொண்டு தனது இயந்திரத்தை நோக்கி வருகிறான் ரகு.

அவனால் அன்று வேலையில் ஈடுபடவே முடியவில்லை. நூருனைப் பற்றியும், அவள் மரணத்தில் எந்தச் சஞ்சலமுமற்று கிடக்கும் இந்தத் தொழிலாளரின் நினைவிலும் அவன் உழல்கிறான்..

நூருன் நோய்வாய்ப்பட்டு படுக்கையானபோது அவளுக்கு ஒரு பூக்கொத்தை அனுப்பியிருந்தான் ரகு. அதற்கு அவள் தனது நன்றி உபகாரத்தை தன் மகனின் மூலமாகத் தெரிவித்திருந்தாள்.

'முடியுமானால் புகைப் பழக்கத்தைக் குறைத்துக்கொள்' என்று அவள் கேட்டிருந்ததாகவும் அவன் சொன்னான். அத் தொழிற்சாலையில் தொழிலாளர் அனைவரும் புகைத்தலை ஒரு வருடத்திற்கு நிறுத்திவிட்டால் ஐயாயிரம் குரோணர்களை இனாமாக வழங்குவதாக அந்த முதலாளி அறிவித்தபோது, நூருன் ரகுவைப் பார்த்ததும், 'என்னால் முடியவில்லை' என ரகு சொன்னபோது அதை ஆமோதித்தவளாக அவள் சிரித்ததும் அவனுக்கு ஞாபகத்தில் வருகிறது. புகைத்துப் புகைத்தே தன் உடலில் புற்றுநோயை வாங்கிவிட்ட நூருன் அதன் கொடுமையை அனுபவித்து, அந்த வேதனையில் உழன்று தாங்க - முடியாமற்தான் அவள் அதை அவனிடம் கூறி அனுப்பியிருக்கவேண்டுமென ரகு நினைத்துக் கொண்டான்.

'ஹாய் ரகு'
இயந்திரத்தின் சக்கரப் பற்களை சரி செய்வதை நிறுத்தியவாறு திரும்பிப் பார்த்தான் ரகு.
ஏலின் ஒருகையில் ஒற்றையையும், மறு கையில் பேனாவையும் நீட்டியவாறு நிற்கின்றாள். எஞ்சின் கொழுப்புகள் படிந்த தனது கைகளை நீட்டிக் காட்டியவாறு அவளிடம் இருக்கும் பேப்பரை எட்டி வாசிக்கின்றான்.

நூருனின் ஈமைச்சடங்குக்கு மலர்வளையம் ஒன்றைச் சாத்துவதற்காக அறுபது குரோணர்களைக் கோரி எழுதப்பட்டிருந்தது அந்தத் துண்டு.
ரகுவிடம் பணத்தைப் பெற்று 'தக்' கூறியவாறு திரும்பிய ஏலினிடம்
'எப்பொழுது ஈமைக்கிரிகைகள்?'
'வாற வியாழக்கிழமை' கூறிக் கொண்டே நடக்கிறாள் ஏலின்.

அன்று மதியம் ஒரு மணிக்கே அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு விட்டது. நூருனின் ஈமைச்சடங்குகள் இரண்டு மணிக்கு ஆரம்பமாவதால் எல்லோரும் தேவாலயத்திற்குப் போகும் வசதிக்காக அவ்வாறு நேரத்திற்கு மூடப்பட்டது. ரகுவும் கறுப்பு வெள்ளை உடையணிந்து தேவாலயத்திற்குள் நுழைகிறான்.

நூருனுக்காக அச்சிடப்பட்ட அஞ்சலிக் காட்டை எல்லோரும் கைகளில் ஏந்தியவாறு அமர்ந்திருக்கிறார்கள். தேவாலயத்தை எங்கும் மரண அமைதி நிறைத்துக் கொண்டிருக்கிறது. பூக்களால் சூழப்பட்டு மூடப்பட்ட பெட்டிக்குள் நூருன் தூங்கிக் கொண்டிருக்கிறாள். இப்பொழுது பாதிரியார் சவப்பெட்டியின் முன்னால் நின்று கொண்டு நூருனுக்காகச் செபிக்கத் தொடங்குகிறார். துக்கமணி அடிக்கப் படுகிறது. எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். மூன்று முறை சவப்பெட்டியைச் சுற்றி தூபமிட்டு, ஆசிநீரை நான்கு திசைகளுக்கும் தெளித்து, ஒரு பெரிய சிலுவை அடையாளத்தை காற்றிலே கீறி தலைகுனிந்து வணங்கிவிட்டு பீடத்திலுள்ள கதிரையில் போய் அமர்கிறார் பாதிரியார். ஒரு துக்க கீதம் இசைக்கப்படுகிறது.

ஈமைச்சடங்குகளை நடத்தும் ஒருவராக அவர் இருந்திருக்கவேண்டும். பூக்களையும், மலர்வளையங்களையும் சவப்பெட்டியைச் சூழவும் அதன் மேல் பகுதியிலும் வைத்துக் கொண்டிருக்கிறார்.

நூருனின் கணவர் கவலையோடு எழுந்து வருகிறார். தன்னோடு வாழ்ந்த வாழ்வுக்கும், குடும்ப இணைவுக்கும், அவளின் அன்புக்கும் நூருனிடம் இறுதியாக நன்றி கூறுகிறார். அவரது கடைசி மகனோ தன்னைப் பெற்று வளர்த்ததுக்கும், அன்போடு ஆளாக்கியதுக்கும் நன்றி கூறத் தொண்டை அடைத்து வார்த்தைகள் வரமறுக்கிறது. கண்கள் பனிக்க முட்டுக் காலில் விழுந்து சவப் பொட்டியில் முகத்தை வைத்து வெடித்து வெம்புகின்றான். வெட்டிச் சரித்துவிட்ட வாழை மரத்திலிருந்து வடியும் நீரைப்போல அவன் கண்களில் கண்ணீர் வடிகின்றது. ஆரோ ஒருவர் வந்து அவனின் தோள் தொட்டுக் கூட்டிச் செல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூருனின் இளமைக்காலக் காதலன் ஒருவர் தமது காதல் நினைவுகளுக்கும், அந்த இளமைக் காலத்திற்கும் பகிரங்கமாக நூருனுக்கு நன்றி கூறுகிறார். அவர் கண்களில் பிசுத்த நீர்களைக் கசக்கி, கைக்குட்டையை வைத்து மூக்குறுஞ்சியவாறு திரும்புகின்றார். அவளின் மூத்ததாரத்து மகள் ஒருத்தி அழுகையோடு நன்றி கூறிக் கொண்டிருக்கின்றாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. அவள் குலுங்கிக் குலுங்கி அழுகின்றாள்.

நூருனின் உறவினர்களின் துக்கச் செய்திகள் அடுக்கடுக்காக அவளுக்கு வாசித்துக் காட்டப்படுகிறது. நண்பர்களின் கடைசி வார்த்தைகளும் உருக்கமாகச் சொல்லப்படுகிறது. தோழி ஒருத்தி கண்ணீர் மல்க அஞ்சலிக் கவிதையொன்றைப் பாடுகின்றாள்.

ஏலினும் எழுந்து சென்று தொழிலாளர்கள் சார்பாக மலர்வளையத்தை வைத்து தெழிலாளர் உணர்வுகளுக்கு நன்றி கூறிக் கொண்டிருக்கிறாள். ரகு உட்பட எல்லாத் தொழிலாளரும் எழுந்து நிற்கிறார்கள். ரகுவையும், ஏனைய வெளிநாட்டுத் தொழிலாளர்களையும் பலர் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார்கள். இவ்வாறான ஈமைச் சடங்குகளில் வெளிநாட்டவரைக் காண்பது அவர்களுக்கு இதுதான் முதல்தரம்போலும். ஏலின் இப்பொழுதும் தலையைத் தாழிட்டபடி நன்றி கூறிக் கொண்டிருந்தாள்.

அந்தத் தொழிற்சாலையில் ரகு ஏழுவருடங்களுக்கு முன்பு வேலைக்குச் சேர்ந்திருந்தபோது அது ஒரு சின்னத் தொழிற்சாலை. ஆறு, ஏழு தொழிலாளர்கள் மட்டுமே வேலை செய்து வந்தார்கள். ரகுவுக்கு இதுதான் முதல் அனுபவம். இதற்கு முன் தனது சொந்த நாட்டில்கூட அவன் வேலை செய்திருக்கவில்லை. அவனுடன் கூடவே இன்னும் இரண்டு தமிழர்கள் வேலைக்குச் சேர்ந்திருந்தார்கள். மூவரும் இயந்திரத் தொழிலாளிகள்.

தமது உழைப்புச் சக்திக்குக் கிடைக்கப்பெறும் ஊதியத்தை தங்கள் நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவர்களின் மனது குளிர்ந்தது. போகப்போக தனது உழைப்பு சக்தியை மிகவும் குறைந்த விலையிலேயே அந்த முதலாளி பெற்றுவருவதை ரகு உணர்ந்தான். ஒரு தொழிலாளியின் அடிப்படை உரிமையைக்கூட தான் பெறவில்லை என்பதை உணர்ந்தபோது அவன் உள்ளுக்குள் கொதித்தான். உழைப்பு சக்திக்குக்கூட நிறச்சாயம் ஊட்டப்படுவதையும், அதன் பெறுமானத்தை வித்தியாசப்படுத்தி முதலாளிகள் கொள்ளைலாபம் அடிக்க முனைவதையும் அவன் கண்டுகொண்டபோது வேர் பரப்பி நிற்கும் ஆலமரத்தின் அடிவேர்களைப்போல அவனது ரத்தநாளங்களே புடைத்தெழுந்தன.

தனது உழைப்பு சக்தியை ஏனைய தொழிலாளாகளைப் போல சரிசமனாக விற்பதற்குப் போராடினான் ரகு. முடியவில்லை. 'மூன்றாம் உலக நாட்டுத் தொழிலாளிகளுக்கு இயந்திரத் தொழிலனுபவம் காணாது, உங்களது உழைப்புச் சக்திக்கு இவ்வளவுந்தான்' என முதலாளியோ மறுத்து வந்தான். முதலாளியுடன் பேசிப்பேசி அலுத்துவிட்டான் ரகு. தமது உழைப்புச் சக்தியை படுமோசமாகச் சுரண்டுவதையும், அதன் பெறுமானத்தை ஏனைய தொழிலாளர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துவதையும் ரகுவால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. இந்தப் பேதமையை நகரசபைவரை கொண்டு சென்றான்.

நகரசபையின் பிரதிநிதியும், முதலாளியும், ரகுவும், ஏனைய இரு தமிழ்த் தொழிலாளர்களும் இதுபற்றிப் பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டது. கூட்டம் ஆரம்பமானது. நகரசபைப் பிரதிநிதி 'அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கே அவர்களின் ஊதியம் போதவில்லை...' எனத் தொடர்கிறார்.

'அதற்கு நான் ஒன்றும் செய்யமுடியாது. அவர்களின் உழைப்பு ஏனைய தொழிலாளர்களையும் விடக் குறைவு..' முதலாளி பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருந்தான். ரகுவுக்கு ஆத்திரம் அடக்க முடியவில்லை.
இன்னொரு தமிழருக்கும் அவ்வாறு இருந்திருக்கவேண்டும். அவர் எழுந்துசெல்ல முற்படும்போது ரகு அவனின் கைகளை இழுத்து இருத்துகின்றான். நகரசபைப் பிரதிநிதியோ ரகுவின் மீது இயலாமைப் பார்வையொன்றை இரக்கமாகப் படரவிடுகிறார். ஓடுகின்ற மீனொன்றைக் கொத்திப் பறக்கின்ற பறவையின் சலசலப்பபைப் போல ரகு உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகின்றான்.

'இந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வது நாங்கள். எங்கள் உழைப்பு குறைவாக இருந்தால் ஏனைய தொழிலாளர்கள் தொடர்ந்தும் அதைவைத்துப் பொருளுற்பத்தி செய்ய முடியாது.... இந்தத் தொழிற்சாலையின் கட்டிடம் ஆண்டுக்காண்டு உயர்ந்து பருத்து வருவதும், புதிது புதிதாக இயந்திரங்கள் வாங்கப்பட்டு இரைச்சல் முட்டிக்கிடப்பதும். ஒவ்வோர் ஆண்டும் புதிய தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவதும் எவ்வாறு? மூலப் பொருளின் உற்பத்தியின் வீக்கம் குறைந்தால் இது எவ்வாறு சாத்தியமானது? ரகுவின் இடியோசை போன்ற பேச்சு முதலாளியை அதிரவைத்தது. ஏதோ காத்துக்கறுப்புப் பட்டுவிட்டவர்போல அசையாது இருந்தார் அவர். நகரசபையின் பிரதிநிதியோ மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டிருந்தார்.

ரகு தனது நாட்டிலேயே அந்த இயக்கத்தால் பட்டை தீட்டப்பட்டவன். தொழிலாளர் உணர்வுகளையும், உலகளாவிய தொழிலாளர்களின், தொழிற்சங்கங்களின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாறுகளையும் மிகத் தெளிவான முறையில், புறநிலை அறிவாகக் கொண்டவன். அவனிடம் முதலாளிகளின் பசப்பல் செல்லுமா? அதுகும் அவன் தன்னை ஒரு தொழிலாளியாக உணரும் இன்றைய நிலையில் அவனின் இந்த உணர்வுகள் எவ்வளவு வைரம்பாய்ந்திருக்கும்.

முதலாளி 'சம்பள உயர்வு பற்றி யோசிக்கிறேன்.' எனச் சமாளித்தவாறு அன்றைய கூட்டத்தைக் கலைக்க முற்படுகிறார். நகரசபைப் பிரதிநிதியோ 'நீ அப்பிடித் தருக்கமிட்டிருக்கப்படாது.' என ரகுவைப் பாாத்துக் குழைகிறார்.

'இனி முதலாளியுடன் பேசிப் பயனில்லை. போராட்டத்தில் குதிப்பதுதான் வழி'. ரகு நினைத்துக் கொண்டான். 'தனியே ஓர், இருவர் போராடுவதால் எந்தப் பலனுமில்லை. ஏதாவது ஒரு தொழிற்சங்கத்தைத் தேடவேண்டியது தான்.' ரகு திடமாக முடிவு செய்தான்.

தொழிற்சங்கம் உள்ளே வருவதை முதலாளி மட்டுமல்ல அந்த தொழிற் சாலையில் வேலைசெய்யும் ஏனைய தொழிலாளர்களும் விரும்பவில்லை. மூன்று உறுப்பினர்களை வைத்துக் கொண்டு தொழிற் சங்கத்தாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த நேரத்தில்தான் நூருன் அந்தத் தொழிற்சாலையின் விற்பனை முகாமையாளராய் வேலைக்கு வருகிறாள். ரகு போன்ற தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் வெல்லப்பட வேண்டுமெனவும், அவர்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் ஒரு தொழிலாளியாகவும் நூருன் தன்னை வெளிப்படுத்தினாள். தொழிற்சங்கத்திற்கும், முதலாளிக்கும், ரகு போன்றவர்களுக்கும் இடையில் ஒரு பாலமாகச் செயற்பட்டாள்.

'நாளை சாரதி வகுப்பு இருப்பதால் லீவு தேவை'
'முடியாது. அதற்கு லோவில்லை முதலாளி ஒரேயடியாக மறுத்து விடுகிறார்.
நூருனும், ரகுவும் 'அது தொழிலாளர் உரிமை அதைத் தடைசெய்ய உமக்கு உரிமை கிடையாது.' விடாது வாதிடுகின்றனர். இறுதியாக முதலாளி சட்ட திட்டத்திற்கு கீழ்படிகிறார்.

அன்று ரகு வேலைக்கு வருகின்றபோது, இயந்திரத்தின் மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுக் கிடக்கிறது.

'இனி உனக்கு வேலையில்லை.' முதலாளியின் முகம் வெள்ளரிப் பிஞ்சாக மாறிவிட்டது. மின்சார இணைப்புகளைச் சரி செய்த வாறு 'ஏன்?' எனக் கேட்கிறான் ரகு. அவனின் முகத்தில் கடுகுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. எந்தப் பதிலுமின்றி போர்க்குதிரைமீது ஏறிவிட்ட ஒரு வீரனைப் போல திரும்பி விடுகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி.

ரகு வெப்பியாரங்களுடன் நூருனைத் தேடுகின்றான். அவள் அன்று வேலைக்கு வரவில்லை. ஏனைய தொழிலாளர்கள் ஏதும் நடக்காததுபோல தம்பாட்டில் இருந்து விடுகிறார்கள். இரண்டு தமிழ்த் தொழிலாளிகளின் முகங்களிலும் கோபம் கொப்பளித்துக் கொண்டிருக்கிறது.

ரகு வீட்டுக்கு வந்துவிட்டான். அன்றைய நிகழ்ச்சியை தொழிற்சங்கத்திற்கும் அறிவித்திருந்தான். தொழிற்சங்கம் செயலில் இறங்கி சுமுகமான முடிவு கிடைக்கின்றது. ரகு தொடர்ந்தும் வேலைக்குச் செல்கிறான்.
'நேற்று உனக்கு நடந்தவற்றை அறிந்தேன்.' நூருன் கோபப் பட்டதை அன்றுதான் கண்டான் ரகு. நன்கு கனிந்த பப்பாப் பழத்தை இரண்டாகப் பிளந்து வைத்ததைப் போல அவளது கண்கள் காட்சியளித்தன.
'நீ வீட்டுக்குப் போயிருக்கக்கூடாது. எனக்கொண்டாலும் 'ரெலிபோன்' அடித்திருக்கலாம்... அவர் அப்படி அனுப்ப அவருக்கு லோவ்வில்லை... நீ விடக்கூடாது... நேற்றைய சம்பளம் உனக்குத் தரப்பட வேண்டும்... வா போய் கதைப்பம்.' என்றவாறு ரகுவின் கையை பிடித்து இழுத்தவாறு நடந்தாள்.

முதலாளி தனது பிழையை ஒத்துக்கொள்கிறார். அன்றைய சம்பளம் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. வெற்றிக்களிப்போடு 'எதற்கும் நீ பயப்படாதை, நான் இருக்கிறன்.' சொல்லிக் கொண்டே தனது இடத்தை நாடிச் செல்கிறாள் நூருன்.

தொழிற்சங்கத்திலிருக்கும் தொழிலாளர்களின் விபரங்கள், கணக்கு வழக்குகள் இன்னும் தமக்கு அனுப்பப்படவில்லை. இது பற்றி ஒருக்கால் முதலாளியுடன் கதைக்கும்படி தொழிற்சங்கம் ரகுவுக்குக் கடிதம் எழுதியிருந்தது. ரகு அக்கடிதத்தை முதலாளியிடம் நீட்டினான்.

முதலாளியும் அதை வாங்கிப் படிக்கப் படிக்க அவரின் முகம் ஆத்திரம் ஏறிக் கோபத்தால் சிவந்து விட்டது.

'இதெல்லாம் எங்களுக்குப் பிரத்தியேக வேலை.. இதைச் செய்து முடிக்க ஒரு மணித்தியாலத்துக்கு ஐந்து குரோணர்கள் ஒரு தலைக்கு செலவாகிறது.' எரிந்து விழுந்தார் முதலாளி. பிறகு குரலில் கொஞ்சம் 'ஐஸ்' வைத்தவராக
'நீ தொழிற்சங்கத்தை விட்டுட்டு வெளிய வாவன்.. நான் உனக்குச் சம்பளத்தை உயர்த்தித் தாறன்.' சொல்லிவிட்டு ரகுவின் முகத்தில் குறுக்கே கோடிட்டு பார்த்தார் முதலாளி.
'முதலில் சம்பளத்தை உயர்த்தித் தாருங்கள். பிறகு தொழிற் சங்கத்தைப் பற்றி யோசிக்கிறன்...' சொல்லிக் கொண்டே திரும்பிவிட்டான் ரகு.

முதலாளி கதைத்த விடயங்களை நூருனிடம் கூறுகின்றான் ரகு. நூருன் கடுமையாக யோசிக்கின்றாள்.
'எதற்கும் கூட்டிறன் என்டதை முதலில் எப்படியாவது பெற்றுவிடவேண்டும். நான் தொழில் சங்கத்துடன் கதைக்கிறன்.. எதற்கும் நாளைக்குப் பாப்பம்.' என விடைபெறுகிறாள் நூருன்.

முதலாளிக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. 'தொழிற்சங்கத்தில் சேர்ந்ததால்தான் அந்த ஐந்து குரோணர்கள் துண்டு விழுகிறதென்றால் அதை முதலில் கூட்டிக்குடு. பிறகு முதலாளிக்கும் தொழிற் சங்கத்துக்குமான கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிப்பது பற்றிப் பேசுவம். இது தொழிலாளியின் பிரச்சனையில்லை. அவர்களின் சம்பளத்துக்கும் இதுக்கும் எந்தச் சம்மந்தமும் கிடையாது...' தொழில் சங்கம் அழுங்குப் பிடியாக நிற்கிறது. முதலாளியால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ரகு போன்றவர்கள் நந்து குரோணர்களைக் கூடுதலாகப் பெறுகின்றனர்.

ரகு போன்றவர்களின் போராட்டம் ஓரளவிற்கு வெற்றி பெற்று வருவதைப் பார்த்த அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஏனைய தொழிலாளிகள் சிலரும் படிப்படியாகத் தொழிற் சங்கத்தில் சேர்கிறார்கள். அவ்வருட தொழிற்சங்கக் கூட்டம் நடைபெறுகிறது. தொழிற்சங்க நடத்துனர்குழுத் தெரிவு, ஆண்டறிக்கை. அங்கத்தவர் எண்ணிக்கை, புதிய சட்டங்கள், .... விருந்துபசாரம்.... என்று அன்றைய கூட்டம் முடிவுக்கு வருகிறது. இறுதியாகத் தொழிலாளர் பாடல்கள் பாடப்படுகிறது.

'ரகு எங்கே உனது குரலைக் காணோம்?' நூருன் ரகுவைப் பாாத்துக் கேட்கின்றாள். ரகு சிரித்துக் கொண்டே குரலை உயர்த்தி உணர்வோடு பாடுகின்றான். அறியாத மொழியொன்றைச் சிரமப்பட்டு உணர்வோடு பாட முற்பட்ட ரகுவின் செயலைக் கண்டு ஆதங்கப்பட்ட நூருன் ரகுவின் கைகளைப் பற்றிக் குலுக்குகின்றாள்.

'நீ தொழிற்சங்கத்துக்கான ஆரம்ப சட்டவிதிகளை தொழிற்சங்கத்திடம் கற்றுக்கொண்டால் என்ன? அது உன்போன்றவர்களுக்குத் தேவையானது. சிலவேளைகளில் வெளிநாட்டவரே தமக்கான தொழில் சங்கத்தைக் கட்டவேண்டியும் வரலாம்... உங்களது அடிப்படை உரிமைகள் இங்கேயும் வெல்லப்பட வேண்டும். ரகுவை அறியாமலே அவனது கண்கள் கசிந்தன.

நூருனின் சவப் பெட்டியை நால்வர் தூக்கி வருகிறார்கள். அது சவக்குழியின் மேலே வைக்கப்படுகிறது. எல்லோரும் வட்டமாகக் குழுமி நிற்கிறார்கள். எல்லாரது மூக்கும் தக்காளிப் பழமாக சிவந்து கிடக்கிறது. கொள்ளி எறும்பின் அடிவயிற்றைப்போல கண்மடல்கள் வீங்கிச் சிவந்து காட்சியளிக்கிறது. பாதிரியார் இறுதிக் கிரிகைகளை நடத்திக் கொண்டிருக்கிறார். நூருனின் உடல் சவக்குழிக்குள் இறக்கப்படுகிறது. நூருனின் நெருங்கிய உறவினர்கள் ஒவ்வொருவராக உரிமைமண் போடுகிறார்கள். கூட்டம் பின்பக்கமாக விரிந்து விரிந்து கலைந்து கொண்டிருக்கிறது. 'ரகு, நூருனின் சவக்குழியையே திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு நடந்து கொண்டிருக்கிறான். அவன் நடையில் என்றுமில்லாத ஒரு தளர்வு தெரிகிறது.'

அவுஸ்திரேலியா பாரதி பள்ளியின்
பாப்பா பாரதி
(பாகம்-3)
(குழந்தைகளுக்கான வீடியோ)

ஐரோப்பியத் தொடர்புகளுக்கு
«அம்மா»
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயுள்

அ. முத்துலிங்கம்
(கென்யா)

(இந்தக் கதையில் ஓர் ஆண் பாத்திரம் உண்டு. பெண் பாத்திரமும் உண்டு. ஆனால் இது காதல் கதை கிடையாது. இன்னொரு பாத்திரமும் வரும். அதைப்பற்றிய கதை. ஏமாறவேண்டாம் என்பதற்காக முன்கூட்டியே செய்த எச்சரிக்கை இது.)

| பெயர் | ஆயுள் |
|---|---|
| மே இலையான் | ஒரு நாள் |
| பழ இலையான் | ஒரு மாதம் |
| வண்ணத்துப்பூச்சி | ஒன்றரை வருடம் |
| தவளை | இரண்டு வருடம் |
| நாய் | 15 வருடம் |
| சிங்கம் | 30 வருடம் |
| ஒட்டைச்சிவிங்கி | 36 வருடம் |
| மனிதன் | 65 வருடம் |
| கிளி | 70 வருடம் |
| கடல் ஆமை | 100 வருடம் |

அவனை யாத்திரிகன் என்று சொல்ல முடியாது. யாத்திரிகன் என்றால் அவனுடைய பயணத்துக்கு ஓர் இலக்கு இருக்கும். இது இலக்கில்லாத பயணம். அவன் தேசாந்திரி. தேசம் தேசமாக சுற்றி வருபவன். அவன் பயணங்களுக்கு ஓர் ஒழுங்குமுறை கிடையாது. நியமம் இல்லை. அவன் சந்தோசம் அதில்தான் இருந்தது.காற்றிலே எத்தப்படும் கடுதாசிபோல கால்கள் போனபோக்கில் அவன் பயணம் நிர்ணயமானது.

அவன் ஒரு வீதி மனிதன். நடத்தல் அவனுக்கு விருப்பமானது. நடந்துகொண்டே இருப்பான். தூரம் என்பது ஒரு பொருட்டில்லை. நிற்கும்போதுதான் அவனுக்கு ஆயாசம் ஏற்படும். மறுபடியும் நடக்கத் தொடங்கிவிடுவான்.

அவனுடைய அம்மா சொல்லுவாள். ஒருநாள் அவன் தள்ளுவண்டியில் இருந்து தானாவே இறங்கிக் கொண்டானாம். அதைத் தள்ளியபடியே சிறிது தூரம் நடந்தானாம். அம்மாவிற்கு ஆச்சரியம். கால்களைக் கண்டுபிடித்த அந்தக் கணத்துக்கு பிறகு அவன் தள்ளுவண்டியில் திரும்ப ஏறவேயில்லையாம்.

வாகனங்களில் ஆட்கள் பிரயாணம் செய்வது அவனுக்கு வியப்பளிக்கும். பள்ளிக்கூடத்திற்கு நடந்துதான் போனான், வந்தான். விளையாட்டுகளில் கூட அவனுக்கு விருப்பம் இருந்ததில்லை. ஓடுவதுகூட பிடிக்காது. அது கால்களை மறுதலிப்பதுபோல. கால்களை அழுத்தமாக பூமியில் பதித்து நடக்க வேண்டும் என்பது அவன் விருப்பம். அப்படித்தான் நடந்து கொண்டிருந்தான்.

பள்ளிக்கூட ஆசிரியர் ஒரு நாள் கேட்டார், 'உனக்கு எதிர்காலத்தில் என்னவாக விருப்பம்?' என்று. 'நான் இறக்க விரும்புகிறேன். இறந்து மறுபடியும் சிலந்தியாக பிறக்க வேண்டும்', என்றான். ஆசிரியர் திகைத்துவிட்டார். ஏன் என்ற கேள்விக்கு அவன் இப்படி பதில் கூறினான்.

'வனவிலங்குகளை எனக்கு பிடிக்கும். அவை சுதந்திரமாக நடந்து திரியும். இரை தேடும்: இனப்பெருக்கம் செய்யும். படுக்கும்: பயங்கொள்ளும். என்ன உவப்பான வாழ்க்கை!

'பறவைகளுடைய பரப்பு இன்னும் பெரியது. எல்லை கிடையாது. சிறகடித்து பறக்கும்: பாடும்: பல வர்ணங்களில் மயக்க வைக்கும். அவற்றினுடைய சாகஸத்தை பார்த்தபடியே இருக்கலாம். அவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

'ஆனால் சிலந்தி. அது வித்தியாசமானது. தன் வாய்நீரில் நூல் செய்து தொங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஜீவன். அந்த நூலில் ஊஞ்சலாடியபடியே பொறுமையோடு காத்திருக்கும். உணவு தேடிப் போவதில்லை. உணவு அதைத் தேடி வரும். என்ன உன்னதமான வாழ்க்கை. அதுதான் எனக்கு மிகமிகப் பிடிக்கும்.'

வாலிபனானதும் அவன் புறப்பட்டான். நாலு வருடங்களாக நடந்துகொண்டிருந்தான். கிரேக்கத்தில் இருந்து வெளிக்கிடும்போது மூன்று மொழிகள் அவனுக்கு தெரிந்திருந்தன. எகிப்து, பாரசீகம் ஆப்கானிஸ்தான் என்று பல தேசங்களை அவன் கடந்துவிட்டான். இப்போது பன்னிரெண்டு பாஷைகள் கைவந்தன. இனி எதிர்ப்படும் மொழிகளையும் இன்னும் சுலபமாக அவன் கற்றுக்கொள்வான். அவன் கால்கள் நகர்ந்து கொண்டேயிருக்கும். இன்றிருக்கும் பூமியில் மறுநாள் அவன் இருக்கப் போவதில்லை.

அவன் முதுகில் ஒரு மூட்டை இருந்தது. மிக அத்தியாவசியமான பொருட்கள் அந்தப் பொதியில் இருந்தன. கம்பளிப்போர்வை, அங்கி, நித்திரைப்பை, சமையல் சாமான் என்று. ஒரு பிளாஸ்டிக் குடுவையில் தண்ணீர் பிடித்து வைத்திருந்தான். அந்த மூட்டையில் அது தொங்கிக்கொண்டு ஆடியது. சூரிய ஒளி படும்போது அது பளிச்சுப்பளிச்சென்று அடித்தது.

இந்துகுஷ் மலைச்சிகரங்களை அணைத்தபடி கிடக்கும் ரம்பூர் பள்ளத்தாக்கைப் பற்றி அவன் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறான். அநாதிகாலமாக பழங்குடியினர் அந்நிய குறுக்கீடுகள் இல்லாமல் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அலெக்சாந்தர் படையெடுத்து வந்தபோது இந்தப் பள்ளத்தாக்கைப் பார்த்து பிரமித்து நின்றானாம். அவனுடைய படை வீரர்களில் சிலர் திரும்ப மறுத்து இங்கேயே தங்கிவிட்டதாகவும் கதைகள் இருந்தன.

பன்னிரெண்டாயிரம் அடி உயரத்தில் அது ஒரு தொட்டில்போல மிதந்துகொண்டிருந்தது. மலைச்சிகரங்களில் வெண்ணிற மேகங்கள் அலைஅலையாக படிந்திருந்தன. பெரும் இரைச்சலுக்கிடையில் தோன்றும் மோனம்போல இடைக்கிடை பச்சைப்பிரதேசம் காணப்பட்டது. பனிக்காலம் வருமுன் இந்தப் பசும்புற்கள் தங்கள் கடைசி முகத்தை காட்டிக் கொண்டிருந்தன. இந்தச் சூழ்நிலையின் எழில் யார் மனதையும் சொக்க வைத்துவிடும்.

மதங்கள் பிறக்க முந்திய ஒரு காலம். ஆதி மனிதன் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்துகொண்டிருந்தான். விலங்குகள் சில வீட்டு மிருகங்கள் ஆகின. பூமி அணைத்தது. ஆகாயம் காத்தது. நதி ஓடியது. பனி பெய்தது. காற்று வீசியது. ஊழிக்காலமாக வரும் இந்த நியதியில் ஒரு மாற்றமும் இல்லை. இந்த மலைவாசிகள் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பனிதான் நிரந்தரமானது: தண்ணீர் பனியின் மாறுவேடம்தான். சிலுசிலுவென்று தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. பனி உருகி வழிந்த நீர். அவன் குனிந்து அந்த பிளாஸ்டிக் குடுவையில் அதை நிரப்பினான். திவலைகள் சிதறின. சூரிய ஒளியில் அவை தகதகவென்று பிரகாசித்தன. வாயிலே ஊற்றியபோது குளிர்ந்து அவன் களைப்பை நீக்கியது.

இளம்பெண்கள் சேரும்போது சிரிப்பும் கும்மாளமும் தானாகவே வந்துவிடும். ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டும், கைகளைப் பின்னிக்கொண்டும் அவர்கள் வந்தார்கள். இவன் செய்த காரியத்தை அவர்கள் வியப்புடன் நோக்கினர். அந்நியர்கள் அங்கே வருவதில்லை. ஆனபடியால் அந்நியர்களைப்பற்றிய பயமும் அவர்களுக்கு இல்லை. அவனுடைய கண்களும், கேசமும், உடையும் அவர்களுக்கு புதினமாக இருந்தது. ஆனால் அவன் செய்த காரியம்தான் அவர்களுக்கு இன்னும் விநோதமாகப் பட்டது.

அவன் கையிலே வைத்திருந்த பிளாஸ்டிக் குடுவையை பார்த்தார்கள். அவர்கள் அதை முன்பின் பார்த்ததில்லை. சுரைக்குடுவையைப் பார்த்திருக்கிறார்கள்: தோல் பையை பார்த்திருக்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு அதிசயத்தை கண்டதில்லை.

தண்ணீர் எடுக்கும்போது உள்ளே அது தண்ணீரை காட்டியது. சூரிய ஒளியில் தண்ணீர் ஜாலம் செய்தது.

அவர்கள் கைநீட்டி ஜாடைசெய்து அந்தக் குடுவையை யாசித்தார்கள். அவன் நீட்டினான். ஒருவர் மாறி ஒருவர் தண்ணீரை பருகினார்கள். பருகிவிட்டு குடுவையை பார்த்தார்கள். அங்கே நீர் குறைந்திருந்தது. கலகலவென்று சிரித்தபடியே குடுவையை திருப்பி கொடுத்துவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

அதில் ஒருத்தி சாத்தியமில்லாத முகத்தை கொண்டிருந்தாள். மலைப்பனி போன்ற உடம்பு. மேடிட்ட மேல் உதடுகள். பிராயம் பதினாலுகூட இருக்காது. மை பூசாத கண்களின் வயது அவளுடைய முகத்திலும் பார்க்க இரண்டு வயது அதிகமாய் தெரிந்தது. உதாசீனமான பார்வை பார்த்தாள். உலகத்திலேயே அற்பமான உடமைகள் கொண்ட இந்த ஆதிவாசிப் பெண் இவன் பார்வையை அலட்சியப்படுத்திவிட்டு தன்பாட்டுக்கு போய்க்கொண்டிருந்தாள்.

என்ன விசித்திரம். இவன் மனது அவள் பின்னால் சென்றது.

(இங்கே காதல் தொடங்கிவிட்டது என்று நீங்கள் நினைக்கலாம். இதிலே காதல் வளராது. ஏமாற்றம்தான் வளரும். இது இரண்டாவது எச்சரிக்கை. இனியும் தொடர வேண்டிய அவசியமில்லை)

தன் வழக்கத்துக்கு விரோதமாக அவன் அந்தக் கிராமத்தில் தங்கிவிட்டான். அசாதாரணமான பனிச்சிகரங்களின் வனப்பும், ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஒருவித மாற்றமுமில்லாமல் இயற்கையுடன் ஒன்றி வாழும் அந்தப் பழங்குடியினரின் விளிம்பு வாழ்க்கையில் ஏற்பட்ட லயிப்பும்தான் முக்கிய காரணம். ஹொன்ஸாகூல் இன்னொரு காரணம். அதுதான் அவளுடைய பெயர்.

ஆண்கள் ஆட்டுமந்தைகளைப் பார்த்தார்கள். பெண்கள் வயலில் வேலை செய்தார்கள். தேனடைகளில் தேன் எடுத்தார்கள். அவர்கள் ஆசைகள் அடங்கியவை. தேவைகள் சுருங்கியவை. ஆனால் கேளிக்கைகளுக்கு மாத்திரம் குறைவில்லை. விழாக்காலங்களில் ஆட்டமும் பாட்டுமாக சிறு பிள்ளைகளின் உற்சாகத்தோடு கலந்துகொண்டார்கள்.

வேகமும் யந்திர வாழ்க்கையும் அவனுக்கு பிடிக்காது. இந்த மலைவாசிகள் இயற்கையை பலவந்தம் செய்யாமல் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இங்கே சத்துருக்கள் இல்லை: ஆகவே சமரும் இல்லை. ஆலைகள் இல்லை. அதனால் ஆற்றில் கழிவுகள் இல்லை. உண்மையான பூமியின் மணம் இங்கே அவனுக்கு கிடைத்தது. எல்லாமே மண்ணில் மறைந்தது: துளிர்த்தது: கிளைவிட்டது: மீண்டும் மறைந்தது.

இறந்தவர்களைக்கூட இங்கே எரிப்பதில்லை: புதைப்பதுமில்லை. சின்ன மரப்பெட்டிகளில் வைத்து மரணபீடத்தில் ஏற்றிவிடுவார்கள். அது அப்படியே மழையில் நனைந்து, வெய்யிலில் உலர்ந்து இயற்கையாகி காற்றில் கரைந்துவிடும். அதுவும் அவனுக்கு பிடித்திருந்தது.

இலையுதிர் காலத்தின் ஆரம்பத்தில் மெல்லிய குளிர் பரவியிருந்தது. ஒரு நாள் 'உச்சோ' விழாவின் மும்முரத்தில் அவன் மறுபடியும் அவளைக் கண்டான். இவர்கள் நடத்தும் விழாக்களில் இந்த விழா பிரசித்தமானது. மலையிலிருந்து இடையர்கள் ஆட்டுப்பால் வெண்ணெய் கட்டிகளை கூடைகூடையாக சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து மரக்குதிரை மேடையில் அர்ப்பணம் செய்தார்கள். சிலர் நாணல் குழல் வாத்தியத்துக்கு நாட்டியமாடினார்கள். ஆண்களின் இந்த ஆட்டத்தில் கலக்காமல் பெண்கள் கூட்டம் சற்று தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

கறுப்பு தேவதை போலே அவள் இருந்தாள். ஆட்டு மயிரில் செய்த கறுப்பு கம்பளி உடையால்கூட அவள் அழகை மறைக்க முடியவில்லை. தலைமுடியில் கிரீடம்போல பல வண்ண இறகுகளை செருகியிருந்தாள். கருமணியும், செம்மணியுமாக பல மாலைகள் அவள் கழுத்தைச் சுற்றியிருந்தன. உதடுகள் கர்வமாக இருந்தன. கால்களை சாயவைத்து உயரம் குறைந்த தன் நண்பியின் தோள்பட்டையில் தன் முகவாயை வைத்து உடல் பாரத்தை சமம் செய்து நின்றாள்.

சித்திரம்போல் அசையாது அப்படியே கனநேரம் நின்றாள். அவளை பார்க்கும்தோறும் அவளுடன் எப்படியாவது பேசிவிடவேண்டும் என்ற ஆர்வம் அவனுள் அதிகரித்தது. அவனுக்கு தெரிந்த சொற்ப கலாசுமுன் பாஷை போதுமானதென்று அவனுக்கு பட்டது. தருணம் பார்த்திருந்தான். பாஷாலி என்பது மாதவிலக்கு குடிசை. அது ஆற்றின் ஓரத்தில் கிராமத்தை விட்டு தள்ளி இருந்தது. ஆண்கள் அணுகமுடியாத இடம். மூன்று நாட்கள் காத்திருந்தான். ஒருநாள் அதிகாலையில் மரப்பாவைகளை அணைத்தபடி அவள் வெளியே வந்தபோது இவன் திடுமென எதிர்கொண்டான்.

முடிவு பெறாத நித்திரைகள் அவள் கண் மடல்களை அழுத்தின. அவள் ஆச்சரியம் காட்டவில்லை. இவன்தான் அவளுக்கும் சேர்த்து ஆச்சரியப்படவேண்டியிருந்தது.

சில வினாடிகள் நகர்ந்தன. நிசப்தத்தின் வாசனை அங்கே கடுமையாகியது. ஒவ்வொரு வார்த்தையாக பொறுக்கி அடுக்கினான். சிந்தனை நேராக சிறிது நேரம் சென்றது.

'பணிப்பெண்ணே, நான் உன்னை மணக்க ஆசை கொண்டிருக்கிறேன். உன் வார்த்தையை சொல்வாய்' என்றான்.

'போய்விடு, உன் அம்மாவுடன் போ' என்றாள்.
இவன் திடுக்கிட்டு விட்டான். அவள் சொன்ன சொற்களை இன்னொருமுறை அடுக்கிப்பார்த்தான். அப்படித்தான் வந்தது. அவள் பேசியது இவனுடைய மொழிப் பயிற்சிக்குள் அடங்கித்தான் இருந்தது. கலாஷ் பெண்கள் வசவு மொழியில் வல்லவர்கள் என்பதும் சடுதியில் ஞாபகத்துக்கு வந்தது. அவள் இன்னொரு வசை தன்னை வசைய மாட்டாளா என்று ஆசை மேலிட்டது.

தயங்காமல் இரண்டாவது முயற்சியில் இறங்கினான்.

'மலைவாசியே, நான் அந்நியன் என்று யோசிக்காதே. நான் உன்னை வைத்து காப்பாற்றுவேன்.'

அவள் அப்போது ஒரு காரியம் செய்தாள். அவனை வயிற்றில் இருந்து கால் பாதம் வரை உன்னிப்பாக நோக்கினாள். அவள் பார்வையே அவனுக்கு கூச்சம் தந்தது.

'உன் கால்கள் இறுக்கமாகத்தான் இருக்கின்றன. உன் கைகளை இடுக்கில் விட்டு சொறிந்துகொள்' என்றாள்.

இம்முறை அவனுக்கு தன் மொழிஞானத்தில் சந்தேகம் ஏற்படவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று அவன் தீர்மானிப்பதற்குள் அவள் அவசரமில்லாத மெல்ல நடையில் அவனை தாண்டி நகர்ந்து போனாள்.

சூட்டோடு சூடாக அவளுடைய தகப்பனாரிடம் போவதற்கு முடிவுசெய்தான். தெம்பு முறிந்து போன கிழவர் அவர். இரண்டு நாடியுடனும், ஒரு முற்றுப்பெறாத தாடியுடனும் இருந்தார். அவரிடம் தன் விருத்தாந்தத்தை கூறி சம்மதம் கேட்டான். அவர் யோசனைகளுக்கு அப்பாற்பட்டு காணப்பட்டார். சீரில்லாத பற்களை காட்டி தன் இசைவை தெரிவித்து விட்டார். ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருந்தது. அவர்கள் வழக்கப்படி இந்த ஏற்பாட்டிற்கு ஹொன்ஸாகுலும் சம்மதிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்.

அவன் கால்கள் மறுபடியும் பரபரத்தன. மழைக்காலம் விரைவில் வரப்போகும் அறிகுறிகள் தெரிந்தன. தேசாந்திரிக்கு எதிரி மழை. குளிர் காலத்திற்கு வேண்டிய கம்பளி உடைகள் அவனிடத்தில் இருந்தன. வெயில் காலத்தில் வெறும் உடம்பும் மர நிழலும் போதும். ஆனால் மழைக்காலம் வந்துவிட்டால் தேசாந்திரி சஞ்சரிப்பது கஷ்டமாகிவிடும்.

பெரிய மழைத்துளி ஒன்று மேகத்தில் இருந்து பிரிந்து புவியீர்ப்பில் அசையாத நம்பிக்கை வைத்து கீழ் நோக்கி வந்தது. இவன் புஜத்தில் விழுந்தது. மேலுலகம் அனுப்பிய செய்தியை புரிந்து கொண்டான்.

கலாஷ் பெண்கள் பள்ளத்தாக்கை விட்டு வெளியே வரமாட்டார்கள் என்று அவள் தகப்பனார் கூறியிருந்தார். அவன் மனம் ஒரு முடிவும் எடுக்கமுடியாமல் தத்தளித்தது.

புறப்படுமுன் மறுபடியும் அவளை ஒரு முன் மதியநேரத்தில் சந்தித்தான். அவன் மூச்சு காற்று படும் தூரத்தில் அவள் நின்றாள். அவள் கண் ரப்பை மயிர்களைக்கூட இவன் எண்ணக்கூடியதாக இருந்தது. வந்த நாளில் இருந்து சேர்த்து வைத்திருந்த ஒரு புன்னகையை வீசினான்.

அவனுடைய பிளாஸ்டிக் குவளையில் நீர் நிரம்பி இருந்தது. அதை அவளிடம் நீட்டினான். மறுப்பு பேசாமல் அவள் அதை வாங்கி குடித்தாள். குழந்தை பால் குடிப்பதுபோல கண் மூடி அதை சுவைத்து சுவைத்து குடித்தாள். அந்தக் குவளையின் பளபளப்பிலும், நேர்த்தியிலும் மனதை பறிகொடுத்தாள்.

'மலை மங்கையே! இதை நீயே வைத்துக்கொள். நான் போகிறேன். திரும்பி வரும்போது உன்னை மணப்பேன். ஆனால் இங்கேயே உன்னோடு தங்கிவிடுவேன்' என்றான்.

அப்போது வசவில்லாத ஒரு வாய்மொழி முதன்முறையாக அவளிடமிருந்து வெளியே வந்தது.

'நிச்சயமாக' என்றாள் அவள்.
'நிச்சயம்'
'திறமான நிச்சயம்'
'திறமான நிச்சயம்.'

அவன் மூட்டையைக் காவிக்கொண்டு திரும்பிப் போகும்போது கால்களை நிலத்திலே பதித்து வைத்தான். ஆனால் அவை பதியவில்லை. தன்னையே கேட்டுக்கொண்டான். இவள் என்ன பதில் சொன்னாளா அல்லது கேள்வி கேட்டாளா? 'திறமான நிச்சயம்' என்று சொல்கிறாளே! அவன் தனக்குள்ளே இன்னொருமுறை சிரித்துக்கொண்டான்.

(முன்பே சொன்னேன். நீங்கள் நம்பவில்லை. இது காதல் கதை அல்ல. இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்கள். மேலும் வருவதற்கு பிரியமில்லாவிட்டால் இங்கேயே இறங்கிக்கொள்ளலாம்.)

ஹொன்ஸாகூல் அந்தக் குடுவையை மாடாவில் வைத்தாள். அதையே பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றைப்போல திசையில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் அவன் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை.

நிச்சயம் வருவேன் என்று உறுதி கூறியவன் இரண்டு உச்சோ விழாக்கள் கண்டும் வரவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொன்ஸாகூலை மணக்க பல மலை மேய்ப்பர்கள் ஆர்வம் காட்டினார்கள். அவர்கள் வழக்கப்படி ஹொன்ஸாகூல் அதில் ஒருவனை தெரிவு செய்தாள். தாழ்ந்த கண்களும், தகுதியில் குறைந்த மீசையும் கொண்டவனை மணந்துகொண்டாள். அந்த மணம் ஒரு ஆறுமாத காலமே நீடித்தது. ஒரு பனிக்காலத்தின் தொடக்கத்தில் தன் மணத்தை முறித்துக்கொண்டு திரும்பவும் தன் குடிசைக்கே வந்து சேர்ந்தாள், ஹொன்ஸாகூல்.

காலம் கரைந்தது. ஆறுகள் கடினமாகின: ஓடின: மறுபடியும் உறைந்தன. ஒரு நாள் அவளுடைய தகப்பனார் இறந்தார். அவருடைய சடலம் மரணபீடம் ஏறியது.

இன்னும் பத்து வருடங்கள் பறந்தன. ஒரு காலத்தில் அவளை மணமுடித்து சொற்ப சுகம் தந்த கணவனும் இறந்து போனான். அவனுடைய சடலமும் மரணபீடம் ஏறியது.

அவள் காத்திருந்தாள். புயலை அடைத்து வைத்ததுபோல கல்லும், மண்ணும், மரச்சுள்ளிகளும் சேர்த்துக்கட்டிய அந்த இருண்ட குடிசையில் கிடந்தாள். அவன் விட்டுச் சென்ற அந்தக் குடுவை அந்த மாடத்தில் வைத்த இடத்திலேயே இருந்தது. பல வருடங்களாகியும் அசையாமல் அப்படியே கிடந்தது.

இன்னும் பல மரணிப்புகள் நிகழ்ந்தன. தட்சணாயணத்தில் ஒரு சில நாட்கள் சூரியனுடைய முதல் வெளிச்சம் கல் நீக்கல் வழியாக வந்து சரிகணக்காக அந்தக் குடுவையின்மீது விழும். அந்த ஒளியில் அது பிரகாசிக்கும்.

மறுபடியும் உத்தராயணத்தில் ஒரு சில நாட்கள் சூரியனுடைய ஒளி தெறிக்கும். அவள் அப்போது அவனை நினைத்துக்கொள்வாள்.

ஒரு நாள் அவளும் இறந்துபோனாள்.

நூறு வருடங்கள் கழிந்தன. உலகத்து ஜீவராசிகள் அத்தனையும் மடிந்து மண்ணோடு மண்ணாகி மறைந்து போயின. அவற்றின் இடத்தை புது ஜீவராசிகள் நிரப்பின.

மரண பீடத்தில் கிடந்த பிணங்கள் எல்லாம் எலும்பும், ஓடுமாக மாறின. மழையிலே நனைந்து காற்றிலே காய்ந்து எத்துண்டு மறைந்தன.


ஹொன்ஸாகூலின் குடிசையும் சிதிலமானது. தட்சணாயணத்திலும் உத்தராயணத்திலும் ஓரிரு நாட்கள் ஒளிபட்டு வாழ்ந்த அந்த குடுவையும் இல்லை. அதுவும் எங்கோ மண்ணில் புதைந்து விட்டது.

அதனுடைய ஆயுள் நானூறு வருடம். நூறு வருடங்கள்தான் இப்போது கழிந்திருந்தது. ஹொன்ஸாகூலின் சத்தியத்திற்கு சாட்சியாக இருந்த அந்தப் பாத்திரம் மட்டும் அந்தச் சூழலில் இன்னும் அழியாமல் கிடந்தது. அது மண்ணோடு மண்ணாகி முற்றிலும் அழிந்து போவதற்கு இன்னும் முன்னூறு வருடங்கள் எடுக்கும்.

அது மாத்திரம் நிச்சயம்.

திறமான நிச்சயம்.

-முற்றும்-










«EXIL»
27, Rue Jean Moulin
92400 Courbevoie,
France




«EXIL»
chez. R. INPAVALLI
94, Rue de la Chapelle,
75018 Paris.

பத்திரிகைக் குழுவிற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக எக்ஸில் இதழ்-4 இரண்டு இதழ்களாக வெளிவந்திருக்கிறது.




«SAMAR»
87, Rue de Colombes
92600 Asniers sur Seine
France




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org